# கவிதைக் களஞ்சியம்

பேராசிரியர் இரா.மோகன்

வானதி பதிப்பகம்

# கவிதைக் களஞ்சியம்

பேராசிரியர் இரா. மோகன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : மே, 2013

© பேராசிரியர் இரா. மோகன்

திருநாவுக்கரசு தயாரிப்பு

**விலை : ரூ. 100.00**

- Title : **KAVITHAIK KALANCHIYAM**
- Author : ERA. MOHAN
- Language : Tamil
- Subject : Literature
- Edition : First Edition, May 2013
- Pages : 216
- Published by : **VANATHI PATHIPPAKAM**
  23, Deenadayalu Street,
  T. Nagar, Chennai - 600 017.
  Ph : 24342810, 24310769
  E-mail : vanathipathippakam@gmail.com
  Website : www.vanathi.in
- Price : **₹ 100.00**

Laser Typeset : A. Arivazhagan

*Printed at :* **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

# சில சொல்

'டாக்டர் மு.வ.வின் நாவல்கள்' என்பது என் முதல் நூல் : 1972-ஆம் ஆண்டில் வெளிவந்தது. அப்போது யான் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் ஆராய்ச்சி மாணவன். தொடர்ந்து, 'டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்', 'டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்' என்னும் இரு நூல்களை அவர் உயிருடன் இருக்கும் பொழுதே வெளியிட்டேன். அக் கால கட்டத்தில் **'மு.வ. மோகன்'** என்றும், **'மு.வ.வின் செல்லப் பிள்ளை'** என்றும் இலக்கிய உலகம் என்னைச் சுட்டிச் சிறப்பித்தது. 'யான் கண்ட மு.வ.', 'டாக்டர் மு.வ.வின் கடிதங்கள்' என்னும் இரு நூல்களை அவரது மறைவுக்குப் பிறகு வெளியிட்டேன். இளமைக் காலத்தில் என்னை ஆட்கொண்டதும் ஆளாக்கியதும் பேராசிரியர் மு.வ.வின் எழுத்துக்களே. எழுத்துலகிற்கு என்னை ஆற்றுப்படுத்தியதும் 'மு.வ.' என்னும் ஈரெழுத்து மந்திரமே. இன்றளவும் என்னை இயக்கி வருவதும் பேராசிரியர் மு.வ. எனக்கு ஒரு நூலில் அன்புடன் எழுதித் தந்த, **'தமிழ் உன்னை வளர்த்தது; தமிழை நீயும் வளர்க்க வேண்டும்'** என்னும் வைர வரிகளே ஆகும்.

பேராசிரியர் மு.வ.வின் தாக்கத்தால் எழுத்துலகில் 1972-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்த யான், இந்த நாற்பது ஆண்டுக் கால இடைவெளியில் ஆய்வும் பதிப்பும் தொகுப்புமாக இதுவரை 99 நூல்களை வெளியிட்டுள்ளேன்; 'கவிதைக் களஞ்சியம்' என் 100-ஆவது நூல். தமிழ்ப் பதிப்புலகில் முத்திரை பதித்த வானதி பதிப்பக வெளியீடாக இந்நூல் வெளிவருவது வாழ்வில் எனக்குக் கிடைத்த

தவப்பயன்; நற்பேறு. சாகித்திய அகாதெமி, சர்வோதய இலக்கியப் பண்ணை, மணிவாசகர் நூலகம், மீனாட்சி புத்தக நிலையம், நியு செஞ்சுரி புத்தக நிலையம், ஓரியண்ட் லாங்மேன், விழிகள் பதிபபகம், இலக்கியச் சிந்தனை, ஞான பரம்பரை முதலான முன்னணிப் பதிப்பகங்கள் - இலக்கிய அமைப்புக்கள் வாயிலாக என் நூல்கள் வெளிவந்துள்ளன. எழுத்துலகிற்கு என்னை அடையாளம் காட்டிய இந் நிறுவனங்களுக்கும் அமைப்புக்களுக்கும் யான் என்றென்றும் நன்றியுடையேன்.

**பியரி குழரி – குயூரி அம்மையார்** இருவரும் என் ஆளுமையில் ஆழ்ந்த தாக்கத்தினை ஏற்படுத்திய இணையர் ஆவர். அவர்கள் இருவரையும் போல ஒரே துறையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற இலட்சியத்துடனும் தொலைநோக்குடனுமே நிர்மலாவை என் வாழ்க்கைத் துணையாகக் காதலித்துக் கரம் பிடித்தேன். ‘உன்னைக் கரம் பிடித்தேன் வாழ்க்கை ஒளிமயமானதடி!’ என்னும் கவியரசர் **கண்ணதாசனின்** மணிமொழிகளை என் உள்ளமும் உதடுகளும் அடிக்கடி நிர்மலாவை நினைந்து முணுமுணுக்கும். என் எழுத்துப் பணிகளில் எல்லாம் வலது கரமாய் எனக்குத் தோன்றிய துணையாய் இருந்து, உற்றுழி உதவி வரும் நிர்மலாவே, ‘**இம்மை மாறி மறுமை ஆயினும், என் நெஞ்சு நேர்பவளாக**’ **வாய்த்திட வேண்டும்** என விழைகிறேன்.

நிறைவாக ஒரு கருத்து : எதையும் இரத்தினச் சுருக்கமாகவும் பொருட் செறிவாகவும் நச்சென்றும் சொல்லும் கவிதைக் கலையின் மீது இளமைக் காலத்தில் இருந்தே எனக்குத் தீராத காதல்; இன்றளவும் மாறாத மோகம். ‘கவிதை அலைவரிசை’ என்னும் பெயரில் ஏற்கனவே இரு தொகுதிகளை வெளியிட்ட யான், இப்போது ‘கவிதைக் களஞ்சியம்’ என்ற பெயரில் என் உள்ளங் கவர்ந்த 20 கவிஞர்களின் படைப்பாளுமைகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளேன். காரைக்குடியில் மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் கவியரசு **முடியரசனிடம்** பயின்ற நாட்கள் இன்னமும் என் நினைவுப் பேழையில் பசுமையாக உள்ளன. இந்நூலில் முதல் கட்டுரையினை அவரது நினைவைப் போற்றும் விதத்தில் திட்டமிட்டே சேர்த்துள்ளேன்.

‘உவமைக் கவிஞர்’ (சுரதா), ‘குக்கூ கவிஞர்’ (மீரா),‘கவிக்கோ’ (அப்துல் ரகுமான்), ‘அங்கதக் கவிஞர்’ (தமிழன்பன்), ‘காவியக் கவிஞர்’ (வாலி), ‘கவிவேந்தர்’ (மு. மேத்தா), ‘முத்திரைக் கவிஞர்’ (பாலா), ‘தனித்தன்மைக் கவிஞர்’ (தாராபாரதி), ‘கந்தகக் கவிஞர்’ (கந்தர்வன்), ‘உணர்ச்சிக் கவிஞர்’ (காசி ஆனந்தன்), ‘தன்மானக் கவிஞர்’ (முத்துலிங்கம்), ‘இலட்சியக் கவிஞர்’ (இறையன்பு), பெண்மையும் ஆண்மையும் கலந்த அர்த்தநாரீசுவரக் கவிஞர் (பத்மாவதி தாயுமானவர்), தடம் பதித்த கவியரங்கக் கவிஞர் (தங்கம் மூர்த்தி), ‘வித்தியாசமான கவிஞர்’ (வெற்றிச்செல்வன்), ‘ஹைகூ கவிஞர்’ (மு. முருகேஷ்), வாழ்க்கையையே கவிதையாக வழங்கும் இளங்கவிஞர் (க. ஆனந்த்), ‘மலேசிய நாட்டின் மதிப்புறு கவிஞர்’ (செ. சீனி நைனா முகம்மது) ஆகிய கவிதை ஆளுமைகளோடு, மீராவின் கவி வாரிசான கண்மணி செல்மாவையும் இந்நூலில் உரிய முறையில் ஆவணப்படுத்தியுள்ளேன். பாட்டுக்கொரு புலவர் பாரதியாரின் மொழியிலே குறிப்பிடுவது என்றால், ‘தமிழ்க் கவிதை தீயே நிகர்த்து ஒளி வீசித்’ திகழ வேண்டும் என்பது என் வேணவா; கவிஞர்கள் ‘கவிதையே வாழ்க்கையாக - வாழ்க்கையே கவிதையாக’ வாழ்ந்து காட்ட வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

நூலின் கணினி ஆக்கத்தில் எனக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய அன்பு இளவல் ஆ. அறிவழகனுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

தமிழ்நாடு அறக்கட்டளையின் சார்பில் அமெரிக்க மண்ணில் இந் நூலினை வெளியிட எல்லா வகையிலும் உதவிய இனிய நண்பர் **சோமலெ சோமசுந்தரம்** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி என்றென்றும் உரியதாகும்.

கவிதை ஆர்வலர்களும் ஆய்வாளர்களும் இந்நூலினை வரவேற்பார்கள் என எதிர்நோக்குகிறேன்.

இரா. மோகன்

*மதுரை 625 019*
*15-05-2013*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ‘தமிழ்க் கனல்’ முடியரசன் | 7 |
| 2. | ‘உவமைக் கவிஞர்’ சுரதா | 17 |
| 3. | ‘குக்கூ கவிஞர்’ மீரா | 23 |
| 4. | அப்துல் ரகுமான் :<br>‘தமிழுக்குக் கிடைத்த கலீல் ஜிப்ரான்!’ | 35 |
| 5. | ‘அங்கதக் கவிஞர்’ தமிழன்பன் | 45 |
| 6. | ‘திரையுலகின் காளிதாசன்’ வாலி | 65 |
| 7. | மு. மேத்தாவின் கவிப்பார்வை | 77 |
| 8. | பாலாவின் கவிதைப் பாங்கு | 83 |
| 9. | ‘தனித்தன்மைக் கவிஞர்’ தாராபாரதி | 89 |
| 10. | ‘கந்தகக் கவிஞர்’ கந்தர்வன் | 95 |
| 11. | ‘உணர்ச்சிக் கவிஞர்’ காசி ஆனந்தன் | 103 |
| 12. | ‘தன்மானக் கவிஞர்’ முத்துலிங்கம் | 113 |
| 13. | ‘இலட்சியக் கவிஞர்’ வெ. இறையன்பு | 125 |
| 14. | பத்மாவதி தாயுமானவர் : ‘அர்த்தநாரீசுவர ஆளுமை!’ | 135 |
| 15. | ஆற்றல்சால் கவிஞர் தங்கம் மூர்த்தி | 145 |
| 16. | வித்தியாசம் + தனித்துவம் = வெற்றிச்செல்வன் | 159 |
| 17. | ஹைகூ கவிஞர் மு. முருகேஷ் | 169 |
| 18. | வாழ்க்கையிலே கவிதைகளைத் தேடும் க. ஆனந்த் | 177 |
| 19. | ‘கவிதை அப்பா’ : கண்ணீர் வரைந்த ஓவியம் | 189 |
| 20. | மலேசிய நாட்டின் மதிப்புறு கவிஞர்<br>செ. சீனி நைனா முகம்மது | 197 |



1

# ‘தமிழ்க் கனல்’ முடியரசன்

> “பாரதிதாசன் பரம்பரையில் முடியரசனுக்கு நல்லதோர் இடமுண்டு. இவருடைய பாடல்களைத் தமிழ்க் கனல் என்று கூறலாம். பழைய மரபுகளைக் கட்டிக் காப்பதில் இவர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.”
>
> - மா. இராமலிங்கம் [எழில்முதல்வன்]*

**“என்றும் நானோர் இளைஞன் - பாடல்**
**எழுதிக் கொழிக்குங் கவிஞன்**
**ஒன்றும் வாழ்விற் சுவைஞன் - நெஞ்சில்**
**உணர்ச்சித் துடிப்போ மிகைஞன்**

**செந்தமி ழமுதம் உண்டேன் - முதுமை**
**சிறிதள வேனும் அண்டேன்**
**சிந்தையில் இளமை கொண்டேன் - உலகம்**
**சிறியதாய்த் தோன்றிடக் கண்டேன்”**

**[பாடுங் குயில், ப.40]**

- அண்மையில் ‘பாடிப் பறந்த குயி’லான கவியரசு முடியரசன் (7.10.1920- 4.12.1998) தமது கவிதை ஒன்றில் வடித்துத் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் இது! எழுபத்தொன்பது வயதான நிலையிலும் முதுமை சிறிதளவேனும் அண்டவிடாமல் சிந்தையில் இளமை கொண்டு வாழ்ந்து வந்த ‘இருபதாம் நூற்றாண்டுப் பிசிராந்தையார்’

---

* இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், ப.150.

அவர். 'பாவேந்தர் பாரதிதாசனின் மூத்த வழித்தோன்றல்', 'திராவிட நாட்டின் வானம்பாடி', 'கவிப் பேரரசர்', 'தமிழ்ச் சான்றோர்', 'நல்லாசிரியர்' என்று தமிழ் கூறு நல்லுலகால் - கவிதை ஆர்வலர்களால் - பெருமதிப்போடும் பேரன்போடும் அழைக்கப் பெற்றவர் அவர்.

இரத்தினச் சுருக்கமான மொழியில் சொல்ல வேண்டும் என்றால், தமிழ் அவரது உயிர் மூச்சு; கொள்கைப் பிடிப்பு அவரது தனிக்குணம். தனிவாழ்விலும் சரி - படைப்பு வாழ்விலும் சரி - எத்தனை எத்தனையோ சோதனைகளும் வேதனைகளும் இடைவிடாமல் குறுக்கிட்ட போதும், மனம் சிறிதும் கலங்கிடாமல் - சோர்ந்திடாமல் - மயங்கிடாமல் - கொண்ட தம் குறிக்கோளை நோக்கித் தொடர்ந்து சென்று சாதனை படைத்துக் காட்டிய முத்திரைக் கவிஞர் அவர்.

"இருண்ட கண்ணுடன் இரண்டு கால்களும்
சுருண்டு வீழினும் தொடர்ந்து செல்கிறேன்
மருண்டு சோர்கிலேன் வெருண்டு தாழ்கிலேன்
உருண்டு சென்றுமே உயர்வைக் காணுவேன்" (ப.98)

எனத் தம் கவிதை ஒன்றில் பாடியது போல், வாழ்நாளின் கடைசி மூச்சு வரையிலும் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து உயர்வைக் கண்ட 'குறிக்கோள் கவிஞர்' முடியரசன் ஆவார்.

## பாடும் பறவையின் இரு சிறகுகள்

கவியரசு முடியரசனின் ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்திய கவிஞர்கள் இருவர். ஒருவர், 'பாட்டுக்கொரு புலவர்' பாரதியார். இன்னொருவர், 'பாவேந்தர்' பாரதிதாசன். பாட்டுலகில் பாரதியார், முடியரசனின் பாட்டன்; பாரதிதாசன், அவரது தந்தை. தமிழ் வழிபாடும், சமுதாயச் சீர்திருத்தமும் முடியரசனின் கவிதைகளில் அடிநாதமாய் ஒலிப்பதற்கு முழுமுதற் காரணமாய் விளங்கியவர்கள் முறையே பாரதியாரும் பாரதிதாசனுமே ஆவர்.

பாரதியாருக்குக் கண்ணன் எப்படியோ முடியரசனுக்குத் தமிழ் அப்படி. வேறு வகையாகக் கூறினால், பாரதியார் கண்ணனை எங்ஙனம் பல்வேறு கோணங்களில் பார்த்தாரோ - பல்வேறு உறவு நிலைகளில் வைத்துப் பாடினாரோ - அங்ஙனம் முடியரசன் தமிழைப்

பல்வேறு கோணங்களில் பார்த்தார்; பல்வேறு உறவு நிலைகளில் வைத்துப் பாடினார். 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராது இருத்தல்' (பாரதியார் கவிதைகள், ப.10) என உணர்ச்சி மிக்க குரலில் பெருமிதத்தோடு முழங்கிய பாரதியாரைப் போல் முடியரசனும்.

**"நானொரு பாடும் பறவை - பொழிவேன்**
**நாடொறும் பாடல் நறவை**
**வானில்வி ரிப்பேன் சிறகை - மறவேன்**
**வாழ்ந்திடும் மண்ணின் உறவை**

**பாடுவதென்றன் தொழிலாம் - அன்பும்**
**பண்பும் எனதிரு விழியாம்...**
**தாழ்விலுஞ் செம்மைக் குரியேன் - என்றன்**
**தாயகங் காக்கும் குறியேன்"** (பக்.14-15)

என 'நானொரு பாடும் பறவை' என்னும் கவிதையில் முழங்கினார். அக் கவிதையின் முடிவில் 'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!" (பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, ப.158) என்ற பாவேந்தர் பாரதிதாசனின் அறைகூவலை வழிமொழிவது போல் முடியரசனும்,

**"பாடிடு வேன்புது வுலகை - அங்கே**
**படைத்திடு வேன்பொது வுடைமை**
**சாடிடு வேன்வரும் படையைத் - தாக்கிச்**
**சமர்புரி வேன்அது கடமை"** (ப.15)

என உறுதி மிக்க குரலில் அறுதியிட்டு உரைத்தார். கவிக்கூற்றாக மட்டுமின்றி, காதல் வயப்பட்ட ஒரு காதலியின் கூற்றாகவும்,

**"பொதுவான உலகொன்று வேண்டுமாம் அங்குப்**
**பொருள்யாவும் சமமாக வேண்டுமாம் தோழி"**
(ப.71)

என்று பாடி நல்ல, இனிய, புதிய, பொதுவான உலகொன்று காண்பதிலே தமக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவார் கவிஞர். சுருங்கக் கூறின், முடியரசன் என்ற 'பாடும் பறவை', 'தெள்ளிய தமிழ் மழை'யாம் பாரதியாரையும், 'பொதுவுடைமைப் போர்வா'ளாம் பாரதிதாசனையும் தமது இரு சிறகுகளாகக் கொண்டு

கவிதை வானில் பறந்து திரிந்தது எனக் குறிப்பிடலாம்.

## 'ஏறு, முன்னேறு உழைப்பால்'

கவியரசு முடியரசன் உழைப்பின் மீது கொண்டிருந்த நம்பிக்கை, கடலினும் ஆழமானதாகும்; உழைப்புக்கு அவர் தந்த மதிப்பு, மலையினும் மாணப் பெரிதாகும்.

"உழைப்புக்கு நல்லதோர் காலம் வந்தால்
ஓங்கிவ ளர்ந்திடு மேயிந்த ஞாலம்" (ப.56)

என்பது கவிஞர், உழைப்புக்குச் சூட்டி மகிழும் மணிமகுடம் ஆகும்.

"ஆலைத் தொழில்புரிந் தாலும் – பள்ளி
ஆசிரி யப்பணி ஏற்றிருந்தாலும்
சீலைத் தொழில்புரிந் தாலும் – எங்கும்
சீருடன் நின்கடன் ஆற்றுக நாளும்" (ப.57)

என உழைப்பினை நம்பி வாழ்வில் முன்னேறுமாறு நாட்டு மக்களுக்கு நல்லறிவு ஊட்டுகின்றார் கவிஞர். 'தம்பி! ஏறு - முன்னேறு - உழைப்பால், உயர்கோட்டில்' என்பது இளைஞர்களுக்கு அவர் விடுக்கும் அன்புக் கட்டளை ஆகும்.

கவிதைப் படைப்பில் மட்டுமன்றி, கவியரசு முடியரசன் தம் வாழ்நாளின் இறுதி மூச்சு வரை மனிதனை - உழைப்பினை - மதித்தார்; கொடிய வறுமையை - சிறுமையை - வெறுத்தார். தூய கடமையை-உரிமையை - மதித்தார்; கடவுளை - விதியினை - மறுத்தார். நல்ல மதியினை - உணர்வினை - மதித்தார். மடமையை - அடிமையை - வெறுத்தார். தம் பாட்டுத் திறத்தாலே இனிய நல்லுலகு ஒன்றினைப் படைக்க விரும்பிய அவர்,

"புதுமுறை உலகினைப் படைப்போம் – அங்கே
பொதுமையில் அறநெறி விரிப்போம்
உதவிடும் மனத்தோடு சிறப்போம் – உலகில்
ஒருசரி நிகரென இருப்போம்" (ப.9)

என 'இனியொரு விதிமுறை செய்து, அதை எந்த நாளும் காத்து' ஒழுகுமாறு வலியுறுத்தியுள்ளார். மேலும், 'வையத் தலைமை கொள்' (பாரதியார் கவிதைகள், ப.260) என்ற பாரதியாரின் 'புதிய

ஆத்திசூடி' வரியை நினைவூட்டும் வகையில், கவிதைக்குத் 'தலைமை வகிப்போம்' என்ற தலைப்பினைச் சூட்டியுள்ளார் கவியரசு முடியரசன்.

## 'நெஞ்சில் வாய்மையை, நேர்மையை வைத்திடுவோம்!'

உழைப்புக்கு அடுத்த நிலையில் வாய்மைப் பண்பைக் கவியரசு முடியரசன் தம் கவிதைகளில் பெரிதும் போற்றிப் பாடியுள்ளார்.

"வாய்ப்பறை சாற்றலைத் தைத்திடுவோம் - நெஞ்சில்
வாய்மையை நேர்மையை வைத்திடுவோம்"
(ப.109)

என்று 'நற்பணி யாற்றுவோம்' என்ற கவிதையில் அவர், வாழ்வில் நல்லவர் கொள்கையைப் பொன்னே போல் போற்றி ஏற்றி, நற்பணி ஆற்றிட வருமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். 'மூடம் என்று மாறுமோ?' என்று பிறிதொரு கவிதையிலும் அவர்,

"நெஞ்சின் மாசை ஓட்டுவாய் - நல்ல
நினைவை யங்கே கூட்டுவாய்
வஞ்சம் நீக்கி வீட்டுவாய் செய்கை
வாய்மை யாக்கிக் காட்டுவாய்" (ப.13)

என்று நாட்டு மாந்தருக்கு நல்லறிவு ஊட்டியுள்ளார்.

"வாழ்வினைப் பெரிதாக் கருதேன் - என்றும்
வாய்மையை மீறித் திரியேன்" (ப.15)

என்பது 'நானொரு பாடும் பறவை' என்னும் கவிதையில் கவியரசு முடியரசன் தரும் தன்னிலை விளக்கம் ஆகும்.

## 'சாதியின் வேரை வெட்டுங்கள்!'

ஔவையார், சிவவாக்கியர், பாரதியார், பாரதிதாசன் ஆகியோரின் வழிநின்று கவியரசு முடியரசனும் தம் கவிதைகளில் ஆங்காங்கே சாதிக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார். 'நூறு நூறு சாதிகள் - இங்கு, நுவலுங் கோடி வீதிகள்' (ப.13) என இன்றைய சமுதாயத்தில் காணலாகும் 'மூடம் என்று மாறுமோ?' என்று தம் ஆழ்ந்த கவலையைப் பதிவு செய்துள்ளார் கவிஞர். 'சாதிகள் இல்லையடி பாப்பா!' (பாரதியார் கவிதைகள், ப.268) என்று

பாரதியார் பாப்பாவுக்குப் பாடியது போல் முடியரசன்,

> "சாதியின் வேரை வெட்டுங்கள் – நெஞ்சில்
> சமநிலைப் பண்பை ஒட்டுங்கள்" (ப.51)

என இளைஞர்களுக்கு அறிவுரை கூறுகின்றார். 'எனக்கென உண்டொரு வுலகம் - அங்கே, இன்பங்கள் வந்தெனைத் தழுவும்' எனத் தொடங்கிப் பாடும் 'எனது உலகம்' என்ற கவிதையிலும்,

> "மடம்படு சாதிகள் தொலையும் – அங்கு
> மதமெனும் போர்வைகள் கலையும்" (ப.111)

என்று நம்பிக்கையோடு குறிப்பிடுகின்றார் கவிஞர்.

## 'கண்படும் யாவுங் கலப்படம்'

இன்று எல்லாம் கலப்படம் - எங்கும் கலப்படம் - எதிலும் கலப்படம்; செந்தமிழ்ப் பாட்டில் கலப்படம், செய்தொழில் யாவும் கலப்படம், நோய் மருந்தெல்லாம் கலப்படம் என்றாற் போல் துறைதொறும் துறைதொறும் இன்று கலப்படம் களிநடம் புரிந்து கொண்டிருக்கின்றது. இக் கொடுமைக்கு எதிராகக் கவியரசு முடியரசன் தொடுத்திருக்கும் கூரிய கேள்விக் கணை இதோ:

> "உண்பொருள் எல்லாங் கலப்படம் – பேசும்
> உண்மையில் பொய்யுங் கலப்படம்
> கண்படும் யாவுங் கலப்படம் – இங்கே
> கண்ணியம் எங்கே உருப்படும்?" (ப.62)

இந்நிலை நீடித்தால் 'நாட்டின் தூய நல்மானம் புறப்படும்' எனக் கலப்படம் செய்வோர்க்கு எச்சரிக்கை விடுக்கின்றார் கவிஞர்.

## 'தமிழுக்கு நன்று செய என்றும் பிறப்பேன்!'

நாட்டுச் சூழலைப் பாடும்போது கடுமையாகவும் வன்மையாக வும் சாடி எழுதும் முடியரசனின் எழுதுகோல், தமிழைப் பாடும் போது குழைவாகவும் மென்மையாகவும் ஆகிவிடுகின்றது. கவிஞருக்கும் கன்னல் தமிழுக்கும் இடையே நிலவிய உறவானது, ஒரு தாய்க்கும் குழந்தைக்கும் இடையே நிலவும் உறவைப் போன்று ஆழமானது; உணர்ச்சி மிக்கது. 'செந்தமிழே என்னுயிரே' (ப.3) எனத் தொடங்கு

கின்றது அவரது தமிழ் வாழ்த்து. 'என்னுயிர் நீதான் தமிழம்மா!' (ப.39) என்னும் கவிஞரின் கூற்றும் இங்கே மனங்கொளத்தக்கது. மேலும்,

> "இடும்பை தவிர்த்திடும் முப்பாலே – என்னை
> இனிதே வளத்திடும் தாய்ப்பாலாம்" [ப.38]

என வள்ளுவரின் முப்பாலைத் தம்மை இனிதே வளர்த்திட்ட தாய்ப்பாலாகச் சுட்டுகின்றார் கவிஞர்.

தமிழ் அன்னை மீது கவியரசு முடியரசன் கொண்டிருந்த பற்று நிலத்திலும் பெரிதாக - வானினும் உயர்ந்ததாக - கடலினும் ஆழம் மிக்கதாக - விளங்கியது. தமது 56-ஆம் பிறந்த நாளன்று (7.10.75) 'தமிழுக்கு என்னைத் தருவேன்' என்ற தலைப்பில் பாடிய கவிதையில்,

> "சொத்துந லத்தினை முற்றஇழப்பினும்
> சொற்றமி ழுக்கெனைத் – தருவேனே" [ப.53]

என்று உள்ள நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டார் அவர். மேலும் தமது 54-வது பிறந்த நாளன்று 'என்றும் பிறப்பேன்' என்ற தலைப்பில் பாடிய கவிதையிலும் அவர்,

> "... ... என் தமிழுக்கு – நன்று செய
> என்றும் பிறப்பேன் இளங்குழந்தை போலிருப்பேன்
> தொன்றுதமிழ் முப்பால் சுவைத்து" [ப.37]

என்று குறிப்பிட்டிருந்தார். 'தமிழக்கு நன்று செய வேண்டும்' என்ற உயர்நோக்கமே கவியரசின் நெஞ்சில் என்றென்றும் குடி கொண்டிருந்தது.

> "இளையவரே ஒன்று கேளுங்கள் – சொல்லும்
> என்மொழி கேட்டே வாழுங்கள்" [ப.50]

என விளித்து, கவியரசு முடியரசன் இளைஞர்களுக்குக் கூறும் அறிவுரை இந்தத் தருணத்தில் மிகவும் இன்றியமையாத ஒன்று ஆகும். இன்றைய இளைய தலைமுறை கருத்தில் கொள்ள வேண்டிய அந்த அறிவுரை இதோ:

"மொழிபல கற்கச் செல்லுங்கள் ஆனால்
முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்!" (ப.51)

இன்றைய இளைஞர்கள் மொழி பல கற்கச் செல்வதிலே தவறு ஏதும் இல்லை. ஆனால் அவர்கள் முத்தமிழையே தம் உயிராகக் கருதிப் போற்ற வேண்டும். இதுவே இளைஞர்களுக்கு முடியரசன் விடுக்கும் அன்பு வேண்டுகோள் ஆகும்.

## 'அழகான கவியாக உருவாக்குவோம்!'

கவியரசு முடியரசனின் கருத்தில் உரையான வரியெல்லாம் கவிதை ஆகாது. 'உரைநடை எல்லாம் பாடல்கள் என்றால், உயரிய கவிதை நிலை என்னவாகும்?' (ப.79) எனக் கவிதை என்ற பெயரால் உரைநடைகளை எழுதுவோரை நோக்கிக் கேள்வி கணை தொடுப்பார் அவர். அவரைப் பொறுத்த வரையில், தனியான மரபு, தரமான நெறி, புதிதான எண்ணம், மரமான வடிவம் - இவை இருந்தால் மட்டுமே அது அழகான கவிதை ஆகும். 'எழுதுங்கள் புதுக்கவிதை' என்ற தலைப்பிலேயே முடியரசன் ஒரு கவிதை படைத்துள்ளார். அதில் அவர்,

"அழகான கவியாக உருவாக்குவோம்
அதனாலே, தமிழ்மாதை உயர்வாக்குவோம்...
வண்ணங்கள் எண்ணங்கள் புதிதாகவே
வடிவங்கள் அமையுங்கள் மரபாகவே"

(ப.123)

எனக் கற்பனை வளமும் பொருள் நலமும் செறிய எழுதுமாறு - 'படித்திடப் படித்திடப் புதியன கிடைக்கும், பலமுறை படிப்பினும் விழைவினைக் கொடுக்கும், படித்த பின் நினைப்பில் இனிமையைப் படைக்கும்' (ப.69) உயரிய இலக்கியம் படைக்குமாறு - கவிதையிலே ஈடுபாடு கொண்ட இளைஞர்களுக்கு நேர்வழி காட்டியுள்ளார். மரபு வடிவங்களில் புதிய எண்ணங்களைப் பாடுவதையே அவர் மனமார வரவேற்றுள்ளார்.

"பொருளும் உணர்வும் பொருந்திய பாடல்
பொழுதெலாம் கேட்டால் போகுமே வாடல்"

(ப.126)

எனப் பிறிதோர் இடத்தில் அழகான தமிழ்க் கவிதைகள் பெற்றிருக்கும் தனிப்பட்ட ஆற்றலையும் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார் கவிஞர்.

## 'ஆழ்ந்திருக்கும் கவியுளம்'

கவியரசு முடியரசனின் 'எனது நேரம்' என்ற அணிசெய் கவிதையைக் கற்பார், அதிலே ஆழ்ந்திருக்கும் கவியுளத்தை நன்கு கண்டுகொள்ள முடியும். 'எம் நெஞ்சம் திறப்பார் நிற்காண்குவரே' என்றாற்போல், கவியரசின் தூய நெஞ்சத்தைத் திறந்து காட்டும் சீரிய கவிதை அது. அக் கவிதையின் முடிவு வரிகள் முத்தாய்ப்பானவை:

“என்னலம் நெஞ்சினில் ஒருநாளே – மக்கள்
இனநலம் மிஞ்சிடும் பலநாளே...
மண்ணில் நடப்பது சிறுநேரம் – நானோ
வானிற் பறப்பது நெடுநேரம்...

வீட்டை நினைப்பது சிறுநேரம் – மனைவி
வேட்கை யிருப்பதுஞ் சிறுநேரம்
நாட்டை நினைப்பது நெடுநேரம் – கவிதை
நயந்து தொடுப்பது நெடுநேரம்” (ப.17)

கவியரசின் நேரத்தில் பெரும்பகுதியைக் கைப்பற்றிக் கொண்டிருப்பவை ஏழை எளிய மக்கள் நலம், நாட்டு நலம், கவிதை ஆகிய மூன்றுமே ஆகும். அவர் உள்ளியது எல்லாம் உயர்வையே எனலாம். 'ஈயென எதிலும் அமரேன் - நறுமலர், எதுவோ அதையே நுகர்வேன்' (ப.15) என்னும் அவரது கூற்று இவ்வகையில் நினைவுகூரத்தக்கது ஆகும்.

## 'கவிதை காலத்தை வென்றுவிடும்'

கவியரசு முடியரசனின் நூல்களை அண்மையில் தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியுள்ளது. இது தமிழறிந்த - முடியரசனின் கவிச்சுவையை நன்கு உணர்ந்த - அனைவரது நெஞ்சங்களிலும் இன்பத் தேனைப் பாய்ச்சி இருக்கும் நல்ல காரியம் ஆகும்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிப் பாடிய கையறு நிலைப் பாடலில்,

**“காலம் கவிஞனைக் கொன்றுவிடும் – அவன்**
**கவிதை காலத்தை வென்றுவிடும்”**

என ஜெயகாந்தன் கூறியிருப்பது முக்காலும் உண்மை; முடிந்த முடிவான உண்மை. ‘முடியரசன்’ இன்று இல்லாமல் போகலாம். ஆனால், அவரது கவிதை காலத்தை வென்று என்றும் நிலைத்து நின்று கொண்டிருக்கும். முடியரசனே விரும்பியது போல், தமிழுக்கு நன்று செய்ய மீண்டும் அவர் பிறப்பெடுப்பார்; ‘பூங்கொடி’, ‘வீர காவியம்’, ‘காவியப் பாவை’, ‘பாடுங்குயில்’, ‘ஊன்றுகோல்’ போன்ற அழகிய கவிதைப் பனுவல்களைத் தமிழன்னைக்கு அணிகலன் களாகப் படைத்துத் தருவார்.



## 2

# ‘உவமைக் கவிஞர்’ சுரதா

“உலகம் தோன்றிய நாள்தொட்டு – மொழி தோன்றுவதற்கு முன்னமே – இந்த உவமை இருந்து வந்திருக்க வேண்டும். ஒன்றைப் பகுத்தறிய மனிதன் கற்றுக்கொண்ட அந்த நாளிலேயே உவமம் வாழ்வில் வந்துவிட்டது.”

– அ.மு. பரமசிவானந்தம்*

“**க**விதைக் கன்னிக்கு மணமும் மலர்ச்சியும் அளிக்கும் வாசனைத் திரவியம் உவமையே. உவமையற்ற கவிதை உப்பற்ற கறிக்குச் சமம். கவிஞன் கையாளும் உவமையே அவன் கற்பனை வளத்துக்குச் சாட்சி கூறும். கவிதைக்கு வலக்கை போல் பணி புரிவது உவமையே” (க.வீரகத்தி, கடலும் படகும், ப.30) என்பர் அறிஞர். ஒரு கவிஞர் கையாளும் உவமைகளைக் கொண்டு அவரது உள்ளத்தையும் உணர்வையும் உய்த்துணரலாம். ஒரு படைப்பில் ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக் காட்டுவதில் உவமை பெறும் இடம் முக்கியமானது; முதன்மையானது. ஓர் உதாரணம் காண்போமா?

‘தமிழரெல்லாம் தங்கள் குழந்தைகளுக்கு என்றுமுள செந்தமிழில் பெயரிடுதல் வேண்டும்’ என்னும் கருத்தை வலியுறுத்துவதற்குச் சுரதா கையாண்டுள்ள உவமை வருமாறு:

**“தாய்மொழியை ஒதுக்கிவைத்துப் பிறநாட் டாரின்**
**தழுவல்மொழிப் பெயரிட்டுக் கொளுநி னைத்தல்**

* நல்ல தமிழ், பக்.121–122.

தாய்ப்பாலை வேண்டாது நாய்ப்பால் உண்ணச்
சம்மதிக்கும் தன்மையது போன்ற தாகும்"
[தேன் மழை, ப.249]

'கனி இருப்பக் காய் கவர்ந்தற்று' என்பது போல், தாய்ப்பால் இருக்க நாய்ப்பால் உண்ண எவரேனும் சம்மதிப்பார்களா? அது போல் தான் தாய்மொழியை ஒதுக்கி வைத்துப் பிற நாட்டாரின் தழுவல் மொழிப் பெயரிட்டுக் கொள்ள நினைப்பதும். கவிஞரின் பார்வையில் என்றுமுள செந்தமிழ்ப் பெயரிடாமல், இரவல் மொழிப் பெயரிடுதல் என்பது அடிமைத் தன்மையின் அடையாளம் ஆகும்.

## தமிழ் உணர்வைப் பறைசாற்றும் உவமைகள்

உவமையைப் பொறுத்த வரையில், பாரதிதாசனிடம் மேலோங்கிக் காணப்படுவது சமூக உணர்வு; சுரதாவிடம் சிறந்து விளங்குவது தமிழ் உணர்வு. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், தமிழ்ப் பண்பாடு முதலான தமிழ் தொடர்பான செய்திகளைச் சுரதா தம் உவமைகளில் ஒல்லும் வகையெல்லாம் எடுத்தாண்டுள்ளார்.

"வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்ப தில்லை
வெறும்பாட்டைத் தமிழ்ச்சங்கம் சேர்ப்ப தில்லை"
[தேன் மழை, ப.57]

"எப்போதும் இனிப்பவளே! 'ழ'கரம் என்னும்
எழுத்தே போற் சிறந்தவளே!" [தேன் மழை, ப.69]

"...தனித்தி யங்கும்
செந்தமிழ் போன்றே யானும்
சிறந்தவள்" [தேன் மழை, ப.257]

"ஆய்த வெழுத்தின் அமைப்பே அடுப்பாம்"
[தேன் மழை, ப.255]

இங்ஙனம் தமிழின் தனித்தன்மையைப் பறைசாற்றும் விதத்தில் சுரதா கையாண்டுள்ள உவமைகள் பலவாகும்.

## புத்தம் புதிய உவமைகள்

சுரதாவின் உவமைகள் புத்தம் புதியவை; பொருத்தமானவை; இதுவரை எவரும் கையாளாத தனித்தன்மை வாய்ந்தவை; வித்தியாச

மானவை; ‘**உவமைக் கவிஞர்**’ என்னும் சிறப்புப் பெயர் சுரதாவுக்கு வழங்குவதற்குக் கட்டியம் கூறும் விதத்தில் அமைந்தவை. ‘புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு’ என்பதுபோல், சுரதாவின் ‘தேன் மழை’ தொகுப்பில் படிப்பவர் நெஞ்சை அள்ளும் வகையில் உவமைகள் மண்டிக் கிடக்கக் காணலாம்.

ஆண்மைக்கும் வீரத்திற்கும் அடையாளமாக ஆடவர் முகத்தில் விளங்குவது மீசை. மீசையைக் குறிக்கும் வித்தில் இதுவரை எத்தனையோ பேர் எத்தனையோ உவமைகளைக் கையாண்டுள்ளனர். ஆயின் சுரதா பாண்டிய மன்னர்களின் மீசையைச் சுட்டுவதற்கு ஒரு கவிதையில் கையாண்டுள்ள உவமை வித்தியாசமான ஒன்றாகும். அவ்வுவமை வருமாறு:

> **“படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை வைத்த**
> **பாண்டியர்கள் வளர்த்த மொழி”** **[தேன் மழை, ப.244]**

‘படுத்திருக்கும் வினாக்குறி போல்’ - கற்பனை வளம் களிநடமிடும் கவின்மிகு உவமை இது!

‘ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம், கூடி முயங்கப் பெறின்’ (குறள் 1330) என்னும் காமத்துப் பால் குறட்பாவுக்கு அழகிய உவமை வடிவம் தந்தால் எப்படி இருக்கும்? இதோ, சுரதா தீட்டும் ஒரு சுவையான உவமைக் காட்சி; காதலரின் கூடல் நாடகம்.

> **“உச்சரிப்பு நின்றுவிடும் தொடுவார் ஈர**
> **உடைபோல்நான் அவருடலில் ஒட்டிக் கொள்வேன்”**
> **[தேன் மழை, ப.110]**

‘ஈர உடைபோல் அவருடலில் ஒட்டிக்கொள்வேன்’ - காதல் சுவை நனி சொட்டச் சொட்டச் சுரதா கையாண்டுள்ள அற்புதமான உவமை இது!

நாயன்மார் நால்வருள் நீண்ட நெடிய வாழ்வு வாழ்ந்தவர் அப்பர். நரை திரை மூப்பு பிணி நான்கும் அவரது வாழ்வில் அணி வகுத்து நின்றன. கவிமணி வாழ்வாங்கு வாழ்ந்து எழுபத்தெட்டு வயதில் மரணம் அடைந்தபோது ‘அந்தோ கவிமணி’ என்ற தலைப்பில் பாடிய கையறுநிலைக் கவிதையில் சுரதா தக்க இடத்தில் அப்பர் பெருமானின் நிறைவாழ்வினை உவமையாகக் கையாண்டுள்ளார். உருக்கமும் உயிரோட்டமும் ததும்பி நிற்கும் அவ்வுவமை வருமாறு:

"அப்பரைப் போல் எண்பத்தோ ராண்டு வாழ்ந்தே
அங்கத்தில் சுருக்கங்கள் பெற்றிட்டாலும்
எப்பொழுதும் சுருங்காத பெருமை பெற்றாய்"
[தேன் மழை, ப.232]

அப்பர் தெய்வத் தமிழில் முத்திரை பதித்தவர்; கவிமணி குழந்தைக் கவிதையில் தடம் பதித்தவர். 'குழந்தையும் தெய்வமும் ஒன்று' என்பது போல், சுரதாவின் உவமை இரு பெருமக்களையும் இணைத்துள்ள பான்மை எண்ணி எண்ணி மகிழத் தக்கதாகும்.

## இலக்கணச் செய்திகளை உவமையாக்கல்

இலக்கணச் செய்திகளை உவமையாக்குவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் சுரதா. இவ்வகையில் மரபிலக்கணம் அவருக்குப் பெரிதும் கை கொடுத்துள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணச் செய்திகளையும் சுரதா தம் உவமைகளில் ஆங்காங்கே நயமாக எடுத்தாண்டுள்ளார்.

தொடை வகைகளுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை எதுகையும் மோனையும். முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை; இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை. இவ்விரண்டையும் ஒரு கவிதையில் ஆதிமந்தி - ஆட்டனத்தி இருவரது வருகையையும் கட்டுவதற்கு அழகுறப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் சுரதா.

"வரலாற்றுப் பேரழகி ஆதி மந்தி,
எதுகைவரல் போலடுத்து வந்தாள்; அத்தி
என்பானோ, மோனையைப் போல் முன்வந்தான்"
[தேன் மழை, ப.41]

என்னும் பகுதி இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

பெருந்தமிழ்ப் புலவர் வேங்கடாசலம் பிள்ளைக்குப் பண்டிதமணி 'கரந்தைக் கவியரசு' என்னும் பட்டம் வழங்கி வாழ்த்திப் பேசியது வரலாற்றில் இடம்பெற்ற ஓர் இன்றியமையாத நிகழ்ச்சி. 'வழங்கத் தகுந்தவர் வழங்கினார். அதனை ஏற்கத் தகுந்தவர் ஏற்றுக் கொண்டார்' என்பதோடு நில்லாமல், இலக்கண நயம் மிளிரும் ஓர் உவமையைக் கையாண்டு இந் நிகழ்வினைப் பதிவு செய்துள்ளார் சுரதா. அவ்வுவமை வருமாறு:

"தகுதி மிக்கோர் தருகின்ற பட்டம்
பகுதி போன்று நிலைத்து நிற்கும்.

**தகுதி இலாதார் தருகின்ற பட்டம்**
**சிறப்பிலாப் பட்டமே, காற்றில்**
**பறக்கும் பட்டமே அடிக்குந்தம் பட்டமே!"**

[தேன் மழை, ப.162]

'பகுதி போன்று நிலைத்து நிற்கும்' என்னும் உவமையில் வெளிப்படும் கவிஞரின் இலக்கணப் புலமை சிறப்பானதாகும். தகுதி - பகுதி. பட்டம் - தம்பட்டம் - கவிஞரின் சாதுரியமான சொல் விளையாட்டினை இங்கே சுவைத்து மகிழ்கிறோம்.

கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி ஒன்றி உயர்ந்த பாலது ஆணை காரணமாகக் காதலனும் காதலியும் இயற்கைப் புணர்ச்சியில் கூடுவது போல், சுரதாவின் உவமைகளில் இலக்கணச் செய்திகள் போகிற போக்கில் இயல்பாகக் கூடி வருகின்றன. நெஞ்சை அள்ளும் ஓரிரு உதாரணங் களைக் காண்போமா?

**"    ....மெல்லினத்தின்**
**முன்னிற்கும் வல்லி னம்போல்**
**முன்னின்ற தலைவர்!"**   [தேன் மழை, ப.220]

தமிழ்த் தென்றல் திரு.வி.க.வுக்கு உவமை வடிவில் சுரதா சூட்டியுள்ள புகழாரம் இது!

**"ஆயிரம் புதுமைகள் அமைந்தநூ லாயினும்**
**அந்நூல் குறித்தொரு பாயிரம் அவசியம்**
**அதுபோல் ஒழுக்கமும் மாந்தர்க் கவசியம்"**

[தேன் மழை,ப.140]

என்னும் கவிஞரின் அழுத்தமான கருத்தில் அழகிய உவமை இடம்பெற்றிருத்தல் கண்கூடு.

## தெரிந்த ஒன்றிற்குத் தெரியாத ஒன்றை உவமையாக்கல்

பெருமாள்முருகன் 'காலச் சுவடு' இதழில் சுரதா குறித்து எழுதிய இரங்கல் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போல், "தெரியாத ஒன்றை உணர்த்த நன்கு தெரிந்த ஒன்றைச் சொல்லி விளக்கத் தோன்றியதுதான் உவமை. சுரதா நன்கு தெரிந்த ஒன்றிற்கு யாருக்குமே தெரியாத ஒன்றை உவமையாக்குவார்... அரிய செய்தி களை உவமையாக்கி, உவமைக்குரிய இலக்கணத்தை மீறியவர் என்பதாலேயே அவருக்கு அப்பட்டம் மிகவும் பொருந்துகிறது"

('கண்ணாடி மறைத்த ஓவியம்', காலச் சுவடு, ஆகஸ்ட் 2006, ப.72). புதுநெறி காட்டிய புலவர் பாரதி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகிய இருவரது வாழ்வையும் வாக்கையும் வாழ்நாள் சாதனையையும் குறிக்கும் வகையில் சுரதா கையாண்டுள்ள இரு அரிய உவமைகள் இவ் வகையில் நினைவு கூரத்தக்கவை.

**"வெடித்தவுடன் விரைந்தோடு ஆம ணக்கின்**
**விதையென்றால் பாரதிக்குப் பொருந்தும், கீழே**
**அடித்தவுடன் மேலெழும்பும் பந்தென் றிட்டால்**
**அது புரட்சிக் கவிஞருக்கே பொருந்தும்"**

[தேன் மழை, ப.224]

இங்ஙனம் அரிய செய்திகளை உவமையாக்கிச் சுரதா படைத்துள்ள இடங்கள் 'தேன் மழை' தொகுப்பில் பல உண்டு. 'மலைபோன்று தலைநிமிர்ந்த உவமை தந்தார்' எனப் பாரதிதாசனைக் குறித்துச் சுரதா கூறுவது, ஒரு வகையில் சுரதாவுக்கும் பொருந்தி வருவதே ஆகும்.

## 'உவமை போன்றோர்'

'நிலா முகம்' என்ற தலைப்பில் பாடிய கவிதையின் முடிவில்,

**"வினைபயன் மெய்யுரு என்ற நான்கின்**
**வகையை நுணுக்கமாய் ஆராய்ந்து வந்தால்**
**புதிது புதிதாய் உவமைகள்**
**உதிக்கும் இதனை உணர்ந்து கொள்வீரே!"**

[தேன் மழை, ப.270]

என உவமை ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் அறிவுறுத்து கின்றார் சுரதா. இவர் இங்ஙனம் பாடியதோடு நின்றுவிடாமல், வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் நுணுக்கமான, புதிது புதிதான உவமைகளைத் தம் கவிதைகளில் படைத்தும் காட்டி யுள்ளார். நிறைவாக, கவிமணி குறித்துச் சுரதா பாடியுள்ள வைர வரிகளையே நாம் சுரதாவுக்கும் அவரது உவமைத் திறத்திற்கும் காணிக்கையாக்கலாம்.

**"ஒப்புடையார் உவமேயம் போன்றோர் ஆவர்;**
**உத்தமனே நீயுவமை போன்றோன் ஆவாய்!"**

[தேன் மழை, ப.232]

ஆம், சுரதா உவமேயம் போன்றோர் அல்லர்; உவமை போன்றோர் ஆவார்.

3

# 'குக்கூ கவிஞர்' மீரா

> "மீரா – கவிதைச் சுவைஞர்கள் நெஞ்சில் தேன் பிலிற்றும் ஒரு திருப்பெயர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் வகிர்ந்து கொண்ட ஆளுமை... முகம் தெரியாத இளம் கவிகளுக்கு முகவரி கொடுத்த தாய்மை... பாலுக்கு ஏங்காமல் தரமுயர்ந்த நூலுக்கு ஏங்கிய அன்னம். பத்தரை மாற்றுப் பதிப்புக்களுக்கு அடியெடுத்துத் தந்த அகரம்..."
>
> – சிற்பி*

"**மா**தா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள். இலக்குமி அம்மாளும் எஸ். மீனாட்சி சுந்தரமும் என் மாதா பிதாக்கள். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் என் குரு. மகாகவி பாரதி என் தெய்வம்" (முன்னுரை, மீரா கவிதைகள் ப.19) - கவிஞர் மீரா அளித்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் இது. 'மீரா' எனக் கவிதைச் சுவைஞர்களால் அன்போடும் ஆர்வத்தோடும், மதிப்போடும் மரியாதையோடும் அழைக்கப் பெறுபவர் மீ. இராசேந்திரன் (1938 - 2002). மதுரை தியாகராசர் கல்லூரி உருவாக்கிய கவிதைப் பரம்பரையில் தலையாய இடத்தைப் பெறுபவர் மீரா. அவரது மரபுக் கவிதைகளின் தொகுப்பு 'இராசேந்திரன் கவிதைகள்' (1965). 'மூன்றும் ஆறும்' (1965) என்பது மீரா பல்வேறு கவியரங்கங்களில் பாடிய கவிதைகளின் தொகுப்பு. தமிழ்க் கவிதை உலகில் மீராவைப்

---

* அணிந்துரை, மீராவின் 'கோடையும் வசந்தமும்', பக்.3–4.

பரவலாக அறியச் செய்த படைப்பு ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’ (1971). அங்கதக் கவிதை பாடுவதில் வல்லவர் மீரா என்பதற்குக் கட்டியம் கூறும் படைப்பு ‘ஊசிகள்’ (1974). கவிக்கோ அப்துல் ரகுமானுக்கு முன்பாக ‘ஜீனியர் விகடன்’ இதழில் வாரந்தோறும் குறுங்கட்டுரை எழுதும் மரபினைத் தொடங்கி வைத்த பெருமையும் மீராவுக்கு உண்டு. முத்தாய்ப்பாக,

> “வேலை இருக்கிறது நிரம்ப – என்னை
> வேகப் படுத்திவிடு தாயே” [மீரா கவிதைகள், ப.157]

என்றாற் போல் மீராவின் எழுதுகோல் படைத்துத் தந்திருக்கும் வைர வரிகள் பற்பலவாகும்.

‘இராசேந்திரன் கவிதைகள்’ - ‘மூன்றும் ஆறும்’ - ‘கனவுகள்+ கற்பனைகள் = காகிதங்கள்’ - ‘ஊசிகள்’ வரிசையில் நீண்ட இடை வெளிக்குப் பின் வெளிவந்திருக்கும் மீராவின் கவிதைப் படைப்பு ‘குக்கூ’. ‘ஐம்பெருங் காப்பியங்கள்’ போல் மீரா படைத்துத் தந்திருக்கும் இந்த ஐந்து கவிதைத் தொகுதிகளையும் மனம் கலந்து பயில்வோர் தமிழ்க் கவிதையின் பல்வேறு பரிணாமங்களையும் - பரிமாணங்களையும் - உய்த்துணரலாம். கவிக்கோ அப்துல் ரகுமான் குறிப்பிடுவது போல் “மீராவின் கவிதைகளைத் தமிழ்நாட்டுக் காலவுணர்வைக் காட்டும் மானிகள் என்றே கூறலாம்” (அணிந்துரை, மீராவின் ‘குக்கூ’, ப.3).

## மீராவின் ‘குக்கூ’ கவிதைகள்

அறுபதுகளில் வெளிவந்த ஈழத்து மஹாகவியின் ‘குறும்பா’க் களில் தம் மனத்தைப் பறிகொடுத்தவர் மீரா. அத்தொகுப்பைப் பலமுறை படித்துச் சுவைத்துத் திளைத்தவர் அவர். மீராவின் கணிப்பில் ‘ஆங்கிலத்தில் உள்ள Limerick என்னும் கவிதை வடிவத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்தித் தமிழ் மொழிக்கு அழகு சேர்த்தவர் மஹாகவி ஆவார். அவருடைய குறும்பாக்களை அசை போட்டு அசைபோட்டுப் பழகிய மீராவின் படைப்பு உள்ளம் முதன் முதலில் ஒரு குறும்பாவைப் பெற்றெடுத்தது. இக் குறும்பா கருவாகி உருவான வரலாற்றை மீராவின் சொற்களிலேயே காண்பது சுவையாக இருக்கும். இதோ மீராவின் முதல் குறும்பா படைப்பு அனுபவம்:

"ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் அமோகமாக நடந்து கொண்டிருந்த வேளை. மூன்று நான்கு நாட்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பெரிய சித்திரைத் திருவிழாவின் கள்ளழகர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். தினமும் கூட்டம் அலை மோதியது. பல்கலைக்கழகக் கருத்தரங்கைத் தவிர, பட்டிமன்றம், கவியரங்கம், நாட்டியம், நாடகம், தெருக்கூத்து, இசை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களிலெல்லாம் ஏகப்பட்ட கூட்டம். அங்கங்கே கூடிய கூட்டம் பொறுமையாய் அங்கங்கே நிலைகொள்ளவில்லை. அங்கே என்ன கூட்டம், இங்கே என்ன அதிகக் கூட்டம் என்று ஒவ்வோர் இடமாகப் போய்க் கொண்டிருந்தது.

கூட்டம் தமிழுக்கு வந்ததாகத் தெரியவில்லை. வேடிக்கை பார்க்க, கூட்டத்தை வேடிக்கை பார்க்க வந்தது மாதிரி இருந்தது. இது என் மனத்தை உறுத்தியது. அப்போது என் வாய் என்னை யறியாமல் முணுமுணுத்தது.

**"கூடல் நகரில்**
**கூட்டம்**
**கூட்டம் கூட்டம்**
**கூட்டம் கூட்டம் கூட்டம்**
**கூட்டம் பார்க்க!"**

இந்தக் கவிதையில் 'கூடல் நகரில்', 'பார்க்க' என்னும் இரண்டு வார்த்தைகளைத் தவிர திரும்பத் திரும்ப ஒலிப்பது 'கூட்டம்' என்னும் வார்த்தைதான். கூட்டத்தின் அடர்த்தியைக் காட்சிப்படுத்த அப்படி எழுதினேன்" *(பக்.15-16).*

இக் குறும்பாவைத் தொடர்ந்து இதே பாணியில் - மஹாகவியின் குறும்பா போலவோ ஆங்கில லிமரிக் போலவோ அடி, சீர் வரையறை இல்லாமல் - அவ்வப்போது சில குறுங்கவிதைகளை எழுத முற்பட்டார் மீரா. இங்ஙனம் இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு சூழல்களில் எழுதப்பெற்று - பல்வேறு தொகுப்பு நூல்களில் இடம்பெற்ற - மீராவின் குறும்பாக்களே ஜீன் 2002 -இல் 'குக்கூ' என்னும் தலைப்பில் நூலுருப் பெற்றுள்ளன.

"ஹைகூ என்னும் ஜப்பானியக் கவிதை வடிவம் தமிழ்க் கவிதையுலகில் சூறைக் காற்றாய் வீசிக் கொண்டிருந்த போது நான்

‘குக்கூ’ மழையில் நனைந்து கொண்டிருந்தேன். வீதியில் நடக்கும் போதும் பேருந்தில் பயணம் போகும் போதும் சில குக்கூக் கவிதைகள் மனதில் ஓடி வந்து ஒட்டிக் கொண்டன. வீட்டுக்கு வந்ததும் பழைய துண்டுக் காகிதங்களில் அவற்றை எழுதி வைத்தேன். கண்ணில் கண்ட காட்சிகளையெல்லாம் மேற்பூச்சு இல்லாமல் பதிவு செய்து வைத்தேன். சில கற்பனைகளுக்கும் உயிர் கொடுத்தேன்... இதில் உள்ள கவிதைகளை வாசகர்கள் ஓடுகிற ஓட்டத்தில் படித்துத் தூக்கி எறிந்து விடாமல் கொஞ்சம் நிதானமாகப் படிக்க வேண்டும்’’ (பக்.16-17) என மீராவே ‘குக்கூ’ தொகுப்பிற்கு எழுதிய முன்னுரையில் தம் கருத்தினைப் பதிவு செய்துள்ளார்.

மீராவின் ‘குக்கூ’ தொகுப்பிற்குக் கவிக்கோ அப்துல் ரகுமான் ‘குயில் மீண்டும் கூவுகிறது’ (பக்.3-7) என்னும் தலைப்பில் அணிந்துரை எழுதியுள்ளார். பேராசிரியர் பாலா ‘தமிழ்க் காற்றில் மீரா தீட்டிய புதுவர்ணம் குக்கூ’ (பக்8-14) என்னும் தலைப்பில் மதிப்புரை வழங்கியுள்ளார். நூலின் பிற்சேர்க்கையில் ‘மீரா நம் மீரா...’ (பக்.78-85) என்னும் தலைப்பில் கவிஞர் தமிழ்நாடன் எழுதிய கட்டுரை இடம்பெற்றுள்ளது. இனி, இக் கருத்துக்களின் ஒளியில் கவிஞர் மீரா படைத்துள்ள ‘குக்கூ’ கவிதைகளின் பண்புகளையும் சீர்மைகளையும் குறித்துக் காண்போம்.

## தாய்மண் பற்று

தாய்நாட்டின் மண்ணில் - புழுதியில் - படுத்துப் புரள்வதிலே தனி இன்பம் கண்டவர் பாரதியார். அதுபோல் கவிஞர் மீராவும் தாய்மண்ணின் மீது தனிப்பற்றும் பாசமும் கொண்டவராக விளங்குகின்றார். ‘கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை’ எனக் கூறும் பழமொழி, மீராவின் கைவண்ணத்தில் புத்தம் புதிய ‘குக்கூ’வாகப் பரிணமித்துள்ளது.

> **“விழும்போதெல்லாம்**
> **மீசையில் ஒட்ட வேண்டும்**
> **இந்தச் செம்மண்,**
> **ஏனெனில் எம்மண்.”** [ப.32]

‘செம்மண்ணே’ ஆனாலும் ‘எம்மண்’ என்பதிலே கவிஞருக்குத் தனிமதிப்பு; மரியாதை.

**நகைச்சுவை உணர்வு**

மீராவின் கவிதை மொழியில் துலக்கமாகவும் தூக்கலாகவும் தெரிவது அவரது **நகைச்சுவை உணர்வு** ஆகும். இன்றைய சமூகத்தின் போக்கையோ மனிதனின் பண்பையோ நகைச்சுவையோடு எள்ளுவது என்பது அவருக்குக் கைவந்த கலை; அவரது முத்திரைப் பண்பும்கூட. இதனை அவரது மரபுக் கவிதை, வசன கவிதை, புதுக்கவிதை, குறுங்கவிதை, கவியரங்கக் கவிதை ஆகிய அனைத்துக் கவிதை வடிவங்களிலும் பரவலாகக் காணலாம். 'குக்கூ' தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் சில குறுங்கவிதைகள் இங்கே சிறப்புப் பார்வைக்கு உரியவை.

சான்றாக, மீராவின் நகைச்சுவை கலந்த எள்ளல் திறத்திற்குக் கட்டியம் கூறும் 'குக்கூ' ஒன்று வருமாறு,

> **"'குடிமகன்' ஒருவன்**
> **கூறினான்**
> **தள்ளாடி நின்று**
> **தாத்தா காந்திதான்**
> **சுதந்திரம் வாங்கித்**
> **தந்தார் என்று"** (ப.45)

இங்கே தள்ளாடி நிற்பது 'குடிமகன்' ஒருவன் மட்டும் தானா? 'வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல' இன்றைய நாட்டு நடப்பை - அரசியலாரின் கொள்கையை - கவிஞர் கூர்மையாகக் கேள்விக்கு உள்ளாக்குவதை உய்த்துணர முடிகின்றது.

இலக்கியக் கூட்டம், பக்திக் கூட்டம் என எந்தக் கூட்டம் என்றாலும் பெண் ஒருத்தி மோனையைப் போல முன்னால் வந்து விடுவாளாம். முன்வரிசையில் அமர்ந்து கேட்பாளாம். இந்தத் தமிழ்ப் பெண்ணின் தனிக்குணம் என்ன தெரியுமா? இதோ, கவிஞரே பிறிதொரு 'குக்கூ'வில் கூறுகிறார் கேட்போம்.

> **"இலக்கியக் கூட்டம்,**
> **பரவசமூட்டும்**
> **பக்திக் கூட்டம்**
> **எந்தக் கூட்டம் என்றாலும்**

**வைர மூக்குத்தி கடுக்கன் சகிதம்**
**முன்னால் இருப்பாள்''**

என்று 'அந்த மாது'வை வாசகருக்கு முறைப்படியாக அறிமுகம் செய்து வைக்கும் கவிஞர், முத்தாய்ப்பாகத் தமக்கே உரிய நகைச்சுவைப் பாங்கில் கவிதையை இப்படி முடிக்கிறார்:

**''காது மட்டும் கேட்காது''** [ப.23]

காது கேட்காத அந்த மாது கூட்டங்களுக்குத் தவறாமல் வருவது - வந்து முன்னால் அமர்ந்திருப்பது - கூட்டங்கள் கேட்பதற்காக அல்ல. தான் அணிந்திருக்கும் வைர மூக்குத்தி, கடுக்கன் ஆகியவற்றை மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகத் தான்! படிப்பவர் முகத்தில் மெல்லிய நகையைப் படர விடும் 'குக்கூ' இது!

நகைச்சுவையும் அங்கதச் சுவையும் களிநடம் புரியும் பிறிதொரு 'குக்கூ' கவிதை வருமாறு:

**''பழமை, புதுமை**
**இரண்டுக்கும் நாங்கள் பாலம்**
**எலி வாகனம்**
**ஹெலிகாப்டர் வாகனம்**
**இரண்டையும் கொண்டாடும்**
**எங்கள் காலம்!''** [ப.63]

நம் நாட்டுக் கடவுளர்க்கும் தனித்தனியே வாகனங்கள் உண்டு. அறிவியல் கண்டுபிடிப்புகளாய் அமைந்த வாகனங்களும் நம் நாட்டில் உண்டு. இவ்வகையில் பார்த்தால் பழமை, புதுமை இரண்டுக்கும் பாலமாகத் தானே நாம் இயங்கி வருகின்றோம்?

நல்ல நகைச்சுவை என்பது சொல்லி வருவதில்லை; திட்டமிட்டுப் பிறப்பதுமில்லை. தானாக, இயல்பாகப் பீறிட்டு வருவதுதான் நல்ல நகைச்சுவையின் அடையாளம் - இலக்கணம். இதற்கு இலக்கியமாக விளங்கும் ஒரு 'குக்கூ' கவிதை இதோ:

**''வாத்தியார் மனைவி**
**செத்ததற்காக**
**விடுமுறை...**
**மகிழ்ச்சியில் குதித்த**

**மணிப்பயல் கேட்டான்**
**'வருத்தமாயிருக்கு,**
**ஒரே ஒரு மனைவி தானா**
**அவருக்கு?'"** (ப.43)

கவிஞர் சிற்பி கூறுவது போல், "நகைச்சுவை மீராவின் கவச குண்டலம்... அந்த நகைச்சுவைக்குள் ஒரு வேதனை குடியிருக்கும்... மீராவின் நகைச்சுவை வேப்பம் பூப்பச்சடி, இனிப்புப் பூசிய மருந்து" (அணிந்துரை, மீராவின் 'கோடையும் வசந்தமும்', (ப.10-11).

## படிமப் பாங்கு

பேராசிரியர் பாலா தம் மதிப்புரையில் சுட்டிக்காட்டுவது போல், மீராவின் 'குக்கூ' கவிதைகளில் 'ஜப்பானிய உடையும் இல்லை, நடையும் இல்லை, சட்டங்களும் இல்லை, படிமம் கட்டாயம் என்ற சட்டகமும் இல்லை' (ப.10). ஆயினும் மீரா படைத்துள்ள 'குக்கூ' கவிதை ஒன்று இதோ:

**"இதுதான் வேலை**
**மல்லாந்து படுத்து**
**சிகரெட் புகையை**
**ஊதி ஊதித் தள்ளும்**
**எங்கள் ஊருக்கு வந்த**
**புதிய சிமெண்ட் ஆலை"** (ப.55)

ஊருக்கு வந்த புதிய சிமெண்ட் ஆலை கக்கும் புகையானது கவிஞரின் பார்வையில் ஒருவர் மல்லாந்து படுத்து சிகரெட் புகையை ஊதி ஊதித் தள்ளுவது போல் தோன்றுகின்றது. புதிய சிமெண்ட் ஆலையின் வருகையால் - அது வெளியேற்றும் புகையின் தாக்குதலால் - சுற்றுப்புறச் சூழல் மாசடைவதைச் சுட்டிக்காட்டும் கவிஞர், படிப்பவரின் மனக்கண் முன்னே ஓர் அழகிய படிமக் காட்சி உருவாகும் வகையில் கவிதையைப் படைத்திருப்பது ஒரு கூடுதல் சிறப்பாகும்.

படிமப் பங்கு சிறப்பாக விளங்கும் பிறிதொரு 'குக்கூ' இதோ:

**"குச்சிப் பயலுக்கு**
**கந்தகத் தலைப்பாகை சின்னதாய்**

**பிடித்திழுத்தால்**
**எரிந்து விழுகிறான் என்னமாய்!"** [ப.26]

'குச்சிப் பயல் - உச்சியில் சின்னதாய் கந்தகத் தலைப்பாகை- பிடித்து இழுத்தால் சுருக்கென்று எரிந்து விழும் பாங்கு' - 'சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்' என்னும் உரையாசிரியரின் வாக்கு இங்கே 'குக்கூ' வடிவில் உண்மை ஆகியிருப்பதை உய்த்துணரலாம்.

## சிந்தனை நறுக்குகள்

தமிழ்க் கவிதையில் காலங்காலமாகக் கையாளப்பட்டு வரும் ஓர் இன்றியமையாத கருத்தாக்கம் நிலையாமை. யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை என மூவகையான நிலையாமைச் சிந்தனைகளைத் தமிழ் இலக்கியம் வாழையடி வாழையாக எடுத்து மொழியும். தொல்காப்பியர் கூறும் புறத்திணைகளுள் ஒன்றான காஞ்சித் திணையின் பாடுபொருள் நிலையாமை. இத் திணைக்கு உரிய துறையாகத் தொல்காப்பியர் கடைசியில் கூறுவது 'காடு வாழ்த்து' (புறத்திணையியல், நூற்பா 24). இக் கருத்தாக்கத்தின் எதிரொலியை மீராவின் 'குக்கூ'விலும் காண முடிகின்றது.

**"வீடு கட்டினேன்**
**சுடுகாட்டுக் கெதிரில்,**
**எந்த நேரமும்**
**விடைபெறலாம் எளிதில்"** [ப.39]

என்ற 'குக்கூ' இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. வீடு கட்டியதில் - அதுவும் சுடுகாட்டுக்கு எதிரில் கட்டி முடித்ததில் - ஒரு தனிப்பட்ட லாபம் உண்டு. எந்த நேரமும் எளிதில் இந்த மண்ணுலகத்தில் இருந்து விடைபெற்றுச் சென்று விடலாம் அல்லவா? ஆழமான தத்துவச் சிந்தனையை எளிய முறையில் எல்லோருக்கும் சென்று சேரும் விதத்தில் வெளியிடுவதில் வல்லவர் மீரா என்பதை மெய்ப்பிக்கும் 'குக்கூ' கவிதை இது!

மீராவின் தத்துவச் சிந்தனையை வெளிப்படுத்தும் பிறிதொரு 'குறுகத் தறித்த குக்கூ':

"முகமூடி போட்டேன்
குழந்தைக்கு வேடிக்கை காட்ட
முடியவில்லை அதற்குப் பின்
முகத்தைச் சும்மா நீட்ட" [ப.76]

முதன்முதலாக முகமூடி போட்டுக் கொண்டது என்னவோ குழந்தைக்கு வேடிக்கை காட்டத்தான். ஆனால் அதுவே காலப்போக்கில் பழக்கமாகி - வழக்கமாகி - வாடிக்கையாகி - வாழ்க்கையும் ஆகிவிட்டது! அதற்குப் பின்னர் முகமூடி அணியாமல் முகத்தைச் சும்மா நீட்டுவது என்பது முடியாமலே போய்விட்டது! வேடிக்கை - விளையாட்டு - வினையாகி விட்டது என்பதா? முகம், முகவரி என்ற எல்லையைத் தாண்டி மனிதனுக்கு இன்று முகமூடி அணிந்து கொள்ளுவது என்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டது என்பதா? அல்லது மனிதன் தன் அகத்தை - சுயத்தை - மறைத்துக் கொள்ள முகமூடி ஒரு கவசமாகப் பயன்படுகின்றது என்பதா?

நறுக்குத் தறித்தாற் போல் மூன்றே வரிகளிலும் தம்மால் அழகிய 'குக்கூ' கவிதையைப் படைக்க முடியும் என்பதை மீரா இத் தொகுப்பில் இரண்டு இடங்களில் (பக்.60,77) காட்டியுள்ளார். ஓர் எடுத்துக்காட்டு:

"கனவு கண்டேன் நான்...
கனவில் நன்றாய்த்
தூங்கக் கண்டேன் – நான்." [ப.60]

## உடன்பாட்டுச் சிந்தனை

உலகை - வாழ்க்கையை - உடன்பாட்டு மனப்பான்மையில் நம்பிக்கையோடு பார்க்கும் பார்வையும் மீராவின் 'குக்கூ' கவிதைகளில் ஆங்காங்கே மூன்றாம் பிறை போலக் காட்சியளிக்கின்றது. கவிஞரின் உள்ளங்கவர் 'குக்கூ' ஒன்று இதோ:

"சூரியன் மறைந்து விட்டான்
என்றுநீ
சோர்ந்து விழாதே;
சந்திரன் வரும்
நட்சத்திரங்கள் வரும்
வளைத்துப் பிடி விடாதே!" [ப.75]

‘சூரியன் மறைந்து விட்டான் என்று சோர்ந்து விழுவதில் - சும்மா இருப்பதில் - பொருள் இல்லை. ஒளி வீசி நிற்கும் சந்திரன், கொத்துக் கொத்தாய்க் கண் சிமிட்டி நிற்கும் நட்சத்திரங்கள் என நம்பிக்கையோடு பார்ப்பதற்கு வானில் எத்தனையோ உள்ளன. அது போலத் தான் வாழ்க்கையிலும், எனவே எதற்காகவும் சோர்ந்து விழாமல் - விடாமல் - நம்பிக்கையோடு உழைத்து முன்னேறு!’ என இளைய தலைமுறைக்கு அறிவுறுத்துகிறார் மீரா. பிறிதொரு ‘குக்கூ’ கவிதையிலும் கவிஞர், கல்லையும் முள்ளையும் காலில் குத்தும் நெருஞ்சியினையும் பற்றிக் கவலைப்படாமல் கடந்து - மேலே மேலே விடாமுயற்சியுடன் நடந்து போனால் - அங்கே கண்ணைக் கவரும் குறிஞ்சி காத்திருக்கிறது என்று பயில்வார் நெஞ்சில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சுகின்றார்:

**“கல் தான் முள்தான்**
**காலில் குத்தும் நெருஞ்சி.**
**கடந்து போ**
**மேலே மேலே**
**நடந்து போ...**
**கண்ணைக் கவரும் குறிஞ்சி”** (ப.35)

## இயல்பான படப்பிடிப்பு

‘இருவேறு உலகத்து இயற்கை’ (374) என்று வள்ளுவர் அன்று சொன்னது சமுதாயத்தில் இன்றும் தொடர்கதையாய் இருந்து கொண்டுதான் வருகின்றது. கவிஞர் மீராவும் தம் ‘குக்கூ’ கவிதைகளில் ஆங்காங்கே இன்றைய சமுதாயத்தின் அடிமட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வரும் ஏழை எளிய மக்களின் அவல நிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். ஆடி வீதியில் கடை பரப்பிக் காலையும் பரப்பி குவியல் குவியலாய் அழுகல் மாம்பழம் விற்று வரும் ஒரு கிழவி (ப.24), மார்கழி மாத விடியலில் குளித்து முடித்துக் குங்குமப் பொட்டிட்டு மலம் அள்ள வரும் தோட்டியின் மகள் (ப.25), குமரன் தன் அப்பாவின் பிணத்திற்குத் தீ மூட்டிக் கும்பிட்டுப் போக, எரியும் பிணத்தில் மல்லிசேரி பீடியை எடுத்துப் பற்ற வைக்கும் மயானத் தோட்டி (ப.32), யாரிடம் விற்பது எனக் கவலையோடு வீதியில் திரியும் பூக்காரி (ப.38), நகரப் பேருந்தில் காலையில் கறிவேப்பிலை மணங்கமழப் பயணிக்கும்

கறிகாய்க்காரக் கண்ணம்மா (ப.41) முதலானோர் மீராவின் 'குக்கூ' கவிதைகளில் எந்த விதப் பாசாங்கும் பூச்சும் இன்றி இயல்பாய் வலம் வருகின்றனர். இவர்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் போது கவிஞருக்குப் பெரிதும் கைகொடுப்பது முரண் எனும் உத்தி ஆகும். இவ்வுத்தி சிறப்பாக அமைந்த ஒரு 'குக்கூ' வருமாறு,

**"வருக வருக வாசகம்**
**வாசலில்...**
**கொல்லையில்**
**எச்சில் இலைக்கு**
**இந்நாட்டு மன்னர் யாசகம்"** (ப.34)

- வாசலுக்கும் கொல்லைப்புறத்திற்கும் இடையேதான் எத்தனை பெரிய இடைவெளி! இடைவெளி இடத்தால் மட்டும் தானா? 'எச்சில் இலை'க்கு 'இந்நாட்டு மன்னர்' யாசகம் - நல்ல முரண், கூர்மையான அங்கதம்!

## மெல்லிய புனைவுகள்

'மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன், செவ்வி தலைப்படு வார்' *(1289)* என்பது வள்ளுவர் வாக்கு. காதலின் மென்மையும் மேன்மையும் விளங்க மீரா படைத்திருக்கும் இரு 'குக்கூ' கவிதைகள் இங்கே குறிப்பிடத்தக்கவை. காதலனின் பார்வையில் இரண்டே இரண்டு இனியவை. எவை அவை என்கிறீர்களா? மறுமொழி இதோ:

**"ஒன்று உன்**
**இருவிழிப் பார்வை**
**ஈர்க்கும் காந்தம்**
**இன்னொன்று ஏகாந்தம்"** (ப.30)

'காந்தம் - ஏகாந்தம்' - சுவையான சொல்லாடல்!

மார்கழித் திங்கள். புலர்காலைப் பொழுது, வாசலில் கோலம் போடும் ஒரு பருவப்பெண். இச்சூழலில் இளைஞன் ஒருவன் தொடுக்கும் சுவையான கேள்விக் கணை இது.

**"மார்கழி பிறந்தது...**
**காலையில் வாசலில்**
**நீ போடுவதென்ன கோலமா?**

**இல்லை இந்த**
**ஏழை மனத்தை ஏலமா?”** [ப.64]

‘நீ போடுவதென்ன கோலமா? இல்லை ஏழை மனத்தை ஏலமா? - ‘சபாஷ், சரியான கேள்வி’ என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

நிறைவாக, பேராசிரியர் பாலா குறிப்பிடுவது போல், “நகை நடைகள், சிந்தனை நறுக்குகள், மனப்பதிவுகள், விமர்சனச் சாட்டைகள், மெல்லிய புனைவுகள், விரித்து வைத்த மனித நேய ஆலாபனைகள் - என்று மீராவின் முகவரிகள் குக்கூக்களில் சங்கதிகளாய் - ஆவர்த்தனங்களாய் ‘கலக்குகின்றன’” (ப.10) எனலாம்.

# 4

# அப்துல் ரகுமான் : 'தமிழுக்குக் கிடைத்த கலீல் ஜிப்ரான்!'

> "இன்று ரகுமான் தழைத்து நிற்கும் தனி ஆலமரம்.
> அவர் நிழலில் தான் எத்தனை கவி விழுதுகள்!"
> – தி. லீலாவதி*

**"இன்று பலர் புதுக்கவிதை எழுது கின்றார்**
**எழுதுகின்ற கவிஞர்களுள் அப்துல் ரகுமான்**
**முன்நிற்கும் மோனையைப் போல்முன் நிற்கின்றார்"**

- என்பது கவிக்கோ அப்துல் ரகுமானைப் பற்றிய உவமைக் கவிஞர் சுரதாவின் மதிப்பீடு. இன்னும் 'புதுமை தன்னை அடைகாக்கும் சிந்தனைகள்', 'வார்த்தைகளைத் தேனாக்கும் திறம்', 'சிந்திக்கும் முறை', 'ஒன்றைப் பற்றித் திறனாயும் முறை', 'கற்பனைக் கண்', 'புதுமைப் பார்வை' என்னும் பல்வகைத் திறன்களையும் அப்துல் ரகுமானிடம் கண்டு கண்டு போற்றுவார் சுரதா ('எடைக்கல்', நேயர் விருப்பம், ப.5). உவமைக் கவிஞரின் மதிப்பீட்டை உறுதிப்படுத்தும் வகையில் சாகித்திய அகாதெமி 1999-ஆம் ஆண்டிற்கான விருதினைக் கவிக்கோ அப்துல் ரகுமானுக்கு வழங்கியுள்ளது. 1968-இல் பேராசிரியர் அ. சீநிவாச ராகவனின் 'வெள்ளைப் பறவை' என்ற

---

* 'மரக்குதிரை ஆட்டங்களுக்கிடையே...', முட்டைவாசிகள், ப.19.

கவிதை நூல் சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றது. 31 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது மீண்டும் அப்துல் ரகுமானின் '**ஆலாபனை**' என்ற கவிதை நூல் சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்றுள்ளது. இது கவிதை ஆர்வலர்களின் நெஞ்சங்களில் இன்பத் தேனைப் பாய்ச்சியுள்ளது; கவிஞர்களின் நெஞ்சங்களில் நம்பிக்கை விதைகளைத் தூவியுள்ளது.

கவிக்கோ அப்துல் ரகுமான் 'வேடிக்கைக் கவிஞ'ரோ அல்லது 'வாடிக்கைக் கவிஞ'ரோ அல்லர்; 'கேளிக்கைக் கவிஞ'ரோ அல்லது 'கோரிக்கைக் கவிஞ'ரோ அல்லர். 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' சுட்டுவதைப் போல், வாழ்க்கையே கவிதையாக - கவிதையே வாழ்க்கையாக - வாழ்ந்து வரும் 'குறிக்கோள் கவிஞர்' அவர். சுருங்கச் சொல்ல வேண்டும் என்றால், 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்ற சங்கச் சான்றோரின் பெருமிதம், நுண்ணிய நூல் பல கற்றுத் தெளிந்த நல்லறிவோடு வள்ளுவர் சுட்டிக்காட்டிய 'உண்மையறிவு', 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற அப்பர் பெருமானின் நெஞ்சுரம், 'விட்டு விடுதலை ஆகி நிற்பாய் - இந்தச் சிட்டுக் குருவியைப் போலே' என்ற பாரதியின் விடுதலை உணர்வு, 'ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால் எடுத்துரைப்பேன்; நில்லேன்; எவர் வரினும் அஞ்சேன்' என்ற கண்ணதாசனின் அஞ்சாமை ஆகிய அனைத்துப் பண்புகளும் 'சம விகித'த்தில் கலந்து அமைந்தது அப்துல் ரகுமானின் ஆளுமை.

> **"எனக்குள் இருவர்**
> **இருக்கின்றார்.**
> **ஒருவன் பாடகன்,**
> **மற்றொருவன் பித்தன்...**
> **பாடகன் நேர்களின் ரசிகன்.**
> **பித்தன் எதிர்களின் உபாஸகன்...**
> **பாடகன் உண்மையின் ஒளிப் பக்கத்தைப்**
> **பார்ப்பவன்.**
> **அதை ஊடுருவிச் செல்பவன்...**
> **பித்தன் உண்மையின் இருண்ட பக்கத்தைப்**
> **பார்ப்பவன்.**
> **அதன் மர்ம மலர்களை முகர்பவன்"**

என்பது அப்துல் ரகுமானே 'ஆலாபனை' நூலுக்கு எழுதிய

முன்னுரையில் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் (பக்.4-5).

பேராசிரியர்-கவிஞர்-பத்திரிகை ஆசிரியர்-பதிப்பாசிரியர்-ஆய்வாளர்-சிந்தனையாளர்-கட்டுரை ஆசிரியர் என அப்துல் ரகுமானின் படைப்பு ஆற்றலுக்கு-ஆளுமைக்கு-பல பக்கங்கள் உண்டு; பல பரிமாணங்கள் உண்டு. மதுரை தியாகராசர் கல்லூரி அப்துல் ரகுமான் என்ற படைப்பாளியை 'ஈன்று புறந்தந்தது'; வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி அவரைச் 'சான்றோ'ராக உலகிற்கு அறிமுகம் செய்தது. சிவகங்கை அன்னம் பதிப்பகம் 'பால்வீதி' (1974) என்ற கவிதைப் படைப்பின் வடிவில் அவருக்கு '(எழுது)கோல்' வடித்துக் கொடுத்தது; 'ஜூனியர் விகட'னும் 'பாக்யா'வும் 'முத்தார'மும் அவரது 'நன்னடை'க்கு நல்லதோர் இடம் நல்கி எழுத்துலகிற்கு அவரது முழுவீச்சையும் அடையாளம் காட்டின. இன்றளவும் 'நமக்குத் தொழில் கவிதை - நாட்டிற்கு உழைத்தல் - இமைப்பொழுதும் சேராது இருத்தல்' (பாரதியார் கவிதைகள், ப.10) என்ற தலையாய 'கடனை'ச் சிந்தையில் தேக்கித் தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழ்நாட்டுக்கும் மொழிக்கும் இனத்திற்கும் மோனையைப் போல் முன் நின்று அயராது பாடுபட்டு வருகின்றார் கவிக்கோ அப்துல் ரகுமான். 'என் கடன் பணி செய்து கிடப்பதே'- இதுவே அவரது வாழ்வின் தாரக மந்திரம் ஆகும்!

### 'சோதனைக் கவிஞர்' சிறப்பாகக் கையாண்ட உத்திகள்

இன்றைய புதுக்கவிதை திறம்படக் கையாண்டு வரும் உத்திகள் பற்பல என்றாலும், அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை நான்கு. அவை, முரண், குறியீடு, தொன்ம்ம், படிமம் என்பனவாகும். தம் கவிதைகளில் இவ்வுத்திகளை அழகாகவும் அற்புதமாகவும் ஆற்றலோடும் கையாண்டு தனி முத்திரை பதித்திருப்பவர் கவிக்கோ அப்துல் ரகுமான். அவரது ஒரு சில கவிதைகள் கொண்டு நாம் இக்கூற்றை மெய்ப்பிக்கலாம்.

'தண்ணீர் பட்ட பாடு' என்பார்களே, அதுபோல் புதுக்கவிதை அதிகமாக- அடிக்கடி - கையாளும் உத்தி முரண் ஆகும். எனினும் வள்ளுவர் மொழியில் சொல்ல வேண்டும் என்றால், 'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' (குறள்.1289). அச்சிலருள் முன்னணியில்

நிற்பவர் அப்துல் ரகுமான். பதச் சோறாக, 'திட்டங்கள்' என்னும் தலைப்பில் அவர் எழுதிய கவிதையைச் சுட்டலாம்:

**"வரங்களே**
**சாபங்கள்**
**ஆகுமென்றால்**
**இங்கே**
**தவங்கள்**
**எதற்காக?"** [பால் வீதி, ப.78]

இக் கவிதை முரண் உத்தி செறிவாகவும் செம்மையாகவும் அமைந்த ஒன்று என்பது நெற்றித் திலகம்.

முரணுக்கு அடுத்து, புதுக்கவிதையில் பரவலாகக் கையாளப்படும் உத்தி குறியீடு. அப்துல் ரகுமானின் கவிதைகளில் குறியீட்டின் ஆட்சி குறிப்பிடத்தக்க வகையில் காணப்படும். 'புதுக்கவிதையில் குறியீடு' *(1990)* என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக ஆய்வு மேற்கொண்டவர் அப்துல் ரகுமான் என்பது இங்கே மனங்கொளத்தக்க செய்தி ஆகும்.

**"புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்**
**போலி நளன்களின் கூட்டம்**
**கையில் மாலையுடன்**
**குருட்டுத் தமயந்தி"** [பால் வீதி, ப.70]

'ஐந்தாண்டிற்கு ஒரு முறை' என்ற தலைப்பில் அமைந்த இக் கவிதை நம் நாட்டில் தேர்தல் திருவிழாவின் போது 'மாண்புமிகு வேட்பாளர்க'ளும் 'வாக்காளப் பெருமக்க'ளும் எங்ஙனம் செயல்படு கின்றார்கள் என்பதைக் குறியீட்டுத் திறத்தோடு உணர்த்துவதாகும்.

தொன்மங்களை - குறிப்பாக, இராமாணயம், பாரதம் போன்ற இந்தியத் தொன்மங்களை - தம் புதுக்கவிதைகளில் புதிய பரிமாணத்துடன் கையாளுவது என்பது அப்துல் ரகுமானுக்குக் கைவந்த ஒன்றாகும். 'அப்துல் ரகுமான் கவிதைகளில் தொன்மங்களின் ஆட்சி' என்பது பொறுப்பும் முதிர்ச்சியும் வாய்ந்த ஓர் ஆய்வாளர் திட்பமாகவும் நுட்பமாகவும் மேற்கொள்ளத் தக்க ஓர் ஆய்வுத் தலைப்பு ஆகும். தொன்ம அழகு மிளிரும் கவிக்கோவின் ஒரு கவிதை இதோ:

“ஆலகாலத்திற்கே
பாற்கடல் கடைந்தோம்
அமுதம் வந்தது
அவசரமாய்க் குடித்து
விக்கிச் செத்தோம்” [பால் வீதி, ப.57]

‘இறப்பு எங்கள் பிறப்புரிமை’ என்ற தலைப்பில் அமைந்த இக்கவிதை, இந்நூற்றாண்டு மனிதனின் வாழ்க்கையைப் பற்றிய ஓர் அருமையான மதிப்பீடு ஆகும்.

‘சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாவது’ போன்ற அழகிய படிமங்களைப் படைப்பத்திலும் அப்துல் ரகுமான் சிறந்து விளங்குகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ‘தொடித் தலை விழுத்தண்டினார்’ என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்ட ஒரு சங்கச் சான்றோர் தம் புறப்பாடலில் (94) ‘தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று, இருமிடை மிடைந்த சில சொல் பெருமூதாள’ரை நம் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தினார். இச் சொல்லோவியத்திற்கு இணையாக அப்துல் ரகுமானும் தம் கவிதை ஒன்றில் படிம நயம் பாங்குற விளங்க முதுமையைப் பின்வருமாறு படைத்துக் காட்டியுள்ளார்:

“நிமிஷக் கறையான்
அரித்த ஏடு-
இறந்த காலத்தையே பாடும்
கீறல் விழுந்த இசைத்தட்டு-
ஞாபகங்களின்
குப்பைக் கூடை -
வியாதிகளின்
மேய்ச்சல் நிலம்-
காலத்தின் குறும்பால்
‘கார்ட்டூன்’ ஆகிவிட்ட
வர்ண ஓவியம்” [நேயர் விருப்பம், ப.51]

“சொற்சித்திரங்கள் அற்புதமாக வரையக்கூடியவர். வார்த்தை களின் சித்து விளையாட்டு என்பது அவர் (அப்துல் ரகுமான்) கடுந்தவம் இயற்றாமலே தமிழன்னை அவருக்கு வழங்கியுள்ள வரம்” என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி, அப்துல்

ரகுமானின் 'விதை போல் விழுந்தவன்' என்ற கவிதை நூலுக்கு எழுதிய அணிந்துரையில் (ப.4) குறிப்பிட்டிருப்பது நூற்றுக்கு நூறு உண்மையே ஆகும். பிறிதோர் உதாரணம்:

"பால்நகையாள் வெண்முத்துப்
பல்நகையாள் கண்ணகிதன்
கால்நகையால் வாய்நகைபோய்
கழுத்துநகை இழுந்த கதை" [நேயர் விருப்பம், ப.90]

இதனினும் இரத்தினச் சுருக்கமாக வேறு எவரேனும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைப் பற்றி எழுத முடியுமா என்ன?

### தலைசிறந்த உரைநடையாளர்

'சிந்தனைக் கோலங்கள்' அல்லது 'நடைச் சித்திரங்கள்' என்னும் துறையில் (Non-Fiction) எழுபதுகளில் வெற்றிக்கொடி நாட்டியவர்கள் ஜெயகாந்தனும் கண்ணதாசனும் ஆவர். ஜெயகாந்தனின் 'நினைத்துப் பார்க்கிறேன்' என்ற தொடருக்காக அவருக்கு 'நிரப்பப்படாத காசோலை'யையே (Blank Cheque) வழங்க முன்வந்தது 'குமுதம்' இதழ். அதே போல், கண்ணதாசனுக்கும் 'கண்ணதாசன் பக்கம்' என்ற தலைப்பில் ஒரு பக்கத்தையே அவருக்கு ஒதுக்கித் தந்தது 'கல்கி' இதழ். ஜெயகாந்தன், கண்ணதாசன் ஆகிய இருவருக்குப் பிறகு இத்துறையில் எண்பதுகளின் பிற்பகுதியில் தன்னிகரற்று உலா வந்தவர் - இன்றளவும் உலா வந்து கொண்டிருப்பவர் - அப்துல் ரகுமானே ஆவார். 'ஜூனியர் விகடன்' இதழில் தொடர்ந்து நூறு வாரங்கள் அப்துல் ரகுமான் தம் சிந்தனைகளைச் சொற்சித்திரங்களாக வடித்துத் தந்தது என்பது ஒரு வியக்கத்தக்க சாதனையே ஆகும். இதே போல், 'பாக்யா', 'முத்தாரம்', 'ஜூனியர் போஸ்ட்' என்னும் இதழ்களிலும் அப்துல் ரகுமான் அவ்வப்போது எழுதிய தொடர்களும் - தற்போது 'இது சிறகுகளின் நேரம்' என்ற தலைப்பில் 'ஜூனியர் விகடன்' இதழில் எழுதி வரும் தொடரும் - குறிப்பிடத்தக்கவை ஆகும். இக்கட்டுரைத் தொடர்கள் 'உன் கண்ணால் தூங்கிக் கொள்கிறேன்' *(1985)*, 'கரைகளே நதியாவதில்லை' *(1985)*, 'இன்றிரவு பகலில்' *(1985)*, 'மரணம் முற்றுப்புள்ளி அல்ல' *(1986)*, 'சலவை மொட்டு' *(1986)*, 'முட்டை வாசிகள்' *(1986)*, 'அவளுக்கு நிலா என்று பெயர்' *(1986)*, 'சொந்தச் சிறைகள்' *(1987)*, 'விலங்குகள் இல்லாத கவிதை'

(1987) என்னும் நூல்களாக வெளிவந்துள்ளன. இவை அப்துல் ரகுமானின் பன்மொழி அறிவைப் பறைசாற்றுகின்றன; படைப்பு அனுபவங்களைப் புலப்படுத்துகின்றன; உலகக் கவிஞர்களையும் புதுக்கவிதை இயக்கங்களையும் இந்தியப் புதுக்கவிதைகளையும் சுவையாக விளக்குகின்றன; முத்தாய்ப்பாக, கவிக்கோவை ஒரு கைதேர்ந்த உரைநடையாளராக - கட்டுரையாசிரியராக - அடையாளம் காட்டுகின்றன.

## படைப்புத் திறனும் ஆராய்ச்சித் திறனும் ஒருங்கே குடிகொண்ட எழுத்தாளர்

படைப்புத் திறன் என்பது வேறு; ஆராய்ச்சித் திறன் என்பது வேறு. படைப்பு மனம் பெற்றவர்கள். பெரும்பாலும் ஆராய்ச்சித் துறையில் வல்லமை படைத்தவர்களாக விளங்க மாட்டார்கள். அதே போல், ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்களிடம், பெரும்பாலும் படைப்பாற்றல் பளிச்சிட்டுத் தோன்றாது. அப்துல் ரகுமானோ இவ்வகையில் விதிவிலக்கானவராக விளங்குகிறார். டி.எஸ். எலியட்டைப் போல் படைப்புத் திறனும் ஆராய்ச்சித் திறனும் ஒருங்கே கைவரப் பெற்றவராகக் காட்சியளிக்கிறார். ‘பால்வீதி’யும் (1974), ‘நேயர் விருப்ப’மும் (1978), ‘சுட்டு விர’லும் (1989), ‘ஆலாபனை’யும் (1995), ‘முத்தமிழின் முகவரி’யும் (1998), அவரது படைப்புத் திறனைப் பாரறியப் பறைசாற்றி நிற்கும் கவிதைப் படைப்புக்கள் என்றால், ‘புதுக்கவிதையில் குறியீடு’ (1990), ‘கம்பனில் அரசியல் கோட்பாடு’ (1990) என்னும் இரண்டும் அவரது ஆராய்ச்சித் திறனைப் புலப்படுத்தும் ஆய்வு நூல்கள் எனலாம். புதுக்கவிதை ஆய்வு, கம்பன் ஆய்வு ஆகியவற்றில் இதுவரை வெளிவந்துள்ள தரமான நூல்களுள், அப்துல் ரகுமானின் இவ்விரு நூல்களுக்கும் ஓர் இன்றியமையாத இடம் உண்டு; உறுதியாக உண்டு.

## ஹைகூ கவிதையின் கொள்கை பரப்புச் செயலாளர்

தமிழில் இன்று ஹைகூ கவிதைத் தொகுப்புகள் இருநூற்றுக்கு மேல் வெளிவந்துள்ளன; எம்.ஃபில், பிஎச்.டி. போன்ற உயர் பட்டங்களுக்கான ஆய்வுப் பொருளாகவும் ஹைகூ கவிதைகள் ஆகியுள்ளன. மேலும், இன்றைய வார, மாத இதழ்களிலும் ஹைகூ

கவிதைகளின் வருகையைப் பரவலாகக் காண முடிகின்றது. தமிழில் இங்ஙனம் ஹைகூ கவிதைகள் வளர்ச்சி அடைவதற்குத் தொடக்க நிலையில் அடிப்படையான காரணமாக விளங்கியவர் - ஒரு கொள்கை பரப்புச் செயலாளரைப் போல் முனைப்புடன் பணியாற்றியவர் - அப்துல் ரகுமானே ஆவார். தி. லீலாவதியின் 'ஜப்பானிய ஹைகூ' (1987), அறிவுமதியின் 'புல்லின் நுனியில் பனித்துளி' (1984), என்னும் இரு நூல்களுக்கும் அப்துல் ரகுமான் அளித்துள்ள முன்னுரைகள், ஹைகூ கவிதையின் தோற்றம், வளர்ச்சி, நோக்கு, போக்கு, இலக்கணம் முதலானவற்றைத் தெள்ளத் தெளிவாக விளக்குவன ஆகும். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஹைகூ என்பதற்கு இணையாகத் தமிழில் 'சிந்தர்', 'மின்மினிக் கவிதை', 'வாமனக் கவிதை' என்னும் அழகிய சொல்லாக்கங்களை உருவாக்கித் தந்தவரும் அப்துல் ரகுமானே ஆவார். மேலும், எழுபதுகளிலேயே அவர் தமிழில் ஹைகூ கவிதைகள் சிலவற்றைப் படைத்துத் தந்த முன்னோடியாகவும் விளங்குகிறார். உள்ளங்கவர் ஓர் உதாரணம் இதோ:

**"இரவெல்லாம்**
**உன் நினைவுகள்**
**கொசுக்கள்"** **[விலங்குகள் இல்லாத கவிதை, ப.50]**

## கவியரங்கின் போக்கினை மடைமாற்றியவர்

அரைத்த மாவையே அரைத்து, சொன்னதையே கிளிப்பிள்ளை போல் சொல்லி வந்த 'வாய்ப்பாட்டுக் கவியரங்'கின் போக்கினைத் திசை திருப்பி - மடை மாற்றி - இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கவியரங்கினைக் கேட்க வைத்த - கவியரங்குகளில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளச் செய்த - பெருமை அப்துல் ரகுமானுக்கு உண்டு. கம்பன் கழகக் கவியரங்காயினும் சரி, வானொலி, தொலைக்காட்சி ஆகியன நடத்தும் கவியரங்காயினும் சரி தம் முத்திரையை அழகாகவும் அழுத்தமாகவும் பதிப்பதில் கைதேர்ந்தவர் அவர். அண்மையில் 'சன்' தொலைக்காட்சியில் அவர் நடத்திய 'கவிராத்திரி'யும் கவியரங்கின் ஒரு புதிய பரிமாணம் ஆகும்.

'அரசியலில் ஓர் அதிசயம்' என்ற தலைப்பில் 'அண்ணா கவியரங்கு' ஒன்றில் அப்துல் ரகுமான் பாடிய அற்புதமான வரிகள்

இவை:

**"அழுகின்ற போதும்**
**மேகம் போல் அழுதவன் நீ!**
**விழுகின்ற போதும்**
**விதையைப் போல் விழுந்தவன் நீ!"**

[விதை போல் விழுந்தவன், ப15]

'விதையைப் போல் விழுந்தவன்' என்றாற் போல் படிப்பவருடைய- கேட்பவருடைய - இதயத்தில் - செவியில் - விதையைப் போல் விழும் சிந்தனைகள் அப்துல் ரகுமானின் கவியரங்கக் கவிதைகளில் நீக்கமற நிறைந்து காணப்படும்.

## மாணவர்களை உருவாக்கும் மாண்பினர்

மாணவர்களை உருவாக்குவதில் - அவர்களது பல்வகைத் திறமைகளையும் பட்டை தீட்டி, மெருகு ஏற்றி வளர்ப்பதில் - அப்துல் ரகுமானுக்கு நிகர் அப்துல் ரகுமானே ஆவார். புதுக்கவிதை உலகில் இன்று மிகுந்த புகழை ஈட்டியிருக்கும் கவிதை - புதுக்கவிதைக்கு ஒரு சிறந்த உதாரணமாகப் பலரும் மேற்கோள் காட்டும் கவிதை - 'சுதந்திரம்' என்ற தலைப்பில் அமைந்த பின்வரும் கவிதை ஆகும்:

**"இரவிலே வாங்கினோம்**
**இன்னும் விடியவே இல்லை"** [விதி, ப.118]

சுருக்க அழகும் குறியீட்டு ஆற்றலும் பெற்ற இக் கவிதையைப் படைத்திட்ட **எ. அரங்கநாதன்,** அப்துல் ரகுமானின் மாணவர் என்பது இங்கே மனங்கொளத்தக்க செய்தி ஆகும். "இரண்டே வரிகளில் பல தொகுதிகளில் சொல்ல வேண்டிய இந்திய வரலாறு சொல்லப்பட்டு விட்டது. விடுதலை கிடைத்த நேரமும் கூறப்பட்டுவிட்டது. விடுதலை கிடைப்பதற்கு முன்னும், கிடைத்த உடனும் மக்கள் கொண்டிருந்த ஏக்கங்கள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் அத்தனையும் உணர்த்தப்பட்டு விட்டன... விடுதலை எவனோ கொடுக்க அதை 'ராப்பிச்சையாக' 'வாங்கிய' நிலையும் சுட்டப்பட்டு விட்டது. இன்னும் பல கருத்துக்களையும், உணர்வுகளையும் சுரக்கவல்லது இக் கவிதை" - மாணவரின் இரண்டு வரிக் கவிதைக்கு ஆசிரியர் பல வரிகளில் பாங்குறச் சூட்டியிருக்கும் புகழாரம் இது! (புதுக்கவிதையில் குறியீடு, ப.160).

## ‘தமிழுக்குக் கிடைத்த கலீல் ஜிப்ரான்’

கவிதை எழுதத் துடிக்கும் இளைஞர்களுக்கு அப்துல் ரகுமான் கூறும் அறிவுரை இது:

> **“ஆழமாகச் சிந்தியுங்கள்.**
> **புதுமையாகச் சொல்லுங்கள்.**
> **கவிதையில் உங்கள் ‘கையொப்பம்’ இருக்கிறதா என்று**
> **பார்த்துக் கொள்ளுங்கள்”**
>
> **[விலங்குகள் இல்லாத கவிதை, ப.67]**

ஆழமான சிந்தனை - புதிய பார்வை - தனித்திறன் என்னும் இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகவே அப்துல் ரகுமானின் புதுக்கவிதை, வசன கவிதை, யாப்புக் கவிதை, உருவகக் கவிதை, நாடகம், சொற்பொழிவு ஆகிய அனைத்துப் படைப்புக்களும் விளங்குகின்றன. இல்லாவிட்டால் கவியரசு கண்ணதாசன் இங்ஙனம் மனம் நெகிழ்ந்து அவரைப் பாராட்டுவாரா என்ன?

“நான் கலீல் ஜிப்ரானைப் படிக்கும் போதெல்லாம் ‘தமிழில் இப்படி எழுத யாருமில்லையே’ என்று ஏங்குவேன். அந்த ஏக்கம் இப்போது இல்லை. இதோ! அப்துல் ரகுமான் வந்துவிட்டார். இவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால், ‘யார் இந்தக் கவிஞன்?’ என்று உலகம் நிச்சயம் விசாரிக்கும்” (விதை போல் விழுந்தவன், ப.11).

அந்த நாள் வெகு தொலைவில் இல்லை; அதற்கான முன்னோட்டமே கவிக்கோ அப்துல் ரகுமானுக்கு அண்மையில் கிடைத்துள்ள **சாகித்திய அகாதெமி** விருது!



## 5

# ‘அங்கதக் கவிஞர்’ தமிழன்பன்

> “தமிழன்பனிடம் ஒரு மெல்லிய அங்கதச் சுவை இழை யோடுகிறது. ஆனால் அந்தக் கிண்டல்களுக்குக் கீழே உணர்ச்சிகளால் நெகிழ்ந்த, உணர்வுகளால் அகண்ட ஒரு மானுட உள்ளம் துடித்துக் கொண்டிருக்கிறது. அந்த உள்ளம் தமிழைப் புரிந்தது; உலகைப் புரிந்து கொள்ளத் துடிப்பது.”
>
> – கா. சிவத்தம்பி*

**“நான்**
**தூங்கப் போகிறேன்**
**என்றான் கவிஞன்**
**நான்**
**விழித்துக் கொண்டிருக்கிறேன்**
**என்றது கவிதை”**

‘மின்மினிக் காடு’ (ப.27) என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஈரோடு தமிழன்பனின் கவிதைச் சிராய்களுள் ஒன்று இது. கவிதையை மட்டுமன்றி, கட்டுரை, சிறுகதை, புதினம், உரைநடை, பயண இலக்கியம், வில்லுப்பாட்டு என இலக்கியத்தின் அனைத்து வடிவங்களையும் தமிழ் மொழியின் - தமிழ் இனத்தின் - தமிழ்நாட்டின்- விழிப்புணர்வுக்காக முனைப்புடனும் முழுவீச்சுடனும் பல்லாண்டுக் காலமாகப் பயன்படுத்தி வருபவர் தமிழன்பன். கவிதைத் துறையிலும், மரபுக் கவிதை, வசன கவிதை, புதுக்கவிதை, ஹைகூ

* முன்னுரை, ஈரோடு தமிழன்பனின் ‘வணக்கம் வள்ளுவ!’, ப.11.

கவிதை, சென்ரியூ கவிதை, லிமைரைக்கூ கவிதை எனப் பல்வேறு வடிவங்களில் பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு தமிழ்க் கவிதைக்கு வலிமையும் வளமும் சேர்த்து வருபவர் அவர். இக்கட்டுரை தமிழன்பனின் 'சூரியப் பிறைகள்', 'ஒரு வண்டி சென்ரியூ' 'சென்னிமலைக் கிளியோபாத்ராக்கள்' என்னும் மூன்று குறுங்கவிதைப் படைப்புகளைப் பற்றிய ஓர் அலசல் ஆகும்.

## I. 'சூரியப் பிறைகள்'

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்க் கவிதை எடுத்திருக்கும் புதிய பரிமாணம் ஹைகூ. 'கீழ்த்திசைப் பௌத்தச் சிந்தனையில் முகிழ்த்து, சீனத்துப் பண்பாட்டில் திளைத்து, ஜப்பானிய அழகுப் பார்வையில் மலர்ந்து மணம் வீசிய' இக்கவிதையை அடையாளம் கண்டு, *1916*-ஆம் ஆண்டில் 'சுதேசமித்திரன்' இதழில் எழுதிய கட்டுரையில் 'ஹொக்கு' என்னும் பெயரால் தமிழ் கூறு நல்லுலகிற்கு முதன்முதலில் அறிமுகம் செய்தவர் கவியரசர் பாரதியார். *1968*-ஆம் ஆண்டில் 'நடை' முதல் இதழில் ஜப்பானிய ஹைகூ கவிதைகளை முதன்முதலில் மொழிபெயர்த்துத் தந்தவர் கவிஞர் சி. மணி. *1970*-ஆம் ஆண்டு வாக்கில் தமிழ் யாப்பு மரபுப்படி இக் கவிதைக்குச் 'சிந்தர்' எனப் பெயர் சூட்டி, சோதனை முயற்சியாகத் தமிழில் சில ஹைகூ கவிதைகளையும், ஹைகூ கவிதைகளைப் பற்றிய கட்டுரைகளையும் முதன்முதலில் எழுதி வெளியிட்டவர் - '**வாமனக் கவிதைகள்**', '**மின்மினிக் கவிதைகள்**' என்ற அழகிய பெயர்களை ஹைகூவுக்குச் சூட்டி மகிழ்ந்தவர் - கவிக்கோ **அப்துல் ரகுமான்**. '**ஜப்பானிய ஹைகூ**' *(1987)*, '**இதுதான் ஹைகூ**' *(1990)* என்னும் இரு அரிய நூல்களை வெளியிட்டு ஹைகூ கவிதையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர் முனைவர் **தி. லீலாவதி**, *1984*-ஆம் ஆண்டில் '**புள்ளிப் பூக்கள்**' என்ற முதல் தமிழ் ஹைகூ கவிதைத் தொகுதியை வெளியிட்டவர் ஓவியக் கவிஞர் **அமுதபாரதி**. தொடர்ந்து, *1985*-ஆம் ஆண்டில் 'ஜப்பானிய ஹைய்கு கவிதைகள்' என்ற அறிமுகக் குறிப்போடும், 'வாசல் ஓர வாசகம்' என்ற 14 பக்க ஆய்வு முன்னுரையோடும் '**சூரியப் பிறைகள்**' என்னும் ஹைகூ தொகுப்பினை வெளியிட்டவர் ஈரோடு தமிழன்பன்.

தமிழ் ஹைகூ வரலாற்றில் தமிழன்பனின் 'சூரியப் பிறைகள்'

தொகுப்பு இரு நிலைகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அவையாவன:

1. கால வரிசையில் 'சூரியப் பிறைகள்' தமிழில் வெளிவந்த நான்காவது ஹைகூ தொகுப்பாகும் (அமுதபாரதியின் '**புள்ளிப் பூக்கள்**', அறிவுமதியின் '**புல்லின் நுனியில் பனித்துளி**', கழனியூரனின் '**நிரந்தர மின்னல்கள்**' ஆகியன தமிழில் வெளிவந்த முதல் மூன்று ஹைகூ தொகுப்புக்கள் ஆகும்)
2. முன்னைப் பழைமை, பின்னைப் புதுமை இரண்டிலும் நல்ல பயிற்சியும் பழுத்த புலமையும் பெற்றுக் கவிதை படைத்த முன்னணிக் கவிஞர் வரிசையில் தமிழன்பனே தனியொரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்ட முதலாமவர் ஆவார்.

## தமிழில் ஹைகூ

தமிழன்பன் 'சூரியப் பிறைகள்' தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுவது போல், "ஹைகூவின் இலக்கணத்தைப் பிசகில்லாமல் பின்பற்றி 5,7,5 என்ற அசைக் கணக்கில் தமிழில் இதுவரை எவரும் எழுதவில்லை. அடிக் கணக்கில் மட்டுமே ஹைகூ பின்பற்றப்பட்டு, மூன்று அடிகளில் முடியுமாறு எழுதப்படுகிற ஹைகூ பாணிக் கவிதைகளையே தமிழில் காண முடிகிறது" ('வாசல் ஓர வாசகம்', சூரியப் பிறைகள், p.xi). மூன்று அடிகளில் முடியுமாறு எழுதப்படுவது எல்லாம் ஹைகூ ஆகிவிடாது. 'ஹைகூ' என்ற பெயருக்கு உரிய முழுப்பரிமாணமும் கொண்டனவாகத் தமிழில் ஹைகூ கவிதைகள் அருகிலேயே காணப்படுகின்றன. ஹைகூ பாணியிலான கவிதைகளே தமிழில் மிகுதியாகக் காணப்படுகின்றன. வேறு சொற்களில் கூறினால், தமிழைப் பொறுத்த வரையில் அடிக் கணக்கில் மட்டுமே ஜப்பானிய ஹைகூ மரபு பின்பற்றப்பட்டுள்ளது. பொருளமைதியிலும் புலப்பாட்டு நெறியிலும் ஜப்பானிய ஹைகூ கவிதைகளில் காணப்படும் நளினமும் நயமும், திட்பமும் நுட்பமும் தமிழ் ஹைகூ கவிதைகளில் அருகியே காணப்படுகின்றன.

இன்னொன்று: ஜப்பானிய ஹைகூ கவிதைகளில் இயற்கையின் தரிசனமும் தத்துவப் பார்வையும் படிமப் பாங்கும் முதன்மை இடத்தினைப் பெற, தமிழ் ஹைகூ கவிதைகளில் இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் நிகழ்வுகளின் பதிவுகளும், அன்றாட

நடைமுறை வாழ்க்கை அனுபவங்களின் சித்திரிப்புகளும் சிறப்பிடம் பெற்றுள்ளன. இன்றைய நாட்டு நடப்புகளை - அரசியல் இழிவுகளை- சமூக அவலங்களை - பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை - அன்றாட வாழ்க்கைக் காட்சிகளை - நடைமுறை உண்மைகளைத் தமிழ் ஹைகூ கவிதைகள் அங்கதச் சுவையோடும், முரண் சுவையோடும், நகைச்சுவையோடும் கையாண்டுள்ளன. சுருங்கக் கூறின, **அங்கதம், முரண், நகை** ஆகிய மூன்று சுவைகளும் ஒன்று சேர்ந்த '**திரிவேணி** சங்கம'மாகவே தமிழ் ஹைகூ கவிதைகள் காட்சியளிக்கின்றன. மூன்று அடிகளால் ஆன குறுவடிவம், ஆற்றல் வாய்ந்த ஈற்றடி, செட்டான மொழி நடை என்னும் மூன்று பண்புகளும் அவற்றின் படைப்பாக்கத்தில் பெரும்பங்கு பெறுகின்றன.

### தமிழன்பனின் ஹைகூ கவிதைகள்

தமிழன்பனின் ஹைகூ கவிதைகள் அரசியலின் அலசல்களாகவும், சமூக அவலங்களின் படப்பிடிப்புகளாகவும், அன்றாட நடைமுறை வாழ்க்கையின் பதிவுகளாகவும் விளங்குகின்றன. இவ்வகையில் சிறப்பாக்க் குறிப்பிடத்தக்க சில ஹைகூ கவிதைகளை இங்கே காண்போம்.

முதற்கண், 'சூரியப் பிறைகள்' எனத் தொகுப்பிற்குத் தமிழன்பன் வைத்திருக்கும் பெயரே பொருள் பொதிந்த ஒன்றாகும். பொதுவாக, சந்திரனுக்குத் தான் பிறை உண்டு. 'சூரியப் பிறை' எனச் சுட்டும் வழக்கம் இல்லை. ஹைகூ கவிதை சமூக, பொருளாதார, அரசியல் அவலங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் சூரியனைப் போல வெம்மையானது; கடுமையானது. அதே நேரத்தில் அதன் வடிவமோ மூன்று அடிகளால் ஆனது; குறியது. எனவே 'சூரியப் பிறைகள்' எனத் தம் ஹைகூ கவிதைகளுக்குப் பொருத்தமாகப் பெயர் வைத்துள்ளார் தமிழன்பன்.

சிலப்பதிகாரத்தின் காலம் வேறு, சம காலம் வேறு. சிலப்பதிகாரக் காலத்தில் கணவனை இழந்த காரிகை ஒருத்தி, கையில் ஒற்றைச் சிலம்புடன் தன்னந்தனியாளாய் அரண்மனைக்குச் சென்று, அனைத்து அதிகாரங்களும் பெற்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் ஒரு மன்னனையே 'தேரா மன்னா!' என்று அழைத்து,

அவனுடன் வழக்குரையாடி வெற்றியும் பெற முடிந்தது. இன்றைய சூழலில் அப்படி ஒரு காரியம் கனவிலும் நிகழ முடியுமா? இதோ, தமிழன்பனின் ஹைகூ கவிதை ஒன்று இவ் வினாவுக்கு உரிய விடையினைக் கூறுகின்றது.

**"சிலம்பை**
**உடைத்து என்ன பயன்?**
**அரியணையிலும் அந்தக் கொல்லன்"** (ப.65)

அன்று சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டமும், திட்டம் போட்டுத் திருடுகிற கூட்டமும் தனித்தனியாக – வேறு வேறாக – இருந்தன. இன்றோ, அவை இரண்டும் ஒன்றாக இணைந்து – கூட்டணி அமைத்து – 'ஓஹோ' என்று காரியம் ஆற்றுகின்றன. இந்நிலையில் கையில் சிலம்பை ஏந்துவதாவது, அரசவையில் அதனை உடைப்பதாவது? இரண்டும் கால் காசுக்கும் பயன்படாத காரியங்கள் இன்று! ஏனெனில், இன்று அரியணையில் வீற்றிருப்பதே அந்தக் கொல்லன் தான்!

இன்றைய அரசியல் வாழ்வில் பரபரப்பான ஒன்று தேர்தல் காலம். தேர்தல் வந்துவிட்டால் போதும், அதுவும் ஓட்டுப் போடும் நாளன்று உலக அதியங்களை எல்லாம் விஞ்சும் வகையில் அதிசய மான நிகழ்வுகள் அரங்கேறும். 'இருப்பவர்' வரமாட்டார்; 'இறந்தவர்' வந்து போவார். எங்கே என்கிறீர்களா? வாக்குச் சாவடியில் தான். தமிழன்பனின் ஹைகூ கவிதை ஒன்று இதனை நயமாகச் சித்திரித்துக் காட்டுகின்றது.

**"ஓட்டுப் போட்டுவிட்டுத்**
**திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டது**
**தனது கல்லறையில் வேறொரு பிணம்"** (ப.33)

தேர்தல் நாளன்று பிணம் ஒன்று ஓட்டுப் போட்டு விட்டுத் திரும்பி வருகின்றது. இங்கே ஒரு சிறு ஐயம் வரலாம். பிணம் போட்டது உயிருடன் இருந்தபோது பெற்றிருந்த தனது ஓட்டையா? அல்லது அடுத்தவர் ஓட்டையா? அது சரி, பிணம் திடுக்கிடுவானேன்? கல்லறை யில் அதன் இடம் இன்னொரு பிணத்தால் கைப்பற்றப்பட்டுவிட்டது என்பதாலா? அல்லது, 'எத்தனுக்கு எத்தன் இந்த உலகில் உண்டு!' என்பதை முதன்முறையாக அனுபவத்தால் உணர்ந்து கொண்டதாலா?

மண்ணுலகில் தான் 'மக்கள் தொகைப் பெருக்கம்' என்று கேள்விப் பட்டிருக்கிறோம். மயானத்திலுமா 'பிணத்தொகைப் பெருக்கம்' நேர்ந்து விட்டது? இவ்வளவு சிந்தனைகளையும் அலைஅலையாகப் படிப்பவர் நெஞ்சில் எழுப்புகின்றது தமிழன்பனின் ஹைகூ கவிதை. இவ்வகையில் நினைவுகூரத்தக்க பிறிதொரு ஹைகூ வருமாறு:

**"ஓட்டுப் பெட்டியில்**
**ஓரே துர்நாற்றம்**
**வேட்பாளர் பிணமல்ல...பின்?"** (ப.36)

'நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடும் கோயில் பரமர்க்கு அஃது ஆம்' என்கிறார் திருமூலர். 'பசியால் வாடும் ஓர் ஏழைக்குக் கடவுள் ரொட்டி வடிவில் காட்சியளிப்பார்' என்றே விவேகானந்தரும், காந்தியடிகளும் கருத்துரைக்கின்றனர். இக் கருத்துக்களை வழிமொழிவது போல் தமிழன்பனும் ஒரு ஹைகூ கவிதையைப் படைத்துள்ளார்.

**"ஆகாயமும் அழகு**
**பூமியும் அழகு – ஆம்**
**என் கையில் ரொட்டித் துண்டு"** (ப.70)

ஆகாயமும் அழகாகத் தோன்றுகிறது; பூமியும் அழகாகத் தோன்றுகிறது. எப்போது தெரியுமா? கையில் ரொட்டித் துண்டு இருக்கும் போது. கையில் ரொட்டித் துண்டு இல்லை என்றால் - வயிறு பசியால் வாடிக் கொண்டிருந்தால் - ஆகாயம் என்ன, பூமி என்ன, எதுவுமே அழகாகத் தோன்றாது! நடப்பியல் உண்மையை நச்சென்ற நடையில் உணர்த்தும் நயமான ஹைகூ கவிதை இது!

## உடன்பாட்டுச் சிந்தனை

தமிழன்பனின் ஹைகூ கவிதைகளில் காணலாகும் ஒரு தனித்தன்மை அவரது உடன்பாட்டுச் சிந்தனை (Positive Thinking) ஆகும். அது விரக்தியில் - வேதனையில் - சலிப்பில் - சோர்வில் - மயக்கத்தில் - கலக்கத்தில் - மனக் குழப்பத்தில் - வாழ்க்கை நடுக்கத்தில் பிறக்கும் வெற்றுத் தத்துவமாக இல்லாமல், நம்பிக்கையின் - நல்ல நோக்கின் - அடிப்படையில் பிறக்கும் உயிர்த் தத்துவமாக இருப்பது ஒரு சிறப்பாகும். இவ் வகையில் தமிழன்பனின் ஹைகூ கவிதை ஒன்று இங்கே குறிப்பிடத்தக்கது.

"பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு
முத்தமிட்டுச் சொன்னது பூமி
'ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ?'" (ப.30)

ஒரு மனிதன் தன் முயற்சியில் பத்தாவது தடவையும் விழுந்தான் என்பது முக்கியமன்று. அவன் ஒன்பது முறை எழுந்திருக்கிறானே, அதுதான் முக்கியம். ஒவ்வொரு முறை விழும் போதும் சோர்ந்து போய் விடாமல், நம்பிக்கையோடு தொடர்ந்து ஒன்பது முறை எழுந்திருக்கிறானே அது தான் முக்கியம். வாழ்க்கையை எதிர் மறையாகப் பார்க்காமல், உடன்பாடாகப் பார்க்கும் பார்வையின் அழகிய வெளிப்பாடு இக்கவிதை.

## 'சில சொல்லக் காமுறும்' கவிதைகள்

ஹைகூவின் உயிர்நிலை 'சில சொல்லக் காமுறுதல்' ஆகும் தமிழன்பனும் சில சொல்லுவதில் - செலச் சொல்லுவதில் - பயில் வோர் மனங்கொளச் சொல்லுவதில் - வல்லவராக விளங்குகிறார். சான்றுகள் சிலவற்றைக் காண்போமா?

"மன்மதச் சாம்பலில்
மறைந்து கிடந்த்து ஒரு கங்கு
சிவன் எரிந்தான்" (ப.7)

என்பது 'மலரினும் மெல்லிய' காமத்திற்கு உள்ள 'மலையினும் மாணப் பெரிய' ஆற்றலைப் புலப்படுத்தும் ஹைகூ!

"ஜீவ யாத்திரையில்
ஆன்மாவின் கைவிளக்கு
மரணம்" (ப.22)

என்பது 'மரணம்' குறித்துக் குறுகத் தறித்த மொழியில் அமைந்த ஓர் 'உயிருள்ள' ஹைகூ!

"படித்து முடிக்கவில்லை
பாட நூலை - விளக்கு
கறுத்துவிட்டது" (ப.38)

என்பது இன்றைய கல்வி உலகை அலசிப் பார்க்கும் ஹைகூ!

"பயம்
ஊர்ந்து கொண்டிருக்கும் - இது
பாம்பு போன தடம்" (ப.41)

என்பது படிமப் பாங்கு பளிச்சிடும் பிறிதொரு ஹைகூ!

முத்தாய்ப்பாக, "ஹைகூவின் வழியில் நான் போகாமல் - அதனை எனது நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்ப இயங்கு நிலைக்கு உட்படுத்தி எனது கட்டளைகளை ஏற்கச் செய்துள்ளேன்" (ப.xiv) என்னும் தமிழன்பனின் வாக்குமூலத்தோடு இப் பகுதி நிறைவு பெறுவது பொருத்தமாக இருக்கும்.

## II. 'ஒரு வண்டி சென்ரியூ'

"ஜப்பானில் 'சென்ரியூ', 'ஹைகூ'வின் ஒரு புதிய பரிமாணம். 'ஹைகூ'வின் பழைய இறுக்கமான கட்டுப்பாடுகளை உதறிவிட்டு அது சுதந்திரமாக இயங்குகிறது. 'ஹைகூ' வின் தனிப்போக்கான கற்பனா வர்ணங்களை விட்டுவிட்டு, 'சென்ரியூ' மெய்ம்மையியத்தை (Realism) எடுத்துக்கொண்டது. அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூர்ந்த பார்வையுடன் அது கவிதையாக்கியது. 'ஹைகூ'வின் தத்துவ கனமும், கருத்தார்ந்த வினைமையும் (Seriousness) குறைந்து, குறும்புத்தனமும், நகைச்சுவையும் 'சென்ரியூ'வின் பண்புகள் ஆயின. ஆனாலும் 'ஹைகூ'வின் அடிப்படையான வெளியீட்டு முறையை அது கைவிட்டு விடவில்லை" என 1984 - ஆம் ஆண்டில் **அறிவுமதி**யின் 'புல்லின் நுனியில் பனித்துளி' என்னும் ஹைகூ தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் ('வாமனர்களுக்கு ஒரு வரவேற்பு'), 'சென்ரியூ' பற்றிய தம் கருத்தினைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார் கவிக்கோ **அப்துல் ரகுமான்**. மேலும், அவர் அம் முன்னுரையில் "'ஹைகூ' என்ற பெயரில் தமிழில் இப்போது வெளிவருகின்றவைகளில் பலவற்றை 'ஹைகூ' என்பதை விட, 'சென்ரியூ' என்று அழைப்பதே பொருந்தும்" என்னும் ஆய்வு மதிப்பீட்டினையும் தந்துள்ளார். இதனை வழிமொழியும் விதத்தில் கவிஞர் தமிழன்பன், செ. செந்தில்குமாரின் 'துணையிழந்த பார வண்டி' என்னும் ஹைகூ தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் தெரிவித்திருக்கும் கருத்தும் இங்கே மனங்கொளத் தக்கதாகும். சிந்தனைக்கு உரிய அக்கருத்து வருமாறு:

"1. ஹைகூ அல்லது ஹொக்கு
2. ஹைகாங்நொ ரெங்கா
3. ஹைபன் (Haibun - haiku prose)
4. சென்ரியூ (Senriyu - humorous or satiric poem dealing with human affairs written in the same form of haiku)

- இவையெல்லாம் கலந்த கதம்பங்களாகவே தமிழ் ஹைகூ நூல்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒரு புதுவகை இலக்கியம், ஒரு மொழியில் அறிமுகமாகி வளரும் நிலையில் தவிர்க்க முடியாத தன்மைகளில் ஒன்றாகவே இதனை நாம் கருத வேண்டும்''.

*1985*-ஆம் ஆண்டில் 'சூரியப் பிறைகள்' என்னும் தலைப்பில் 'ஜப்பானிய ஹைய்கு வடிவக் கவிதை'களின் தொகுப்பைத் தந்த தமிழன்பன், *2001*- ஆம் ஆண்டில் '**ஒரு வண்டி சென்ரியு**' என்னும் சென்ரியூ கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். '**தமிழில் முதல் சென்ரியு தொகுப்பு**' என்னும் குறிப்புடன் அத்தொகுப்பு வெளி வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 'சென்ரியு - சில குறிப்புகள்' என்னும் தலைப்பில் பத்துப் பக்க அளவில் அத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள தமிழன்பனின் முன்னுரை, 'சென்ரியூ'வைப் பற்றிய நல்லதோர் ஆய்வு அறிமுகம் ஆகும். 'சென்றியூ'வுக்கான ஆற்றுப் படையாகவும் நாம் அதனைக் கொள்ளலாம்.

### ஹைகூவும் சென்ரியூவும்

ஹைகூ, சென்ரியூ என்னும் இரு கவிதை வடிவங்களுக்கும் இடையே ஒரு சில ஒற்றுமைகளும் உண்டு; முனைப்பான சில வேற்றுமைகளும் உண்டு. தலைப்பு இல்லாமை ஹைகூ, சென்ரியூ இரண்டிற்கும் இடையே காணப்படும் ஒரு பொதுப்பண்பு. மூன்று அடிகளால் அமைந்திருப்பதில் இரண்டிற்கும் இடையே ஒற்றுமை காணப்பட்டாலும், மூன்றாம் அடி முத்தாய்ப்பாக ஓர் அதிர்வுடனோ மின்தாக்குதலுடனோ அல்லது சுவையான ஒரு திருப்பத்துடனோ அமைவது ஹைகூவின் தனிப்பண்பு. இன்னும் குறிப்பாகச் சுட்ட வேண்டும் என்றால், படிம அழகு, தத்துவச் சார்பு, இயற்கை தரிசனம் ஆகிய கூறுகள் ஹைகூவில் சிறப்பிடம் பெறுவன.

சென்ரியூவோ, அன்றாட வாழ்க்கையைப் படம்பிடிப்பது; ஆழமற்றது; வேடிக்கையானது; விடுதலைப் போக்கினது; நகைச்சுவை பயப்பது; பொன்மொழி போன்றது. தமிழன்பன் குறிப்பிடுவது போல், "ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் தேடி வாசகர்கள் அலைய வேண்டியதில்லை. அவ்வுள்ளம் இந்நூலில் மிகமிக எளிதாக வெளிப்பட்டு - வாசகர்களோடு தேநீர் அருந்தவும் -

கிண்டலாய், கேலியாய், விளையாட்டாய் - விநயமாய்ப் பேசி அனுபவங்களை - உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும் காத்திருக் கிறது" (ஒரு வண்டி சென்ரியு, 'சென்ரியு - சில குறிப்புகள்', ப.14)

## அரசியல் உலகின் படப்பிடிப்பு

இன்றைய சூழலில் நகைச்சுவை, நையாண்டி, நக்கல், கேலி, கிண்டல், குத்தல், எள்ளல், ஏளனம், அங்கதம் முதலான பல்வேறு சுவைகளுக்கும் பெரிதும் இடம் தந்து நிற்பது அரசியல் உலகே ஆகும். 'அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல்' (Politics is the last resort of Scoundrels) என்ற பழமொழி, 'அயோக்கியர்களின் முதல் புகலிடம் அரசியல்' என்னும் புதுமொழியாய் உலவும் சூழ்நிலை இன்று உலக அரங்கில் உருவாகி வருவதை யாரும் மறுப்பதற்கில்லை. எனவே இன்றைய அரசியல் நிலையையும், அரசியலாரின் போக்கினையும் வேடிக்கையாகவும், விளையாட்டாக வும், விநயமாகவும் தம் சென்ரியூ கவிதைகளில் அழகுறப் பதிவு செய்துள்ளார் தமிழன்பன். இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சில சென்ரியூ கவிதைகளை இங்கே காண்போம்.

இன்றைய அரசியல் அடிதடியும், ஆர்ப்பாட்டமும் நிறைந்தது. ஊழலுக்கும், ஒழுக்கக் கேட்டிற்கும் முதன்மை தருவது; கொள்கையையும் குறிக்கோளையும் காற்றில் பறக்க விடுவதில் முன்னிற்பது; தன்னலமும், தன் குடும்ப நலமுமே கண்ணும் கருத்துமாகக் கொண்டு இயங்குவது. இங்ஙனம் இன்றைய அரசியல் உலகில் நிலவும் பல்வேறு பரிமாணங்களையும் தமிழன்பன் தம் சென்ரியூ கவிதைகளில் ஆங்காங்கே நன்கு படம்பிடித்துக் காட்டி யுள்ளார்.

**"அது வராவிட்டால் இது**
**இது வராவிட்டால் அது**
**எதுவும் வராவிட்டால் அரசியல்"** (ப.66)

என்பது இன்றைய அரசியல் போக்கை அடையாளம் காட்டும் ஒரு சென்ரியூ.

**"மழைநாள் கவலை**
**காளான்களை எண்ணுவதா?**
**கட்சிகளை எண்ணுவதா?"** (ப.89)

என்பது இன்று நாட்டில் மழைநாளில் தோன்றும் காளான்களைப் போல் பெருகிக் காணப்படும் அரசியல் கட்சிகளின் நிலையை அம்பலப்படுத்தும் பிறிதொரு சென்ரியூ.

**"ஆயிரம் பேரோடு**
**வேட்பு மனுத்தாக்கல்**
**ஐம்பது வாக்குகள்"** (ப.30)

என்பது இன்றைய தேர்தல் திருவிழாவைக் குறித்து நடப்பியல் பாங்கில் அமைந்த ஒரு படப்பிடிப்பு.

**"சட்டம் ஒழுங்கைக்**
**காப்பாற்ற முடியவில்லை**
**சட்ட சபையில்"** (ப.31)

என்பது இன்றைய சட்ட மன்ற நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் இயல்பான அலசல்.

'தூய உள்ளம், அன்பு உள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம்' கொண்ட அரசியல் தலைவர்கள் வாழ்ந்த காலம் எல்லாம் இன்று மலையேறிவிட்டது! 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, வருமானம் - இவை உண்டு, தான் உண்டு' என்று எந்நாளும் இருந்து வரும் சின்னதொரு கடுகு உள்ளம் கொண்ட தலைவர்களே இன்று தரணி எங்கும் அரசியல் அரங்கில் பெரும்பாலும் பவனி வந்து கொண்டிருக்கின்றனர். இத்தகைய அரசியல் தலைவர்களின் போக்குகளை - ஆழ்ந்திருக்கும் அவர்களது உள்ளப் பாங்குகளை - தமிழன்பனின் சென்ரியூ ஒன்று நகைச்சுவையும் நையாண்டியும் கலந்த பாணியில்- தனக்கே உரிய பாங்கில் - நன்றாகவே அடையாளம் காட்டியுள்ளது.

**"கட்சி தொண்டர்களுக்கு**
**காசு குடும்பத்துக்கு**
**தலைவர் மரணமுறி"** (ப.92)

கோடிக்கணக்கான நிதியினைத் தம் குடும்பத்திற்கென்றும், வெறுங் கட்சியைத் தொண்டர்களுக்கென்றும் ஒதுக்கி மரண முறி எழுதி வைத்திருக்கும் தலைவரின் 'தாராளமயமாக்கல்' கொள்கையே தனியானது தான்!

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்றோடு இன்னொன்றையும் இன்று நாம் சேர்த்துக் கொள்ளலாம். **பதவியாசை** தான் அது! இன்று பதவியை அடைவதற்காக - அடைந்த பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக - ஒரு மனிதன் - குறிப்பாக, இன்றைய அரசியல்வாதி - படும் பாடு சொல்லி முடியாது, சொல்லில் அடங்காது. உண்மையில் அது, 'விரிப்பின் பெருகும், தொகுப்பின் எஞ்சும்'. பதவியில் ஒட்டிக்கொண்டு இருக்கும் வரை தன்னலத்தின் உச்சியில் நின்று தமக்காகவும் தமது குடும்பத்திற்காகவுமே அயராது உழைத்து வந்த அமைச்சர், பதவி இழந்த உடனே - பதவியில் இருந்து இறங்கிய மறுகணேமே - இப்படி ஓர் அறிக்கை விடுகிறாராம்.

> **"பதவி இழந்த அமைச்சர்**
> **அறிக்கை**
> **இனி நாட்டுக்கு உழைப்பேன்"** (ப.63)

விட்டுக்கு அனுப்பப்பட்டதும் தான் நாட்டைப் பற்றிய நினைவே தலைகாட்டுகின்றது அமைச்சரின் நெஞ்சில்!

ஆசையைப் போல் நிலையாமையிலும் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என மூன்று வகைகள் உண்டு. இன்றைய சூழலில் இந்த மூன்றோடு சேர்த்துக் கொள்ளத் தக்க நான்காவது 'பதவி நிலையாமை'. இதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது பின்வரும் சென்ரியூ:

> **"கட்டிடத் திறப்பு விழா**
> **அமைச்சர் இடிந்து போயிருந்தார்**
> **திடீர்ப் பதவிப் பறிப்பு"** (ப.37)

பதவி திடீரென்று பறிபோனதற்காக - பதவியில் இருந்து விலக்கப் பட்டதற்காக - ஒரேயடியாக வாழ்க்கையே போய்விட்டதாகக் கருதி, அல்லற்பட்டு ஆற்றாது அழுது புலம்பும் நிலையிலும் இன்றைய அரசியல்வாதிகள் இல்லை. அவர்களைப் பொறுத்த வரையில், 'பத்தோடு பதினொன்று, அத்தோடு இது ஒன்று; இது போனால் இன்னொன்று!

> **"பதவி விலக்கப்பட்ட**
> **தலைவர் சொன்னார்**
> **இது போனால் இன்னொன்று"** (ப.20)

என்பது தான் இன்றைய அரசியலாரின் வாழ்க்கைத் தத்துவம். நடைமுறைக் கோட்பாடு.

## குறும்புப் பார்வை

புதுமைப்பித்தன் 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' என்ற தம் முத்திரைச் சிறுகதையில் வரவழைத்ததைப் போல் - **கண்ணதாசன்** 'கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்' என்ற தம் புகழ் பெற்ற திரையிசைப் பாடலில் வம்புக்கு இழுத்ததைப் போல் - தமிழன்பனும் தம் சென்ரியூ கவிதைகளில் ஆங்காங்கே கடவுளை வரவழைக் கின்றார்; வம்புக்கு இழுக்கின்றார்; கடவுளிடம் அவ்வப்போது கிண்டலாகவும் குறும்பாகவும் பேசும் நாத்திகனைப் படைக்கின்றார்.

பக்தர்கள் கடவுளிடம் வரம் கேட்பது அந்தக் காலம், கடவுள், பக்தர்களிடம் வரம் கேட்பது இந்தக் காலம். அப்படி என்ன வரம் கேட்கிறார் கடவுள் என்கிறீர்களா? இதோ, உங்கள் வினாவுக்கு விடையாக ஒரு சென்ரியூ:

**"பக்தர்களிடம்**
**கடவுள் கேட்ட வரம்**
**'அரசியலுக்கு இழுக்காதீர்கள்'!"** (ப.21)

'நாத்திகள் பேசி நாத்தழும்பு' ஏறியவர்களை நாம் நன்றாகவே அறிவோம். அவ் வரிசையில் தமிழன்பள் தம் சென்ரியூ கவிதையில் படைத்துக் காட்டும் நாத்திகள் ஒருவன், கடவுளுக்கே தேறுதல் கூறும் நிலையில் உள்ளான்.

**"கடைசியாய்**
**நாத்திகள் கடவுளைத் தேற்றினான்**
**'இல்லாமல் இருந்திருக்கலாம் அல்லவா?'"** (ப.32)

என்பது நாத்திகன், கடவுளிடம் விடுக்கும் குறும்பான கேள்விக்கணை ஆகும்.

## நகைச்சுவை உணர்வின் வெளிப்பாடு

தமிழன்பனின் சென்ரியூ கவிதைகளில் ஆங்காங்கே நகைச் சுவை உணர்வின் இயல்பான வெளிப்பாட்டினைக் காண்கிறோம்.

‘சோதனை’ என்ற சொல்லை இரண்டு முறை கையாண்டு இயல்பான நகைச்சுவையில் ‘சாதனை’ படைத்திருக்கும் ஒரு சென்ரியூ இதோ:

**“ஒலிபெருக்கிச்**
**சோதனை முடிந்ததும்**
**பேச்சாளர் சோதனை”** (ப.54)

இன்றைய புத்தக வெளியீட்டு விழாக்களில் சாதாரணமாக நடக்கும் சிறு நிகழ்ச்சியையும் தமிழன்பனின் சென்ரியூ விட்டு வைக்கவில்லை. இவ்வகையில் நகைச்சுவை உணர்வு இழையோடும் சென்ரியூ ஒன்று இதோ:

**“புத்தக வெளியீட்டு விழா**
**புத்தகம் பற்றிப் பேசாதவர்க்கே**
**கை தட்டு’‘** (ப.71)

‘கடமையைச் செய், பலனை எதிர்பாராதே!’ என்பது அந்தக் காலத்துப் பழமொழி. இன்றைய புதுமொழியோ ‘வேலை பார்ப்பவருக்கு வேலை கொடு, வேலை பார்க்காதவருக்குச் சம்பளம் கொடு’ என்கின்றது. இதனை நினைவூட்டும் ஒரு சென்ரியூ வருமாறு,

**“வேலை கிடைத்துச்**
**சம்பளம் வாங்கினார்**
**வேலை செய்யாமல்”** (ப.80)

பணியின் பொருட்டு வேறு ஊருக்கோ, நாட்டுக்கோ பிரிந்து செல்லவிருக்கிறான் கணவன். வழியனுப்பச் செல்கிறாள் மனைவி. பிரியா விடை பெற்றுச் செல்லும் கணவனிடம் கண்ணீரோடு மனைவி சொல்லும் கடைசிச் செய்தி என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? இதோ, தமிழன்பனின் சென்ரியூ வடிவிலேயே அதனைக் காண்போம்.

**“வழியனுப்ப வந்த மனைவி**
**கண்ணீரோடு சொன்னாள்**
**பணம் அனுப்ப மறந்திடாதீங்க”** (ப.97)

தொகுதி கிடைக்காத கட்சிக்காரனின் மகனுக்கு இன்னோர் இடத்தில் இடம் கிடைத்ததாம்; அந்த இடத்தை விட இந்த இடம் எந்த விதத்திலும் குறைந்தது இல்லை. அப்படி என்ன இடம் அது என்று கேட்கிறீர்களா? தெரிந்தால் ‘நூற்றுக்கு நூறு சரி’ என்று நீங்களும் நிச்சயமாகக் கவிஞருடன் ஒத்துப்போவீர்கள்:

"தொகுதி கிடைக்காத
கட்சிக்காரன் மகனுக்கு இடம்
இந்தியக் கிரிக்கெட் அணி" (ப.64)

'இடப்பெயர்ச்சி' என்றாலும், இது ஒன்றும் சாதாரண இடம் இல்லவே? 'நாட்டுக்காக ஆடச் சொன்னால் நோட்டுக்காக ஆடிய' ஒரு சிலரை அடையாளம் காட்டும் அற்புதமான சென்ரியூ இது!

## தலைகாட்டும் முரணும் குறியீடும்

பொதுவாக, படிமம், குறியீடு, தொன்மம் போன்ற உத்திகளுக்கு சென்ரியூ கவிதையில் இடம் இல்லை. என்றாலும் அவை தமிழன்பனின் சென்ரியூ கவிதைகளில் ஆங்காங்கே தலை காட்டுவதைக் காண முடிகின்றது.

"குழந்தை முகம்
கருக்கலைப்புக்கு வந்த
பெண்" (ப.98)

என்பது முரண் சுவையைத் தன்னகத்தே கொண்ட ஒரு சென்ரியூ.

"நரிகள் தேசம்
ஆடுகள் அமைச்சர்களாகித்தான்
என்ன பயன்?" (ப.33)

என்பது குறியீட்டுத் திறன் பொதிந்து கிடக்கும் பிறிதொரு சென்ரியூ.

இங்ஙனம் தமிழன்பன் தம் சென்ரியூ கவிதைகளில் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூர்த்த பார்வையுடன் படம்பிடித்துக் காட்டி யுள்ளார். இவ்வகையில் நடப்பியல் பாங்கும் நகைச்சுவை உணர்வும் குறும்புத்தனமும் அவருக்குப் பெரிதும் கைகொடுத்துள்ளன.

## III. 'சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்'

### 'லிமரிக்'

"மனிதர்களைப் போலவே கவிதைகளிலும் குறும்புக்காரக் கவிதைகள் உண்டு. சில நம்மைச் சிரிக்கச் செய்யும், சில நம்மைப் பார்த்தே சிரிக்கும். ஆங்கிலத்தில் நகைச்சுவைக்கென்றே ஒரு தனி வடிவத்தை வைத்திருக்கிறார்கள். லிமரிக் (Limerick) எட்வர்ட் லியர்

என்பவர் இதைப் பிரபலப்படுத்திய பிறகு ஆங்கில இலக்கியத்தில் இதற்கென்று தனிஇடம் ஏற்பட்டுவிட்டது. லிமரிக் எப்படி இருக்கும்? இது ஓர் ஐந்தடிக் கவிதை... லிமரிக்கில் கடைசி அடி தான் முக்கியம். ஒரு நகைச்சுவை வெடி, அல்லது திடுக்கிடும் திருப்பம் அதில் இருக்க வேண்டும்'' (உன் கண்ணால் தூங்கிக் கொள்கிறேன், பக்.80-81) என்பது 'லிமரிக்' கவிதைக்கு **அப்துல் ரகுமான்** தரும் எளிய விளக்கம். 'லிமரிக்'கின் உருவமும் உள்ளடக்கமும் எப்படி இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் அவரே படைத்துள்ள ஒரு 'லிமரிக்' கவிதை இதோ:

**"வள்ளுவரும் மாணவராய் ஆனார்**
**திருக்குறளில் தேர்வெழுதப் போனார்**
**முடிவுவெளி யாச்சு**
**பெயிலாகிப் போச்சு**
**பாவம் அவர் படிக்கவில்லை கோனார்"** (ப.81)

'லிமரிக்' என்பதற்கு ஈழத்துக் கவிஞர் 'மஹாகவி' வைத்த தமிழ்ப் பெயர் 'குறும்பா'. உருவத்தில் குறுகியது; எனவே குறும்பா. கவிதையைப் படிப்பவர்கள் 'இவ்வளவு குறும்பா?'' என்று கேட்பார்கள். எனவே, உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டையுமே குறிக்கும் பொருத்தமான பெயர் 'குறும்பா'.

தமிழில் முதன்முதலாக 'லிமரிக்' முயற்சியைத் தொடங்கி வைத்த பெருமைக்கு உரியவர் 'மஹாகவி' ஆவார். 'சிரிப்புக்கும் சிந்தனைக்கும் கருத்துக்கும் கற்பனைக்கும் பெருவிருந்தாம் 100 குறும்பாக்கள்' என்னும் குறிப்புடன் அவர் இயற்றிய லிமரிக் வகைக் கவிதைகள் 1966 - ஆம் ஆண்டில் நூல் வடிவில் வெளிவந்தன. அந்நூலில் இடம்பெற்றுள்ள ஒரு 'லிமரிக்' இதோ,

**"முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்**
**முன்னாலே வந்து நின்றான் காலன்.**
**சத்த மின்றி, வந்தவனின்**
**கைத் தலத்திற் பத்து முத்தைப்**
**பொத்தி வைத்தான். போனான் முச் சூலன்!"** (ப.53)

கண்டிப்புக்கும் காலம் தவறாமைக்கும் பேர் போன காலனுக்கே சீலன் சத்தமில்லாமல் கையூட்டு தந்து கச்சிதமாக்க் காரியம் முடித்துக்

கொள்ளும் பாங்கினைத் தனக்கே உரிய நகைச்சுவையும் நையாண்டியும் கலந்த பாங்கில் படம்பிடித்துக் காட்டுகிறது இக் குறும்பா.

**'லிமைரைக்கூ'**

ஈரோடு தமிழன்பன் 2002-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் 'முதன்முதலாகத் தமிழில் வெளிவரும் லிமைரைக்கூக் கவிதைகள்' என்ற குறிப்புடன், 'சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்' என்னும் தலைப்பில் ஒரு நூலினை வெளியிட்டுள்ளார். லிமரிக்கும் ஹைகூவும் சேர்ந்த ஒரு கலப்பினக் கவிதை வடிவமே லிமைரைக்கூ (Limeraiku). ஜப்பானிய ஹைகூவின் 5,7,5 என்னும் அசையமைப்பு உடைய மூவடி எல்லையும், லிமரிக் ஓசை அமைப்பும் அதன் பண்புகள். நூலினுள் "'லிமைரைக்கூ' ஓர் அறிமுகம்" என்னும் தலைப்பில் 16 பக்க அளவில் தமிழன்பன் எழுதியிருக்கும் ஆய்வுரை, 'லிமைரைக்கூ' வகைக் கவிதை வடிவத்தைக் கவிதை உலகிற்கு நன்கு அறிமுகம் செய்ய வல்லதாகும். "இவற்றுக்கு லிமரிக்கின் தமிழ்ப் பெயராக வழங்கப்படுகிற 'குறும்பா'வையும் தமிழில் ஹைகூக்கு வழங்கப் படுகின்ற 'துளிப்பாவை'யும் இணைத்துத் 'துளிக்குறும்பா' என்று பெயர் சூட்டலாமா? அதைவிடப் 'பொடிக்குறும்பா' என்று செல்லப் பெயர் சூட்டி அழைக்கலாமா? பொடி வைத்துக் குறும்பு செய்வது தானே இவ்வகைக் கவிதைக்கு முதல் வேலை? ஆனால் ஹைகூவின் நுட்பமும் மென்மையும் அப்பெயருள் தமக்கு இடம் இல்லையே என்று ஏங்க மாட்டாவா? மேற்கும், கிழக்கும் சங்கமித்துப் பெற்றெடுத்த இக் கலப்பினக் கவிதைக்கு இப்போதைக்கு அறிமுக நிலையில் 'லிமைரைக்கூ' என்ற பெயரே இருக்கட்டும் என்று எண்ணுகிறேன்" (பக்.15-16) என்னும் கவிஞர் தமிழன்பனின் முன்னுரைக் குறிப்பு இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

'சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்' என்னும் இந்நூலில் இடம்பெற்றுள்ள லிமைரைக்கூக் கவிதைகள், ஜப்பானிய ஹைகூ போலவே மூன்றடி எல்லையில் இயங்குகின்றன. இக் கவிதைகளில் லிமரிக், சென்ரியூ ஆகிய இரண்டிற்கும் உரிய பொதுவான பாடுபொருள் தன்மைகள் இருப்பதோடு, ஹைகூவின் தனித்துவமான காட்சிகள், உணர்வுகள் முதலியன இருப்பதையும் படிப்பவர்கள் உணர முடிகின்றது. இக் கவிதைகளில் ஹைகூ வரியளவு, வரியமைப்பு,

பொருளமைதி ஆகியவற்றோடு, லிமரிக் வரியமைப்பு, பொருளமைதி, சந்தம் ஆகியனவற்றையும் காண முடிகின்றது. யாப்பு முறையைப் பொறுத்த வரையில், ஹைகூவும், சென்ரியூம் பெற முடியாத லிமரிக்கின் இயைபுத் தொடைச் சந்தம் லிமைரைக்கூவில் உண்டு. தமிழன்பனின் சில லிமைரைக்கூ கவிதைகளில், லிமரிக் கவிதையின் யாப்புத் தன்மைகளில் இயைபுத் தொடை தவிரவும் மற்றொன்றாகிய இடையடி குறைந்து வருதலையும் காண முடிகின்றது. சில சான்றுகள் வருமாறு,

"உடையும் குமிழி, உள்ளம்
உள்ளுக் குள்ளே அமைதி இல்லை
நூறு பிரளய வெள்ளம்" (ப.71)

"'துபாயில் அதிகமா வெயில்?'
கேள்வி கேட்டோர் கவனம் எல்லாம்
அவன்இறக் கிவைத்த பையில்" (ப.57)

"வரும்போகும் வரும்போகும் நாள்கள்
வறியவரை மட்டுமே
கொட்டிப் போகும் தேள்கள்" (ப.28)

"எதற்கப்பா எதுகை மோனை
மின்னலைப் பிடித்து
வைக்கவா சட்டி பானை?" (ப.50)

இங்ஙனம் லிமரிக், ஹைகூ என்னும் இரு வடிவங்களின் வரியளவும் வரியமைப்பும் சந்தமும் பொருளமைதியும் கொண்டனவாகத் தமிழன்பனின் லிமரைக்கூ கவிதைகள் காணப்படுகின்றன.

## நகைச்சுவையும் அங்கதச் சுவையும்

பாடுபொருள் புலப்பாட்டிற்கு நகைச்சுவையையும் அங்கதச் சுவையையும் திறம்படப் பயன்படுத்திக் கொள்வது என்பது லிமரிக்கின் தனித்துவக் கூறுகளுள் ஒன்றாகும். இவ்வகையில் தமிழன்பன் தம் லிமைரைக்கூ கவிதைகளில் நகைச்சுவை உணர்வின் பல்வேறு பரிமாணங்களையும் - நக்கல், நையாண்டி, கிண்டல், குத்தல், கேலி, அங்கதம், எள்ளல், ஏளனம் முதலான பல்வேறு வடிவங்களையும் -

பாங்குறப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

**"கைக்கூலி வாங்கிய தில்லை**
**கந்தன் என்று சாட்சி சொல்லிக்**
**கைக்கூலி! என்ன தொல்லை?"** (ப.19)

என்பது மெல்லிய அங்கதச் சுவை இழையோடக் கையூட்டு என்னும் சமூகக் கொடுமையைச் சாடும் லிமைரைக்கூ.

**"பாடுவது அருட்பாப் பதிகம்**
**அன்றாடம் உ ணவில் ஆடு கோழி**
**மீன்நண்டு வகையே அதிகம்"** (ப.28)

என்பது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரியும் மனித இயற்கையை முரண் சுவையோடு சுட்டிக்காட்டும் லிமைரைக்கூ.

**"அழுதான் நம்ம அப்பு**
**காந்தி சிலையைக் கட்டிப் பிடிச்சு**
**போதலை யாம் தண்ணி மப்பு"** (ப.54)

என்பது பாருக்குள்ளே நல்ல நாடாம் பாரத மணித்திரு நாட்டுக் 'குடிமகன்' ஒருவனின் அவல நிலையை நையாண்டி செய்யும் லிமைரைக்கூ.

**"ஆடிக் கிருத்திகை, அரோகரா**
**போட்டுப் போனால் சென்னி மலைமேல்**
**கேட்கும் பாடல் 'வசீகரா'"** (ப.92)

என்பது இன்றைய நாட்டு நடப்பை நகைச்சுவையோடும் நடப்பியலோடும் எடுத்துக்காட்டும் லிமைரைக்கூ.

**"கம்பனுடன் கவிதை போச்சாம்...**
**தமிழன்னைக்குக் கருத்தடைச் சிகிச்சை**
**எங்கே வச்சு ஆச்சாம்?"** (ப.40)

என்பது கவிதை பற்றிக் குதர்க்கம் பேசித் திரிவோரை நோக்கிக் கவிஞர் தொடுக்கும் ஒரு கூரிய கேள்விக் கணை.

**"வறுமையில் வாடி நொந்து**
**இறந்தார் சிரிப்பு நடிகர் அவருக்காய்**
**ஆளில்லை அழுதிட வந்து"** (ப.20)

என்பது 'ஆழ்ந்த அவலத்தின் - அழுகையின் - அடிப்படையிலும்

நம் வாழ்க்கையில் நகைச்சுவை பிறக்கும்' என்பதை உணர்த்தும் ஓர் அழகிய லிமைரைக்கூ.

இங்ஙனம் நகைச்சுவையும் அங்கதச் சுவையும், குறும்புத் தனமும் கூர்மையும், நயமும் நுட்பமும் நாடி நரம்பு போல் பின்னிப் பிணைந்த லிமைரைக்கூக் கவிதைகள் 'சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்' தொகுப்பில் நிறைய உள்ளன.

பொருளமைதியில் வேறுபட்டாலும் புலப்பாட்டு முறையில் 'சூரியப் பிறைகள்' தொகுப்பில் இடம்பெற்றுள்ள தமிழன்பனின் கவிதைகள் ஜப்பானிய ஹைகூ பாணியிலான கவிதைகளுடன் ஓரளவு நெருங்கி வருகின்றன. கவிஞரே விழிப்புணர்வோடு 'ஹைய்கு பாணியிலான கவிதைகளின் தொகுப்பு' எனச் சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 'சென்ரியூ'வைப் பொறுத்த வரையில், தமிழன்பனின் சென்ரியூக்கள் பொருண்மை நிலையிலும் புலப்படுத்து நிலையிலும் அறிவுரை கூறலாய், பொதுத் தன்மையவையாய், பொன்மொழிகள் போன்றவையாய், வேடிக்கைச் சிறுகவிதைகளாய், விடுகதைப் போக்கினவாய், நகைச்சுவை பயப்பவையாய்ப் பலவகைக் கோலங்களில் - கோணங்களில் - மலர்ந்துள்ளன. நிறைவாக, லிமைரைக்கூவையும் ஹைகூவையும் சரியான விகிதத்தில் இணைத்து 'லிமைரைக்கூ' என்னும் ஒரு புதிய கலப்பினக் கவிதை வடிவத்தினை உருவாக்கியுள்ளார் தமிழன்பன். சொந்த ஊரான சென்னிமலையின் பெயரையும், ஷேக்ஸ்பியரின் நாடக நாயகியான கிளியோப்பாத்ராவின் பெயரையும் சேர்த்து, 'சென்னிமலைக் கிளியோப்பாத்ராக்கள்' என்னும் தலைப்பினைச் சூட்டி, '**இவ்வகையில் தமிழில் முதல் முயற்சி**' எனக் கவிதை உலகில் என்றென்றும் விளங்குமாறு செய்து விட்டார் தமிழன்பன். இங்ஙனம் தம் குறுங்கவிதைப் படைப்புகள் மூன்றையும் அதனதன் நோக்கிலும் போக்கிலும் தனித்தன்மையோடும் சிறப்பியல்போடும் திகழுமாறு வெளியிட்டுள்ளார் தமிழன்பன்.



# 6

# 'திரையுலகின் காளிதாசன்' வாலி

> "...மானுட மாண்புகள் மிக்கோர்
> என்னைத் தாங்கி நிற்பதால் –
> எனக்குக் 'குறையொன்றுமில்லை!'"
>
> – வாலி*

**"கற்பனை யென்றாலும் கற்சிலை யென்றாலும்**
**கந்தனே! உனை மறவேன்!"**

என்னும் முருகப் பெருமானைப் பற்றிய பக்திப் பாடல் மூலம் தமிழ் கூறு நல்லுலகிற்கு அடையாளம் காணப்பெற்றவர் வாலி. இவரது இயற்பெயர் ரங்கராஜன்; மாலியைப் போல் சிறந்த ஓவியராக வாழ்வில் உயர வேண்டும் என்ற விருப்பத்தில் 'வாலி' என்ற புனைபெயரைச் சூடிக் கொண்டவர். திருவரங்கத்தைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட இவர், பேசும் சினிமா பிறந்த ஆண்டில் (1931) பிறந்த பெருமைக்கு உரியவர் ஆவார்.

**"அத்தைமடி மெத்தையடி**
**ஆடிவிளை யாடம்மா!"**

என்னும் 'கற்பகம்' திரைப்படப் பாடல் வாயிலாக வாலி தமிழக மக்களின் உள்ளங்களில் அடியெடுத்து வைத்தார். 'படகோட்டி'

---

* நினைவு நாடாக்கள், ப.304.

முதலாக மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்குக் கவிஞர் வாலி எழுதிய பாடல்கள், எம்.ஜி.ஆர். முதல்வராய்த் தமிழக ஆட்சிக் கட்டிலில் அமருவதற்கு உதவின; கவிஞர் தமிழக மக்களின் மனங்களிலே கொலு வீற்றிருப்பதற்கு வழிவகை செய்தன.

> **"அம்மா என்றழைக்காத உயிரில்லையே**
> **அம்மாவை வணங்காது உயர்வில்லையே"**
>
> [வாலி 1000: தொகுதி 2, ப.12]

என்னும் திரைப்பாடல் ஒன்றே போதும், வாலியின் பெயரைக் காலந்தோறும் பறைசாற்றிக் கொண்டிருக்க! கவிஞர் பழநிபாரதி குறிப்பிடுவது போல், '**திரையுலகின் கம்பன் கண்ணதாசன் என்றால், வாலி – காளிதாசன்**'. திரைப்படத் துறையில் பத்தாயிரம் பாடல்களுக்கு மேல், நான்கு தலைமுறையினருக்கு எழுதித் தனி முத்திரை பதித்த வாலி, கவியரங்கிலும் காலடி பதித்துத் தம் படைப்புத் திறத்தினை விரிவு செய்து சாதனை படைத்தார். "நான், பிறந்தது திருவரங்கம். புகுந்தது திரையரங்கம். இருப்பினும் எனக்கு விருப்பமானது கவியரங்கம்" (நானும் இந்த நூற்றாண்டும், ப.40) என அவரே ஓர் இடத்தில் தம் உணர்வினைப் பதிவு செய்துள்ளார். காலப் போக்கில் திரைப் பாடல், கவியரங்கக் கவிதை, நாடகம், சிறுகதை என்னும் இலக்கிய வடிவங்கள் மட்டுமன்றி, புதுக்கவிதையும் வாலிக்கு வசப்பட்டது. 'பொய்க்கால் குதிரைக'ளில் (*1982*) தொடங்கிய அவரது புதுக்கவிதைப் பயணம், 'நிஜ கோவிந்தம்' (*1995*) என்னும் தொகுதி வடிவில் தொடர்ந்தது. இந்நிலையில் காப்பியப் படைப்பாக்க முயற்சியிலும் முனைப்புடன் ஈடுபடலானார் வாலி. 'அவதார புருஷ'னும் (*1996*), 'பாண்டவர் பூமி'யும் (*1999*) அவரது படைப்பாளுமையில் என்றென்றும் முழுநிலவு போல ஒளி வீசி நிற்கும் மணி மகுடங்கள் ஆகும். இன்னமும் கூர்மைப்படுத்திச் சொல்ல வேண்டும் என்றால், இவ்விரு படைப்புகள் வாயிலாக வாலியின் பாட்டுத் திறம் விசுவரூபம் எடுத்தது எனலாம். 'இராமானுஜ காவிய'மும் (*2003*), 'கிருஷ்ண விஜய'மும் (*2008*) இவ்வகையில் குறிப்பிடத்க்க மேலும் இரு காப்பிய முயற்சிகள் ஆகும். வசன கவிதைத் துறையையும் வாலி விட்டு வைக்கவில்லை. 'வள்ளுவம்' (*2004*) என்னும் அவரது நூல் வசன கவிதை வடிவில் அமைந்தது. பதச் சோறாக, 'அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும், இழுக்கா இயன்றது அறம்' (*35*) என்னும் குறட்

பாவுக்கு வாலி தந்துள்ள அழகிய வசன கவிதை வடிவம் இது:

**“பொறாமையைப் –**
**பொடி;**
**அவாவை –**
**அடி;**
**வெகுளியை –**
**விடு;**
**சுடுசொல்லைச் –**
**சுடு;**
**நான்கும்**
**நான்கு தீங்கு; அவற்றின்**
**நிழலில் நிற்காமல் நீங்கு!**
**நான்கையும் புறம் – தவ்வி**
**நடத்துதல் அறம்!”** [வள்ளுவம், ப.43]

‘இவர்கள் இன்னமும் இருக்கின்றார்கள்’ (2004) என்பது புதுக்கவிதை வடிவில் அமைந்த நூறு நடைச் சித்திரங்களின் உயிர்ப்புள்ள தொகுப்பு. இந்நூலில் கவிஞர் வாலி காஞ்சிப் பெரியவரில் தொடங்கி, தம் வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் காரணமாக விளங்கிய நடிகர் வி. கோபாலகிருஷ்ணன் வரையிலான நூறு பெருந்தகையோரை அப்படியே தம் எழுத்துத் தூரிகையால் வண்ண வண்ண ஓவியங்களாக வடித்துப் படிப்பவர் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

‘நானும்....இந்த நூற்றாண்டும்...!’ (1995), ‘நினைவு நாடாக்கள்’ (2012) என நூல் வடிவில் வெளிவந்துள்ள இரு வாழ்க்கை அனுபவத் தொடர்களும் வாலி என்னும் பன்முக ஆளுமையாளரின் (Multi-faceted Personality) பரிணாமங்களையும் பரிமாணங்களையும் ஒருங்கே புலப்படுத்துவன ஆகும்.

இவை தவிர வாலியின் வேறு சில படைப்புக்களும் உண்டு. நாட்டு நடப்புகளை மையமாகக் கொண்டு வாலி எழுதிய 26 கவிதைகளின் தொகுப்பு ‘வாரந்தோறும் வாலி’ (2006). 80 வெண்பாக்களில் கவிச்சக்ரவர்த்தி கம்பருக்கு வாலி சூட்டியுள்ள புகழாரம் ‘கம்பன் எண்பது’ (2008). வாலி எழுதிய நான்கு சிறுகதைகள், ஒரு குறுநாவல் ஆகியற்றின் தொகுப்பு ‘நாய் வால்’ (1995).

இனி, வாலி என்னும் கவிஞரின் படைப்பாக்கங்களில் சிறந்து விளங்கும் கூறுகளும் திறன்களும் குறித்துச் சுருங்கக் காண்போம்.

## 'மரபை வணங்கி, புதிதைப் போற்றுபவர்'

'மரபை அறிந்து அதை மீறுபவன் தான் புதிய வடிவத்தைக் கவிதைக்குப் பெற்றுத் தரத் தகுதியானவன்' எனத் தம் தனிப்பட்ட கருத்தினை எடுத்துரைக்கும் வாலி,

**"நான் மரபை வணங்கி, புதிதைப் போற்றுபவன்"**

எனத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்கிறார். புதுக்கவிதை வடிவம் குறித்து அவர் தெரிவித்துள்ள சில அடிப்படையான கருத்துக்கள் வருமாறு:

1. 'உள்ளது உள்ளபடியே' உடனே சொல்லி விடவேண்டும் என்னும் புதிய ஆதங்கத்தில் பிறந்ததுதான் புதுக்கவிதை.
2. ஆன்மிகம், அரசியல், தனிமனித இன்பதுன்பம், சமூகத்தின் ஏற்ற இறக்கம் - இப்படி எத்தனையோ சாளரங்கள் வழியே தமிழ் எட்டிப் பார்க்க, புதுக்கவிதை தோதாக இருக்கிறது.
3. சில விஷயங்களை 'நறுக்' என்று சொல்லப் புதுக்கவிதையால் ஏலுகிறது.
4. மரபு சட்டையை மாட்டி வரும் வரை - கற்பனை காத்திருக்க முடியாத வண்ணம் ஓர் அவசரம் நேருகிற போது - கவிஞன் புதுக்கவிதை வடிவத்தைத் தேர்ந்தெடுத்துத் தன் எண்ணங்களை அதில் நிரப்பி - சுடச்சுட வாசகனுக்குக் கொடுக்கிறான்.

இவ் வரைவிலக்கணத்திற்கு ஏற்பவே வாலியின் புதுக் கவிதைகள் விளங்குகின்றன எனலாம்.

## சொல் விளையாட்டும் படிம அழகும்

ஓர் கவிஞர் என்ற முறையில் வாலியின் படைப்பாளுமையில் சிறந்து விளங்கும் திறன்கள் இரண்டு. அவையாவன.

1. சொல் விளையாட்டு (Pun)
2. படிம அழகு (Imagery)

அறிவார்ந்த சொல் விளையாட்டு ஆடுவதில் கைதேர்ந்தவர் கவிஞர் வாலி. சொற்களின் அழகும் அழுத்தமும் ஆழமும் ஆற்றலும் அறிந்து ஆளுவதில் அவருக்கு நிகர் அவரே எனலாம்.

**"எங்களால் -**
**மனிதர்களை மந்திரிக ளாக்க**
**முடிகிறது;**
**மந்திரிகளைத் தான்**
**மறுபடியும்**
**மனிதர்க ளாக்க**
**முடிவ தில்லை!"** [பொய்க்கால் குதிரைகள், ப.64]

என இன்றைய அரசியலாரின் போக்கினைச் சாடும் போதும்,

**"மசூதியை -**
**மண்ணில் சாய்த்ததில்**
**மானக் கேடு....**
**நபி நாயகத்திற்கல்ல**
**ஜன நாயகத்திற்கு"** [நிஜ கோவிந்தம், ப.9]

எனச் சம கால நிகழ்வைக் கூர்மையாக விமர்சனம் செய்யும் போதும்,

**"ஒருநாள்**
**வானம் போனான்...**
**வீடு தேடி அல்ல, தமிழ்...**
**ஏடு தேடி!"**

எனத் தமிழ்த் தாத்தா உ.வே.சா. பற்றிய நடைச் சித்திரத்தினை நறுக்கென முடிக்கும் போதும்,

**"சாப்பிட்டால் வருகின்ற**
**ஏப்பம் போலே - கண்கள்**
**சந்தித்தால் வர வேண்டும்**
**உண்மைக் காதல்!"** [அம்மா, ப.54]

என உண்மைக் காதலின் இயல்பினை உரைத்திடும் போதும் கவிஞர் வாலியின் எழுதுகோலில் அருமையும் அழகும் எளிமையும் ஏற்றமும் வாய்ந்த சொற்கள் களிநடம் புரிந்து நிற்கக் காண்கிறோம்.

படிமம் என்பதற்குச் **'சொற்களால் உருவாக்கப்படும் சித்திரம்'**

(A picture made out of words) என விளக்கம் தருவர் அறிஞர். ‘சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்’ என்னும் நம் பண்டைய உரையாசிரியரின் கருத்தும் இவ்வகையில் நினைவுகூரத்தக்கதாகும். சொற்களால் ஓவியம் தீட்டுவதில் - சிற்பம் வடிப்பதில் - வல்லமை படைத்தவராக விளங்குகிறார் வாலி. ‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ என்பது போல், ‘வாலிக்குச் சிறுசொல்லும் ஆயுத’மாகப் பயன்படுகின்றது. உள்ளங்கவர் உதாரணங்கள் சில வருமாறு,

“பாரதி – புதிய தமிழுக்குப் போடப்பட்ட பிள்ளையார் சுழி!”

“மரணம் – மனித வாக்கியத்தின் முற்றுப்புள்ளி!”

“குழந்தை – தொட்டிலுக்குக் கட்டில் எழுதிப் போட்ட கடுதாசி!”

“மலைகள் – மல்லாந்து படுத்திருக்கும் மண் மாதாவின் மார்பகங்கள்!”

“நகங்கள் – அனைவர்க்கும் ஆண்டவனே அணிவித்த மோதிரங்கள்!”

[பொய்க்கால் குதிரைகள், பக்.79; 106; 128; 55; 51]

“முதுமை – கடவுள் எழுதிய படைப்பு நூலில் கடைசிப் பக்கம்!”

“நிலவு – முகிலாம் பட்டுத் துகிலை நீக்கி முலைப்பா லூட்டும் குடும்பத் தலைவி”

[அம்மா, பக்.101; 35]

## முத்திரை பதித்த கையறுநிலைக் கவிதை

பண்டித ஜவஹர்லால் நேருவின் மறைவை ஒட்டிக் கவிஞர் கண்ணதாசன் பாடிய கையறுநிலைக் கவிதை இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கையறுநிலைக் கவிதை வரலாற்றில் தடம் பதித்தது. அதில் இடம்பெற்றுள்ள ‘சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதா? தீயே உனக்கொரு நாள் தீமூட்டிப் பாராமோ?’ என்னும் வரிகள் சாகா வரம் பெற்றவை. கண்ணதாசனின் கையறுநிலைக் கவிதைக்குச் சரிநிகர் சமானமாகக் கருதத்தக்கது

கண்ணதாசன் மறைந்த போது கவிஞர் வாலி பாடிய கையறுநிலைக் கவிதை. வாலியின் கருத்தில் கண்ணதாசன், 'தாடியில்லாத தாகூர்; மீசையில்லாத பாரதி!' இன்னமும் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால், கண்ணதாசன், 'காட்டுக்குள் தேனீக்கள் கூட்டுக்குள் வைத்ததைப் பாட்டுக்குள் வைத்தவர்'; 'ஆர்மோனியப் பெட்டிக்கு - அழகுத் தமிழை அறிமுகப்படுத்தி வைத்தவர்'; 'சிறுகூடல்பட்டியில் சிற்றாறாய் ஊற்றெடுத்து சிகாகோ நகரில் சங்கமித்த ஜீவநதி'. இங்ஙனம் கண்ணதாசனின் அரும்பெரும்பண்புகளையும் அவரது பங்களிப்புகளையும் நிரந்தினிது கூறி வரும் வாலி, 'என்ன சொல்லி என்ன?' எனத் தமது ஆற்றாமை உணர்வினை வெளிப்படுத்தி,

**"எழுதப் படிக்கத்**
**தெரியாத எத்தனையோ**
**பேர்களில் –**
**எமனும்**
**ஒருவன்...**
**ஒரு**
**கவிதைப் புத்தகத்தைக்**
**கிழித்துப்**
**போட்டு விட்டான்...!"**

[பொய்க்கால் குதிரைகள், பக்.133–136]

என அக்கவிதையை முடித்திருக்கும் பாங்கு படிப்பவர் உள்ளத்தைப் பாகாய் உருக்குவதாகும்.

### வாலியின் தனிப்பாணி

புதுக்கவிஞராக வாலியின் தனித்தன்மையைப் பறைசாற்றும் கவிதை 'ஒரு நாமச் சண்டை'. 'வட கலையா? தென் கலையா?' வாதியும் பிரதிவாதியும் வாய்தா மேலே வாய்தா வாங்க - நீதிமன்றத்தில் தொடரப் பெற்ற வழக்கு வருஷக் கணக்காக நீண்டதாம். இதனிடையே கோயில் யானை நெற்றியில் நாமமே இல்லாமல் நின்று கொண்டிருந்ததாம். ஒருநாள் - சங்கிலியை அறுத்துக் கொண்டு சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டு ஓடியே போயிற்றாம் கோயில் யானை! இப்படி வளர்த்துக் கொண்டே வந்த கவிஞர் கவிதையை முடித்திருக்கும் விதம் அருமையிலும் அருமை. நச்சென்ற கவிஞரின் மொழியிலேயே அதனைக் காண்பது நன்று.

"ஊர் பேசியது
மதம் பிடித்ததால்
ஓடியது என்று.

உண்மையில்
மதம் பிடிக்காததால் தான் –
ஓடியது யானை!" [நிஜ கோவிந்தம், ப.74]

இங்கே பிடித்ததால் X பிடிக்காததால் என்ற முரண் உத்தியின் ஆட்சி கவிஞரின் உள்ளக் கருத்தினை ஆற்றலோடு புலப்படுத்துவதற்குப் பெரிதும் கைகொடுத்துள்ளது.

சரிவிகித உணவு போல உருவமும் உள்ளடக்கமும் உத்தியும் மொழிநடையும் கச்சிதமாகப் பொருந்தி நிற்கும் வாலியின் பிறிதொரு கவிதை 'வாக்காளப் பெருமக்களுக்கு...' அதில், 'வாக்காளப் பெருமக்களே...' என முதலில் மதிப்போடும் மரியாதையோடும் வாக்காளர்களை விளித்து, 'நான் உங்கள் வேட்பாளன்!' என சுய அறிமுகம் செய்து கொள்கிறார் தேர்தலில் நிற்கும் ஒரு வேட்பாளர். அடுத்து, 'நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தால் - ' என்னவெல்லாம் செய்வேன் என அடுக்கிக் கூறுகிறார்; 'ஜாதிகளை ஒழிப்பேன் - வீதிகளில் உள்ள ஜாதிகளின் பெயர்களை அழிப்பேன் - ஜாதி என்ற வார்த்தை உள்ள பக்கத்தை அகராதியில் இருந்து கிழிப்பேன் !' என்று வீராவேசமாக முழங்குகிறார்; உணர்ச்சி பொங்க உரத்த குரலில் சூளுரைக்கிறார்; 'நீ அந்த ஜாதி, நான் இந்த ஜாதி என்று பேசுவோரால் தான் தேசம் கெட்டு விட்டது!' என முடிந்த முடிபாகக் கூறி, 'எனவே - ஜாதியில்லாத சமுதாயத்தை அமைக்க - எனக்கே ஓட்டுப் போடுங்கள்!' என வாக்காளர்களிடம் தனிப்பட்ட முறையில் வேண்டுகோளும் விடுக்கின்றார். கடைசியாகத் தாழ்ந்த குரலில் வேட்பாளர் வாக்காளப் பெருமக்களிடம் கூறுவது தான் கவிதையின் உச்ச கட்டம்; திடீர்த் திருப்பம்.

"நினைவில்
இருக்கட்டும்
நான்
உங்கள்
ஜாதிக்காரன்...!"
[பொய்க்கால் குதிரைகள், பக்.69–70]

என வாக்காளர்களிடம் சாதியை நினைவூட்டி வாக்குகள் கேட்கவும் தவறவில்லை வேட்பாளர். வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல், தேர்தல் திருவிழாவின் போது இன்று நடக்கும் தில்லு முல்லுகளைத் தமக்கே உரிய தனிப்பாணியில் இங்கே நயமாகச் சாடியுள்ளார் வாலி.

சுற்றி வளைத்தோ நீட்டி முழக்கியோ சொல்லாமல், பயில்வோர் உள்ளத்தைத் தொடும் பாங்கில் நறுக்கெனக் கவிதையை முடிப்பது வாலியின் சிறப்பான பாணி ஆகும். 'காரண காரியம்' என்ற குறுங்கவிதை இவ் வகையில் குறிப்பிடத்தக்கது. பொறுப்பு இல்லாத தந்தையைத் தலைவரைப் பெற்றிருக்கும் ஒரு குடும்பம் என்ன கதிக்கு ஆளாகும்? இதோ கவிஞரின் இரத்தினச் சுருக்கமான படப்பிடிப்பு:

**"அம்மா –**
**அக்காள் –**
**அண்ணன் –**
**தம்பி –**
**நான்...**
**அனைவருமே**
**பீடி சுற்றுகிறோம்;**
**அப்பா –**
**ஊரைச் சுற்றுவதால்!"** [நிஜ கோவிந்தம், ப.30]

'காரண காரியம்' என்னும் தலைப்பே படிப்பவர் சிந்தனையைத் தூண்டி கவிதையின் பாடுபொருளை உணர்த்தி விடுகின்றது.

## கவிஞருடன் கூடப் பிறந்த குறும்பு

கவிஞர் மு.மேத்தா 'பொய்க்கால் குதிரைகள்' தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவது போல், 'குறும்பு - புதுக்கவிதையின் கூடப் பிறந்ததாகும்... குறும்பு - வாலியோடும் கூடப் பிறந்திருப்பதை அறிந்து நாமும் ஆனந்தம் கொள்கிறோம்" (ப.16). 'கொசுவே! உனக்குக் கோடி நமஸ்காரம்!' என்ற கவிதை இவ்வகையில் நினைவுகூரத்தக்கது. மாமியாரைக் கடித்த கொசுவிற்கு மருமகள் எழுதும் மடல் வடிவில் அக்கவிதை அமைந்துள்ளது. 'வீட்டுக்குள் பறக்கும் விமானமே!' எனக் கொசுவினை விளித்து, முன்னதாக அதற்குக் கோடி வணக்கம் சொல்லித் தொடர்கின்றது

அக்கவிதை. 'என் மாமியார் மேனி என்ன உனக்கு மீனம்பாக்கமோ? ராத்திரி நேரத்தில் அங்கு இறங்கி ரத்தச் சோறு உண்ணுகிறாயே? அது என்ன? சாமியார் ரத்தமா - சுத்தமா இருக்க?' என அடுக்கடுக்காக வினவிய மருமகள், தொடர்ந்து தன் மாமியாரைப் பற்றிக் கொசுவிடம் எடுத்துரைத்து எச்சரிக்கவும் செய்கிறாள். 'என் மாமியார் ரத்தம் அதில் கொழுப்பு அதிகம்! ஒரு கொசுவிற்கும் மாரடைப்பைக் கொடுக்க அந்தக் கொழுப்பே போதுமானது! எச்சரிக்கையாய் இரு!' முடிவாக, 'எது எப்படி இருப்பினும்...' எனத் தொடங்கி மீண்டும் கொசுவுக்குக் கோடி வணக்கம் கூறுகிறாள் மருமகள். ஏன் தெரியுமா? இதோ, மருமகளே கூறுகிறாள், கேளுங்கள்.

> **"மருமகளால்**
> **குறைக்க இயலாத**
> **மாமியாரின்**
> **கொழுப்பை –**
> **கொசுவே!**
> **நீ**
> **குறைக்கிறாய்..."**
> **[பொய்க்கால் குதிரைகள், பக்.143–144]**

அதனால் 'உனக்குக் கோடி நமஸ்காரம்!' என மகிழ்ச்சிப் பெருக்கில் நன்றியோடு கூறுகிறாள் மருமகள். இத்தகைய குறும்பான படப் பிடிப்புகள் வாலியின் படைப்புக்களில் பரக்கக் காணப்படுகின்றன.

## நெஞ்சை அள்ளும் அழகிய உவமைகளும் உருவகங்களும்

உரைநடை ஆயினும் சரி, திரைப் பாடல் ஆயினும் சரி, கவிதை ஆயினும் சரி வாலியின் மொழி ஆளுமையில் அழகிய உவமைகளும் ஆற்றல்சால் உருவகங்களும் ஆங்காங்கே அணிவகுத்து வந்திடக் காண்கிறோம்.

"ராமநாதபுரம் ஜில்லாவில் மழை பெய்வது போல் அவ்வப் போது சின்னச் சின்ன சந்தர்ப்பங்கள் கிடைத்து என் ஜீவனோபாயம் நடந்து கொண்டிருந்தது" (நானும் இந்த நூற்றாண்டும், ப.209): இது வாலியின் உரைநடையில் இடம்பெற்றிருக்கும் ஓர் அருமையான உவமை ஆகும்.

“தேனாறு பாலாறு போல வந்தா கண்ணுக்குள்ளே, தேசியக் கொடி போல குத்தி வச்சேன் நெஞ்சுக்குள்ளே” (வாலி 1000 : தொகுதி 2, ப.84) என்பது வாலியின் திரைப்பாடல் ஒன்றினை அணிசெய்யும் அற்புதமான உவமை.

“வலமாய் இடமாய்ச் சுழித்து இரண்டு, ஒன்பதை வைத்தாற் போல செவிகள்” (அம்மா, ப.50) என ஓர் இளம் பெண்ணின் செவிக்கு வாலி கையாண்டிருக்கும் உவமை புதுவது; சாலவும் பொருத்த மானது, இவ்வுவமை இடம்பெற்றிருக்கும் ‘அவளுக்கென்ன’ என்னும் கவிதை பன்னிரு அழகிய உவமைகளின் களஞ்சியமாக விளங்குகின்றது.

‘எழுத்தறிவித்தவன்’ என்பது உருவக நலம் சிறந்து விளங்கும் வாலியின் ஓர் அற்புதமான கவிதை ஆகும். ‘எழுத்தறி விக்கும் ஏழை ஆசான், அழுக்கு மனத்தை வெளுக்கும் வண்ணான்’ (அம்மா, ப.25) எனத் தொடங்கும் அக்கவிதை, தொடர்ந்து ஆசானைக் குயவனாக, தோட்டியாக, உழவனாக, கருமானாகக் காரண காரியத்தோடு உருவகப்படுத்திக் கூறுவது அருமை; சிறப்பு.

இங்ஙனம் பற்பல புத்தம் புதிய, பொருத்தமான, வித்தியாச மான உவமைகளும் உருவகங்களும் வாலியின் படைப்புக்களில் தொட்ட இடங்களில் எல்லாம் கண்ணில் தட்டுப்படுகின்றன.

## இசைப் பேரறிஞர் சுப்புடுவின் பார்வையில் வாலி

**“வால்மீகியின் வார்ப்பா?<br>
கண்ணதாசனின் கார்பன் காபியா?<br>
இரண்டுமில்லை;<br>
வாலிக்கு வேலி போட இயலாது!<br>
கற்பனை புரண்டோடும்!...<br>
வசன நடை வல்லவர்!<br>
புதிய பார்வை அவருடையது!...<br>
காவியம் படைக்கும் கைகள்;<br>
வசனம், கவிதை, நாடகம் –<br>
வளமுடன் அவர் எதிரில் நின்று –<br>
குற்றவேல் புரிகின்றன!**

**ஏழ்மையை மறக்கவில்லை,**
**ஏற்றத்தில் தலை கனக்கவில்லை!**
**ஆச்சரிய புருஷன்!"**

என்னும் இசைப் பேரறிஞர் சுப்புடுவின் வார்த்தைகள் நூற்றுக்கு நூறு உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. 'அவதார புருஷன்' தந்த இந்த 'ஆச்சரிய புருஷன்! - 'கிருஷ்ண பக்தன்' - இராமாநுசர் போல் நூற்றிருபது ஆண்டுகள் வாழ்ந்து அன்னைத் தமிழுக்கு அரணாகவும் அணியாகவும் சிறந்து விளங்க வேண்டும் என்பது இலக்கிய ஆர்வலர்கள் சீரிய எதிர்பார்ப்பு; நேரிய விருப்பமும் கூட.

## 7

# மு. மேத்தாவின் கவிப்பார்வை

> "மேத்தாவின் கவிப்பார்வை – வீட்டைத் தாண்டி,
> நாட்டைத் தாண்டி, சர்வ தேச சஞ்சாரம்
> செய்கிறது"
>
> – பாலா*

'**தீபம்**' இதழில் வெளிவந்த 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி' என்னும் கவிதையின் வாயிலாகப் புதுக்கவிதை உலகில் காலடி எடுத்து வைத்தவர் மு.மேத்தா. அவருக்கு அடையாளத்தைத் தேடித் தந்த கவிதைத் தொகுப்பு 'கண்ணீர்ப் பூக்கள்'. அதன் முதற்பதிப்பு 1974 - ஆம் ஆண்டில் வெளிவந்த்து. அதன் இருபத்தைந்தாவது பதிப்பு 'குமரன் பதிப்பக'த்தின் சார்பில் 2004 - ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது. தன்னிரக்கம் ததும்பி நிற்கும் வண்ணம் காதல் கவிதைகளைப் பாடுவது மேத்தாவின் தனித்தன்மை.

'**அரளிப் பூ அழுகிறது**' என்னும் கவிதையின் வாயிலாக முதிர் கன்னியரின் அவலத்தை முதன்முதலில் உருக்கமான மொழியில் வெளிப்படுத்தியவரும் மேத்தாவே ஆவார். அவரது '**முதல் தேதி**' என்னும் கவிதை நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கையைப் பற்றிய

---

* முற்றுப்பெறாத ஒரு முடிவுரை, மு. மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்', ப.19.

அருமையான படப்பிடிப்பு; அற்புதமான அலசல். 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள், இரண்டு பேரையும் அடித்து நொறுக்குவதற்கு அப்பன்காரனும் நோக்கினான்' என இன்றைய பட்டிமன்றங்களில் பெயர் சுட்டாமல் சொல்லப்படும் நகைச்சுவை வரிகளுக்குச் சொந்தக்காரர் மேத்தா தான்! 'இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனைத் தேர்கள், தனிமொழிச் சேனை, பண்டித பவனி இவை எதுவும் இல்லாத கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறை' (ஊர்வலம், ப.86) எனப் புதுக்கவிதைக்கு இலக்கணம் வகுத்துத் தந்த பெருமையும் மேத்தாவுக்கு உண்டு. 'கண்ணீர்ப் பூக்கள்' தொடங்கி மேத்தா இதுவரை 18 கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். **'ஆகாயத்துக்கு அடுத்த வீடு'** என்பது 2004 - ஆம் ஆண்டு வெளிவந்த அவரது கவிதைத் தொகுதி ஆகும். இத் தொகுதி கவிஞர் மு. மேத்தாவுக்கு 2006 - ஆம் ஆண்டிற்கான **சாகித்திய அகாதெமி** விருதினைப் பெற்றுத் தந்த சிறப்பினதாகும். இனி, இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைகள் வெளிப்படுத்தும் மேத்தாவின் படைப்பாற்றலும் ஆளுமைத் திறனும் குறித்துக் காண்போம்.

**கலில் ஜிப்ரானில்** இருந்து **மாக்ஸிம் கார்க்கி** வரை தாய்மைக்குப் புகழாரம் சூட்டியுள்ள படைப்பாளிகள் உலகளாவிய நிலையில் பலர் ஆவர். திரைப்பாடல் உலகிலும் காலம் காலமாகத் தாய்ப்பாசத்தின் அருமையும் பெருமையும் பேசப்பட்டு வந்துள்ளன. ஒட்டுப் பற்றற்று உலக வாழ்வை விட்டுத் துறந்த **பட்டினத்தாரையும் ஆதிசங்கரரையும்** கூடத் தாய்ப்பாசம் விட்டு வைக்கவில்லை. மு. மேத்தாவும் தம் பங்கிற்கு இத் தொகுப்பில் 'தாய்' என்னும் தலைப்பில் ஓர் அற்புதமான கவிதையைப் பாடியுள்ளார். புகைவண்டியில் பயணம் செய்யும் ஒரு மனிதன் தன் பெட்டியை மேலே வைக்கிறான். சிறிய பெட்டியைப் புகை வண்டியின் இருக்கைக்குக் கீழே இழுத்துத் தள்ளுகிறான். தோள் பையைக் கம்பியில் தொங்க விடுகிறான். கனமாய் இருக்கிறது என்று கைப்பையைக் கழற்றுகிறான். கையில் பிடித்திருந்த பத்திரிகையையைக் கூடப் பக்கத்தில் வைக்கிறான். கடைசியில் ஒரு வழியாக நெட்டி முறித்து நிமிர்கிறான். அப்போது எதிரே கண்ட காட்சி அவனுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. அக் காட்சியின் மாட்சியைக் குறித்துக் கவிஞரின்

மொழியிலேயே காண்பது நலமாக இருக்கும். தாயன்பின் தனிப்பெரும் பண்பினைப் புலப்படுத்தும் கவிஞரின் அழகிய வரிகள் இதோ:

**"எதிரே**
**இடது தோளிலும்**
**வலது தோளிலும்**
**இடுப்பிலும்**
**மாற்றி மாற்றி**
**வைத்த தன்றி**
**தன் குழந்தையைக்**
**கீழே**
**இறக்கி வைக்காத**
**தாயைப் பார்த்துத்**
**தலை குனிந்தான்!"** (ப.74)

'பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?' என்பதைக் கவிஞர் இக் கவிதையில் புலப்படுத்தி இருக்கும் பாங்கு தனித்தன்மை வாய்ந்தது.

நாட்டு நடப்பையும் சமூக அவலத்தையும் கூர்மையான மொழியில் விமர்சனம் செய்யும் கவிதைகள் இத் தொகுப்பில் நிறையவே காணப்படுகின்றன. பதச் சோறாக, 'சுவரொட்டித் தலைவர்கள்' என்ற கவிதையை இங்கே காணலாம். இன்று நாட்டில் அரசியல், ஆன்மிகம், சாதிச் சங்கம் முதலான துறைதோறும் ஏராளமான தலைவர்கள் தினமும் எழுத்தாய்ப் படமாய்ச் சுவரில் முளைக்கிறார்கள். ஆளே இல்லாத் தலைவர் ஆயினும் அலைகடலாய்த் திரண்டு வருமாறு மக்களை அழைக்கிறார்கள். இவர்களுக்கு அங்கதச் சுவையோடு கவிஞர் சூட்டி இருக்கும் சிறப்புப் பெயரே 'சுவரொட்டித் தலைவர்கள்' என்பது.

**"சுவரொட்டித் தலைவர்களை**
**நாங்கள்**
**சகிப்பதன் காரணம்**
**ஒட்டுவோர் எழுதுவோர்**
**ஒரு சிலர் பிழைக்கிறார்..."** (ப.88)

என்னும் கவிதையின் முடிப்பு வரிகள் முத்தாய்ப்பானவை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூன்றோடு நான்காவதாகச் சேர்க்கத் தக்கது '**சினிமா ஆசை**'. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள், தமிழனுக்குச் சினிமா மோகமோ வாழ்நாள் எல்லாம்! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்நாட்டில் இரண்டே இரண்டு சாதிகள் தான்!ஒன்று, வீட்டில் இருந்து சினிமா பார்க்கத் திரையரங்கிற்குச் செல்லும் சாதி; மற்றொன்று, திரையரங்கில் இருந்து சினிமா பார்த்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும் சாதி. தமிழனின் சினிமா மோகத்தைச் சாடும் வித்த்தில் மேத்தா படைத்துள்ள கவிதை '**சிறுகுறிப்பு வரைக: நெய்வேலி – டிசம்பர் 2003**' என்பது.

அக் கவிதை வருமாறு,

**"தண்ணீர் வேண்டி**
**பிரமாண்டமான**
**பேரணி...**

**நடிகர்களைக் காணக்**
**காத்துக் கிடந்த**
**கூட்டம்**
**கவலைப்பட்டது...**

**மழை வந்து**
**கெடுத்து விடுமோ**
**என்று"** (ப.32)

தண்ணீர் வேண்டி நடத்தப்படும் பிரமாண்டமான பேரணியில் கலந்து கொண்டிருக்கும் கூட்டத்தினர் கவலைப்படுவது எது குறித்து என்பதைக் கவிஞர் இங்கே நயமாகச் சாடியுள்ளார்.

'**மதிப்பீடு**' என்னும் தலைப்பில் கவிஞர் படைத்திருக்கும் சிறு கவிதை காரமும் சாரமும் மிக்கது. அக் கவிதையில் கவிஞர் சுட்டிக் காட்டி இருக்கும் அனுபவம் தனியொரு படைப்பாளிக்கு மட்டும் உரியதன்று. பெரும்பாலும் விருதுகளை வழங்குவதில் தமிழ்நாட்டில் அடிக்கடி அரங்கேறி வரும் சாபக்கேடு தான் அது!

**"எழுதிக் கொண்டிருந்தான்**
**விமர்சனங்கள் வந்தன...**
**எழுதாமல் இருந்தான்**

**விருதுகள் வந்தன!**
**கால் நடைக்குத்**
**தெரியுமா கவிதை நடை?"** [ப.91]

முத்தாய்ப்பாகக் கவிதையின் முடிவில் வெளிப்பட்டிருக்கும் கவிஞரின் சத்திய ஆவேசம் நியாயமானது; கடுமையான அங்கதக் குறிப்பைத் தன்னகத்தே கொண்டது.

கும்பகோணம் என்றதும் நம்மில் பலருக்கு 'மகாமகம்' நினைவுக்கு வரும். கவிஞர் மேத்தாவுக்கோ கொழுந்து விட்ட நெருப்பில் சிக்குண்டு பள்ளிக் குழந்தைகள் இறந்து போன கொடுமை நினைவுக்கு வந்து வாட்டுகின்றது. **'கும்பகோணத்தில் மகாவதம்'** என்ற தலைப்பில் அக்கொடுமையைக் குறித்து கவிஞர் எழுதியுள்ள கவிதையின் கடைசி வரிகள் இவை.

**"விதியின்**
**விளையாட்டு மைதானம்**
**விசித்திரமானது...**

**தமிழ்நாட்டில்**
**தண்ணீரை**
**ஒளித்து வைத்துவிட்டு**
**வெறி பிடித்த நெருப்பை**
**விளையாடச் சொல்கிறது."** [ப.75]

'கும்பகோணத்தில் மகாவதம்' - பயில்வோர் நெஞ்சை நெகிழச் செய்யும் தலைப்பு!

தன்னிரக்கம் நனி சொட்டச் சொட்டக் காதல் கவிதைகள் பாடுவதில் மேத்தாவுக்கு நிகர் மேத்தாவே ஆவார். 'குற்றப் பத்திரிகை', 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு', 'விடை பெறும் வேளை', 'கன்னி மடம்', 'இதயத்தின் தொலைபேசி' ஆகிய கவிதைகள் இவ் வகையில் சிறப்பாக்க் குறிப்பிடத்தக்கவை. எடுத்துக்காட்டாக, '**குற்றப் பத்திரிகை**' என்னும் கவிதையில் இருந்து கவிஞரின் கை வண்ணம் பளிச்சிடும் சில வரிகள் இதோ:

**"கம்பன் காவியத்தில்**
**வாலி வதை**

**கண்ணே நீ செய்வது**
**வாலிப வதை!**

**நியாய விலைக் கடையில்**
**நிற்பது போல்**
**நிற்க வைத்தாய்**
**என் ஆசைகளை...”** (பக்.8–9)

வாலி வதை - வாலிப வதை. நல்ல சொல் விளையாட்டு! இங்கே ஆசைகளின் அணி வகுப்பிற்குக் கவிஞர் கையாண்டிருக்கும் உவமை வித்தியாசமானது.

‘வித்தகக் கவிஞனின் கை பட்டால் விறகுக் கட்டையும் வீணையாகும்’ என்பதற்குக் கட்டியம் கூறும் ஒரு சிறுகவிதை இதோ:

**“எடைக்குப் போடும்போதுதான்**
**தெரிகிறது...**
**பத்திரிகைகளில்**
**படிக்காமல் விட்ட**
**பயனுள்ள பக்கங்கள்!”** (ப.13)

‘ஞானம்’ என்பது கவிஞர் இக் கவிதைக்குச் சூட்டி இருக்கும் பொருள் பொதிந்த தலைப்பு ஆகும்.

பேராசிரியர் பாலா கூறுவது போல், “மேத்தா கவிதைகளின் ரகசியம் தான் என்ன? எந்த இலக்கணப் புலவனுக்கும் வேலை வைக்காத எளிமைதான்” (கண்ணீர்ப் பூக்கள், முற்றுப் பெறாத ஒரு முடிவுரை, ப.120) இன்றைய புதுக்கவிஞர்களின் இடையே மேத்தாவுக்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தந்திருப்பதும் இந்த **அபூர்வமான எளிமை தான்!**

8

# பாலாவின் கவிதைப் பாங்கு

> "சிறந்த மொழி வளம், நல்ல ஓசைக் கட்டு,
> எளிய செறிந்த நடை, ஆழ்ந்த தத்துவ வீச்சு,
> பிசிறு தட்டாத எளிமை – இவை
> இக்கவிதைகளின் பாங்காக அமைகின்றன."
>
> – கி. நாச்சிமுத்து*

'பாலா' என உரிமையோடும் உள்ளன்போடும் இலக்கிய ஆர்வலர்களால் அழைக்கப் பெறும் இரா. பாலச்சந்திரன் அடிப்படையில் ஓர் ஆங்கிலப் பேராசிரியர். ஆனால், அவரது உள்ளமோ, 'இருந்தமிழே உன்னால் இருந்தேன்' எனத் 'தமிழ் விடு தூது' ஆசிரியர் உரைத்தது போல் எப்போதும் தமிழுக்காகத் துடித்தெழுந்து செயலாற்றுவது. பேராசிரியர், ஆய்வாளர், கவிஞர், திறனாய்வாளர், மொழிபெயர்ப்பாளர், ஒருங்கிணைப்பாளர் என்றாற் போல் பல்வேறு பரிமாணங்களால் உருவானது பாலாவின் ஆளுமை.

பாலாவை ஈன்று புறந்தந்தது சிவகங்கைச் சீமை; சான்றோன் ஆக்கியது காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரி; பாலாவின் ஆளுமை உருவாக்கதில் பெரும்பங்கு பெற்றது புதுக்கோட்டை மன்னர் கல்லூரி. நிறைவாகப் பாலாவைப் பணி கொண்டது

---

* கருத்துரை, பாலாவின் 'இன்னொரு மனிதர்கள்', ப.11.

திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம். தற்போது அவரைச் சிக்கனெப் பிடித்துக் கொண்டிருப்பது சாகித்திய அகாதெமி, '**புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை**' பாலாவின் திறனாய்வுத் திறத்திற்குக் கட்டியம் கூறும் நூல்; அருமையும் எளிமையும் அழகும் கலந்த நடையில் பாலா படைத்துத் தந்திருக்கும் நூல். 'சர்ரியலிஸம்'. மைதிலி மொழிக் கவிஞரான **வித்யாபதியின் காதல் கவிதைகள்** பாலாவின் கை வண்ணத்தில் தமிழில் வெளிவந்துள்ளன.

'**தாய்**' இதழில் பாலா வாரந்தோறும் எழுதிய சுவையான குறுங்கட்டுரைகள் 'கவிதைப் பக்கம்' என்னும் பெயரில் நூல் வடிவில் வெளிவந்துள்ளன. 'பாரதியும் கீட்சும்' பற்றித் திருச்சி வானொலியில் பாலா ஆற்றிய உரை பின்னாளில் ஒப்பாய்வு நூலாக உருப்பெற்றது. 'முன்னுரையும் பின்னுரையும்' என்பது கவிஞர்கள் பலரது தொகுதி களுக்குப் பாலா வழங்கிய அணிந்துரைகளின் தொகுப்பு ஆகும். தொடக்க நாளில் '**தமிழ் இலக்கிய விமர்சகர்கள்**' என்னும் பெயரில் ஒரு தொகுப்பு நூலையும் பாலா வெளியிட்டுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, 'இன்னொரு மனிதர்கள்', 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' என்னும் இரண்டும், பாலாவைக் கவிஞராக அடையாளம் காட்டும் நூல்கள் ஆகும். இவற்றுள் முன்னது 'புதூஉக் கவிதைகள்' என்னும் குறிப்புடன் 1991-ஆம் ஆண்டில் வெளிவந்தது. பின்னது 'நவகவிதைத் தொகுதி' என்னும் அறிமுகத்துடன் 1999-ஆம் ஆண்டில் வெளிவந்த்து. இனி, கவிஞர் என்ற நிலையில் பாலாவின் ஆளுமையில் சுடர் விட்டு நிற்கும் ஒருசில பண்புகளைக் குறித்துக் காண்போம்.

பாலாவின் கவிதைகள் பலவற்றில் வெளிப்படும் அவரது பார்வைப் புலம் தமிழுக்குப் புதியது. கவிதைக்கு உடனடியான வாசகர்களைப் பெற்றுத் தரும் அன்றாட அரசியல், பகடி, சமத்காரங்கள் ஆகியவற்றிற்கு அவர் ஒருபோதும் முதன்மை தருவதில்லை. மாறாக, அவரது கவிதைகள் யாவும் நம் நிகழ்கால வாழ்வின் சிறுமைகள், திருகல்கள், வழுக்கல்கள், மனித மனோபாவ விசித்திரங்கள் ஆகியவற்றையே தொட்டுக் காட்டுகின்றன; துலக்கியும் காட்டுகின்றன! உள்ளங்கவர் உதாரணம் ஒன்று இதோ:

"வணக்கம் என்பார்
வணங்க மாட்டார்
நலம் பார்த்தறியார்
நலமென்றெழுதுவார்
பொதுவான பொய்களில்
பொலிகிறது வாழ்க்கை"

[இன்னொரு மனிதர்கள்.ப.52]

'வாழ்க்கை' என்னும் தலைப்பில் பாலா தீட்டியிருக்கும் குறுங்கவிதை இது. நினைப்பது ஒன்று, பேசுவது இன்னொன்று, செய்வது பிறிதொன்றாகப் பொய்யான வாழ்க்கை வாழ்ந்து வரும் இன்றைய மனிதனின் போக்கை இக் கவிதை தனக்கே உரிய பாங்கில் தோலுரித்துக் காட்டுகின்றது.

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர், தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே" என்பது கம்பராமாயணக் கடவுள் வணக்கப் பாடல். புகழ் பெற்ற இப் பாடலைப் '**பற்று**' என்ற கவிதையில் பாலா இன்றைய சமூகத்தின் - மனித மனத்தின் - நோக்கையும் போக்கையும் விமர்சனம் செய்வதற்கு நன்கு பயன் படுத்திக் கொண்டுள்ளார். கவிஞரின் பார்வையில், "அன்னவர்க்கே சரண் என்பது எல்லோர்க்கும் பொது; ஆர் தலைவர் என்பதில் தான், இங்கு சச்சரவு". மனிதர்களில் எத்தனை விதம்! அவர் போற்றும் தலைவர்களும் தான் எத்தனை எத்தனை விதம்! 'கடவுள்' என்கின்றார் சிலர்; 'இயற்கை' என்கின்றார் இன்னும் சிலர்; 'மனிதர்' என்கின்றார் வேறு சிலர். 'இறந்த மனிதர்' என்கின்றார் சிலர். 'இருக்கும் மனிதர் இருக்கும் வரை' என்கின்றார் ஒரு சிலர்; 'இருந்த மனிதர் சிலையாய் இருந்த வரை' என்கின்றார் மற்றும் சிலர்; 'இருந்த மனிதர் இருந்த இடம் தான்' என்கின்றார் வேறு சிலர்; 'இருந்த மனிதர் இருந்த இடத்தில், இன்று இருக்கும் மனிதர்' என்கின்றனர் முடிவாகச் சிலர். உண்மையில் மதிப்பு யாருக்கு? இடத்திற்கா? மனிதருக்கா? உலகம் மதிப்பது யாரை? இருக்கும் மனிதரையா? இறந்த மனிதரையா? இல்லை, அவரது சிலையையா? பதவியையா? - இவ்வளவு சிந்தனை அலைகளையும் படிப்பவர் நெஞ்சில் எழுப்பும் இக் கவிதை முத்தாய்ப்பாக இப்படி நிறைவடைகிறது:

**“மற்ற படிக்கு**
**அன்னவர்க்கே சரண் என்பது**
**இங்கு எல்லோர்க்கும் பொது**
**ஆர் தலைவர் என்பதில் தான்**
**இங்கு சச்சரவு”**

**[இன்னொரு மனிதர்கள், ப.30]**

‘அன்னவர்க்கே சரண்’ என்பதில் இங்கே ஒரு பிரச்சினையும் இல்லை; எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ‘ஆர் தலைவர்’ என்பதில் தான் எல்லாச் சண்டையும் சச்சரவும்! பாலாவின் முத்திரைக் கவிதை இது எனலாம்.

“தமிழ்க் கவிதையியலைக் கூர்ந்து நோக்கும் போது தமிழ்க் கவிதை எப்போதும் பேச்சாகத் தான் இருந்து வந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. கம்பன், வள்ளுவர், இளங்கோ, பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் என்று எல்லோருடைய கவிதைகளிலும் தூக்கலாக இருப்பது பேச்சுத் தான். எனக்கென்னவோ மேற்கின் மௌனம், கிழக்கின் பேச்சை வெற்றி கொள்ள இயலவில்லை... நான் ‘பேச்சு தான் கவிதை’ என்று நினைக்கிறவன்” (ப.8) எனத் ‘திண்ணை களும் வரவேற்பறைகளும்’ தொகுப்பிற்கு எழுதிய ‘என்னுரை’யில் குறிப்பிட்டுள்ளார் பாலா. அவரது ‘புன்னகை நூற்றாண்டு’ என்னும் கவிதை இவ் வகையில் மனங்கொளத்தக்கது.

**“இரு....இரு...**
**இயல்பாய் இராதே!**
**அழகாய் இரு”**

எனத் தொடங்குகிறது கவிதை. தொடர்ந்து அக் கவிதை எது நடந்தாலும், கோபமே கொள்ளாமல், எப்போதும் பணிவுடன்-வணக்கங்களுடன் - புன்னகை செய்யுமாறு இந் நூற்றாண்டு மனிதனுக்கு அறிவுறுத்துகின்றது. செய்தி வாசிப்பவர் போல்-தொலைக்காட்சிப் பெண்டிர் போல் - கைதாகும் முன்னும் பின்னும் பளிச்சென்ற புன்னகை அவிழ்த்துக் கையசைத்தவாறே செல்லும் பிரமுகர்கள், கொலைஞர்கள், போக்கிரிகள் போல் - எப்போதும் புன்னகை புரியுமாறு வலியுறுத்துகிறது.

"புதிய நாகரிகம் வழங்கிய
மனித இலச்சினை புன்னகை!
எனவே எப்போதும்
புன்னகை உடுத்து!
மன அழுத்தமா? மாத்திரை சாப்பிடு.
தியான வகுப்புக்குப் போ.
எது நடந்தாலும்
புன்னகை பழகு, புது உலகு உனது"
[திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.17]

'இதுவே புதிய நூற்றாண்டு மனிதனின் வெற்றி மந்திரம்' என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லி முடிவடைகிறது கவிதை.

அன்று வீடுகள் தோறும் வீதி பார்த்துத் திண்ணைகள் கிடந்தன- அது ஓர் அழகிய நிலாக் காலம் ! இன்று திண்ணைகள் இடித்துத் திருக்கோலமாய் வரவேற்பறைகள் வந்துவிட்டன- ஆனால் அன்பும் மனிதமும் ஒரேயடியாக விடைபெற்றுச் சென்றுவிட்டன! கவிஞர் பாலா 'திண்ணைகளும் வரவேற்பறைகளும்' கவிதையின் முடிவில் குறிப்பிடுவது போல்,

"நம் உள்வெளி நாகரிகத்தில்
வாழ்க்கை அலங்காரமாகி விட்டது!
மனிதம் தான் ரூளியாகிவிட்டது!"
[திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.14]

"எள்ளல், பகடி - என் கவிதை உத்திகள்; மனிதம், அன்பு - என் இலட்சியம்" ('என்னுரை', திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.9) என்பது கவிஞர் என்ற முறையில் பாலா தரும் ஒப்புதல் வாக்கு மூலம். அவரது கவிதை மொழி வித்தியாசமானது; நுட்பங்களும் திட்பங்களும் தன்னகத்தே கொண்டு விளங்குவது, புத்தம் புதிய உவமைகளும் உருவகங்களும் சொல்லாட்சிகளும் படிமங்களும் பொருந்தியது. பதச்சோறு ஒன்று: "வயோதிகத்தில் கருவுற்ற மாது போல, பாவமாய் (பட்ட) மரம்" (இன்னொரு மனிதர்கள், ப.27)

"மண் ஓர் அதிசயம்!
விழுந்தால் பிறப்பு
வீழ்ந்தால் இறப்பு – இடையே

**அதனைத் தொட்டுக் கொண்டே**
**வாழ்வது தான் வாழ்க்கை"**
**[திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.36]**

என 'மண்' என்னும் தலைப்பில் படைத்த கவிதையில் மண்ணின் பெருமையைப் பேசுவார் பாலா.

'தன வணிகம்' என்னும் தலைப்பில் பாலா படைத்துள்ள கவிதை 'கல்வி சிறந்த (இன்றைய) தமிழ்நாடு' பற்றிய அப்பட்டமான பதிவு; படப்பிடிப்பு. இன்று 'வீதிகள் தோறும் கல்விக் கோயில்கள்' காணப்படுகின்றனவாம்; ஆனால், 'வீதிகள் தாம் வேறு வேறாம்'. செல்வம் கீறிய கோடுகளில் கல்வி தேவதை நடக்கிறாளாம்; சரஸ்வதி ராஜாங்கத்தில் இலட்சுமியின் கொடி பறக்கிறதாம். சாதிகள் சொல்லி சதவிகிதம் காட்டி மறுக்கப்படும் கல்வி ஒரு புறம்! ஏழைச் சாதி என்பதால் எட்டாமல் கிடக்கும் கல்வி ஒரு புறம்!

**"தனியார் மயமாகட்டும்**
**கல்வி!**
**தனிவணிகமாக வேண்டாமே!"**
**[திண்ணைகளும் வரவேற்பறைகளும், பக்.58–60]**

என அக்கவிதையை முத்தாய்ப்பாக முடித்து வைப்பார் பாலா.

நிறைவாக, பேராசிரியர் **கி. நாச்சிமுத்து**வின் சொற்களில் சுட்ட வேண்டும் என்றால், "இக் கவிதைகளில் மனங்கவரும் மண்வாசனை வீசுகிறது. வெளிநாட்டு செண்ட் மணம் வீசவில்லை. இது இக் கவிதை களை அசலான தமிழ்க் கவிதைகளாக்குகின்றது" (கருத்துரை, பாலாவின் 'இன்னொரு மனிதர்கள்', ப.11). கவிஞர் மு. மேத்தா குறிப்பிடுவது போல்,

"பாலா –
**விமர்சகர்களில் ஒரு தராசு முள்!**
**கவிஞர்களில் ஒரு நவகவிஞன்!**
**மனிதர்களில் ஒரு மாமனிதன்!"**
**['முன்னுரை', திண்ணைகளும் வரவேற்பறைகளும், ப.6]**



# 9

# ‘தனித்தன்மைக் கவிஞர்’ தாராபாரதி

> “தலைசிறந்த கவிஞரிவர் என்ப தாலும்,
> சாதிக்கும் திறனுடையார் என்ப தாலும்,
> நிலைத்தபுகழ் இக்கவிஞர் பெறுவார்; வெள்ளி
> நிலாஉலகும் பாராட்டும் எதிர்கா லத்தில்!”
>
> – சுரதா*

சீரிய காப்பியங்களைப் படைத்துப் புகழேணியின் உச்சிக்குச் சென்ற கவிஞர்கள் உண்டு; நல்ல புனைகதைகளை எழுதி நிலைத்த புகழைச் சொந்தமாக்கிக் கொண்ட படைப்பாளிகள் உண்டு; தரமான நாடகங்களைத் தந்து தடம் பதித்த எழுத்தாளர்கள் உண்டு; தேர்ந்த உரைநடை நூல்கள் வாயிலாகத் தம் தனித்தன்மையை உலகிற்குக் காட்டிய சான்றோர்கள் உண்டு. ஆயின், நீண்ட நெடிய தமிழ் இலக்கியப் பரப்பில் தங்களது குறுகத் தறித்த வைர வரிகளாலேயே மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்ட புலவர் பெருமக்கள் சிலரே ஆவர். சங்கச் சான்றோர்கள், திருவள்ளுவர், திருமூலர், திருநாவுக்கரசர், ஔவையார், பாரதியார், மு. வரதராசனார், திரு.வி. கலியாணசுந்தரனார், அண்ணா ஆகியோர் இவ்வகையில் சிறப்பாக நினைவுகூரத் தக்கவர்கள். அண்மைக் காலத்தில் இவ்வரிசையில் இடம்பெறும் பீடுடைய கவிஞர் பெருமகன் தாராபாரதி (1947-2000).

---

* கவிஞாயிறு தாராபாரதி கவிதைகள், ப.9.

**"வெறுங்கை என்பது மூடத்தனம் – உன்**
**விரல்கள் பத்தும் மூலதனம்"**

**[இது எங்கள் கிழக்கு, ப.33]**

என்னும் எழுச்சி மிகு இரு வரிகளே போதும், தாராபாரதியின் ஆளுமைப் பண்பினை அடையாளம் காட்ட. இத்தகைய நூற்றுக்கணக்கான வைர வரிகள் – மணிமொழிகள் – மந்திரச் சொற்கள் – தன்னம்பிக்கைச் சிந்தனைகள் தாராபாரதியின் கவிதைகளில் மண்டிக் கிடக்கின்றன.

'இலக்கிய வீதி' இனியவன் குறிப்பிடுவது போல, ''கவிஞாயிறு தாராபாரதி மரபுக் கவிதைக்கு ஒரு மகத்தான சொத்து. எட்டயபுரத்துக் கவிஞன் விட்டு வைத்த மையின் மிச்சத்தை, தன் எழுதுகோலில் நிரப்பிக்கொண்டு எழுதியவர்... பூவின் மென்மை, நெருப்பின் தகிப்பு, வைரததின் ஒளி ஆகிய முப்பரிமாணம் கொண்டன இவர் கவிதைகள்.''

தமிழின் பெருமையைப் பல்லாற்றானும் பறைசாற்றித் தமிழனைத் தலைநிமிரச் செய்வதையே தம் எழுத்தின் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தவர் தாராபாரதி. 'சுட்டுவிரல் நீ சுருங்குவதா?' என்னும் அவரது கவிதையின் எடுப்பான தொடக்க வரிகள் இதோ:

**"நிமிர்வாய் தமிழா, எழுவாய் – அட**
**நீதான் உலகின் எழுவாய்"**

**[தாராபாரதி கவிதைகள், ப.16]**

'எழுவாய்' என்ற சொல்லை இங்கே இரண்டு முறை இருவேறு பொருளினைத் தரும் வகையில் கையாண்டிருப்பது கவிஞரின் சதுரப்பாடு. ஒரு வாக்கியத்தில் எழுவாய் பெறும் இடத்தை வாழ்க்கையில் தமிழன் பெறவேண்டும் என்பது கவிஞரின் எதிர்பார்ப்பு; ஏக்கம். ஆட்சியில் – அலுவலகக் கோப்பில் – கல்வியில் – கோயிலில் – குழந்தையின் நாக்கில் – தமிழன் வாயில் – நீதிமன்றத் தீர்ப்பில் – அன்னைத் தமிழே தலைமை இடத்தைப் பெற வேண்டும் என்னும் தம் வேட்கையைத் தாராபாரதி பல இடங்களில் வலியுறுத்திப் பாடியுள்ளார். அவரது கருத்தியலில், '**உலக மொழி அத்தனைக்கும்**

**ஊற்றுமொழி தமிழ் தான்! வேற்றுமொழி அனைத்துக்கும் விதை மொழியே தமிழ்தான்!'** (*தாராபாரதி கவிதைகள், ப.18*).

இன்றைய இளந்தமிழனுக்குக் கவிஞர் தாராபாரதி கூறும் அறிவுரை - அனுபவ உரை - இன்றியமையாதது. **'நேச மனங்களை நெசவு செய்!'** என்னும் கவிதை இவ்வகையில் மனங்கொளத்தக்கது. சிக்கல்களை விரட்டியடித்து, பிரிவினைகளைத் துரத்தியடித்து, பூசல்களை அறவே நீக்கி, சூழ்ந்துள்ள திசைகளை எல்லாம் சுற்றமாகத் தழுவிக்கொண்டு நேச மனங்களை எல்லாம் நெசவு செய்யப் புறப்படுமாறு இளந்தமிழனுக்கு அறிவுறுத்துகிறார் கவிஞர்.

**"கிழக்கோடு கைகுலுக்கு;**
**மேற்கோடு புன்னகைசெய்!**
**வடக்கோடு சேர்ந்துநட;**
**தெற்கோடு கூடிஉண்!"**

[தாராபாரதி கவிதைகள், ப.24]

என்னும் கவிஞரின் வாக்கு இன்றைய இளைய தலைமுறை தன் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பொறித்து வைத்துக் கொள்ள வேண்டிய நல்லதொரு வாழ்க்கை நெறி ஆகும்.

கவிதை உலகில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தினால், பாரதியார், கண்ணதாசன் ஆகிய இருவருக்கும் பிறகு இருபதாம் நூற்றாண்டில் மனிதர்களின் மன வயல்களில் நம்பிக்கை நாற்றுகளை மிகுந்த அளவில் நடவு செய்த கவிஞராகத் தாராபாரதியே இருப்பார். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. 'பொன்மலி பாடலி' என்பது போல் அவரது கவிதைகளில் தொட்ட இடம் எல்லாம் கண்ணில் தட்டுப்படுவன நம்பிக்கை மொழகளே ஆகும். உள்ளங்கவர் உதாரணங்கள் சில வருமாறு:

**"நம்பிக்கை வந்தால் போதும்**
**நம்கைகள் வானை மோதும்"**

[தாராபாரதி கவிதைகள், ப.35]

**"வெற்றியை எட்டும் நோக்கம் இருந்தால்**
**ஒற்றைச் சிறகிலும் பறக்கலாம்! உன்னைத்**

தொற்றிய சோம்பலைத் தூக்கி எறிந்தால்
தோள்களில் பூமியை நிறுத்தலாம்!"
[தாராபாரதி கவிதைகள், ப.37]

"புது வேகத்தோடு - நீ
புறப்படு - உன் உள்ளங்கை
விதிரேகை என்பதை
விஞ்ஞான ரேகையாக்கு?"
[இது எங்கள் கிழக்கு, ப.25]

"பூமிப் பந்து என்னவிலை? - உன்
புகழைத் தந்து வாங்கும் விலை."
[இது எங்கள் கிழக்கு, ப.128]

'புதியதோர் உலகு செய்யும் பூமியின் அச்சு நீங்கள்' என்பது இளைய பாரதத்திற்குக் கவிஞர் சூட்டும் புகழாரம். மேலும் அவரது நோக்கில், '**இளைஞர்கள் - நிகழ்கால உலகுக்கு நெம்புகோல் ஆனவர்கள்**'. இதுவரை 'உணர்ச்சித் தமிழ'னாய் வாழ்ந்தது போதும். இனி '**அறிவியல் தமிழ'னாய் அவதாரம் எடுக்க வேண்டும்** என்பதே இன்றைய சூழலில் இளைய தலைமுறையினருக்குக் கவிஞர் விடுக்கும் செய்தி (Message) ஆகும்.

ஆத்திசூடி, திருப்பள்ளியெழுச்சி, நான்மணி மாலை, பஞ்சகம், பள்ளு, கும்மி என எத்தனையோ சிற்றிலக்கிய வகைகளை - வடிவங்களை - எல்லாம் கையாண்ட பாரதி, தாலாட்டை மட்டும் மருந்துக்குக் கூடப் பாடவில்லை; 'முண்டாசு கட்டிய முறுக்கு மீசைப் புலவன்' வழி வந்த தாராபாரதியோ '**தாலாட்டில் ஒரு பள்ளியெழுச்சி!**' பாடியுள்ளார். "ஆராரோ பாட்டெடுத்து, அன்னை நான் பாடவில்லை; தீராத தூக்கமென்ன? தேனே கண் விழிப்பாய். இளந்தளிரே, பூவே! இப்போது உறங்காதே! வளர்ந்தபின் தூங்குதற்கு, வசதிகள் கிடைக்குமடா!.. வாவா... விளையாடு; வாசலிலே போயாடு! பூவே... விழிப்போடு, பொழுதுக்கும் நடைபோடு!" (இது எங்கள் கிழக்கு, பக்.139-141) எனக் குழந்தைக்குத் 'தாலாட்டில் பள்ளியெழுச்சி' பாடியுள்ளார் கவிஞர்.

கவிஞாயிறு தாராபாரதியின் எழுதுகோலுக்கு,

**"நான்மறையைக் கற்றவனா ஞானி?**
**தன்னுள்**
**'நான்' - மறையக் கற்றவனே ஞானி யாவான்"**
**[இது எங்கள் கிழக்கு, ப.155]**

என இரத்தினச் சுருக்கமாகப் பாடவும் வருகிறது.

**"நிற்கும் இவனொரு கட்சிக்குள்; இவன்**
**நிழலோ வேறொரு கட்சிக்குள்"**
**[இது எங்கள் கிழக்கு, ப.79]**

என இன்றைய அரசியல் அவலத்தைத் துணிவோடு சாடவும் தெரிகிறது.

"மண்ணெண் ணெய்க்குப் 'பெண்ணெண் ணெய்' என
மற்றொரு பெயருண்டா?
மருமக ளுக்கு 'எரிபொருள்' என்றொரு
மாற்றுப் பொருளுண்டா?"
**[இது எங்கள் கிழக்கு, ப.49]**

என மெல்லினமான பெண்ணினத்திற்காகப் பரிவோடு குரல் கொடுக்கவும் முடிகிறது.

முத்தாய்ப்பாக, தாராபாரதி தம் கவிதைப் படைப்புக்களின் வாயிலாக,

**"'இது எங்கள் கிழக்கு' - இதை**
**எழுச்சியுடன் முழக்கு!" [இது எங்கள் கிழக்கு, ப.22]**

என உலகிற்கு அறைகூவல் விடுக்கவும்,

**"எழுந்தால் கொடிமரம்**
**விழுந்தால் அடியுரம்**
**இதுதான் தமிழன் எனக் காட்டு"**
**[இது எங்கள் கிழக்கு, ப.23]**

எனத் தமிழினத்திற்கு நல்ல வண்ணம் வழிகாட்டவும் தவறவில்லை.

தாராபாரதியே தம் கவிதை ஒன்றில் பாடியுள்ள பொருள் பொதிந்த வரிகள் இவை:

“என்றைக்கும் மாறி டாமல்
எழுந்தநாள் கொள்கை யோடு
இன்றைக்கும் இருக்கின் றார்கள்
‘இலட்சியக் கவிஞர்’ சிலபேர்!

இனமானம் காத்து நிற்கும்
எழுவானச் சுடர்கள்; இந்தத்
‘தனித்தன்மைக் கவிஞர்’களை நான்
தலைமீது தாங்கிக் கொள்வேன்!”

[இது எங்கள் கிழக்கு, ப.117]

இங்ஙனம் பாடியதோடு நில்லாமல் தாமே வாழ்நாளின் இறுதி மூச்சு வரை வாழ்ந்தும் காட்டிய ‘இலட்சியக் கவிஞர்’ – ‘தனித்தன்மைக் கவிஞர்’ தாராபாரதி. அவர் காலத்தை வென்று தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்பார்.



# 10

# ‘கந்தகக் கவிஞர்’ கந்தர்வன்

> “கந்தர்வன் எந்த வர்க்கத்தின் இசையை இசைக்கிறார் என்று ஒவ்வொரு வரிகளும் ஒளிவு மறைவின்றித் தெரிவித்து விடுகின்றன அதன் சுருதியிலேயே.”
>
> – சந்தியா நடராஜன்*

**“புரட்சி என்பது**
**பிள்ளை பிடிப்பது போல்**
**கொடுமையல்ல**
**பிள்ளை பெறுவது போல்**
**புனிதமானது”**

**[கந்தர்வன் கவிதைகள், ப.19]**

எனப் புரட்சிக்குப் பூபாளம் பாடிய முற்போக்கு எழுத்தாளர் கந்தர்வன். அவர் வீரியமும் வீச்சும் மிக்க படைப்பாளி; நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட போராளி; ஒரே சமயத்தில் கவிதை, கதை என்னும் இரு இலக்கிய வடிவங்களிலும் திறம்பட உலா வந்த எழுத்தாளர். தமிழ்ப் புதுக்கவிதை உலகில் ‘ஊசிகள்’ தந்த மீராவுக்குப் பிறகு அங்கதத்தை ஆற்றலோடு கையாண்ட கவிஞர்களிலே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கந்தர்வன்.

---

* பதிப்புரை, கந்தர்வன் கவிதைகள், ப.5.

சென்னை சந்தியா பதிப்பகத்தார் ‘**கிழிசல்கள்**’, ‘**சிறைகள்**’, ‘**மீசைகள்**’ என்னும் தலைப்புக்களில் கந்தர்வன் வெளியிட்ட மூன்று தொகுதிகளையும் ‘**கந்தர்வன் கவிதைகள்**’ என்னும் பெயரில் முழு வடிவில் ஒரே தொகுதியாக வெளியிட்டுள்ளனர். 2002-ஆம் ஆண்டில் வெளிவந்த இத் தொகுப்பு தோழர் ஏ. நல்லசிவன் அவர்களுக்குக் காணிக்கையாக்கப் பெற்றுள்ளது.

அரசியல் அவலங்களையும் சமூகக் கொடுமைகளையும் அங்கதச் சுவையுடன் சாடுவதில் கவிஞர் மீராவைப் போல் தனித்தன்மையுடன் விளங்குகிறர் கந்தர்வன். தொல்காப்பியர் சுட்டிய செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என்னும் இரண்டனுள் ‘வெட்டு ஒன்று துண்டு இரண்டு’ என்றாற் போல் நேரடியாகச் சாடும் செம்பொருள் அங்கதமே கந்தர்வன் கவிதைகளிலே தூக்கலாகக் காணப்படுகின்றது. சான்றாக,

**“விதம் விதமாய்**
**மீசை வைத்தோம்**
**வீரத்தை எங்கேயோ**
**தொலைத்து விட்டோம்”**

என்பது நடிப்புச் சுதேசிகளுக்கு - வாய்ச் சொல் வீரர்களுக்கு - கந்தர்வன் தந்திருக்கும் சாட்டையடி! இதே போல்,

**“எல்லாம் கிழிந்த**
**எங்கள் தேசத்தில்**
**வாய் கிழிவது மட்டும்**
**வகை வகையாயிருக்கும்”** (ப.9)

என்னும் வரிகளில் வெளிப்படும் அங்கதச் சுவையும் காட்டமானது!

பன்னிரு ஆழ்வார்களுள் ஒரே பெண்மணியான **ஆண்டாளை** இதுவரை நமக்குச் ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’யாகவே தெரியும். ஆனால் கந்தர்வனோ ஒரு வித்தியாசமான கோணத்தில் ஆண்டாளை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். ‘ஆண்டாளும் ஆண்டாரும்’ என்னும் தலைப்பில் அவர் படைத்துள்ள கவிதை இதோ:

“ஆண்டாள் போட்டு
ஆரம்பித்து வைத்த
ஆளுயர மாலைகளை இன்று வரை
ஆண்டார் ஆள்வோர்
கழுத்துக்களை விட்டுக்
கழற்றவே முடியவில்லை” (ப.63)

‘ஆளுயர மாலை போடுவது’ என்னும் ‘கலாசார’த்தை – வழக்கத்தை – தொடங்கி வைத்தவரே ஆண்டாள் தானாம்! அது மட்டுமல்ல, இன்று வரை அப்படி ஆண்டார் ஆள்வோர் கழுத்துக் களில் போட்ட மாலைகளைக் கழற்றவே முடியவில்லையாம்! சம காலப் போக்கை விமர்சனம் செய்யத் தொன்மத்தை இங்கே அழகுறப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கந்தர்வன்.

தேசப் பிதா காந்தியடிகள் மூன்று குரங்கு பொம்மைகள் வைத்திருந்தார். ஒன்று, கண்களை மூடிக் கொண்டிருக்கும், இன்னொன்று, காதுகளைப் பொத்திக் கொண்டிருக்கும், மற்றொன்று, வாயை மூடிக் கொண்டிருக்கும். கண் முன்னே நடக்கும் தீமைகளின் நடுவில் கண் பொத்திக் கொண்டு இருக்கலாமா? காது பொத்தி அமைதியாக அமர்ந்திருக்கலாமா? தீயவை நடக்கையில் திருவிளையாடல் பெருகுகையில் கண்டிக்க எழ வேண்டாமா? குரல் எழுப்ப வேண்டாமா? காந்தியடிகளுக்கு மாறாக, கந்தர்வன் நான்கு பொம்மைகளை இந்திய மக்களுக்கு இதோபதேசம் செய்யும் விதத்தில் படைத்துக் காட்டுகின்றார். இதோ அப்பொம்மைகளைக் குறித்து அவரே கூறுகிறார். கேட்போம்:

“நாம்
நான்கு பொம்மைகள்
தருவோம்

ஒன்று தீயதைப் பார்க்கும்
கண்கள் தீயாய்ச் சிவக்கும்

ஒன்று தீயதைக் கேட்கும்
காது சீறிப் புடைக்கும்

**தீயதைக் கண்டித்து ஒன்று**
**தீவிரமாய்ப் பேசும்**

**நான்காவது பொம்மை**
**தீயதைப் பிடிக்கும் –**
**பொசுக்கும்"** (பக்.251–252)

– 'கந்தகக் கவிஞர் கந்தர்வன்' என்பதற்குக் கட்டியம் கூறும் கவிதை இது.

பைந்தமிழ்த் தேர்ப் பாகன் பாரதியின் வழியில் பெண்களுக்காகக் குரல் கொடுக்கவும் தவறவில்லை கந்தர்வன். 'கொள்ளைகள்', 'விலங்குகள்' என்னும் இரு கவிதைகள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. வெளிப்பார்வைக்கு ஒரு பெண் தன் உடல் உறுப்புக்களில் அணிந்திருப்பவை அணிகள் போலத் தோன்றும். ஆனால், உண்மையில் அவை அவள் மீது போடப்பட்டிருக்கும் விலங்குகள் தான். 'விலங்குகள்' என்னும் தலைப்பில் கந்தர்வன் படைத்துள்ள உணர்ச்சி மிகு கவிதை இதோ:

**"தலையில் பூ விலங்கு**
**கையில் பொன் விலங்கு**
**காலில் வெள்ளி விலங்கு**
**சுவாசத் தடைக்கு**
**மூக்கில் கல் விலங்கு**
**ஒவ்வொரு மூச்சிலும்**
**அவள்**
**விலங்குகளை நுகர்கிறாள்"** (ப.200)

இன்று பெண்ணின் மீது போடப்பட்டிருக்கும் விலங்குகள் தான் எத்தனை எத்தனை!

'கொள்ளைகள்' என்ற கவிதையில் வரதட்சணைக் கொடுமையைத் தமக்கே உரிய தனிப்பாங்கில் சாடியுள்ளார் கந்தர்வன். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதெல்லாம் பழைய கதையாம்! திருமணங்கள் வரதட்சணையாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன – இது புதிய கதையாம்! (ப.17).

நிச்சயிக்கப்படுகின்றன, நிர்ணயிக்கப்படுகின்றன - எவ்வளவு நுட்பமாகக் கவிஞர் இங்கே சொற்களைக் கையாண்டிருக்கிறார் பாருங்கள்!

எதையும் நச்சென்றும் நறுக்கென்றும் பளிச்சென்றும் சுரீரென்றும் கூறுவதில் கந்தர்வன் கை தேர்ந்தவராக விளங்குகின்றார். அவரால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவும் முடிகின்றது; சுருக்கென்று சொல்லி நெஞ்சைக் கொள்ளை கொள்ளவும் அவருக்குத் தெரிகின்றது.

**"ஆண் பிறந்தால்**
**அட்சய பாத்திரம்**
**பெண் பிறந்தால்**
**பிச்சைப் பாத்திரம்"** (ப.16)

– 'வளையல் விலங்குகள்' என்னும் கவிதையில் இடம் பெற்றிருக்கும் நறுக்கு மொழி இது!

**"சுதந்திரத்திற்கு முன்னால்**
**சுதந்திரம் என் பிறப்புரிமை**
**சுதந்திரத்திற்குப் பின்னால்**
**சுரண்டல் என் பிறப்புரிமை"** (ப.21)

– 'முன்னும் பின்னும்' என்னும் தலைப்பில் கந்தர்வன் படைத்திருக்கும் கடுகுக் கவிதை இது!

**"கோபம் என்பது**
**யாருக்கு வந்தது**
**மீசை என்பது**
**பேருக்கு இருந்தது"** (ப.88)

– ஆண்மையின் அடையாளமான மீசையைப் பற்றிய கந்தர்வனின் சுரீரென்ற சாடல் இது!

இலக்கிய ஆர்வலர்களால் '**தாயணி**' எனச் சிறப்பித்துப் பேசப்படும் உவமையைக் கந்தர்வன் கையாண்டிருக்கும் பாணி தனித்தன்மை வாய்ந்தது. அவரது உவமைகள் அழகியல், பொருள்

புலப்பாடு என்னும் மரபு வடிவிலான எல்லைகளைத் தாண்டி, அவரது ஆளுமைப் பண்பை அடையாளம் காட்ட வல்லவையாக விளங்குகின்றன. அவர் உயிரெனப் போற்றும் கொள்கையைப் பறைசாற்றுவனவாகவும் திகழ்கின்றன. ஓர் எடுத்துக்காட்டு இதோ:

**"எங்கள் ஊரில் நெல்லுச்சோறு**
**இந்தியாவில்**
**தாஜ்மகாலைப் போல"** (ப.12)

– அதிசயம் - ஆனால் உண்மை! உண்மை சுடும் என்பது மெய் தானே?

**"ஜனநாயகம் நடக்கவில்லை**
**சமஸ்தானம் நடக்கிறது**
**சர்க்கஸ் நடப்பது போல்**
**சர்க்கார் நடக்கிறது"** (ப.115)

– சிதறு தேங்காயைப் போல் நாட்டு நடப்பைத் தோலுரித்துக் காட்டக் கந்தர்வன் கையாண்டிருக்கும் நயமான உவமை இது!

**"ஊர் மேல்**
**வகிடெடுத்த ஆறு"** (ப.210)

– கவித்துவம் களிநடம் புரியும் கந்தர்வனின் கை வண்ணம் இது!

மெல்லிய நகைச்சுவை உணர்வும் கந்தர்வனுக்கு உண்டு. அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும், முறுவலித்தலும் என்னும் மூவகை நகைச்சுவைகளில் படிப்பவரைப் புன்முறுவல் கொள்ளச் செய்யும் மூன்றாவது வகை நகைச்சுவை கந்தர்வனின் கவிதைகளில் ஆங்காங்கே கோலோச்சி நிற்கின்றது ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

**"இந்தத் தேசத்திலேயே**
**மிகவும் உயர்ந்தவன்**
**கிராம வாசியா**
**நகர வாசியா**
**இல்லை**
**விலைவாசி"** (ப.39)

'விடுகதை' என்பது இக் கவிதையின் தலைப்பு. விடுகதைப் பாங்கில்

விலைவாசி உயர்வை இங்கே மென்மையான நகைச்சுவை உணர்வோடு புலப்படுத்தியுள்ளார் கந்தர்வன்.

'ரேஷன்' என்னும் தலைப்பில் கந்தர்வன் படைத்திருக்கும் பிறிதொரு சிறு கவிதை வருமாறு:

**"ரேஷன் கடையில்**
**அரிசி வாங்கிக்**
**கல்லையும் நெல்லையும்**
**பொறுக்க நினைத்து**
**அரிசியைப்**
**பொறுக்கி முடித்தோம்"** (ப.39)

– இன்றைய 'நியாய(?) விலைக் கடை'களின் மீது கந்தர்வன் தொடுத்திருக்கும் நகைச்சுவையும் நையாண்டியும் கலந்த மென்மையான தாக்குதல் இது!

'இன்று பாரதி இங்கு இருந்தால்....' என்பது கந்தர்வனின் முத்திரைக் கவிதை. 'பொட்டு வைத்திருந்த புரட்சிக் கவிஞன்'. 'அக்ரகாரத்தில் முளைத்த முதல் மீசை', 'இரண்டு கங்குகளாய்க் கண்கள்' என்றெல்லாம் பாரதியை உணர்ச்சியும் உயிரோட்டமும் ததும்பும் சொற்களால் பாரதியைப் படம்பிடித்துக் காட்டுகின்றார் கவிஞர். இந்திய மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்தும் சுகம் கிடைக்காத அவலம் கவிராஜனின் நெஞ்சைப் பிழிகின்றது. சுதந்திர இந்தியாவின் நிலையும் நிகழ்வும் கண்டு நெஞ்சு பொறுக்காமல் கொதிப்படைகின்றார் தேசிய கவி. ஒன்பது பக்க அளவில் அமைந்த நீண்ட அக்கவிதை இப்படி நிறைவடைகின்றது.

**"அக்கினியானான் பாரதி**
**குனிந்து ஒரு**
**காலணியைக் கையிலெடுத்தான்**

**குவலயமே**
**நடுங்கக் கேட்டான்**
**பாட்டாலடித்தேன்**
**பாதகங்கள் குறையவில்லை**

**இப்போது**
**ஜோட்டால் அடிக்கவா**
**சொல்லுங்கள் ஜெகத்தீரே!"** (ப.117)

இத்தகைய ஆங்காரமும் மூர்க்கமும் ஆவேசமும் கோபமும் கொப்பளிக்கும் கவிதைகளைப் படைத்துப் புதுக்கவிதை உலகில் பாரதியின் வழித்தோன்றலாய் - **கந்தகக் கவிஞராய்** - விளங்குகிறார் கந்தர்வன்.

# 11

# 'உணர்ச்சிக் கவிஞர்' காசி ஆனந்தன்

> "கவிஞரின் நறுக்குகள் பேருண்மைகளை
> உள்ளடக்கிய குறள் வடிவங்களாக
> ஒளிர்கின்றன."
>
> – வல்லிக்கண்ணன்*

**கா**சி ஆனந்தன் இன்றைய இலங்கைத் தமிழ்த் தேசியக் கவிஞர்களுள் மோனையைப் போல் முன்னிற்பவர்; **பாரதியார்**, **பாரதிதாசன்** ஆகியோரது மரபின் வழி வந்த புதுமைக் கவிஞர்; நெஞ்சத் தூய்மையும் தனித்தன்மையும் தாய்மண் பற்றும் போர்க் குணமும் விடுதலை வேட்கையும் சிந்தனைத் திறமும் மொழி ஆளுமையும் இலக்கிய வளமும் கொள்கைப் பிடிப்பும் மனித நேயமும் ஒருங்கே கொண்ட '**உணர்ச்சிக் கவிஞர்**'. '**என் ஆசான் பாரதிதாசனுக்கும், அவர் ஆசான் பாரதிக்கும் இந்நூல்...**' எனக் காசி ஆனந்தன் தம் 'நறுக்கு'களின் தொகுப்பினை இருபதாம் நூற்றாண்டுக் கவிதை உலகில் இருபெருஞ் சுடர்களாக விளங்கிய பாரதிதாசனுக்கும் பாரதிக்கும் காணிக்கையாக்கி இருப்பது, ஆழ்ந்திருக்கும் அவரது கவியுள்ளத்தைத் திறந்து காட்ட வல்லதாகும். 'காசி ஆனந்தன் கவிதைகள்' (முதல் பதிப்பு, *1992*), 'காசி ஆனந்தன் கவிதைகள்' (இரண்டாம் பதிப்பு, *2000*) வரிசையில்

* வல்லிக்கண்ணன், 'சிறப்புரை', காசி ஆனந்தன் நறுக்குகள், ப.15.

அண்மையில் வெளிவந்திருக்கும் நூல் '**காசி ஆனந்தன் நறுக்குகள்**' (முதல் பதிப்பு, 2003). இதில் 'முத்தாரம்', 'இனி', 'நந்தன்', 'ஆனந்த விகடன்' ஆகிய இதழ்களில் வெளிவந்த கவிஞரின் 75 நறுக்குகள் ஒரு தொகுப்பாக நூல் வடிவம் பெற்றுள்ளன. இக் கட்டுரை காசி ஆனந்தன் அண்மையில் புதிதாகப் படைத்துள்ள 75 நறுக்குகளைப் பற்றிய ஓர் அலசல் ஆகும்.

## 'நறுக்கு' இலக்கியம்

இன்று 'புதுக்கவிதை' என்று வழங்கப்படுகின்ற புதிய இலக்கிய வடிவத்தையே - வகையையே - 'நறுக்கு' என்ற பெயரால் சுட்டுகின்றார் கவிஞர் காசி ஆனந்தன். "'புதுக்கவிதை', 'சொற்கோலம்', 'உரை வீச்சு', 'நறுக்கு' எனப் பெயர் எதுவானால் என்ன? உள்ளடக்கமான கருத்துத் தானே முக்கியம்?" - என்பது அவர் தொடுக்கும் வினா. மேலும் அவர், 'நறுக்குத் தெறித்தாற் போல்' இருப்பதால் 'புதுக்கவிதை' எனப்படும் இலக்கிய வடிவத்தை 'நறுக்கு' என்றே அழைக்கலாம் எனக் கருதுகின்றார். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் 'நறுக் என்று' என்பதற்கு, '(குட்டுதல், கிள்ளுதல் குறித்து வருகையில்) சுள்ளென்று வலிக்கும் படியாக (of knuckle, pinch sharply)' என்றும், '(பேச்சைக் குறித்து வருகையில்) சுருக்கென்று படும் படியாக, மனத்தில் பதியும் படியாக (briefly; in a sharp and stinging way)' என்றும் இரு வகையான பொருள்களைத் தந்துள்ளது; 'நறுக்குத் தெறித்தாற் போல்' என்பதற்கு '(ஒரு விஷயம் சொல்லப்படும் விஷயத்தில்) தெளிவாகவும் சுருக்கமாகவும் (Succinctly; pointedly; without leaving any loose ends)' என்றும் பொருள் உரைத்துள்ளது. இவை தவிர, 'பொடிப்பொடியான சிறு துண்டு (Piece)' என்றொரு பொருளும் 'நறுக்கு' என்ற சொல்லுக்குத் தரப்பெற்றுள்ளது (ப.612). க்ரியாவின் '**தற்காலத் தமிழ் அகராதி**' 'நறுக்'கிற்குத் தந்துள்ள விளக்கங்கள் யாவும் காசி ஆனந்தனின் கவிதை 'நறுக்கு'களுக்கு நன்கு பொருந்தி வரக் காண்கிறோம்.

"'புதுப்பா' (புதுக்கவிதை) என இன்று அழைக்கப்படுவது 'பா' அல்ல, உரை இலக்கியமே.

'புதுப்பா' எனும் பேரில் படைக்கப்படும் இலக்கியம் இரு வகையானது. ஒன்று, 'பளிச்'சென வீச்சாகப் பாயும் 'நறுக்கு'.

இன்னொன்று, சிதறிய சொற்களாகச் சொரியும் 'சிந்தல்' அல்லது 'கிறுக்கல்'.

'நறுக்கு' பல்லாயிரம் ஆண்டுக் காலத் தமிழ்ப் பழமொழிகளில் முளைகொண்டு தழைகொண்டு பயிரானது. 'சிந்தல்' அல்லது 'கிறுக்கல்' விட்மனின் தாக்கமின்றிப் பாரதி சிறப்பிலக்கியமாய்த் தமிழுக்குத் தந்து போனது.

இந்நூலில் நான் படைத்திருப்பது 'நறுக்கு' இலக்கியமே'' (ப.6) எனக் 'காசி ஆனந்தன் நறுக்குகள்' தொகுப்பிற்கு எழுதிய முன்னுரையில் கவிஞர் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

## ஆளுமை வெளிப்பாடு

'மிகை நாடி மிக்க கொளல்' என்ற அடிப்படையில் பார்த்தால், காசி ஆனந்தனின் 'நறுக்கு'களில் அழுத்தமாகவும் ஆழமாகவும் வெளிப்பட்டிருப்பது அவரது ஆளுமைப் பண்பே ஆகும். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்றபடி, கவிஞரின் சொற்களைக் கொண்டே நாம் அவரது ஆளுமைப் பண்புகளை அளந்தறிய முற்படலாம். கவிஞர் தம்மையும் தம் எழுத்தையும் குறித்து நூலின் முன்னுரையில் தெரிவித்திருக்கும் தன்னிலை விளக்கம் வருமாறு:

> '''தமிழீழத்திலும் தமிழ்நாட்டிலும் தங்கி வாழ்ந்த காலத்தில் உலகின் பொய்மைகளுக்கும் திமிர் வெறிக்கும் தமிழர் வாழ்வின் கண்ணீருக்கும் போராட்டங்களுக்கும் இடையே நெருப்பினைத் தழுவி அழுது துடித்துப் பொங்கிய என் தமிழ் பல்வகை ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான ஓர் இலக்கியனின் பெருமூச்சுப் பதிவு.
>
> உண்மைகளின் உறுமல்.
>
> முடிந்தவரை எழுத்துக்களைப் படைக்கருவிகள் ஆக்க முயன்றிருக்கிறேன்.
>
> பட்டதை நேரிலேயே சொல்லிப் பழகிப் போனவன்.
>
> சோடிப்புக்களை இலக்கியம் எனச் சொல்கிறவர்களின் எதிரி.
>
> எழுதுதல் புரிதலுக்கே என்பதுணர்ந்து எழுதுதல் செய்வோன்''
>
> (பக்.6-7).

காசி ஆனந்தனின் இலக்கியக் கோட்பாடு, இலக்கியத்தில் அழகைக் காண்பதோ, காட்டுவதோ அன்று; **கே.சி.எஸ். அருணாசலம்** '**கவிதை என் கைவாள்**' என்றது போல், காசி ஆனந்தனுக்கும் இலக்கியம் என்பது 'அழகின் சிரிப்பு' அன்று; மாறாக, '**ஆயுத எழுத்து**'. அவரது தொழில் தோரணம் கட்டுவது அன்று; வாளில் அழகு தேடுவது அன்று. வாளில் கூர்மை பார்ப்பது, இன்றைய சமூக அவலங்களுக்கு எதிராக முனைப்புடன் போராடுவது - இதுவே கவிஞரின் வழக்கம்; வாடிக்கை; ஏன் வாழ்க்கையும்கூட. '**இலக்கியம்**' என்ற தலைப்பில் தொகுப்பில் முதலாவதாக இடம்பெற்றிருக்கும் 'நறுக்கு' இது:

**"களத்தில்**
**நிற்கிறேன்...**
**என்**
**இலக்கியத்தில்**
**அழகில்லை**
**என்கிறாய்.**
**தோரணம்**
**கட்டும்**
**தொழிலோ**
**எனக்கு?**
**வாளில்**
**அழகு தேடாதே**
**கூர்மை பார்"** (ப.17)

'மானம்', 'புரட்சி', 'மந்தை', 'மீறல்', 'நிமிர்வு', 'திமிர்', 'சூடு', '**மாவீரன்**', 'புத்துயிர்', 'வீரம்', 'தாய்மண்', 'அடி', 'விடுதலை' என்றாற் போல் கவிஞர் தம் 'நறுக்கு'களுக்கு வைத்திருக்கும் கூர்மையான தலைப்புக்களே அவரது உள்ளத்தையும் உணர்வையும் புலப்படுத்த வல்லவை ஆகும்.

மனதில் பட்டதை ஒளிவு மறைவு இல்லாமல் அப்படியே உரைப்பது - 'காமம் செய்யாது கண்டது மொழிவது' - கவிஞர் காசி ஆனந்தனின் இயல்பு. ஓர் எடுத்துக்காட்டு இதோ.

**"இவன்**
**பசுவின் பாலைக்**

கறந்தால்
'பசு பால் தரும்'
என்கிறான்
காகம்
இவன் வடையை
எடுத்தால்
'காகம்
வடையைத் திருடிற்று'
என்கிறான்
இப்படியாக மனிதன்..." (ப.18)

நறுக்கென்று தலையில் குட்டுவது போல், மனிதனின் இரட்டைப் பண்பினைக் குட்டிக் காட்டும் - குத்திக் காட்டும் - நறுக்கு இது!

பிறிதொரு 'நறுக்கு' மேடைகளில் - பொதுக் கூட்டங்களில் - யார், எதைப் பேசினாலும், கூடி ரசித்துக் கை தட்டி மகிழும் தமிழனின் மந்தை மனப்பான்மையைத் தனக்கே உரிய பாணியில் சாடுகிறது: ''மேடை / 'தமிழா! / ஆடாய் / மாடாய் / ஆனாயடா... / நீ' / என்றேன் / கை / தட்டினான்'' (ப.27).

'மக்கள் தகவல் தொடர்பு ஊடகங்கள்' (Mass Media) என்ற பெயரில் இன்று மக்களின் மனங்களைக் கெடுத்து, சிந்தனைகளைச் சிதறடித்து, உணர்வுகளை மழுங்கடித்து, மூளைச் சலவை செய்து, பண்பாட்டுச் சிதைவுக்கும் சீர்குலைவுக்கும் வழிவகுத்து வரும் திரைப்படங்களின் மீதும் தொலைக்காட்சிப் பெட்டியின் மீதும் கவிஞர் காசி ஆனந்தனுக்குத் தீராத கோபம். இக் கோபத்தின் கூர்மையான வெளிப்பாட்டை அவரது 'நறுக்கு'களில் ஆங்காங்கே காண முடிகின்றது.

"திரைப்படச்
சுவரொட்டியை
தின்ற கழுதை
கொழுத்தது
பார்த்த கழுதை
புழுத்தது" (ப.22)

என்பது சுள்ளென்று வலிக்கும் படியாகக் கன்னத்தைக் கிள்ளுவது

போல், மனிதனின் திரைப்பட மோகத்தைச் சுட்டிக்காட்டும் 'நறுக்கு'. 'தின்ற கழுதை' x 'பார்த்த கழுதை', 'கொழுத்தது x புழுத்தது' - எவ்வளவு கூர்மையான சாடல்!

'அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் அரசியல்' என்பது போல், இன்று **'முட்டாள்களின் முதல் புகலிட'**மாகத் தொலைக்காட்சிப் பெட்டி விளங்குகின்றது. இதனைச் சுருக்கமாகவும் சுருக்கென்றும் பதிவு செய்துள்ளது கவிஞரின் 'நறுக்கு' ஒன்று:

**"அடக்கம்**
**செய்யப்படுகிறோம்...**
**இரண்டு**
**பெட்டிகளில்.**
**சவப்**
**பெட்டியிலும்**
**தொலைக்காட்சிப்**
**பெட்டியிலும்"** (ப.83)

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது வள்ளுவர் வாய்மொழி; **'அடக்கம் தொலைக்காட்சிப் பெட்டியின் உள்ளே'** என்பது இன்றைய புதுமொழி.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் விளம்பரங்கள் பெண்மையைக் கொச்சைப் படுத்துவதையும் தம் 'நறுக்கு' ஒன்றில் விமர்சனம் செய்யத் தவறவில்லை கவிஞர்.

**"விளம்பரம்**
**குளிப்பாட்டி**
**அழுக்காக்குகிறான்**
**பெண்ணை...**
**தொலைக்காட்சியில்"** (ப.24)

சாதாரணத்தில் அசாதாரணத்தைக் காண்பது கவிஞரின் தொழில். இதில் கைதேர்ந்தவராக விளங்குகிறார் காசி ஆனந்தன்.

**"செருப்பைப்**
**பார்க்கையில்**
**நீங்கள்**
**அணிந்திருக்கிறவனின்**

**காலைப்**
**பார்க்கிறீர்கள்.**
**நான்**
**செய்தவனின்**
**கையைப்**
**பார்க்கிறேன்"** (ப.28)

என்பது கவிஞரின் வித்தியாசமான கண்ணோட்டத்தை வெளிப்படுத்தும் ஒரு 'நறுக்கு'.

இலக்கிய உத்திகளுள் **அங்கதமும் முரணும்** கூப்பிட்ட குரலுக்கெல்லாம் ஓடி வந்து கவிஞருக்குக் குற்றவேல் செய்து நிற்கின்றன. 'கத்தி போய் வாலு வந்தது டும்டும்டும்' என்பது போல், இன்று 'மணிப்பிரவாளம்' போய் 'தமிங்கிலம்' வந்துள்ளது. இதனைத் தனக்கே உரிய பாணியில் பதிவு செய்துள்ளது கவிஞரின் 'நறுக்கு' ஒன்று:

**"பாட்டன்**
**நாக்கில்**
**வெடித்தது**
**முழக்கம்:**
**'வெள்ளையனே வெளியேறு!'**
**பேரன்**
**நாக்கிலேயே**
**இருந்தான்**
**வெள்ளையன்"** (ப.69)

'நாக்கில் வெடித்தது' x 'நாக்கிலேயே இருந்தான்' - அற்புதமான முரண்! சராசரித் தமிழனைப் பற்றிய சரியான பதிவு!

பிறிதொரு 'நறுக்'கில் நாட்டின் நிலைமையை - மக்களின் மனப்பான்மையை - அங்கதச் சுவையுடன் கவிஞர் எடுத்துக் காட்டுகிறார் இப்படி: "அன்று / 'வீட்டுக்கு / ஒரு வீரன் / தேவை' என்றார்கள் / வீரர்களை வளர்த்தோம் / இன்று - / 'வீட்டுக்கு / ஒரு மரம் / வளர்ப்பீர்' / என்கிறார்கள்... / மரங்கள் வளர்கின்றன" (ப.32) - **'மரங்கள்'** என்னும் தலைப்பில் அமைந்த இந் 'நறுக்கு' சிந்தனை விழிப்பின்றி - உரிமை உணர்வின்றி - போர்க் குணமின்றி - மக்கள் வாழ்வதைக் குத்திக் காட்டுகிறது.

தன் கணவனிடம் ஒப்புதல் கேட்கிறாள் ஒரு பெண். எதற்கு என்று கேட்கிறீர்களா? இதோ, கவிஞரின் சொற்களிலேயே அதனைக் காண்போம்:

**“கணவனின்**
**ஒப்புதல்**
**கேட்கிறாள்**
**‘பெண்கள்**
**விடுதலை’**
**அமைப்பில் சேர”** (ப.77)

‘பெண்ணுக்கு விடுதலை’ எப்படி இருக்கிறது, பார்த்தீர்களா? ‘தளை’ என்று கவிஞர் இந் ‘நறுக்’கிற்குச் சூட்டியிருக்கும் தலைப்பு நயமானது.

எப்போதும் ஆணுக்குத் தெரிவது பெண்ணின் ஒரு பக்கமே; பெண்ணின் மறுபக்கத்தைப் பார்க்கத் தெரியாதவனாகவே ஆண் விளங்குகிறான். இக் கருத்தினைப் பதிவு செய்திருக்கும் கவிஞரின் ‘நறுக்கு’ இதோ:

**“தெரிவது**
**உனக்கு**
**அவள்**
**கண்களில்**
**வண்டும்**
**மீனும்**
**பூவும்**
**தெரிவதில்லை**
**கண்ணீர்”** (ப.72)

இன்று ஏடுகள் வேண்டுமானால் பெண்ணுக்கு முன்பக்கத்தில் - அட்டையில் - முதல் இடம் தந்திருக்கலாம்; ஆனால், வீடுகள் பெண்ணுக்குத் தந்திருப்பது இரண்டாம் இடமே; பின்பக்கமும் அடுப்பங்கரையுமே ஆகும். இக் கருத்தினைப் ‘பெண்’ என்னும் தலைப்பில் அமைந்த ‘நறுக்’கில் அழகுற வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்:

**“ஏடுகளில்**
**முன் பக்கத்தில்**

**அட்டையில்**
**வீடுகளில்**
**பின் பக்கத்தில்**
**அடுப்பங்கரையில்"** (ப.31)

பணம் படைத்தவரின் - அதிகாரத்தில் இருப்பவரின் - தமிழ் எப்படி இருக்கும்? காசி ஆனந்தன் படைத்திருக்கும் பின்வரும் 'நறுக்கு'ப் போலத் தான் இருக்கும்:

**"வேலைக்காரன் மேல்**
**பாய்ந்தார்...**
**'நாயே!**
**பீட்டரை**
**கவனித்தாயா?'**
**இவர் வீட்டில்**
**'பீட்டர்' என்றால்**
**நாய்**
**'நாய்' என்றால்**
**மனிதன்"** (ப.36)

'ஆறறிவு' படைத்தவனாக இருந்தாலும் ஏழை மனிதனுக்குக் கிடைக்கும் மரியாதை இவ்வளவு தான்! நாயே ஆனாலும் பணக்கார வீட்டு நாய்க்குக் கிடைக்கும் மரியாதையே தனியானது தான்!

'குப்பைத் தொட்டி' என்னும் தலைப்பில் அமைந்த 'நறுக்கு' ஒன்று தெருவில் குப்பை பொறுக்கி வாழும் ஓர் ஏழையின் வாழ்க்கை அவலத்தைச் சொல்லோவியமாக்கியுள்ளது:

**""அலுவலகத்தில்**
**இருக்கிறவனுக்கு**
**இது -**
**குப்பைத் தொட்டி**
**குப்பை பொறுக்கி**
**வாழ்கிறவனுக்கு**
**இது -**
**அலுவலகம்"** (ப.19)

உலக அமைதியின் இன்றைய நிலவரம் எப்படி உள்ளது?

‘உள்ளது உள்ளபடி’ கவிஞர் தம் ‘நறுக்கு’ ஒன்றில் தரும் ‘வெள்ளை அறிக்கை’ இதோ:

> **“மாந்த நேயம்**
> **பேசின**
> **அணுகுண்டுகள்.**
> **புறாக்களை**
> **பறக்கவிட்டன**
> **கழுகுகள்.**
> **போராடிக் கொண்டிருக்கிறது**
> **அமைதி”** (ப.90)

இங்ஙனம் காசி ஆனந்தனின் ‘நறுக்குகள்’, ‘குறுகத் தறித்த குறள்’ வடிவங்களாக அமைந்து, சொல்ல வேண்டிய செய்திகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன; பயில்வார் மனதில் தெளிவாகப் பதியச் செய்கின்றன.

## ‘உண்மை மனிதனின் இதய ஒலிகள்’

“கவிஞர் காசி ஆனந்தனின் படைப்புகள் கூர்மையானவை. வேகமும் உணர்ச்சிகளும் கொண்டவை. உண்மையின் ஒளி பொருந்தியவை. சிந்திக்கத் தூண்டுபவை. போலித்தனங்களையும் பொய்மைகளையும் வெளிச்சப்படுத்துபவை. சொல்லிலும் செயலிலும் - இலக்கியப் படைப்புகளிலும் வாழ்க்கைச் செயல் பாடுகளிலும் - மாறுபாடு இல்லாது, வாழ்க்கையே போராட்டமாகக் கொண்டு செயலாற்றி வரும் **ஓர் உண்மை மனிதனின் இதய ஒலிகள்** அவை” (ப.15) என எழுத்தாளர் **வல்லிக்கண்ணன்,** காசி ஆனந்தனின் ‘நறுக்கு’களைப் பற்றிக் கூறியிருக்கும் மதிப்பீடு உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.



# 12

# ‘தன்மானக் கவிஞர்’ முத்துலிங்கம்

> “எதையும் வியாபாரம் ஆக்காதவன் – என்
> எதிரிக்கும் தீமை நினைக்காதவன்
> எதையும் எதிர்பார்த் தெழுதாதவன் – நான்
> இன்னொரு நக்கீரன் என்றானவன்”
>
> – *முத்துலிங்கம்**

**“கால நதியில் நான் கரையாதவன் – எந்தக்**
**காற்றுக்கும் மழைக்கும் அசையாதவன்**
**நீல வானம்போல் விரிவானவன் – எந்த**
**நிலையிலும் நேர்வழி மாறாதவன்”**

**[முத்துலிங்கம் கவிதைகள், ப.4]**

என்னும் விழுமிய கொள்கை முழக்கத்துடன் தமிழ்க் கவிதை உலகில் வலம் வந்து கொண்டிருப்பவர் கவிஞர் முத்துலிங்கம். முதன்முதல் அவர் எழுதிய கவிதைகள் ‘வெண்ணிலா’ என்ற பெயரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் முன்னுரையுடன் 1961-ஆம் ஆண்டில் வெளி வந்தன. அதனைத் தொடர்ந்து கவிஞரின் கைவண்ணத்தில் ‘எம்.ஜி.ஆர். பிள்ளைத் தமிழ்’, ‘எம்.ஜி.ஆர். உலா’, ‘எம்.ஜி.ஆர். அந்தாதி’ என்ற மூன்று சிற்றிலக்கியங்கள் வெளிவந்தன. இம் மூன்றும் ‘மக்கள் திலகம்’ எம்.ஜி.ஆர். மீது கவிஞர் கொண்டிருக்கும் இமாலயப் பற்றைப் பறைசாற்றுவன. திரைப்படத் துறையிலும் அரசியல் உலகிலும் கவிஞர் முத்துலிங்கத்தை வளர்த்து

* முத்துலிங்கம் கவிதைகள், ப.4.

ஆளாக்கியவர் எம்.ஜி.ஆர்.தான். சட்ட மன்ற மேலவை உறுப்பினராக வும், அரசவைக் கவிஞராகவும் கவிஞருக்கு ஏற்றம் தந்து அழகு பார்த்தவரும் அவரே. தமிழக அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது, சிறந்த திரைப்படப் பாடலாசிரியருக்கான விருது, கலைத்துறை வித்தகருக்கான விருது முதலான பல்வேறு விருதுகளை யும் பெற்றவர் முத்துலிங்கம். 'காற்றில் விதைத்த கருத்து' என்ற இவரது கட்டுரை நூல் 'தினத்தந்தி' ஆதித்தனார் விருது ஒரு லட்சம் ரூபாய் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இனி, கவிஞர் முத்துலிங்கத்தின் படைப்புலகும் ஆளுமைப் பண்பும் குறித்து இக் கட்டுரையில் சுருங்கக் காண்போம்.

## 'முத்துலிங்கம் கவிதைகள்'

'முத்துலிங்கம் கவிதைகள்' என்ற தொகுப்பு 2003-ஆம் ஆண்டில் வானதி ஏ. திருநாவுக்கரசு அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட 'திருவரசு புத்தக நிலைய'த்தின் சார்பில் வெளிவந்தது. 'செந்நெல்' (சமுதாயக் கவிதைகள்), 'கன்னல்' (காதல் கவிதைகள்), 'மின்னல்' (கவியரங்கக் கவிதைகள்) என்னும் அழகிய முப்பெரும் பகுப்புகளில் கவிஞரின் 86 கவிதைகள் அத் தொகுப்பில் இடம் பெற்றிருந்தன.

'செந்நெல்' என்னும் முதல் பகுப்பில் இடம்பெற்றுள்ள 'பயணம் தொடரட்டும்' என்ற கவிதை முத்துலிங்கத்தின் படைப்புத் திறத்திற்கும் ஆளுமைப் பண்புக்கும் கட்டியம் கூறுவதாகும். "பாதையின் நடுவே முள்ளிருக்கும் - நீ பயணத்தை மட்டும் நிறுத்தாதே" எனத் தொடங்கும் அக் கவிதை, "தாழ்த்திப் பிடித்தாலும் மேல்நோக்கி - எரியும், தழல் போல் சிந்தனை எழ வேண்டும்" என இளைய தலைமுறைக்கு அறிவுறுத்துகின்றது. தொடர்ந்து, "தடைகள் உன்னெதிர் வந்தாலும் - நீ, தடந்தோள் உயர்த்து பகை ஓடும்" எனப் பாவேந்தர் பாரதிதாசனின் வாக்கினை அடியொற்றி வாழ்க்கைப் பயணத்தைத் தொடருமாறு வழிகாட்டுகின்றது, "நோக்கம் நிறைவேறும் காலம் வரை - நீ நொடிப் பொழுதும் கண் தூங்காதே" என இளையோர் நெஞ்சில் விழிப்புணர்வை விதைக்கின்றது. நிறைவாக,

> **"அர்ச்சுனைப் பார்வை உனக்கிருந்தால் – வாழ்வில்**
> **அனைத்திலும் வெற்றி உனக்கு வரும்"**
>
> **[முத்துலிங்கம் கவிதைகள், பக்.6–7]**

என வாழ்வில் ஒரு வெற்றியாளராக வலம் வருவதற்கான வழிமுறையினை எடுத்துரைக்கின்றது. **'அர்ச்சுனப் பார்வை'** எனக் கவிஞர் இக் கவிதையில் கையாண்டிருக்கும் தொடர் ஆழ்ந்த பொருள் பொதிந்தது; மகாபாரதத்தில் வில் வித்தைப் போட்டியின் போது அருச்சுனன் மேற்கொண்ட மன ஒருமைப்பாட்டைப் புலப்படுத்துவது.

## கற்பனை நயம் களிநடம் புரிந்து நிற்கும் காதல் கவிதை

'கன்னல்' என்னும் இரண்டாம் பகுப்பில் காதல் சுவையும் கற்பனை நயமும் நனி சொட்டச் சொட்டக் கவிஞர் முத்துலிங்கம் படைத்துள்ள கவிதை 'நீயும் ஒரு கவிஞனா?' என்பது. திருவள்ளுவரது 'புலவி நுணுக்க'த்தில் வரும் காதலியின் வாரிசாக இக் கவிதையில் வரும் காதலி காணப்படுகின்றாள். முதலில், 'தேனைப் போல் இனிக்கின்ற பெண்ணே!' என விளிக்கின்றார் கவிஞர். 'தெவிட்டுகின்ற பொருளா நான்?' என்று அவரைக் கேட்கிறாள் காதலி. 'மீனைப் போல் விழி' என்கிறார் கவிஞர். 'விழிகள் என்ன மீன் போலக் கறிக்கு உதவும் பொருளோ?' என்கிறாள் காதலி. அடுத்து, 'முகில் போலக் கூந்தல்' என்கிறார் கவிஞர். 'என் கூந்தல் போல் முகிலுக்கு மணமுண்டா?' என்று கேட்கிறாள் காதலி. 'நகம் போலப் பவளம்' என்கிறார் கவிஞர். 'என் நகம் போல் நறுக்கி விட்டால் வளர்வதுண்டோ பவளம்?' என்கிறாள் காதலி. சற்றே சிந்தித்து, 'கற்கண்டு நீ' என்கிறார் கவிஞர். 'எறும்பும் ஈயும் கடிக்கிற பொருளா நான்?' எனக் கேட்டுச் சினம் கொள்கிறாள் காதலி. 'கற்றவளே, நீ எனது கண்கள்' என்கிறார் கவிஞர். 'கண்ணென்றால் நான் என்ன கருப்பா?' எனக் கேட்கிறாள் காதலி. 'தாமரைப் பூ முகம்' என்கிறார் கவிஞர். 'கதிரோன் மேற்கே சாய்ந்து விட்டால் அப்பூவும் வாடும்' என்கிறாள் காதலி. 'மாமகளே, உன் பற்கள் முல்லை' என்கிறார் கவிஞர். 'மணி வண்டு மொய்ப்பது உண்டா பல்லில்?' எக்கிறாள் காதலி. உணர்ச்சி வயப்பட்டு, 'எழில் மின்னும் கண்ணாடிக் கன்னம்' என்கிறார் கவிஞர். 'இதில் உங்கள் முகம் பார்க்க முடியாது' என்கிறாள் காதலி. 'பழம் போன்ற உதடு' என்கிறார் கவிஞர். கிண்டலோடு, 'பறவை வந்து கொத்திடுமோ உதட்டில்?' எனக் கேட்கிறாள் காதலி. சுருக்கமாக, 'விண்மீன் உன் சிரிப்பு' என்கிறார் கவிஞர். 'பகல் நேரத்தில் விளங்காதோ என் சிரிப்பும்?' எனச் சொல்லி சிரிக்கிறாள் காதலி. 'செம்மண் போல் உன் நிறம்' என்கிறார் கவிஞர்.

‘அஃறிணை போல் மதித்தீரோ எனை நீரும்?’ என்று கடிந்து கொள்கிறாள் காதலி. ‘முருக்கவிழ்ந்த ரோஜாப்பூ மேனி’ என்கிறார் கவிஞர். ‘முட்பொருளா நான்?’ என்று முறைத்துப் பார்க்கிறாள் காதலி. ‘திருமகளே, உன் அங்கம் தங்கம்’ என்கிறார் கவிஞர். உடனே, ‘தேகம் என்ன நகை செய்யும் பொருளா?’ என்கிறாள் காதலி. இங்ஙனம் பதினான்கு முறை பதினான்கு விதமாகக் கூறிப் பார்த்த கவிஞர் முடிவாக, ‘மங்கை உன்னை எவ்வாறு புகழ்வது?’ என்று காதலியிடமே கேட்கிறார். அப்போதும், விட்டுக்கொடுக்காமல்,

> “ **மங்கையரை வர்ணிக்கத் தெரிந்திடாது**
> **நங்கையர்பால் கேட்பதற்கு வெட்கமில்லை**
> **நானிலத்தில் நீங்கள்ஒரு கவியா?”**
> **[முத்துலிங்கம் கவிதைகள், பக்.107–108]**

எனக் கேட்கிறாளாம் காதலி.

## தடம் பதித்த கவியரங்கக் கவிதை

‘மின்னல்’ என்னும் மூன்றாம் பகுதி 18 கவியரங்கக் கவிதைகளைத் தன்னகத்தே கொண்டது. 1993-ஆம் ஆண்டு திருவண்ணாமலைக் கோயில் வளாகத்தில் ஈரோடு தமிழன்பன் தலைமையில் ‘திருவள்ளுவர் திரைப்படம் எடுக்க வந்தால்...’ என்ற தலைப்பில் முத்துலிங்கம் பாடிய கவிதை, நல்ல நகைச்சுவையும் நயமான அங்கதச் சுவையும் கைகுலுக்கி நிற்கும் ஓர் அழகிய கவிதை ஆகும். இலக்கியத் தரத்திலும் திறத்திலும் புதுமைப்பித்தனின் ‘கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்’ என்னும் சிறுகதைக்கு நிகரான படைப்பு அது! அதில் கவிஞர் கண்ணதாசனுக்கு விண்ணுலகிலும் கிடைக்கும் மகத்தான வரவேற்பைப் பார்த்து அசந்து போகிறார் வள்ளுவனார்; ‘இது போல் வரவேற்பை இங்கு நான் பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும், இயம்பு’ என்று கண்ணதாசனிடமே கேட்கிறார். அதற்கு மறுமொழியாக, ‘திரைப்படத்திற்கு வசனமும் பாடலும் எழுதினால் தமக்குள்ள வரவேற்பு கிடைக்கும்’ எனக் கூறுகிறார் கண்ணதாசன். இதைக் கேட்டதும் வள்ளுவர் நெஞ்சில் திரைப்பட மோகம் தீயாய் வளர்கின்றது; திரைப்படத்திற்குப் பாட்டு எழுதும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடுகிறார்; வாய்ப்புத் தேடி அலைகிறார்; இயக்குநர், இசையமைப்பாளர், இயக்குநராய் வரத் துடிக்கும் இளைஞர் எனப் பலரை வரிசையாகச் சந்திக்கிறார்; அங்கும்

இங்கும் அன்பர் பலரிடம் ஐந்து லட்சம் அலைந்து புரட்டித் திரைப்படத் தயாரிப்புப் பணியிலும் ஈடுபடுகிறார்; முடிவில் படப்பிடிப்பும் நடக்காமல், பாட்டு எழுதும் வாய்ப்பும் பெறாமல் வாங்கிய கடன் சுமை அழுத்தப் பரிதவிக்கிறார்; ஆகாய வழியாகக் கண்ணதாசனிடம் சென்று கடனை அடைக்க வழி கேட்கிறார். சின்னப்பத் தேவரிடம் அழைத்துச் சென்று பணம் கேட்க, அவரும் கையை விரித்து விடுகிறார்; திட்டி அனுப்பிவிடுகிறார். கடைசியில், கண்ணதாசன் ஒன்றும் சொல்லாமல் குறளாரைத் திரையுலகு சார்ந்த ஒருவரிடம் கூட்டிச் செல்கிறார்; அவர், 'பழக்கம் இல்லாமல் படத்துறைக்கு வரலாமா?' எனக் கேட்டு, படம் எடுக்க நினைத்த பாரதிதாசனுக்கு நேர்ந்த கதியை எடுத்துச் சொல்லி, வள்ளுவரது அவல நிலையை ஏற்கனவே அறிந்து வானுலகிற்கு வருவதற்குள் அவர் பட்ட கடனைப் பூமிக்கு அனுப்பித் தீர்த்து விடுகிறார். அவர் வேறு யாரும் இல்லை, பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தான். வள்ளுவர், எம்.ஜி.ஆர். கூறியதைக் கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்து, கண்களில் நீர் மல்க, 'கண்டங்கள் உள்ள வரை அழியாது தங்கள் புகழ்!' என நெஞ்சார வாழ்த்தி விடைபெறுகிறார். முத்தாய்ப்பாக,

**"வள்ளுவர் போல் சிந்தனைவளம் படைத்த சான்றோர்**
**வெள்ளித் திரையை விரும்பி நுழையவந்தால்**
**என்னாகும் என்பதற்கு இதுவோர் எச்சரிக்கை!"**
**[முத்துலிங்கம் கவிதைகள், பக்.202-212]**

என்னும் அனுபவ மொழியோடு நிறைவடைகின்றது கவிதை. முத்துலிங்கம் இக் கவிதையைத் தொடங்கி, வளர்த்துச் சென்று, முடித்து வைத்திருக்கும் பாங்கு படிப்பவர்க்கு மிகவும் சுவை பயக்கின்றது. இன்றைய திரையுலகு பற்றிய ஓர் அற்புதமான அலசலாக - கூர்மையான விமர்சனமாக - நயமான படப்பிடிப்பாக - நடப்பியலோடு கூடிய பதிவாக - இக் கவிதை விளங்குகின்றது. கவிஞரின் ஆழ்ந்த திரையுலகப் பட்டறிவு இக் கவிதையின் உருவாக்கத்திற்குப் பெரிதும் கைகொடுத்துள்ளது.

குமரன் பதிப்பகம் 'உலாப் போகும் ஓடங்கள்' என்ற பெயரில் கவியரங்குகளில் பல்வேறு தலைப்புக்களில் முத்துலிங்கம் பாடிய 26 கவிதைகளைத் தொகுத்து நூல் வடிவில் (டிசம்பர், 2011) வெளியிட்டுள்ளது.

## கவிஞரின் முதல் கவிதை

உவமைக் கவிஞர் சுரதா நடத்திய 'இலக்கியம்' என்னும் கவிதை இதழில் *1.8.1958*-இல் வெளிவந்த கவிதையே முத்துலிங்கத்தின் முதல் கவிதை. 'முகிலே...' என்னும் தலைப்பில் நேரிசை ஆசிரியப் பா வடிவில் அமைந்த அக் கவிதை வருமாறு.

**"முகிலே முகிலே கருத்த முகிலே**
**மாமழை பொழியும் மாண்புடை முகிலே**
**பழம்பெரும் நாடாம் பாண்டிய நாட்டில்**
**என்றன் அன்னை உள்ளாள்: அவளிடம்**
**தமிழினைப் பழித்தோர் தம்மை மாய்த்துப்**
**போரினில் வென்று வீரமாய் உன்மகன்**
**மடிந்தான் என்று சொன்னால்**
**அன்னையும் வாழ்த்துவாள் உனக்கும் பெருமையே!"**

**(முத்துலிங்கம் கவிதைகள், ப.91)**

புறநானூற்று வீரத் தாயின் சாயலும், 'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என முழங்கிய பாவேந்தர் பாரதிதாசனின் தாக்கமும் விளங்க முத்துலிங்கம் இக் கவிதையைப் படைத்துள்ளார். இக் கவிதை வெளிவந்த போது கவிஞர் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது (பாடல் பிறந்த கதை, ப.12).

## கவிஞரின் மொழி ஆளுமை

முத்துலிங்கத்தின் கண்ணோட்டத்தில் 'எதுகை மோனை ஓசை நயங்கள் இயங்கும் கவிதை இனிக்கும்; ஒரு புதிய கருத்தும் அதற்குள் இருப்பின், பொலியும் கவிதை நிலைக்கும்.'

**"கவிதை நயமும் கருத்தும் திகழும்**
**கவிதை உயர்ந்த கவிதை"**

**(முத்துலிங்கம் கவிதைகள், ப.27)**

என்பது உயர்ந்த கவிதைக்கு முத்துலிங்கம் வகுக்கும் வரை விலக்கணம். அவரைப் பொறுத்த வரையில், 'இதில் எதுவும் அற்றுத் திகழும் கவிதை, கவிதையல்ல கழுதை!'

**"தேரும் ஓடுது மாடும் ஓடுது**
**காரும் ஓடுது ரோட்டிலே – எங்கள்**

**கண்ணீர் ஓடுது வீட்டிலே - அந்தக்**
**கரிகாற் சோழன் கல்லணை கட்டிய**
**காவிரி பாயும் நாட்டிலே - நிம்மதி**
**காண்பதெல்லாம் சுடு காட்டிலே!"**
(முத்துலிங்கம் கவிதைகள், ப.94)

எனத் தொழிலாளியின் வாழ்க்கை அவலத்தைச் சித்திரிக்கும் போதும்,

**"முதற்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்று**
**முத்தமிழ்ச் சங்க முறைகண்ட நம்நாட்டில்**
**நாடார் சங்கம் நாயக்கர் சங்கம்**
**வன்னியர் சங்கம் வேளாளர் சங்கம்**
**செட்டியார் சங்கம் ரெட்டியார் சங்கமென்று**
**ஜாதிக்கொரு சங்கம் தழைத்து வளர்கிறது!**
**ஈரோட்டுப் பெரியார் எத்தனையோ முறை அறிவின்**
**ஏரோட்டிப் பார்த்தும் இன்னும் பலர் திருத்தவில்லை!"**
(முத்துலிங்கம் கவிதைகள், ப.132)

என சாதிக் கொடுமை தாண்டவமாடும் இன்றைய சமுதாய நிலையை எண்ணி மனம் வருந்தும் போதும்,

**"ஜனவரி பிப்ரவரி மாதங்களில் மட்டுமே!**
**இனவெறி மதவெறி இவ்வுலகில் எங்குமே!"**
(முத்துலிங்கம் கவிதைகள்,ப.199)

என இன்றைய உலகப் போக்கை நச்சென்ற மொழியில் குத்திக் காட்டும் போதும்,

**"நாடகத் துறையால் நற்றமிழ் வளர்ந்தது முற்காலம்**
**ஊடகத் துறையால் உள்ளதமிழும் கெடுவது தற்காலம்"**
(உலாப் போகும் ஓடங்கள், ப.99)

என இன்றைய ஊடகத் துறையை விமர்சனம் செய்யும் போதும்,

**"எதுகை இவர்நாவில் எழுந்து விளையாடும் !**
**மோனை இவர் உதட்டில் முத்தமிட்டுச் சதிராடும் !"**
(முத்துலிங்கம் கவிதைகள், ப.97)

என அறிஞர் அண்ணாவின் பேச்சாற்றலை விதந்து உரைக்கும் போதும்,

**"பெருக்கல் குறிபோல் செல்வம் பெருக்கியோர்**

வகுத்துப் பார்க்கும் வாழ்க்கைக் கணக்கில்
கழித்தல் குறியாய் கடைசியில் இருப்பாய்!"
(முத்துலிங்கம் கவிதைகள், ப.39)

என 'மூச்சுப் புத்தகத்தின் முற்றுப்புள்ளி'யாம் மரணத்தின் பெருமையைப் பேசும் போதும்,

"பலர் பாட்டோ எப்போதும் வெற்றுவேட்டு
பட்டுக்கோட்டையின் பாட்டு பச்சை நோட்டு
சிலர் பாட்டுத் திரைப்பாட்டு சிலநாள் பாட்டு
சிரஞ்சீவீப் பாட்டுத்தான் இவனின் பாட்டு!"
(முத்துலிங்கம் கவிதைகள், ப.67)

எனக் 'கலையுலகப் புரட்சிக் கவி' பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் பாட்டுத் திறத்திற்குப் புகழாரம் சூட்டும் போதும் முத்துலிங்கத்தின் மொழி ஆளுமையில் எதுகை மோனை ஓசை நயங்களும் தெறிப்பான சிந்தனை வீச்சுக்களும் சுடர்விட்டு நிற்கக் காண்கிறோம்.

## திரை இசைப் பாடல் திறன்

'தஞ்சாவூருச் சீமையிலே' எனத் தொடங்கும் பாடல் தான் முத்துலிங்கம் திரைப்படத்திற்கு எழுதிய முதல் பாடல். அப் பாடல் இடம்பெற்ற திரைப்படம் 'பொண்ணுக்குத் தங்க மனசு', படம் வெளிவந்த ஆண்டு 1973. காவிரி, வைகை, கங்கை ஆகிய நதிகளுக்கு இடையே யார் உயர்ந்த நதி என்று மோதல் ஏற்படுவது போலவும், அந்த நதிகளை அமைதிப்படுத்திக் கடைசியில் உழவன் பாடுவது போலவும் அமைந்த அருமையான பாடல் அது.

"கங்கையம்மா வைகையம்மா
கழனிசெழிக்கும் பொன்னியம்மா
உங்களுக்குள் சண்டை வந்தா
ஒருமைப்பாடு பிழைக்காது ஏலேலோ
உழவனுக்குத் தெய்வமெல்லாம்
உங்களைப்போல நதிகளம்மா!"
(முத்துலிங்கம் கவிதைகள், பக்.309-311)

என உழவனின் குரலில் கவிஞர் ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் வலியுறுத்திப் பாடியிருப்பது சிறப்பு. முத்தாய்ப்பாக, "ஜனநாயகம் தழைத்திடணும் / சமதர்ம்ம் நிலைத்திடணும் / பாட்டாளி சிரித்திடணும் / பாரதமும் உயர்ந்திடணும்" என அப்பாடலின்

முடிவில் ஒலிக்கும் வரிகள் கவிஞர் காண விரும்பும் புத்துலகை அடையாளம் காட்டுவன ஆகும்.

இலக்கண வகுப்புகளில் ஐயவணிக்கு உதாரணமாக, 'அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை, மாதர்கொல் மாலும் என் நெஞ்சு' (1081) என்னும் திருக்குறளே பெரும்பாலும் உதாரணமாகக் காட்டப்பெறும். கவிஞர் முத்துலிங்கம் 'கிழக்கே போகும் ரயில்' படத்திற்காக எழுதிய, 'மாஞ்சோலைக் கிளிதானோ, மான்தானோ, வேப்பந் தோப்புக் குயிலும் நீதானோ, இவள் ஆவாரம் பூதானோ, நடை தேர்தானோ, சலங்கைகள் தரும் தேன்தானோ?' . (கவிஞர் முத்துலிங்கம் திரைஇசைப் பாடல்கள், ப.20) என்ற பாடல் வெளிவந்த பிறகு, அப்பாடலே ஐயவணிக்கான ஓர் அருமையான, எளிமையான உதாரணம் ஆயிற்று. கவிஞருக்குத் தமிழக அரசின் தங்கப் பதக்க விருதினைப் பெற்றுத் தந்த பாடல் அது என்பது குறிப்பிடத்தக்கது.

**"காஞ்சிப் பட்டுடுத்தி கஸ்தூரிப் பொட்டுவைத்து**
**தேவதைபோல் நீநடந்து வரவேண்டும் – அந்தத்**
**திருமகளும் உன்னழகைப் பெறவேண்டும்"**
**[கவிஞர் முத்துலிங்கம் திரை இசைப் பாடல்கள், ப.21]**

எனத் தொடங்கும் திரைஇசைப் பாடல் 1978-1979-ஆம் ஆண்டின் சிறந்த பாடலாசிரியருக்கான தமிழக அரசின் விருதினைக் கவிஞருக்குப் பெற்றுத் தந்த பாடல் ஆகும். இதில் இடம்பெற்றுள்ள 'திருமகளும் உன்னழகைப் பெற வேண்டும்' என்னும் அடி, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் வரும், 'தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்' என்னும் அடியை நினைவூட்டுவதாகும்.

'மணிஓசை கேட்டு எழுந்து - நெஞ்சில், ஆசை கோடி சுமந்து - திருத்தேரில் நானும் அமர்ந்து - ஒரு, கோயில் சேர்ந்த பொழுது - அந்தக், கோயிலின் மணிவாசலை - இங்கு மூடுதல் முறையோ?' (கவிஞர் முத்துலிங்கம் திரைஇசைப் பாடல்கள், ப.193) எனத் தொடங்கிப் 'பயணங்கள் முடிவதில்லை' படத்திற்காகக் கவிஞர் எழுதிய பாடல் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முத்திரை பதித்த பாடல் ஆகும். தமிழ்த் திரைஇசைப் பாடல்களில் விக்கலும் முக்கலும் முனகலும் முக்கிய இடத்தைப் பெற்றதுண்டு. முதன்முறையாக இருமலை இடம்பெறச் செய்த பெருமை இப்பாடலுக்கு உண்டு. கவிஞரே குறிப்பிடுவது போல, 'ஒவ்வொருவரும் அவர்களே இருமிக்

கொண்டு பாடுவது போல படம் பார்க்கும் போது ஓர் உணர்வினைப் பெற்றார்கள்' (பாடல் பிறந்த கதை, ப.101). பின்னணிப் பாடகர்கள் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்திற்கும் எஸ்.ஜானகிக்கும் நல்ல பெயரைப் பெற்றுத் தந்த பாடல் இது.

'அன்புக்கு நானடிமை - தமிழ்ப் பண்புக்கு நானடிமை - நல்ல கொள்கைக்கு நானடிமை' என்றும், 'தங்கத்தில் முகமெடுத்து, சந்தனத்தில் உடலெடுத்து, காமன் போல வந்திருக்கும் வடிவோ?' என்றும், 'பிள்ளைத்தமிழ் பாடுகிறேன் - ஒரு பிள்ளைக்காகப் பாடுகிறேன்' (கவிஞர் முத்துலிங்கம் திரை இசைப் பாடல்கள், பக்.137, 17, 4) என்றும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்காகக் கவிஞர் முத்து லிங்கம் எழுதிய திரைஇசைப் பாடல்கள் சாகா வரம் பெற்றவை.

கவிஞர் முத்துலிங்கத்தின் 224 திரைஇசைப் பாடல்கள் கொண்ட ஒரு தொகுப்பே இதுவரை வெளிவந்துள்ளது. திரைப் பாடலாசிரி யர்கள் வாலி, வைரமுத்து ஆகியோருக்கு வெளி வந்திருப்பது போல முத்துலிங்கத்திற்கும் ஆயிரம் பாடல்கள் அடங்கிய முழுத்தொகுப்பு வெளிவர வேண்டியது காலத்தின் தேவை ஆகும்.

## கட்டுரை வன்மை பளிச்சிடும் இடங்கள்

குமரன் பதிப்பகம் வெளியிட்டுள்ள 'காற்றில் விதைத்த கருத்து' (2005), 'பாடல் பிறந்த கதை' (2008) என்னும் இரு நூல்களும் முத்துலிங்கத்தின் கட்டுரை வன்மையைப் புலப்படுத்துவன. 'இவரது வசனங்களில் கவிதைக்குரிய வீச்சுக்கள் கண் சிமிட்டிக் கொண்டிருக்கும்' (பாடல் பிறந்த கதை, ப.28) என இளங்கோவன் பற்றி முத்துலிங்கம் குறிப்பிட்டிருப்பது, அவரது கட்டுரைகளுக்கும் பொருந்துவதே ஆகும். "அவரது (பட்டுக்கோட்டையின்) பாடல்கள் வெடிகுண்டுகள் என்றால் இவரது (கண்ணதாசனின்) பாடல்கள் மலர்ச் செண்டுகள்" (பாடல் பிறந்த கதை, ப.68) என்னும் முத்துலிங்கத்தின் கட்டுரைப் பகுதி இவ்வகையில் மனங்கொளத்தக்கது. வெடி குண்டுகள் x மலர்ச் செண்டுகள்: கவித்துவம் கண்சிமிட்டும் அழகிய முரண்களின் ஆட்சி!

"பசைக்கு (பணத்திற்கு) மயங்காதவர் பலர் இருந்தாலும் இசைக்கு மயங்காதவர் எவரும் இலர்" (காற்றில் விதைத்த கருத்து, ப.9) என்னும் எதுகை நயம் களிநடம் புரிந்து நிற்கும் அழகிய

வாக்கியத்துடன் தொடங்குகின்றது முத்துலிங்கத்தின் 'தமிழ் இசை' என்னும் கட்டுரை.

எது செய்யுள்? எது கவிதை? இதற்கு முத்துலிங்கம் தம் கட்டுரை ஒன்றில் தரும் இரத்தினச் சுருக்கமான விடை இது: "பிறர் பொருள் சொன்னால்தான் நமக்குப் புரியும் என்றால் அது செய்யுள். பிறர் பொருள் சொல்லாமலேயே படிக்கும் போது நாமே புரிந்து கொண்டால் அது கவிதை" (காற்றில் விதைத்த கருத்து, ப.76).

"மலைகளில் சிறந்தது இமயம், மலர்களில் சிறந்தது தாமரை, நதிகளில் சிறந்தது கங்கை, மனிதர்களில் சிறந்தவர் எம்.ஜி.ஆர்." (காற்றில் விதைத்த கருத்து, ப.164) - ஒரு முறை படித்தாலே படிப்பவர் நெஞ்சில் கல்வெட்டுப் போலப் பதியும் வண்ணம் எழுதும் வல்லமை முத்துலிங்கத்தின் உரைநடைக்கு உண்டு என்பதற்குக் கட்டியம் கூறும் சான்று இது!

**கவிஞரின் நயத்தக்க நனிநாகரிகம்**

'வாழ்க்கை என்ற சொல்லே நமக்கு நாளும் அறிவுரையை வழங்கிக் கொண்டிருக்கிறது. நாம் தான் அதைச் சிந்திப்பதில்லை' என்ற கருத்தைச் சொல்ல வரும் முத்துலிங்கம், அதனைத் தம் கட்டுரை ஒன்றில் விளக்கி இருக்கும் பாங்கு படிப்பவர் நெஞ்சை அள்ளுவதாகும்.

> "வாழ்க்கை என்ற சொல்லின் முதலெழுத்து 'வா' என்று அழைக்கிறது. அடுத்த எழுத்து 'ழ்'. இரண்டையும் சேர்த்தால் 'வாழ்' என்ற கட்டளைச் சொல் வருகிறது. நீ சலித்துக் கொள்வதற்காக வாழ்க்கையல்ல; வாழ்வதற்குத் தான் வாழ்க்கை என்று அது நமக்குப் போதிக்கிறது... நம் கையைக் கொண்டு நாமே உழைத்துப் பொருள் தேட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்ற எழுத்துத்தான் வாழ்க்கை என்ற சொல்லின் கடைசியில் உள்ள 'கை' என்ற எழுத்து... சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவராகவும் கொடுத்த வாக்கை நிறைவேற்றுபவராகவும் நாம் விளங்க வேண்டும். அப்படிக் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்ற கருத்தை நினைவூட்டுகின்ற எழுத்துத்தான் முதலெழுத்தும், மூன்றாவதெழுத்தும், நான்காவது எழுத்தும். 'வாழ்க்கை' என்ற சொல்லின் இரண்டாவது எழுத்தான 'ழ்' என்ற எழுத்தை எடுத்துவிட்டுப் பார்த்தால் 'வாக்கை' என்று வரும். ஆக, உழைப்பால் பொருள் ஈட்டி, கொடுத்த வாக்கைக்

காப்பாற்றுபவனாகவும் விளங்கினால் அவனுக்கு வாழ்க்கையில் வெற்றி உண்டு. அந்த வெற்றியைச் சொல்லுகின்ற எழுத்துத்தான் முதலெழுத்தும் முடிவெழுத்தும். வாழ்க்கை என்ற சொல்லின் முதலெழுத்து 'வா!' முடிவெழுத்து 'கை!' இரண்டையும் சேர்த்தால் 'வாகை' என்ற சொல் வரும். வாகை என்றால் வெற்றி என்று பொருள்.'' (காற்றில் விதைத்த கருத்து, பக்.166-167)

இதில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பண்பு என்ன என்றால், அரிதினும் அரிதான இவ் விளக்கத்தினைத் தொடர்ந்து, ''காவியக் கவிஞர் வாலி தான் இப்படியெல்லாம் சிந்தித்து வாழ்க்கை என்ற சொல்லின் தத்துவத்தை விளக்கினார். அந்தத் தத்துவத்தின் இலக்கிய வடிவம் தான் எம்.ஜி.ஆர்.'' (காற்றில் விதைத்த கருத்து, ப.168) என முத்துலிங்கம் நயத்தக்க நனிநாகரித்தோடு இவ்விளக்கத்திற்குச் சொந்தக்காரரான கவிஞர் வாலியின் பெயரை உரிய இடத்தில் தக்க முறையில் பதிவு செய்திருப்பது தான்.

## பாரதிதாசன் வழியில் நடை பயிலும் தன்மானக் கவிஞர்

1981-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளன்று பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் கவிஞர் முத்துலிங்கத்திற்கு விருது வழங்கி உரையாற்றிய போது அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். கூறிய தகவல் இது:

''நான் ஒரு முறை முத்துலிங்கத்தைப் பார்த்து, பத்திரிகை வேலையை விட்டுவிட்டீர்களே, சிரமப்படுவீர்களே, பணம் தருகிறேன் வாங்கிக் கொள்ளுங்கள் என்றேன். பணம் வேண்டாம், அதற்குப் பதில் வேலை கொடுங்கள் என்றார். உழைக்காமல் எதையும் பெறக் கூடாது என்ற தன்மானம் உள்ள மனிதர் அவர் என்பதைப் புரிந்து கொண்டேன். பாரதிதாசன் தன் காலைத் தானே கீழே குனிந்து பார்ப்பது கூட மரியாதைக் குறைவென்று கருதியவர். அப்படிப்பட்ட தன்மானமுள்ள கவிஞர் பெயரில் வழங்கக் கூடிய விருதை முத்துலிங்கம் போன்ற தன்மானம் உள்ளவருக்கு வழங்காமல் யாருக்கு வழங்குவது?'' (காற்றில் விதைத்த கருத்து, ப.176)

இன்றளவும் அதே இராஜ பாட்டையில் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கும் கவிஞர் முத்துலிங்கத்திற்கு இன்னும் பல சிறப்புக்களும் உயரிய விருதுகளும் வந்து சேர வேண்டும் என்பது இலக்கிய ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு; விருப்பமும் கூட.



(13)

# ‘இலட்சியக் கவிஞர்’ வெ. இறையன்பு

“வாழ்க்கையைச் சிலர்
மட்டுமே
வாழ்கிறார்கள்.
பலர் அதை நகர்த்துகிறார்கள்.”

– வெ. இறையன்பு*

**பா**ரதியார், புதுமைப்பித்தன், மு. வரதராசன், ஜெயகாந்தன் ஆகியோர் வரிசையில் இடம்பெறத் தக்க தரமும் திறமும் வாய்ந்த படைப்பாளி வெ. இறையன்பு. அவர் நல்லதோர் படைப்பாளி மட்டுமல்லர்; ஓயாத படிப்பாளியும் கூட. சுருங்கக் கூறின், ‘ஐ.எஸ்.ஐ.’ (I.S.I.) முத்திரை பெற்ற ‘ஐ.ஏ.எஸ்.’ (I.A.S.) அதிகாரி அவர். அவரது ஆளுமை பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. அவர் எழுத்திலும் பேச்சிலும் வல்லவர்; அவரால் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒருங்கே திறம்பட எழுதவும் பேசவும் முடியும். ஜெயகாந்தனுக்கும் கண்ணதாசனுக்கும் பிறகு சிரிக்கவும் சிந்திக்கவும் சிலிர்க்கவும் வைக்கும் குறுங்கட்டுரைகள் படைப்பதில் முத்திரை பதித்து வருபவர் இறையன்பு. ‘ஐ.ஏ.எஸ். தேர்வும் அணுகுமுறையும்’ (1996), ‘ஐ.ஏ.எஸ். வெற்றிப் படிக்கட்டுகள்’ (2005) என்பன அவரது பட்டறிவின் பயனாய்த் தோன்றிய இரு அரிய நூல்கள். அவரது நோக்கில் ‘படிப்பது சுகமே!’ (2000). ‘ஏழாவது அறிவு’ (மூன்று

* வாய்க்கால் மீன்கள், ப.19.

பாகங்கள்: 1999, 2002, 2005). 'உள்ளொளிப் பயணம்' (2000), 'ஓடும் நதியின் ஓசை' (இரு பாகங்கள் : 2001, 2002), 'மென்காற்றில் விளை சுகமே!' (2002), 'வேடிக்கை மனிதர்கள்' (2005) ஆகியவை இறையன்புவின் சிந்தனைத் திறத்தைப் பறைசாற்றும் கட்டுரை நூல்கள். **'சுயத்தை உணர்வதே உண்மையான சுய முன்னேற்றம்'** (ஓடும் நதியின் ஓசை, முதல் பாகம், ப.4) என்பது இறையன்புவின் அழுத்தம் திருத்தமான கருத்து; **'நான் பகிர்ந்து கொள்ள விரும்புபவை என் அனுபவங்களை'** (ப.4) என்பது அவரது ஒப்புதல் வாக்குமூலம். 'அரிதாரம்', 'ஆத்தங்கரை ஓரம்' ஆகிய இரண்டும் இறையன்புவின் புனைகதைத் திறனுக்குக் கட்டியம் கூறும் படைப்புக்கள். 'சின்னச் சின்ன வெளிச்சங்கள்' (1979) இறையன்பு படைத்துள்ள அழகிய தத்துவக் கதைகளின் தொகுப்பு; ஓர் எளிய வாசகரின் கடிதமே இந்நூலுக்கு அணிந்துரையாக இடம் பெற்றிருப்பது தனிச்சிறப்பு. **தி. லீலாவதி, அப்துல் ரகுமான், தமிழன்பன், சுஜாதா ஆகியோர்** வரிசையில் ஹைகூ கவிதைக்கு அரணும் அழகும் சேர்த்து வருபவர் இறையன்பு. 'முகத்தில் தெளித்த சாரல்' (2001) இவ் வகையில் நினைவுகூரத்தக்க நூல். 'வாய்க்கால் மீன்கள்' என்னும் தலைப்பில் முன்னர் (1995) ஒரு கவிதை நூலைப் படைத்த இறையன்பு, தற்போது 'பூபாளத்திற்கொரு புல்லாங்குழல்' (2006) என்ற அண்மைப் படைப்பின் வாயிலாகத் தமக்குக் கவிதைக் கலையும் கைவந்த ஒன்றே என்று மீண்டும் தரணிக்குக் காட்டியுள்ளார். 'நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.' நிறுவனத்தார் வெளியிட்டுள்ள இந் நூலில் 73 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஓவியர் கோபனின் கை வண்ணத்தில் உருவான அழகிய வரைபடங்கள் இந் நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவை கவிதைகளுக்குக் கூடுதல் மெருகினைத் தருகின்றன. இனி, ஒரு கவிஞர் என்ற நிலையில் இறையன்புவிடம் குடிகொண்டிருக்கும் படைப்புத் திறனும் ஆளுமைப் பண்பும் குறித்துச் சுருங்கக் காண்போம்.

பாரதியின் வழியில் 'பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்பதே கவிஞர் என்ற முறையில் இறையன்புவின் தலையாய நோக்கமாக உள்ளது. அதே நேரத்தில் பாரதிதாசனை அடியொற்றிக் 'கெட்ட போரிடும் உலகினை வேரொடும் சாய்த்து, புதியதோர் உலகம் படைக்க வேண்டும்' என்ற முனைப்பும்

இறையன்புவிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது. பதச் சோறாக, சாதிக் கொடுமைக்கு எதிராக அவர் தம் கவிதைகளில் ஆங்காங்கே வெளியிட்டுள்ள கருத்துக்களை இங்கே சுட்டிக்காட்டலாம். இட்டார், இடாதார் எனச் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என ஆணித்தரமாகப் பறையறைந்தார் தமிழ் மூதாட்டி **ஔவையார்**. 'சாதி ஆவது ஏதடா?' என ஆவேசமாகக் கேட்டார் சித்தர் **சிவவாக்கியர்**. 'சாதிகள் இல்லையடி பாப்பா!' எனப் பாடி வளரும் தலைமுறைக்கு வழிகாட்டினார் பாரதியார். 'சாதி இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே' என நெஞ்சு பொறுக்காமல் தம் வேதனையைப் பதிவு செய்தார் **பாரதிதாசன்**. இறையன்புவும் தம் பங்கிற்கு '**விரலைக் கிள்ளும் நகம்**' என்னும் கவிதையில் அங்கதச் சுவையோடு சாதிக் கொடுமைக்கு எதிரான தம் கருத்தினைப் பதிவு செய்துள்ளார். நகைச்சுவை இழையோடும் அக் கவிதை இதோ:

**"சுப்ரமணிய செட்டியார்**
**நகரில்**
**கோவிந்தசாமி முதலியார்**
**தெருவில்**
**ராமசாமி நாயக்கர்**
**சந்தில்**
**குப்புசாமி ஆசாரி**
**மண்டபத்தில்**
**நடக்கும்**
**கவிதைப் போட்டி**
**தலைப்பு**
**'சாதிகள் இல்லையடி பாப்பா!"** (ப.32)

'எங்கெங்குக் காணினும் சக்தியடா!' என்று பாடினார் பாரதிதாசன்; இன்றைய சூழலோ நகர் - தெரு - சந்து - மண்டபம் என 'எங்கெங்குக் காணினும் சாதியடா!' என்னும் சொல்லத் தக்க அளவில் சாதிப் பேயே எங்கும் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. இதனை வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல் இக் கவிதையில் அழகுற எடுத்துக்காட்டியுள்ளார் இறையன்பு.

**"மற்ற நாட்டினர்**
**செவ்வாய்க்கும், புதனுக்கும்**
**வியாழனுக்கும்**

**செல்ல**
**ஆயத்தமாகி விட்டார்கள்**
**நாம் மட்டும்**
**சாதியை ஆராய்ந்து கொண்டு**
**சனியிலேயே**
**இருக்கிறோம்"** (ப.67)

என '**எதிர்காலச் சூரியன்**' என்னும் பிறிதொரு கவிதையிலும் சாதிக் கொடுமைக்கு எதிரான தம் கருத்தினை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

'தூங்கிக் கொண்டிருக்கின்ற தமிழன், தாலாட்டுப் பாடினால் இன்னமும் குறட்டை விட்டுத் தூங்கத் தொடங்கி விடுவான்' என்று கருதியோ என்னவோ பாரதியார் தாலாட்டு பாடவில்லை; அவர் வழி வந்த பாரதிதாசனோ 'ஆண் குழந்தை தாலாட்டு', 'பெண் குழந்தை தாலாட்டு' என்று தனித்தனியே ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் பாடினாலும், அவற்றில் சமுதாய மறுமலர்ச்சியையும் முற்போக்குச் சிந்தனையையும் பாடுபொருளாக அமைத்துக் கொண்டார். பாரதிதாசனை அடியொற்றி இறையன்புவும் விழிப்புணர்வைப் பாடுபொருளாகக் கொண்டு '**விழிக்க ஒரு தாலாட்டு**' என்னும் தலைப்பில் ஒரு கவிதை பாடியுள்ளார். அதில் தாய்மார் களுக்குக் கவிஞர் விடுக்கும் அன்பான வேண்டுகோள் இதுதான்.

**"தாய்மார்களே!..**
**உங்கள் குழந்தைகளுக்கு**
**அயோத்தி ராமனைப் பற்றிக்**
**கூறுவதோடு**
**நிறுத்திக் கொள்ளாதீர்கள்**
**சர் சி.வி. ராமனைப் பற்றியும்**
**ஆழமாய் விதையூன்றுங்கள்.**

**ஐயப்பனின்**
**கதையை மட்டுமல்ல**
**ஐன்ஸ்டினின்**
**ஆய்வைப் பற்றியும்**
**அறிவைப் புகட்டுங்கள்"** (பக்.97-98)

**"இலட்சியத் தீ**
**இதயம் முழுவதும் வியாபித்து**
**ஏதாவது**
**சாதித்துத் தீர வேண்டும்**
**என அவர்களைத்**
**தீர்மானிக்கச் செய்யுங்கள்"** (ப.98)

என்பதே கவிஞர், தாய்மார்களுக்கு இடும் அன்புக் கட்டளை.

**"தூங்கும்பொழுது கூட**
**இதயத்தில்**
**விழிப்புணர்வு விரவ வேண்டும்"** (ப.99)

என அறுதியிட்டு உரைக்கும் கவிஞர், குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் விழிப்புணர்வை விதைக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளார்; உறுதியாகவும் உள்ளார்.

இன்றைய ஆணாதிக்கச் சமுதாயம் பெண் குலத்திற்கு இழைத்து வரும் பல்வேறு கொடுமைகளுக்கு எதிராக அழுத்தமாகவும் ஆழமாகவும், பரிவுடனும் பொறுப்புடனும் தம் கவிதைகளின் வாயிலாகக் குரல் கொடுக்கத் தவறவில்லை இறையன்பு. '**பெண் பார்க்கும் படலம்**', '**பனித்துவிழியில் பாற்கடல்**', '**விசாரிக்கப்படாத விலாசங்கள்**', '**விழியில் விரிசல்களா?**' ஆகிய கவிதைகள் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

**"பெண்ணின்**
**உடலில்**
**ஐ.எஸ்.ஐ. முத்திரை**
**இருக்கிறதா**
**என்பது தவிர**
**அனைத்தும்**
**ஆராயப்பட்டது"** (ப.51)

என்பது 'பெண் பார்க்கும் படலம்' பற்றிய கவிஞரின் கூர்மையான விமர்சனம்.

கவிஞரின் கருத்தில் பெண்கள் 'பெயர் வெளியாகாமல் / கதை பிரசுரமாகும் / கதாசிரியர்கள்' (ப.64) போன்றவர்களாம். அவர்கள்,

‘விளம்பரமில்லாமல் / செய்கிற தியாகங்கள் ஆயிரம் / யாகங்களை / அர்த்தமற்றதாக்கிவிடுகின்றன’வாம்! (ப.65) - கவிஞரின் முற்போக்குப் பார்வைக்குக் கட்டியம் கூறும் இடம் இது!

**“ஆறாக ஓடி சலசலப்பை**
**ஏற்படுத்தியது போதும்;**
**கடலாகப் பொங்கி எப்போது**
**போராட்டப் புயல்களைத்**
**தோற்றுவிக்கப் போகிறீர்கள்?”** (ப.87)

எனக் கவிஞர் இன்றைய பெண் இனத்தை நோக்கித் தொடுத்திருக்கும் கேள்விக் கணை பொருள் பொதிந்த ஒன்றாகும்.

புதுக்கவிதையின் தனிப்பெரும் பண்புகள் இரண்டு. ஒன்று, இன்றைய சமுதாயத்தையோ மனிதனையோ நோக்கிக் கூர்மையான கேள்விக் கணைகளைத் தொடுப்பது; இன்னொன்று, இரண்டையும் ஆழமாக விமர்சனம் செய்வது. புதுக்கவிதைக்கே உரித்தான இவ்விரு பண்புகளும் கவிஞர் இறையன்புவிடம் சுடர் விட்டு நிற்கக் காண்கிறோம். உள்ளங் கவர் உதாரணம் ஒன்று இதோ:

**“பக்தர்களே!**
**ஒரு நிமிடம்.**
**நைவேத்தியம் செய்தவற்றை**
**எல்லாம்**
**சாமியே**
**சாப்பிடுமென்றால்**
**படைப்பதால்**
**பரவசமடைவீர்களா**
**சொல்லுங்கள்?”** (ப.68)

இங்கே பக்தர்களை நோக்கிக் கவிஞர் கேட்டிருக்கும் வினா காரசாரமானது; நேரடியாகச் சென்று தொடர்புடையவர்களைத் தாக்கும் வல்லமை பொருந்தியது.

‘முதிர்ச்சி’ என்ற கவிதை இன்றைய இளைய தலை முறையைப் பற்றிய கவிஞரின் விமர்சனத்தை முன்வைத்துள்ளது. அக் கவிதை வருமாறு:

"இன்றைய இளைஞர்கள்
நடைமுறை
வாழ்க்கையைப்
புரிந்து கொண்டவர்கள்
அதனால்தான்
காதல் கடிதங்களைப்
பகிர்ந்து கொண்டவர்கள்
கல்யாணப் பத்திரிகையையும்
பரிமாறிக் கொள்கிறார்கள்" (ப.88)

'செம்புலப் பெயல்நீர் போல் அன்புடை நெஞ்சம் தாமாகக் கலந்த' காலமெல்லாம் இன்று மலையேறி விட்டது! காதல் கடிதங்களைக் கணக்கின்றிப் பகிர்ந்து சொண்டவர்களே கணக்குப் பார்த்துக் கல்யாணப் பத்திரிகையையும் பரிமாறிக் கொள்ளும் கலிகாலமே இன்று நடந்து வருகிறது!

எந்த விதமான பாசாங்கும் பூச்சும் இன்றிப் போகிற போக்கில் இயல்பான மொழியில் இன்றைய நடைமுறையைச் சுட்டிக் காட்டுவது – சில நேரங்களில் தட்டிக் கேட்பது – இன்னும் சில வேளைகளில் குத்தியும் காட்டுவது புதுக்கவிதையின் தனித் தன்மைகளுள் ஒன்று ஆகும்.

"சுருக்கிக் கூப்பிடுவதற்கு
ஏன்
நீளமாய்ப்
பெயர் வைக்கிறார்கள்?" (ப.89)

என்னும் குறுங்கவிதை இவ் வகையில் மனங்கொளத் தக்கதாகும். பிறிதோர் எடுத்துக்காட்டு:

"மௌனத்தைப் பற்றி
மணிக்கணக்காய்ப்
பேசினான்" (ப.60)

'**உன்னிலிருந்து தொடங்கு**' எனக் கவிஞர் இக் கவிதைக்குத் தந்திருக்கும் தலைப்பு படிப்பவர் சிந்தனையைத் தூண்டுவதாகும்.

'காதலைப் பாடாத கவிஞன் இல்லை; காதலைப் பாடாதான் கவிஞன் இல்லை' என்பார்கள். இக் கூற்று இறையன்புவுக்கும்

பொருந்துவதாகவே உள்ளது. சமூக அவலங்களைச் சாடும் போது வல்லினமாக இயங்கும் இறையன்பு, காதலைப் பாடும் போது மெல்லினமாக மாறிவிடுகின்றார்; கற்பனையும் முருகியலும் கை கோர்த்துச் செல்லும் வண்ணம் கவிதை படைக்கின்றார். 'நெடுநாள் சந்தேகம்' என்பது கவிஞர் படைத்துள்ள ஒரு காதல் கவிதை. அதில் வரும் காதலனுக்கு நெடுநாளாக ஒரு சந்தேகம். என்ன சந்தேகம் அது என்று கேட்கிறீர்களா? இதோ கவிஞரே கூறுகிறார், கேளுங்கள்:

**"கண்ணே**
**உன் விழிகளோ**
**மீன்கள்**
**இதழ்களோ**
**பவளங்கள்**
**பற்களோ**
**முத்துகள்**
**கழுத்தோ**
**சங்கு**
**கூந்தலோ**
**அலைகள்**
**எனக்கொரு**
**சந்தேகம்**
**உன்னை உன்**
**பெற்றோர்**
**கடற்கரையோரம்**
**கண்டெடுத்தார்களா**
**என்ன?"** (ப.1)

'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே' என்று காதல் மொழி பேசிய சிலப்பதிகாரக் கோவலனின் மறுபதிப்பாக விளங்குகின்றான் இக் கவிதையில் வரும் காதலன். கவிஞர் படைக்கும் பிறிதொரு காதலன்,

**"உனது பெயரை**
**மீண்டும் மீண்டும்**
**உச்சரித்த பொழுதுதான்**
**இனிப்புக்கு இன்னொரு அர்த்தம்**
**இருப்பதையே**
**எனது நா உணர்ந்து கொண்டது"** (ப.130)

எனக் காதல் உணர்வு ததும்பி நிற்கும் ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்குகின்றான்.

சமூக, பொருளாதார, அரசியல் நடப்புகளையும் நிகழ்வு களையும் இறையன்பு தமக்கே உரிய பாணியில் தம் கவிதைகளில் ஆங்காங்கே பதிவு செய்துள்ளார்.

**“இங்கே**
**எல்லாரும் பொதுவுடைமைவாதிகளாய்**
**மாறுவது**
**தம்மைவிடப்**
**பணக்காரர்களைப்**
**பார்க்கும் போது மட்டும் தான்”** (ப.66)

என்பது ‘பொதுவுடைமை’ என்னும் தலைப்பில் கவிஞர் படைத்திருக்கும் ஒரு குறுங்கவிதை. இதே போல் ‘திட்பம்’ என்னும் தலைப்பில் கவிஞர் தீட்டியுள்ள பிறிதொரு குறுங்கவிதையும் சிந்தனையைத் தூண்டுவது. அக் கவிதை இதோ:

**“இங்கே புல்லுக்குப்**
**போய்ச் சேர**
**வேண்டுமென்பதற்காகவே**
**நெல்லுக்கு**
**நீர் திறந்துவிடப் படுகிறது”** (ப.30)

‘நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி, புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்’ என்னும் பழங்கவிதையே இக் கவிதையில் காலத்திற்கு ஏற்ற புதுக்கோலத்தினை எடுத்துள்ளது.

எப்போதும் அதிரடியே - ஆர்ப்பாட்டமே - ஆரவாரமே எல்லோரையும் எளிதாகவும் விரைவாகவும் சென்று சேரும்; ஆனால், சென்று சேர்ந்த வேகத்திலேயே அவை உடனடியாக மறைந்தும் போய்விடும். அமைதியோ மெதுவாகவே நடை பயிலும்; ஆனால், காலமெல்லாம் நிலைத்து நிற்கும். இக் கருத்தினைப் புலப்படுத்தும் விதத்தில் ‘வாய்மை’ என்னும் தலைப்பில் இறையன்பு படைத்துள்ள கவிதை வருமாறு:

"அமைதியாக
வருகின்ற நிலவல்லவா
இரவெல்லாம்
நிலைத்து நிற்கிறது?
இடி என்னும்
தண்டோரா
போட்டுக் கொண்டு
வரும் மின்னல்
நொடியில்
மறைந்து விடுகிறது" (ப.17)

நிலவு - இடி - மின்னல் என்னும் மூன்றையும் கொண்டு கவிஞர் இங்கே வாசகர்களுக்கு உணர்த்தி இருக்கும் செய்தி விழுமியது. ஆழ்ந்து நோக்கினால், இக் கவிதை இறையன்புவின் படைப்புத் திறத்திற்கும் ஆளுமைப் பண்புக்கும் பொருந்தி வருவதே ஆகும். எழுத்திலோ பேச்சிலோ தனி வாழ்விலோ இறையன்பு ஒரு போதும் தண்டோரா போட்டுக் கொள்வதே இல்லை; முழு நிலவு போல் அமைதியாக இருந்து காலமெல்லாம் நிலைத்து நிற்கவல்ல படைப்புக்களை உருவாக்குவதே அவரது உயரிய குறிக்கோளும் கொள்கையும் ஆகும்.

(14)

# பத்மாவதி தாயுமானவர்:
# ‘அர்த்தநாரீசுவர ஆளுமை!’

> “இவரது [பத்மாவதி தாயுமானவரது] கவிதைகள் நாடக மேடைக்குப் போகும் நடிகைகளைப் போல வேஷம் போட்டுக் கொள்ளாமல், வேலைக்குப் போகும் பெண்களைப் போல வித்தியாசமாகத் தெரிகின்றன.”
>
> – மு. மேத்தா*

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகில் எண்பதுகளில் வீறு கொண்டு எழுந்த அடிப்படையான இலக்கியப் போக்குகள் இரண்டு. ஒன்று, **தலித்தியம்**. மற்றொன்று, **பெண்ணியம்**. இவ்விரு போக்குகளின் முதன்மையான நோக்கமும் வெளிப்பாடும் ஒன்றே; தன்னை - தன் ஆற்றலை, தனித்தன்மையை - முழுமையாக உணர்தலே. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் குறிப்பிடுவது போல். ‘‘பெண்ணின் இன்றைய அவலத்தை உணர்த்தவும், அவலங்களுக்கான காரணங்களைக் கூறவும், அவற்றிலிருந்து விடுபடும் வழிகளைச் சொல்லவும், இந்த விழிப்புணர்வைத் தடம்பிடித்து முன்னேறவும் தூண்டுகிற எழுத்து தான் பெண்ணிய எழுத்து’’(இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை, ப.250). இத்தகைய பெண் எழுத்தினைப் புதுக்கவிதை உலகில் ஆற்றலோடு கையாண்டவர்களுள் முதன்மையானவர் இரா. மீனாட்சி. அவரைத் தொடர்ந்து எண்பதுகளின் பெண்ணியக் கவிஞர் வரிசையில்

---

* வாழ்த்துரை, பத்மாவதி தாயுமானவரின் ‘மலர் விடும் மூச்சு’, ப.5.

இடம்பெறுவர் பத்மாவதி தாயுமானவர். ஒரு குடும்பத் தலைவியாக இருந்து கொண்டே பெண்ணின் அனுபவங்களை, உணர்வுகளை, வேதனைகளைத் தனித்தன்மை துலங்கும் மொழியில் வெளியிட்ட கவிஞர் அவர். 'மலர் விடும் மூச்சு' (1986), 'மறுபடியும்' (1990), 'அடுப்பு வெளிச்சத்தில்' (2002) என்பன அவர் இதுவரை வெளியிட்டுள்ள கவிதைத் தொகுப்புகள் ஆகும். 2001-ஆம் ஆண்டிற்கான வைரமுத்து கவிஞர் தின விருது பெற்றவர் பத்மாவதி தாயுமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. இனி, அவரது படைப்பாளுமை குறித்து இக் கட்டுரையில் சுருங்கக் காண்போம்.

## உச்சித் திலகமாயிருக்கும் பெண் எழுத்து

"சந்திரமதியின் 'தாலி' போல
மறைவாயிருந்த பெண் எழுத்து
உச்சித் திலகமாயிருக்கிறது"

[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.9]

என்னும் கவிஞரின் கூற்றுக்குக் கட்டியம் கூறி நிற்கும் கவிதை 'வேக்காடு'. இக் கவிதை ஒன்று போதும் அவரது வெஞ்சினத்தைப் பறைசாற்ற. கவிஞரின் அனுபவப் பதிவாக அமைந்த அக்கவிதை வருமாறு:

"பிரசவத்தில் துணையிருக்கும்
தாதிப் பெண்ணையும்
சுடுகாட்டுப் பணியாளனையும்
சந்தித்தேன்.

தாதிப் பெண் சொல்கின்றாள்
'பெண்குழந்தை என்றால்
பிறப்பதற்கு சற்று தாமதமாகும்' என்று.
மனதில் என்ன தயக்கமோ அதற்கு,
இந்த மண்ணில் வந்து விழுவதற்கு.

விட்டேத்தியாக வெட்டியான் சொல்கின்றான்
'பெண் பிணம் என்றால்
சீக்கிரம் வெந்துவிடும்
வேலை சுளுவாய் முடிந்துவிடும்'

**ஏன் முடியாது?**
**அவர்கள் தான் வாழுகின்ற**
**நாட்களிலேயே பாதி வெந்துவிடுகிறார்களே!"**

[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.54]

பிரசவத்தில் துணையிருக்கும் தாதிப் பெண், பிணங்களைச் சுடும் வெட்டியான் என்னும் இருவரது அனுபவ மொழிகளைக் கொண்டு கருவறை முதல் கல்லறை வரை பெண்ணினம் சந்திக்க நேரும் அவலங்களை இக் கவிதையில் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார் கவிஞர். பெண் குழந்தை சற்று தாமதமாகப் பிறப்பதற்குக் காரணம் எல்லா வகையிலும் பாதுகாப்பான தாயின் கருவறையை விட்டுப் பொல்லாத இந்த மண்ணுலகிற்கு வந்து விழுகிறோமே என்ற தயக்கமாம்! பிரசவத்தில் துணையிருக்கும் தாதிப் பெண் தன் அனுபவத்தில் கண்டறிந்த உண்மையாம் இது! தன் கருத்தைச் சொல்லும் முறையிலும் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே காணலாகும் வேறுபாட்டினைக் கவிஞர் இங்கே திறம்படச் சுட்டிக் காட்டியுள்ளார். வெட்டியான் 'விட்டேத்தியாக'ச் சொல்கிறானாம்; அதுவும் அவனது வேலை சுளுவாய் முடிந்து விடுவதாலாம். பெண் பிணம் என்றால் சீக்கிரம் வெந்துவிடுமாம்! 'பெண்கள் தான் வாழுகின்ற நாட்களிலேயே பாதி வெந்து விடுகிறார்களே!' என்னும் கவிதையின் முடிப்பு வரிகளில் கவிஞர் கையாண்டுள்ள சொற்கள் சிலவே; ஆனால் அவை உணர்த்தும் துயரம் மிகப் பெரிதாகும்.

## அர்த்தநாரீசுவர ஆளுமை

பொன்மணி வைரமுத்து 'அடுப்பு வெளிச்சத்தில்...' தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவது போல், "தாமரை இலையில் சுற்றிய மல்லிகைப் பந்தாய் மணக்கும் கவிதைகள் ஒரு புறம். வெடிப்பதற்குத் தயாராய் நீண்டிருக்கும் துப்பாக்கிக் கவிதைகள் ஒரு புறம். இருவேறு பண்புகளின் சேர்மானத்தோடு அர்த்தநாரீசுவர ஆளுமையைக் கொண்டிருக்கிறது" (ப.4) பத்மாவதி தாயுமானவரின் படைப்புலகம்.

தாமரை இலையில் சுற்றிய மல்லிகைப் பந்தாய் மணக்கும் கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

**"'இருட்டறைக்குள் என் பிள்ளைக்கு**
**என்னமாய் வியர்க்கும்' என்று**

**கருப்பைக்குக் கை முளைத்துக்**
**கவரி வீசிக் களைத்திருக்கும்.**

**தூங்க வைத்து விழித்திருப்பதும்,**
**உண்ண வைத்துப் பசித்திருப்பதும்,**
**எங்கு எப்போது நிகழினும், அது**
**தாய்மையின் தரிசன நேரம்"**

[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.109]

திருவாசகத்திற்கு மட்டுமன்று, 'தாய்வீகம்' என்னும் தலைப்பில் பத்மாவதி தாயுமானவர் படைத்துள்ள இக் கவிதை வாசகத்திற்கும் உருகார், ஒருவாசகத்திற்கும் உருகார் எனலாம்.

வெடிப்பதற்குத் தயாராய் நீண்டிருக்கும் பத்மாவதி தாயுமானவரின் துப்பாக்கிக் கவிதை நறுக்கு ஒன்று:

**"பெண்ணே!**
**நிமிர்வது திமிரல்ல,**
**குனிவது தீர்வல்ல,**
**நீ நிமிர்!"** [அடுப்பு வெளிச்சத்தில்..., ப.66]

கவிஞரின் மதிப்பீட்டில் 'நேற்றைய தழும்புகளை விட / இன்றைய வியர்வை / நெற்றிக்கு கூடுதல் அலங்காரம்!' அவரைப் பொறுத்த வரையில் கைரேகையைக் காரணம் காட்டுவது என்பது மனச்சோகை; மனித முயற்சி தான் அசுர சாதகம் அன்றாடம். 'எண்ணத் தூக்கம் என்றைக்குக் கலையும்?' எனக் கூரிய கேள்விக் கணையினைத் தொடுக்கும் கவிஞர், 'வெல்ல வேண்டும் இந்த நல்லெண்ணம் பொறியாக வெறியாக' என அறிவுறுத்துகின்றார்; முடிந்த முடிபாக,

**"வாளாதிருந்தது போதும்**
**நாம் வாளாய் இருப்பதே நியாயம்"**

[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.21]

என முழங்குகின்றார்.

## தெறிப்பான சிந்தனைகளும் உயிர்ப்பான சொல் வீச்சுக்களும்

பத்மாவதி தாயுமானவரின் கவிதை மொழி தெறிப்பான

சிந்தனைகளையும் உயிர்ப்பான சொல் வீச்சுக்களையும் தன்னகத்தே கொண்டது.

**"மழையே!**
**வேறு நேரம் பார்**
**பள்ளி சென்ற என் பிள்ளை**
**வீடு திரும்பும் நேரம்"** [மறுபடியும்..., ப.37]

எனத் தாய்மை உணர்வினைச் சித்திரிக்கும் போதும்,

**"'அம்மா! பள்ளிக்கூடம் போய்வருகிறேன்'**
**'வட்டிலை எடுத்துக்கோ, மறக்காமல்**
**நல்லாச் சாப்பிடு'"** [மறுபடியும்..., ப.38]

என இன்றைய நடப்பினை உரையாடல் வடிவில் எடுத்துரைக்கும் போதும்,

**"கண்ணே, கண்ணகி!**
**கதவைச் சாத்திக்கொள்.**
**கவனமாயிரு!**
**மாதவி வீடு வரை**
**போய் வந்து விடுகிறேன்"** [மறுபடியும்..., ப.22]

என அங்கதக் குறிப்புடன் ஆடவர் இயல்பினைச் சுட்டிக்காட்டும் போதும்,

**"இடங்கொடுக்காதீர்கள் :**
**இந்தப் பொல்லாத பெண்களுக்கு.**
**இடங் கொடுத்தீர்களானால்**
**வலமும் கேட்கும்"** [மறுபடியும்..., 48]

எனப் பெண்களின் தனிக்குணத்தினைப் பதிவு செய்யும் போதும்,

**"நல்லது, நடக்கும்**
**அல்லது, ஓடும்"** [மறுபடியும்..., ப.50]

என வழக்கமான ஆமை, முயல் கதையை வித்தியாசமான பார்வையில் வெளிப்படுத்தும் போதும்,

**"விசுவரூபம் சாத்தியமில்லை**
**சுய ரூபத்தையாவது**
**நிரூபிக்க வேண்டிய நேரமிது"** [மறுபடியும்..., ப.69]

எனச் சமகாலச் சமூகச் சூழலை அம்பலப்படுத்தும் போதும்,

**"தூக்கி வைத்துக் கொள்ள**
**அனுமனைப் போல ஆளிருந்தால்,**
**இராம லட்சுமணரும்**
**தோளில் ஏறுவர்"** [மறுபடியும்.., ப.21]

என முன்னைப் பழமையைப் பின்னைப் புதுமை நோக்கோடு பதிவு செய்யும் போதும் பத்மாவதி தாயுமானவரின் கைவண்ணத்தில் தெறிப்பான சிந்தனைகளும் உயிர்ப்பான சொல் வீச்சுக்களும் களிநடம் புரிந்து நிற்கக் காண்கிறோம்.

## கவிஞரின் படைப்பாளுமை

எந்தக் கருத்தையும் திறனறிந்த சில சொற்களால் - வெல்லும் சொற்களால் - புலப்படுத்துவதில் வல்லமை படைத்தவராக விளங்குகிறார் பத்மாவதி தாயுமானவர்.

**"சிரிக்கும் கண்கள்; எரிக்கும் கொங்கை**
**வினோதமான கூட்டணி"**
[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.30]

- கண்ணகியின் ஆளுமை பற்றிய கவிஞரின் வித்தியாசமான பதிவு இது.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை : இவை நாம் கேள்விப்பட்டிருக்கும் ஆசைகள். கவிஞர் 'விண்ணாசை' எனப் புதியதோர் ஆசையினைச் சுட்டுகின்றார். அது என்ன 'விண்ணாசை?' என்கிறீர்களா? இதோ, கவிஞரே கூறுகிறார் கேளுங்கள்;

**"காணி நிலம் போதும்**
**வானம் மட்டும்**
**முழுவதும் வேண்டும்!"**
[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.33]

சொல் விளையாட்டும் கவிஞருக்குக் கைவந்த ஒன்றே என்பதைப் பறைசாற்றும் பதச்சோறு இது:

**"நாங்கள் சாதாரணங்கள்.**
**எங்களுக்கு ஏன் சதா ரணங்கள்?"**
[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.66]

"நூற்றாண்டுகளைச் சுமந்து கொண்டு
ஊர்ந்து கொண்டிருப்பதைக் காட்டிலும்
இந்த நொடியை[ப்] பிடித்துக் கொண்டு பறந்து விடலாம்"
[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.78]

என்பது கவிஞர் உணர்த்தும் வாழ்க்கைப் பாடம்.

"ஒன்றே குலம் - ஒருவனே தேவன்
அதற்கும் மேல் நன்றே, ஒரே வாழ்க்கைத் துணை"
[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.95]

-எய்ட்ஸ் இல்லா உலகம் உருவாகக் கவிஞர் முன்மொழியும் வாழ்க்கை நெறி இது!

"நீ ஏறினால் அது அரங்கம்
இறங்கினாலும் அது சுரங்கம்"
[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.10]

என்பது கவிஞர் இளைய தலைமுறைக்குச் சூட்டும் புகழாரம்.

### கவிஞர் போற்றும் நட்பூ!

காலந்தோறும் தமிழ் இலக்கியம் பொன்னே போல் போற்றி வந்துள்ள வாழ்வியல் விழுமியங்களுள் தலையாயது நட்பு ஆகும். சங்கச் சான்றோர் **கபிலர்** முதல் இன்றைய புதுக்கவிஞர் **அறிவுமதி** வரை நட்புக்குச் சூட்டியுள்ள புகழாரங்கள் பலவாகும். வாழையடி வாழை என நட்பினைச் சிறப்பித்துப் பாடி வரும் கவிஞர் வரிசையில் பத்மாவதி தாயுமானவரும் சேர்ந்துள்ளார். 'நட்புச் சூத்திரம்' என்னும் அவரது கவிதை இவ் வகையில் குறிப்பிடத்தக்கதாகும். 'காதலில் ஒருதலை என்கிற சோகம் உண்டு. நட்புக் கரத்திற்கோ பல விரல் என்கின்ற பெருமை மண்டும்' எனத் தொடங்கும் அக் கவிதை, காணா நட்பு, பேனா நட்பு, வலை நட்பு என்றாற் இன்று போல் இருந்து வரும் நட்பின் பல்வேறு பரிமாணங்களைச் சுட்டிக்காட்டி, நட்புக்கு எந்தத் தொலைவும் பொருட்டன்று என்பதைப் புலப்படுத்துகின்றது. கடவுள் வரங்களை நட்பின் மூலம் தான் கொடுத்தனுப்புகின்றாராம்! நட்பூக்களைத் தொடுக்கும் போது உயிரின் நரம்புகளும் உற்சாக வாசம் பெறுகின்றதாம்! பரிசோதித்துப் பார்த்தால் கர்ப்ப நாடி போலே நட்பு நாடியும் துடிப்பது தெரியுமாம்! நட்பு சொர்க்கத்தை விட மேலான ஓர் இடத்தில் உச்சரிக்கப்படும் பெருமை வாய்ந்ததாம்! ஆண்பாலில்,

பெண்பால் திரிந்து போகாது என்பதை நல்ல நட்பால் நிரூபிக்கலாமாம்! நட்பு என்பது முடக்கிப் போடும் பக்கவாதம் அல்லவாம்; உடைக்க முடியாத பக்க பலமாம். இங்ஙனம் நட்பின் தனிப்பெருஞ் சிறப்புக்களை நிரந்தினிது கூறி வரும் கவிஞர் நிறைவாக,

**"உறவுப் பெயர்களின்**
**வரிசையில்**
**நட்பையும், காதலையும்**
**சேர்க்காத வரையில்**
**அகராதி எப்படிப் பூர்த்தியாகும்?"**

[அடுப்பு வெளிச்சத்தில்..., பக்.13-15]

என்னும் பொருள் பொதிந்த வினாவுடன் கவிதையை முடித்திருப்பது சிறப்பு.

## அன்பை ஆராதிக்கும் கவிஞர்

'அன்பே சிவம்' என அறுதியிட்டு உரைப்பார் திருமூலர். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பது வள்ளுவர் வாக்கு. கவியரசர் பாரதியாரின் அகராதியில், 'அன்பிற் சிறந்த தவம் இல்லை'. நிறைமொழி மாந்தர்களின் இம் மந்திர மொழிகளை அடியொற்றிப் பத்மாவதி தாயுமானவரும் தம் பங்கிற்கு 'அழ...கு' என்னும் கவிதையில் அன்பினைப் போற்றிப் பாடியுள்ளார்.

**"அழகாயிருக்கிறார்கள்**
**அலங்காரம் செய்யும் போது அல்ல,**
**அன்பு செய்யும் போது"**

என மொழியும் கவிஞர்,

**"அன்பே - தலை**
**அன்பே - தளை**
**அன்பே - தழை**

**அன்புடையீர்**
**ஒருபோதும் அன்பு உடையீர்**

**செய் அல்லது செத்துமடி**
**அன்பு செய் அல்லது... அன்பே செய்"**

[அடுப்பு வெளிச்சத்தில்..., ப.17]

என அழுத்தம் திருத்தமாக அன்பினை ஆராதிக்கின்றார்; திருமூலர் நெறி நின்று 'அன்பே செய்' என மனித குலத்திற்கு அறைகூவல் விடுக்கின்றார்.

**குழந்தைகள் உலகம்**

பத்மாவதி தாயுமானவர் படைக்கும் குழந்தைகள் உலகம் தனித்தன்மை வாய்ந்தது; மிகவும் இயல்பானது. '...ம்மா!' என்ற கவிதை இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

> **"சொகுசான இருக்கைகள், சுழலும் நாற்காலிகள்,**
> **சாய்வான படுக்கைகள், ஆடும் அதிசயங்கள்**
> **ஆயிரமாய்ப் பார்த்துவிட்டேன்.**
> **ஆனாலும் அம்மா, அம்மா உன் இடுப்பைப் போல்,**
> **என்னை இடுக்கிக் கொள்ள**
> **எந்த இருக்கைக்கும் தெரியவில்லை"**
>
> [அடுப்பு வெளிச்சத்தில்..., ப.18]

எனத் தன் மழலை மொழியில் தாயின் இடுப்பினைப் போற்றுகின்றது பச்சிளங் குழந்தை ஒன்று.

'தாய்மை பெண்மையின் உருகுநிலை' எனப் பாராட்டும் கவிஞர். 'ஒரு சிசு கோபித்துக் கொள்கிறது' என்னும் பிறிதொரு கவிதையில் தாய்மையின் மறுபக்கத்தைக் காட்டவும் தவறவில்லை.

> **"முகத்தை யாரும் பார்ப்பதில்லை.**
> **முதலில் இதைத்தான் கேட்கிறார்கள்.**
>
> **ஆணா? பெண்ணா?**
> **பெற்றுச் சோர்ந்து கிடக்கும் தாய்க்கும் கூட**
> **முதல் கேள்வி இதுதான்"**
>
> [அடுப்பு வெளிச்சத்தில்..., ப.29]

'அம்மா என்றால் அன்பு' என்பார்கள். ஆனால் இன்று அன்பே வடிவான அம்மாக்கள் எங்கே வரிசையில் நிற்கிறார்கள் தெரியுமா?

> **"ஆஸ்பத்திரி வாசலில்**
> **அபார்ஷனுக்காக வரிசையில்**
> **அன்பே உருவான**
> **அம்மாக்கள்"** [மறுபடியும்..., ப.18]

என்னும் கவிஞரின் படப்பிடிப்பு படிப்பவர் இதயத்தைக் கசக்கிப் பிழிகின்றது.

## எது நல்ல இலக்கியம்?

**"என் தந்தைக்கும்**
**செமிக்க வேண்டும்,**
**என் பிள்ளையும் ரசிக்க வேண்டும்;**
**அப்படிப்பட்ட லேகியம்"** (மறுபடியும்..., ப.12)

என்பது பத்மாவதி தாயுமானவர் நல்ல இலக்கியத்திற்கு வகுக்கும் வரைவிலக்கணம். இவ்விலக்கணத்திற்கு ஏற்பவே அவரது படைப்புக்கள் அமைந்துள்ளன. பத்மாவதி தாயுமானவர் கவிதைகளைப் படித்து முடித்தபோது எனக்குள் எழுந்த உணர்வு இதுதான்; மூத்த கவிஞர் சிற்பி பத்மாவதி தாயுமானவரின் முதல் கவிதைத் தொகுதியான 'மலர் விடும் மூச்'சினைக் 'கவனத்திற்கு உரிய ஒரு படைப்பு' என மதிப்பீடு செய் துள்ளார்; அவரது தனித்துவங்களையும் அடையாளம் கண்டுள்ளார். கவிஞர் வைரமுத்து, பத்மாவதி தாயுமானவருக்கு எழுதிய ஒரு தனிப்பட்ட கடிதத்தில், 'இத்தனை காலம் எங்கிருந்தீர்கள்? இல்லை! இல்லை! இத்தனை காலம் உங்கள் கவிதைகளைக் காணாமல் என் கண்கள் எங்கு தொலைந்தன?' என உருகி உருகிப் பாராட்டியுள்ளார். பொன்மணி வைரமுத்துவும் தம் பங்கிற்கு, 'மென்மையும் வன்மையும் சொந்த பெண்மையின் கம்பீரத்தை தொகுதியெங்கும் பார்க்க முடிகிறது' என 'அடுப்பு வெளிச்சத்தில்...' தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் பத்மாவதி தாயுமானவரின் பாட்டுத் திறத்திற்குப் புகழாரம் சூட்டியுள்ளார். இங்ஙனம் முன்னணிக் கவிஞர்கள் அனைவரது ஒருமித்த - ஒட்டுமொத்த - பாராட்டு மொழிகளுக்கும் புகழாரங்களுக்கும் ஆளான ஒரு கவிஞரைத் தமிழ் கூறு நல்லுலகம் ஏன் இதுவரை கண்டுகொள்ளவில்லை? கொண்டாடவில்லை? இது யார் குற்றம்? என்ன காரணம்? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்; சொல்ல முடியும்!



# 15

# ஆற்றல்சால் கவிஞர் தங்கம் மூர்த்தி

> "கவிதை எழுத, உருவாக, தோன்ற ஒவ்வொருவருக்கும் ஒரு காரணமிருக்கும். கவிஞர் தங்கம் மூர்த்திக்கு கோபமே காரணம். சமூகத்தின் அவலங்களைக் கண்டு பொங்கி எழுந்ததன் விளைவாகவே (அவரது) கவிதைகளை உணர முடிகிறது."
>
> – பொன். குமார்*

'முதலில் பூத்த ரோஜா' என்னும் ஹைகூ தொகுப்பின் மூலம் 1994-ஆம் ஆண்டில் இருபதாம் நூற்றாண்டுக் கவிதை உலகில் அடியெடுத்து வைத்தவர் தங்கம் மூர்த்தி. தொடர்ந்து அவரது கைவண்ணத்தில் வெளிவந்த 'தங்கம் மூர்த்தி கவிதைகள்' (2004), 'பொய்யெனப் பெய்யும் மழை' (2005), 'என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து...' (2010), 'கவிதையில் நனைந்த காற்று' (2012), 'மழையின் கையெழுத்து' (2013) என்னும் தொகுப்புக்கள் அவரை ஓர் ஆற்றல்சால் கவிஞராக இலக்கிய உலகிற்கு அடையாளம் காட்டின. பேராசிரியர் பாலாவின் சொற்களில் குறிப்பிடுவது என்றால், ''எவரையும் நகலெடுக்காத தனிப்பார்வை, வாழ்வை அதன் இருளகற்றி விளக்கமுறக் காட்டும் அறிவுப் புலம், வாசிக்க இனிமை நலம் காட்டும் புதுமொழி, எளிமை, எள்ளல், தோழமை, நயம்பட உரைக்கும் விமர்சனம் ஆகியவற்றால் தமிழ் உலகு புறக்கணிக்க

---

* கவிப்பயணம், ப.230.

முடியாத புதுக்கவிதையாக (வலம்) வருகிறார் தங்கம் மூர்த்தி'' ('முதல் உரை', தங்கம் மூர்த்தி கவிதைகள், பக்.VIII-IX).

## நகைச்சுவை + நளினம் = நயமான வெளிப்பாடு

ஹைகூ கவிதை, புதுக்கவிதை, கவியரங்கக் கவிதை என்னும் மூன்று கவிதை வடிவங்களிலும் தங்கம் மூர்த்தி தம் படைப்பாளுமையைத் தனித்தன்மை துலங்க வெளிப்படுத்தி வருகிறார். காதல் உணர்வோ சமுதாய அவலமோ இயற்கைச் சித்திரிப்போ தத்துவச் சிந்தனையோ கவிதையின் பாடுபொருள் எதுவாயினும் அதனை நகைச்சுவையும் நளினமும் கலந்த நடையில் நயம்பட உரைப்பது என்பது தங்கம் மூர்த்திக்குக் கைவந்த ஒரு தனித்திறனாக - முத்திரைப் பண்பாக - உள்ளது. உள்ளங்கவர் உதாரணங்கள் ஒருசிலவற்றால் இக் கருத்தினை நிறுவலாம்.

**"விழிகளில் ஊதி**
**தூசு எடுத்தாய்**
**தூசு வெளியேற உள்ளே நீ"**

[முதலில் பூத்த ரோஜா, ப.2]

என்பது காதலி தன் காதலனின் கண் வழி புகுந்து கருத்தினில் கலக்கும் வித்தையைக் கவினுறப் படம்பிடித்துக் காட்டும் தங்கம் மூர்த்தியின் ஹைகூ கவிதை. 'சிறுதுரும்பும் பல் குத்த உதவும்' என்பது போல, வித்தகக் கவிஞருக்குக் கண்களில் விழும் தூசு கூடக் காதலைச் சொல்ல உதவிடும் போலும்!

காதலியின் கன்னத்தில் கூடச் சிரித்தால்தான் குழி விழும். நம் ஊர்ச் சாலைகளிலோ சிரிக்காமலே குழி விழுகின்றதாம்! குண்டும் குழியுமாகக் காணப்படும் சாலைகளைக் கூட, மெல்லிய நகைச்சுவை உணர்வும் குறும்பும் களிநடம் புரிந்து நிற்கும் ஒரு ஹைகூ ஆக்கியுள்ளார் தங்கம் மூர்த்தி.

**"சிரிக்காமலே**
**குழி விழுகிறது**
**எங்களூர் சாலைகளுக்கு"**

[முதலில் பூத்த ரோஜா, ப.33]

"குடந்தையில்
நெருப்பால் இழந்தோம்.
சுனாமியில்
நீரால் இழந்தோம்.
போபாலில்
வாயுவால் இழந்தோம்.
ஆந்திராவில்
வான்மழையால் இழந்தோம்.
குஜராத்தில்
நிலநடுக்கத்தால் இழந்தோம்.
ஐந்தையும்
பூதங்கள் என்றவன்
தீர்க்கதரிசி தான்"

[பொய்யெனப் பெய்யும் மழை, ப.34]

என்னும் தங்கம் மூர்த்தியின் புதுக்கவிதை இயற்கையின் சீற்றங்களை எது மாதிரியும் இல்லாத ஒரு புதுமாதிரியான மொழியில பதிவு செய்துள்ளது. நெருப்பு, நீர், காற்று, வான், நிலம் என்னும் ஐம்பூதங்களால் நாட்டில் அவ்வப்போது, ஆங்காங்கே நேர்ந்த உயிர் இழப்புக்களை நாம் அறிவோம்; அவற்றால் மனித குலத்திற்கு ஏற்பட்ட சொல்லொணாத சோகங்களையும் ஊடகங்கள் நமக்கு உணர்த்தின. 'ஐந்தையும் பூதங்கள் என்றவன் தீர்க்கதரிசிதான்' என அங்கதச் சுவை ததும்பி நிற்கும் வண்ணம் மூர்த்தி தம் கவிதையை முடித்து வைத்திருப்பது படைப்பாளுமையின் மணிமகுடம் ஆகும்.

"காலம்தோறும்
இளமையாய்
காலம் மட்டும்
இருக்கிறது"

[என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து..., ப.76]

என்னும் காலம் பற்றிய தங்கம் மூர்த்தியின் கணிப்பு பொருள் பொதிந்தது; ஆழ்ந்த தத்துவச் சிந்தனையைத் தன்னகத்தே கொண்டது. இங்கே 'காலம்' என்ற சொல்லினைக் கொண்டே அதன் இயற்கையைக் கவிஞர் புலப்படுத்தி இருப்பது ஒரு நயம்.

ஜப்பானிய ஹைகூ கவிதையின் சின்னஞ்சிறு வடிவத்தை மட்டும்

எடுத்துக்கொண்டு அதனைக் காலத்திற்கு ஏற்ப மாற்றி, அதில் இயற்கைக் காட்சிகளையும், காதல் ஓவியங்களையும், சமூக அவலங்களையும், சாட்டையடி விமர்சனங்களையும் படம்பிடித்துக் காட்டியது தமிழ் ஹைகூ கவிஞர்களின் தனித்தன்மை ஆகும். இதற்கு ஏற்பவே, "என்னை பாதித்த, கவர்ந்த, கோபமூட்டிய, அதிர்ச்சிக்குள்ளாக்கிய, இனித்த, கசந்த, விரும்பிய, விரும்பாத பலவும் கவிதைகளாக வந்திருக்கின்றன" ('என்னுரை', முதலில் பூத்த ரோஜா, ப.10) எனத் தங்கம் மூர்த்தியும் தம் முதல் ஹைகூ கவிதைத் தொகுப்பிற்கு எழுதிய முன்னுரையில் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

**"கருப்பு ஆட்சிக்கு வரும்**
**இன்று அந்தியிலும்**
**நாளை ஆப்பிரிக்காவிலும்"**

[முதலில் பூத்த ரோஜா, ப.21]

எனத் தொலைநோக்குப் பார்வையுடன் உலக வரலாற்றினைக் கோடிட்டுக் காட்டும் போதும்,

**"பட்டி மன்றம் முடிந்து**
**தாமதமாய் வீடு வந்தேன் –**
**வழக்காடு மன்றம்"**

[முதலில் பூத்த ரோஜா, ப.28]

என இயல்பான நகைச்சுவை உரையுடன் அன்றாடக் குடும்பக் காட்சியைப் பதிவு செய்யும் போதும்,

**"கலவரத்தில்**
**வீடுகள் எரிந்தன –**
**ஃபீனிக்சாய் சாதிகள்"**

[முதலில் பூத்த ரோஜா, ப.20]

எனச் சாதிக் கொடுமையைச் சாடும் போதும்,

**"துடைக்கத் துடைக்க**
**உன் நினைவுகள்**
**ஒட்டடையாய்"**

[முதலில் பூத்த ரோஜா, ப.46]

என மெல்லிய காதல் உணர்வினைச் சித்திரிக்கும் போதும்,

"ஆயாவின் மடியில்
உறங்கும் குழந்தை
கனவில் அம்மா" [முதலில் பூத்த ரோஜா, ப.59]

எனக் குழந்தையின் ஆழ்மன ஏக்கத்தினை உளவியல் நுட்பத்துடன் எடுத்துரைக்கும் போதும்,

"பேப்பர் பையன்
வீசியெறிந்தான்
நாளைய வரலாறை" [முதலில் பூத்த ரோஜா, ப.60]

எனக் குழந்தைத் தொழிலாளியின் உணர்வினைப் புலப்படுத்தும் போதும்,

"இம்முறை விண்ணப்பித்தான்
நம்பிக்கையோடு -
வசதியான மாமனார்" [முதலில் பூத்த ரோஜா, ப.67]

என இன்றைய சமூக நடப்பினை எள்ளி நகையாடும் போதும், தங்கம் மூர்த்தியை ஒரு தேர்ந்த ஹைகூ கவிஞராக அடையாளம் காண முடிகின்றது. உலகெங்கும் எழுதப்படும் உயர்ந்த குறும்பாடல்களின் இலக்கணம் அவரது கவிதைகளுக்கு நன்கு பொருந்தி வருவதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

"ஒரு கவிதை வாழ்ந்து பெற்ற அனுபவத்தைச் சொல்ல வேண்டும். மிகக் குறைந்த வார்த்தைகளில் சொல்ல வேண்டும்... அது ஏதேனும் ஒரு செய்தியைச் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அது ஒரு அனுபவத்தைச் சொல்லியாக வேண்டும்" என ஹைகூ கவிதையின் உயிர்ப் பண்பினை எடுத்துரைப்பார் எழுத்தாளர் மாலன். அவரது இவ் வரைவிலக்கணத்திற்கான இலக்கியமாகத் தங்கம் மூர்த்தி வாழ்க்கை அனுபவங்களை ஹைகூ கவிதைகளாக வடித்துத் தந்துள்ளார்.

கவிஞர் பழநிபாரதியால் 'காற்றின் கையெழுத்து' தமிழ்க் கவிதை உலகிற்குக் கிடைத்தது. அதுபோல், தங்கம் மூர்த்தியால் 'மழையின் கையெழுத்து' கவிதை ஆர்வலர்களுக்கு வசப்பட்டுள்ளது. அண்மையில் 'ஹைகூ கவிதைகள் ஆங்கில மொழியெர்ப்புடன்' என்னும் சிறப்புக் குறிப்புடன் வெளிவந்துள்ள தங்கம் மூர்த்தியின் 'மழையின் கையெழுத்து' கண்களில் ஒற்றிக் கொள்ளத் தக்க அழகிய பதிப்பு ஆகும்.

## தடம் பதித்த கவியரங்கக் கவிஞர்

கவிக்கோ அப்துல் ரகுமானின் கருத்தில் கவியரங்கக் கவிதை என்பது நிகழ்த்து கலை (Performing Art); அச்சுக் கவிதையில் இருந்து வேறுபடுவது. மேசைக் கவிதை, மேடைக் கவிதை எனக் கவிதையை இரு வகையாகப் பகுப்பார் பேராசிரியர் பாலா. கவியரங்கக் கவிதை உயிர்த் துடிப்புடன் இயங்குவது; படிப்பவருடைய குரல் வளத்தால், படிக்கும் திறனால் அது உயிர் பெறுவது; அவையோரும் பங்கு கொள்வது. எடுப்பான தொடக்கமும் சுவையான ஓட்டமும் முத்தாய்ப்பான முடிவும் கொண்ட கவியரங்கக் கவிதையே வெற்றி பெறும்; உயிர்ப்பான வரிகளும், சரியான வாசிப்பும் அதற்கு மெருகு சேர்க்கும். ‘குரல்கள் வழியே பயணித்து செவிகளைச் சென்றடைந்த கவிதைகள்’ எனக் கவியரங்கக் கவிதைகளைச் சுட்டுகிறார் தங்கம் மூர்த்தி. அவரது முதல் கவியரங்கத்திற்குத் தலைமைப் பொறுப்பினை ஏற்றவர் கவிஞர் கந்தர்வன். கவிதை வாசிப்பின் நிறைவில், ‘‘முதல் அறிமுகத்திலேயே பராசக்தி சிவாஜி கணேசனைப் போல் பலத்த கைதட்டலோடு பிரபலமாகிவிட்டார் தங்கம் மூர்த்தி’’ (கவிதையில் நனைந்த காற்று, ப.7) என அவர் தம்மைக் கட்டித் தழுவிப் பாராட்டியதை நெகிழ்வுடன் நினைவுகூர்ந்துள்ளார் மூர்த்தி. மேலும் அவர் தம் கவியரங்கக் கவிதைத் தொகுப்பினைக் கவிஞர் கந்தர்வனுக்குக் காணிக்கையாக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

‘காகிதம் ஓர் ஆயுதம்’ என்னும் தலைப்பில் பணம் பேசுவதாக மூர்த்தி படைத்துள்ள கவியரங்கக் கவிதை சுவையானது. ரிசர்வ் வங்கி பணத்தின் தாய் வீடாம்; ஆனால் அது ஆசைப்பட்டு வாழ நினைப்பதோ ஓர் ஏழையின் வீடாம். பணத்தைப் பத்திரமாய்ப் பதுக்கி மறைத்து வைத்திருப்பது சின்ன வீட்டிலாம்.

**“ஐந்தில் வளையாதது**
**ஐம்பதில் வளையும்**
**ஐநூறென்றால் இன்னும் வளையும்”**

**[கவிதையில் நனைந்த காற்று, ப.55]**

என்பது பணம் உரைக்கும் அனுபவ மொழி; உண்மை.

**“வல்லவர்**
**கையிலிருப்பதுதான்**
**என் வாழ்க்கையாய் உள்ளது.**

**நான்**
**நல்லவர் கையிலிருப்பது தான்**
**நாட்டுக்கு நல்லது"**

[கவிதையில் நனைந்த காற்று, ப.59]

எனப் பணம் தரும் ஒப்புதல் வாக்குமூலம் மனங்கொளத் தக்கது.

'குறுகத் தறித்த குறள் போல' 29 ஆண்டுகளே வாழ்ந்தாலும் தமிழ்த் திரைப்பாடல் வரலாற்றில் தடம் பதித்தவர் ப(ா)ட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். 'கோடி கொடுப்பினும் கிட்டுவதோ பட்டுக்கோட்டைக் கவிஞனின் சொல்லமுதம்?' என வினவுவார் எழுத்தாளர் ஜெயகாந்தன். தங்கம் மூர்த்தி 'ஒரு எளிய கவிதைப் பொன்னாடை' என்னும் கவியரங்கக் கவிதை வடிவில் பட்டுக்கோட்டையாருக்குச் சூட்டியிருக்கும் புகழாரம் அற்புதமானது; அருமையும் எளிமையும் அழகும் கொலு வீற்றிருப்பது.

**"நிர்வாணத்தை**
**விற்பனை செய்யும்**
**கனவுச் சந்தையில்**
**நிலவுக்கும்**
**ஆடைகட்டி**
**நாகரிகம் காத்தான்"**

[கவிதையில் நனைந்த காற்று, ப.85]

இதனினும் மேலாகப் பட்டுக்கோட்டையாரின் ஆளுமையை எவரும் சொல்லி விட முடியாது. 'வறுமையின் வளர்ப்புப் பிள்ளையாய் வாழ்ந்த அவனைத் தமிழ் தன் சொத்தாக்கிக் கொண்டதாம்!' (ப.86).

தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெண்ணின் பெருமையைப் பேசியது போல மூர்த்தி புத்தகத்தின் பெருமையினைத் தம் கவியரங்கக் கவிதை ஒன்றில் அழகுறப் பேசியுள்ளார். புத்தகம் பேசுவதாக அவர் படைத்துள்ள கவிதை வரிகள் சில:

**"நான்**
**சந்திராயனின்**
**விளக்கம் சொன்னால்**
**விலகிப் போகிறார்கள்.**

சனிப்பெயர்ச்சிப் பலன்கள்
சொன்னால்
ஓடி வருகிறார்கள்.

சாதனைகளின்
சரித்திரம் சொன்னால்
தள்ளிப் போகிறார்கள்.

சமையல் குறிப்புகள்
என்றால்
அள்ளிப் போகிறார்கள்"
(கவிதையில் நனைந்த காற்று, பக்.66-67)

சமுதாயச் சீர்கேட்டினை அப்பட்டமாக உள்ளது உள்ளபடி எடுத்துரைக்கும் இவ்வரிகளைச் சாட்டையடிகள் எனலாம்.

தங்கம் மூர்த்தியின் கைவண்ணத்தில் சித்திர மின்னலாய் அமைந்து நம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் இடங்கள் 'கவிதையில் நனைந்த காற்று' தொகுப்பில் மண்டிக் கிடக்கின்றன. உயிர்ப்புள்ள ஒரு சில சான்றுகள் இதோ:

1. காதல் : "ஆதிமனிதன் முதல்
எந்திர(ன்) மனிதன் வரை
எல்லோருக்குள்ளும் இருக்கிறது"
(கவிதையில் நனைந்த காற்று, ப.10)

2. பாரதி : "உன்னதங்கள் நிறைந்த
உயர்தனிச் செம்மொழியின்
உயிர்த்துளி" (ப.33)

3. புத்தகம் : "பக்கங்களால்
பக்குவப்படுத்தும்
தாளாயுதம்" (ப.61)

4. குழந்தைகள் : "இல்லற இலக்கியத்தின்
உயிரெழுத்துக்கள்" (ப.75)

5. தைமகள் : **“மாதங்களிலே**
**‘தை’**
**எனும் நீதான்**
**ஓரெழுத்து”** (ப.112)

6. சூர்ப்பனகை : **“கம்பன் எனும் கொல்லன்**
**வடித்த நகைகளுள்**
**சூர்ப்பனகை தான்**
**சூப்பர் நகை”** (ப.140)

7. பத்திரங்கள் : **“காகிதக்**
**கல்வெட்டுக்கள்”** (ப.146)

இவற்றை மனம் கலந்து பயிலும் நமக்கும் **ஏர்வாடியாரைப்** போலவே, ‘‘தங்கம் மூர்த்திக்குத் தங்கம் தரத் தோன்றுகிறது’’ (நூல் மதிப்பீடு, கவிதை உறவு, ஏப்ரல் 2013, ப.39). ‘‘பாரதி இன்றிருந்தால் ‘சபாஷ் பாண்டியா!!’ என்று முதுகில் தட்டிக் கொடுத்திருப்பார்!’’ (நூல் விமர்சனம், ஆனந்த ஜோதி, மார்ச் - ஏப்ரல் 2013, ப.50) எனப் பேராசிரியர் **அய்க்கணி**ன் கூற்றினை வழிமொழியவும் தோன்றுகிறது!

## ஆற்றல்சால் புதுக்கவிஞர்

‘‘தங்கம் மூர்த்தியின் வார்த்தைகளுக்குள் வாழ்க்கை இருக்கிறது. பெருமூச்சு இருக்கிறது. காதலின் கண்ணீர்த் துளி இருக்கிறது. மரணத்தின் பதைப்பு இருக்கிறது. அவலங்களை எதிர் கொள்ளும் நகைப்பு இருக்கிறது’’ (‘விதையிலிருந்து விசுவரூபம் நோக்கி...’, என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து... ப.12) என்பது தங்கம் மூர்த்தியின் கவிதைகள் பற்றிய பேராசிரியர் சிற்பி பால சுப்பிரமணியத்தின் மதிப்பீடு. இம் மதிப்பீட்டினை உறுதிசெய்யும் புதுக்கவிதைகள் பலவற்றை ‘என் பண்டிகையின் நாட்குறிப்பி லிருந்து...’ தொகுப்பில் காண முடிகின்றது.

**“நல்லவனென்று**
**நாலு பேர் சொல்ல**
**படாத பாடு**
**பட வேண்டியிருக்கிறது”**
(என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து..., ப.86)

என்னும் கவிதையில் உலகில் நல்லவன் என்று பெயர் எடுப்பதற்கு ஒரு மனிதன் படும் பாட்டினைத் தனக்கே உரிய பாணியில் எடுத்துரைக்கும் கவிஞர்,

**"தீயோர்க்கு வாழ்வு நீடிக்கிறது**
**நல்லார்க்கு மரணம் சமீபிக்கிறது**
**மற்றபடி அனைவருமே**
**மத்தியில் இருப்போரே!"** [ப.71]

எனப் பிறிதொரு கவிதையில் மனித வாழ்க்கை பற்றிய தம் கண்ணோட்டத்தினைப் பதிவு செய்துள்ளார்.

**"தோட்டத்தில் பூக்களையும்**
**மனதில் முட்களையும்**
**வளர்க்கும் மனிதர்களை**
**வணங்குவதே**
**வாழ்க்கையாகி விட்டது"** [ப.30]

என்னும் கவிதையும் சம கால மனிதனின் வாழ்க்கை மீதான கவிஞரின் கூர்மையான விமர்சனம் ஆகும்.

சாதி, மதம் ஆகியவற்றின் பெயரால் இன்றைய சமுதாயத்தில் அரங்கேறி வரும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் தங்கம் மூர்த்தி தவறவில்லை. தேவாலயத்துக் கற்கண்டோ - பள்ளிவாசல் சர்க்கரையோ - பெருமாள் கோயில் பொங்கலோ - எதுவென்றாலும் இனிப்பாய் இருக்கிறதாம்.

**"அதில்**
**அன்பைக் கலந்தால்**
**அமுதமாகிறது.**

**மதத்தைக் கலந்தால்**
**விஷமாகிறது"** [ப.88]

என வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகக் கவிதையை மூர்த்தி முடித்திருப்பது சிறப்பு. மதம் அமுதம் ஆவதும், நஞ்சு ஆவதும் மானிடர் கையில் என்பதை இந்தக் கவிதை இரத்தினச் சுருக்கமான மொழியில் எடுத்துரைத்துள்ளது.

கதைப் பாங்கான எடுத்துரைப்பு உத்தியில் புதுக்கவிதையை

நகர்த்திச் செல்வது தங்கம் மூர்த்திக்குக் கை வந்த கலை. ‘மரங்களின் மாநாடு’ என்ற கவிதை இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பன்னீர் மரங்களுடன் கவிஞர்கள் சிலர் கைகுலுக்கிக் கொண்டிருந்தார்களாம். பக்தர்களும் நோயாளிகளும் வேப்ப மரங்களை வழிபட்டுக் கொண்டிருந்தார்களாம். பணம் நிறைந்தவர்கள் தேக்கு மரங்களை விலைபேசிக் கொண்டிருந்தார்களாம். சந்தன மரங்களை வீரப்பனின் உறவினர்கள் விசாரித்துக் கொண்டிருந்தார்களாம். அறிஞர்கள் சிலர் போன்சாப் மரங்களைப் புகழ்ந்து கொண்டிருந்தார்களாம். இவற்றிற்கு அப்பால் ஒரே ஒரு மரம் மட்டும் மிகவும் வருத்தத்தோடு நின்று கொண்டிருந்ததாம். அது என்ன மரம் என்று கேட்கிறீர்களா? இதோ, கவிஞரே அதனைக் கூறுகிறார், கேளுங்கள்.

**“வந்தவர் அனைவரையும்**
**வரவேற்ற நம்மை**
**யாருமே கண்டுகொள்ளவில்லை என்று**
**வருத்தப்பட்டு நின்றன**
**வாழை மரங்கள்”**

**[என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து..., ப.78]**

இங்கே கவிஞர் குறிப்பது வாழை மரத்தை மட்டுமா என்ற கோணத்தில் சிந்தித்தால் ஆழ்நிலையில் உலகத்து இயற்கையும் சமூக நடப்பும் புலனாகும்.

‘துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?’ என உருக்கமாக வினவுவார் பாவேந்தர் பாரதிதாசன். பாரதிதாசனை அடியொற்றி மூர்த்தியும் ‘துன்பம் நேர்கையில்’ என்னும் தலைப்பில் ஒரு சிறந்த கவிதை படைத்துள்ளார். வெளிச்சம் பூக்கும் புத்தகங்கள், இதயம் வருடும் இசை, தொலைவில் சிரிக்கும் நிலா, துயரம் துடைக்கும் தோழர்கள், பிரியம் ஊட்டும் பிள்ளைகள் என வரிசையாகப் பட்டியல் இடும் கவிஞர்,

**“இவைகள்**
**இல்லாமல் போயிருந்தால்**
**இல்லாமல் போயிருப்பேன்**
**என்றோ நான்”**

**[என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து..., ப.41]**

எனத் தம் நிலைப்பாட்டினை எடுத்துரைப்பது நோக்கத்தக்கது.

## தங்கம் மூர்த்தியின் தனித்திறன்

சமுதாயத்தில் அரிதாகக் காணப்படும் ஒரு சில மாந்தரை அடையாளம் கண்டு கதைப் பாங்கில் அவர்களை அறிமுகம் செய்யும் கலையிலும் தனித்திறன் பெற்றவராக விளங்குகின்றார் தங்கம் மூர்த்தி. ஓர் எடுத்துக்காட்டு: ஊருக்கெல்லாம் துக்கச் செய்தியை - மரண அறிவிப்பைக் கூறுவான் ஒருவன். மெலிந்த உடலும் அழுக்கு ஆடையும் தாடியுமாய் ஆட்டோவின் ஒரு மூலையில் ஒடுங்கி உட்கார்ந்து மைக்கைப் பிடித்தபடி அறிவித்தாலும் அவனது குரலில் எப்போதும் ஒரு கம்பீரம் இருக்குமாம்; இறந்தவரைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் கச்சிதமாய்ச் சொல்லி எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்து விடுவானாம்; 'எப்படிப் போகிறது வாழ்க்கை?' எனக் கேட்டால், 'யாரோ செத்து நான் பிழைக்கிறேன்' என்று சொல்லிச் சிரிப்பானாம். ஒருநாள் ஆட்டோ அறிவிப்பில் புதுக்குரல் கேட்டதாம். என்ன ஆயிற்று அந்தப் பழைய அறிவிப்பாளனுக்கு? வீட்டைக் கண்டுபிடித்து விசாரித்த போது அவனது வயதான தாய் அழுதுகொண்டே அறிவித்தாளாம்:

**"எல்லார் சாவையும் சொல்ல**
**இவன் ஒரு ஆளா இருந்தான்.**
**இவன் சாவைச் சொல்ல**
**ஒரு ஆளும் இல்லையே!"**

**[என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து..., பக்.36-38]**

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் குறிப்பிடுவது போல், "சாவுக்கு முன்னுரை சொன்னவனுக்குச் சாவு முடிவுரை எழுதிய (இக்) கவிதை ஒரு மரண சாசனமாய் நிலைக்கிறது." (ப.12).

## பொறுப்பான கல்வியாளர்

தங்கம் மூர்த்தி புதுக்கோட்டை மாநகரின் திருக்கோகர்ணத்தில் ஸ்ரீ வெங்கடேசுவரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியை நிறுவிப் பல்லாண்டுக் காலமாகக் கல்விப் பணி ஆற்றி வருபவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் என்ற பொறுப்பும் இன்றைய கல்விச் சூழல் குறித்து அவர் நன்கு அறிந்து கொள்வதற்குக் கைகொடுத்துள்ளது.

இன்றைய இளைய தலைமுறையினர் புத்தகப் புதைகுழியில் புதைந்து போய், மாணவனாகும் பயிற்சியில் வென்று விடுகிறார் களாம்; மனிதனாகும் முயற்சியில் தான் தோற்றுவிடுகிறார்களாம். 'மதிப்பெண்களைத் துரத்துகிறது கல்வி' (பொய்யெனப் பெய்யும் மழை, பக்.49-51) என்பது இன்றைய கல்விமுறை பற்றிய கவிஞரின் விமர்சனம் ஆகும்.

விளைநிலங்கள் இன்று விலைநிலங்களாக மாறி வரும் கொடுமையையும் தங்கம் மூர்த்தி தம் குறுங்கவிதை ஒன்றில் பதிவு செய்துள்ளார்:

**"விவசாய நிலங்களில்**
**கல்லூரியை விதைக்கிறார்கள்**
**நல்ல அறுவடை"**
**[என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து..., ப.64]**

இங்கே நிலங்கள் - விதைத்தல் - அறுவடை ஆகிய வேளாண்மை தொடர்பான சொற்களைக் கொண்டே கவிஞர் தம் கருத்தினைத் திறம்படப் புலப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி வணிக மயமாகி விட்ட இன்றைய அவலச் சூழலையும் தங்கம் மூர்த்தி விட்டு வைக்கவில்லை.

**"பள்ளித் தலமனைத்தும்**
**கோயில்கள் செய்தோம் -**
**உண்டியல்"** **[முதலில் பூத்த ரோஜா, ப.17]**

என்னும் அவரது ஹைகூ கவிதை இவ்வகையில் நினைவுகூரத் தக்கது.

இங்ஙனம் தாம் சார்ந்த கல்வித் துறை தொடர்பான தெறிப்பான சிந்தனைகளை - கூர்மையான விமர்சனங்களை - மூர்த்தி தம் படைப்புகளில் பதிவு செய்திருப்பது போற்றத்தக்கது.

## புதுக்கோட்டை மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் ஆளுமையாளர்

தங்கம் மூர்த்தியின் ஆளுமை கல்வியாளர், தாளாளர்,

ஆட்சிக்குழு உறுப்பினர், கவிஞர், பேச்சாளர், திரைப்படப் பாடலாசிரியர், தொகுப்பாசிரியர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் என்றாற் போல் பல்வேறு பரிமாணங்கள் கொண்டது. இப் பரிமாணங்களின் ஊடே அவர் அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியும் (Evolution) கருத்தில் கொள்ளத்தக்கது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை உலகில் நகைச்சுவையும் நயமும் நளினமும் அங்கதமும் எள்ளலும் சரி விகிதத்தில் கலந்து விளங்கும் ஓர் ஆற்றல்சால் ஆளுமையாளராக வலம் வந்து கொண்டிருப்பவர் தங்கம் மூர்த்தி எனலாம். பெண் குலத்திற்கே பெருமை சேர்த்த முதல் மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி, திரையுலகையே திரும்பிப் பார்க்க வைத்த பி.யு.சின்னப்பா, மைசூர் அரண்மனையிலும் இசை மாரி பொழிந்த தெட்சிணாமூர்த்தி பிள்ளை, தந்தை பெரியாரே வந்து பாராட்டிய பெண் ஆதீனம் அன்னை சாயி மாதா, புதுக்கோட்டையில் இருந்து புறப்பட்டுத் திரையுலகில் காதல் கோட்டை கட்டிய நடிகர் ஜெமினி கணேசன், மிருதுவான வளையல் கரங்களால் மிருதங்கம் வாசித்த ரங்கநாயகி - இப்படிப் புதுக்கோட்டை மண்ணுக்குப் பல பெருமைகள் உண்டு. இத்தகைய பீடுமிகு சாதனையாளர்களின் - வெற்றியாளர்களின் - பட்டியலில் எதிர்காலம் தங்கம் மூர்த்தியின் பெயரையும் பதிவு செய்யும் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

(16)

# வித்தியாசம் + தனித்துவம் = வெற்றிச்செல்வன்

> "ஒரு தொகுப்பு வாசித்த நிறைவை வெகு
> காலத்துக்குப் பிறகு கொடுத்ததற்காக
> மனத்தடி நீரை
> மனதார முத்தமிடுகிறேன்."
>
> – யுக பாரதி*

''இடதுசாரிச் சிந்தனையோடு இயங்குகிற மிகச் சில கவிஞர்களில் தெ. வெற்றிச்செல்வன் தனித்துவமானவர். நாடும் மனிதரும், சமூகமும் அரசியலும், மரபு மீறலும் மீட்டுருவாக்கமும் இவரது விரல்களில் மையம் கொள்கின்றன... நுட்பமான கவனிப்பும் திட்பமான எழுத்து முறையும் நெற்றி மத்திக்கு புருவத்தை இட்டுச் செல்கின்றன'' (ப.12) என்னும் யுகபாரதியின் அறிமுகக் குறிப்பு, தெ. வெற்றிச்செல்வனின் கவிதை உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லும் வல்லமை பொருந்தியதாகும்; வெற்றிச்செல்வனின் ஆளுமைப் பண்பினை அடையாளம் காட்டும் திறமும் தன்னகத்தே கொண்டதாகும்.

'மனத்தடி நீர்' (2003) என்னும் தலைப்பே படிப்பவரின் ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவதாகத் திகழ்கின்றது. '''ஈரத்திலேயே

* 'வெளியேற முடியாத மைதானத்துக்குள் பந்தாடப் படுகிற எழுத்து', மனத்தடி நீர், ப.13.

படுத்து, ஈரத்திலேயே உறங்கி, ஈரத்திலேயே கிடந்து உழல்கிறார்கள் ஜனங்கள். உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட கிடையாது' என்கிற வசன கவிதையில் பாரதிக்கு 'ஈரம்' என்பது அடிமைத்தனத்தின் குறியீடானது போல் ஈரம், ஈவு, இரக்கம், மனித நேயம் எல்லாம் வறட்சியின் குரூரத்தில் சிக்கியுள்ளதை 'மனத்தடி நீர்' என்று குறியீடாக்கியிருக்கிறேன் நான்'' (ப.8) என்னும் கவிஞரின் கூற்று, அவரது உள்ளக் கருத்தைத் தெள்ளிதின் உணர்த்துவதாகும்.

நிலத்தடி நீர் அற்றுப் போன பூமியின் வறட்சியை மனத்தடி நீர் போக்கக் கூடும். மனத்தில் உள்ள நீரால் தான் இவ் வையகம் சுழல்கிறது. 'நீரின்றி அமையாது உலகு' என்பது இதுதான். வெற்றிச் செல்வனின் 'வெள்ளத்தனையது...' என்ற கவிதை இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தது.

**''இரண்டு விதைகள்**
**விதைத்தேன்.**
•
**ஒன்று இந்த நிலத்தில்.**
**விதையுறை கிழித்து**
**தளிர் மேலே வேர் கீழே**
**பயணத்தின் முடிவில்**
**தந்தது பலன்**
**நிலத்தடி நீர்.**
•
**ஒன்று உன் மனத்தில்.**
**மனத்தினூடே ஊடுருவி**
**முட்டி மோதி**
**பாறை பிளந்தும்**
**வாடி வதங்கி**
**கருக வைத்தது**
**மனத்தடி நீர்''** (ப.82)

'மனத்தடி நீர்' - பொருள் பொதிந்த சொல்லாட்சி! இதே போல் பிறிதோர் இடத்தில் 'மனங்கொத்திப் பறவைகள்' (ப.72) என்ற அழகிய சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார் கவிஞர்.

‘மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்’ (திருக்குறள், 34) என அறம் என்பதற்கு இரத்தினச் சுருக்கமாக வரைவிலக்கணம் வகுப்பார் வான்புகழ் வள்ளுவர். வெற்றிச்செல்வன் வள்ளுவரின் கருத்தை நினைவூட்டும் விதத்தில் ‘இண்ட்டீரியர் டெக்கரேஷன்...’ என்னும் தலைப்பில் (ஆங்கிலத் தலைப்பு படிப்பவர் மனத்தில் ஒரு நெருடலைத் தோற்றுவிப்பது என்பது என்னவோ உண்மை தான்!) ஒரு கவிதை படைத்துள்ளார். இதில் உள் அலங்காரத்தில் வெளிநாட்டுப் பட்டம் பெற்ற ஒரு பெண் வருகிறாள். அவளால் வீட்டினுள் அழகிய கலைக் கூடம் எழுப்ப முடியும். இன்னும் அறைகள், அலமாரிகள், சுவர்ப் படங்கள், வண்ணக் கலவை, கலையம்சம், செய்நேர்த்தி, லொட்டு லொசுக்கு, இத்யாதி இத்யாதி எல்லாம் அவளுக்கு அத்துபடியே. என்றாலும், உதட்டுச் சாயம் கலையாமல் துக்கம் விசாரித்துப் போவதில் கவிஞருக்கு உடன்பாடு இல்லை. எனவே,

**“என்ன படித்து என்ன**
**மனதை**
**அலங்கரிக்கத் தெரியாமல்”** (ப.90)

என முத்தாய்ப்பாக அக் கவிதையை முடிக்கின்றார் கவிஞர். உண்மையில் ‘உள் அலங்காரம்’ என்பது ‘உள்ள அலங்காரமே’ ஆகும். மனதை அலங்கரிக்கத் தெரியாமல் - மனத்துக்கண் மாசு படிய விட்டுவிட்டு - மற்றவற்றை எல்லாம் அலங்காரமாக வைத்துக் கொள்வதில் யாதொரு பயனும் இல்லை. வள்ளுவர் மொழியில் சுட்ட வேண்டும் என்றால் ‘ஆகுல நீர பிற’. இதனையே வேறு சொற்களில் ‘என்ன படித்து என்ன?’ என்று நறுக்குத் தறித்தாற் போல் கேட்கிறார் வெற்றிச்செல்வன்.

யுகபாரதி அணிந்துரையில் குறிப்பிடுவது போல், ‘‘உவமைகளின் மடியில் உறங்க நினைக்கின்ற கவிதைகளை விட உண்மைகளின் தோள்களை உரசிச் செல்கிற கவிதைகளே இவரிடம் (வெற்றிச்செல்வனிடம்) அதிகம்’’ (பக்.10-11).

வெற்றிச்செல்வனின் கவிதை மொழி வித்தியாசமானது; தனித்தன்மை வாய்ந்தது. ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’ என்பது போல், ‘வித்தியாசம் + தனித்தன்மை = வெற்றிச்செல்வன்’

என நாம் சுட்டலாம். பதச்சோறாக, வெற்றிச்செல்வனின் காதல் கவிதை ஒன்று இதோ:

**“தீண்டாமை ஒரு பாவச் செயல்**
**தீண்டாமை ஒரு பெருங்குற்றம்**
**தீண்டாமை ஒரு மனிதத் தன்மையற்ற செயல்**
**அறிவாய் தானேநீ**
**வா**
**தீண்டு”** (ப.77)

காதல் உணர்வையும் சமூக உணர்வையும் இங்கே அழகாக முடிச்சுப் போட்டுள்ளார் கவிஞர்.

இதுவரை தமிழ்மொழி தான் உயர்தனிச் செம்மொழி (Classical Language) என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் வெற்றிச்செல்வன் படைக்கும் காதலன் ஒருவனோ வேறு கோணத்தில் சிந்திக்கிறான். அவனது கருத்தில் காதலியின் மொழியும் உயர்தனிச் செம்மொழி தானாம்! எப்படி என்கிறீர்களா? இதோ அவனது கூற்று:

**“உதடுகளால் கேட்கவும்**
**கண்களால் பேசவும்**
**முடியுமென்றால்**
**உனது மொழி**
**உயர்தனிச் செம்மொழிதான்”** (ப.28)

‘உயர்தனிச் செம்மொழி’ என்ற கருத்தாக்கம் இங்கே கவிஞரால் எத்துணை நயமாகக் கையாளப்பட்டிருக்கிறது பாருங்கள்!

மனித வாழ்வில் இருந்து எதை வேண்டுமானாலும் நீக்கலாம்; ஆனால் காதலை மட்டும் நீக்கவே முடியாது. வாழ்வுடன் நீக்கமறக் கலந்திருக்கும் ஓர் அடிப்படை உணர்வே காதல் என்பது கவிஞரின் அழுத்தம் திருத்தமான கருத்து. ‘நீக்கமற...’ என்ற அவரது கவிதை இவ் வகையில் நினைவுகூரத்தக்கது. அக் கவிதை வருமாறு:

**“வாழ்விலிருந்து**
**கலையை நீக்கிவிட்டால்**
**கால்வாசி உலகு கரைந்து போய்விடும்**

**அறிவியலை நீக்கி விட்டால்**
**அரைவாசி உலகு அழிந்து போய்விடும்**

**போராட்டத்தை நீக்கிவிட்டால்**
**முக்கால்வாசி உலகு மூழ்கிப்போய்விடும்**

**வாழ்விலிருந்து**
**காதலை..."** (ப.49)

இங்கே காதலின் ஆற்றலைச் சொல்லாமல் சொல்லியுள்ளார் கவிஞர். கலை, அறிவியல், போராட்டம் ஆகிய அனைத்திற்கும் மேலாக வாழ்வை இயக்கக்கூடிய ஒரு பேராற்றல் காதல் ஆகும். எனவே வாழ்விலிருந்து காதலை ஒருகாலும் நீக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கிறார் கவிஞர்.

வெற்றிச்செல்வன் கையாளும் உவமைகள் அவர் வித்தியாசமான சிந்தனைக்குச் சொந்தக்காரர் என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன. அவை அவரது கூர்பார்வையை மட்டுமின்றி, அடிமனத்தில் - ஆழ்மனத்தில் - குடிகொண்டிருக்கும் சமூக உணர்வையும் புலப்படுத்தி நிற்கின்றன. ஓரிரு சான்றுகள் போதும் இக் கருத்தினை நிலைநிறுத்த:

**"பிரசவத் தழும்பு போல**
**மறைந்து போகாமலே**
**அலையடிக்கிற ஞாபகங்கள்"** (ப.18)

**"மலர்ந்த உதடுகள் உருகிச் சுருங்குகின்றன**
**விளக்கில் பட்ட பாலிதீன் பை போல**
**எதார்த்தத்துக்கு மீள்கையில்"** (ப.40)

**"கூடிக் கொண்டே போகிறது**
**முதிர்கன்னிகளைப் போலவே**
**தரிசு நிலப் பரப்பு"** (ப.71)

**"தடைகளைத் தகர்த்து**
**திருட்டுத்தனமாக காதலியை**
**இழுத்துக் கொண்டோடும் காதலனைப் போல...**

நானும் ஓடிக் கொண்டிருக்கிறேன்
என் கவிதையை இழுத்துக்கொண்டு"    [ப.94]

- கவிஞரின் ஆளுமைப் பண்பை அடையாளம் காட்டும் அழகிய உவமைகள் இவை.

கவிதைக்கு எது முக்கியம்? உருவமா? உள்ளடக்கமா? உத்தியா? கவிதை எப்போது வெற்றி பெறுகிறது? ஒரு கருத்தைத் திறம்படச் சொல்வதிலா? அல்லது ஒரு கருத்தைச் சொல்லாமல் சொல்வதிலா? குறிப்பாகப் புலப்படுத்துவதிலா? கவிதையின் இலக்கணம் உரைப்பதா? உணர்த்துவதா? கவிதை இயலில் காலங்காலமாகக் கேட்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வரும் இவ்வினாக்களுக்கு எல்லாம் வெற்றிச்செல்வனின் ஒரே ஒரு கவிதையைக் கொண்டு சரியான விடையைச் சொல்லி விடலாம். அவ் விடையை உள்ளடக்கிக் 'கோடிட்ட இடங்களை நிரப்பிக் கொள்க' என்னும் தலைப்பில் கவிஞர் படைத்துள்ள கவிதை வருமாறு:

"அடித்துத் துவை
நுரைக்கக் கும்மு
நீலம் நனை
காய வை
சுடு நெருப்பில்
இஸ்திரி செய்
எல்லாவற்றுக்கும் முன்
துணிகளை மட்டுமல்ல
நன்கு வேகவிடு
.... ... ... வெள்ளாவியில்

குறிப்பு:
[உங்கள் விருப்பம் போல் நிரப்பிக்
கொள்வதற்கான விடைகள் சில]
1. துரோகக் காதலை
2. மோசடி நட்பை
3. ஏமாற்று அரசியலை
4. வக்கிர புத்தியை"    [ப.83]

உருவமும் உள்ளடக்கமும் கச்சிதமாகப் பொருந்தி இருக்கும் - கை

குலுக்கி நிற்கும் - கவிதை இது. ஒரு நல்ல கவிதையில் உருவம், உள்ளடக்கம், உத்தி என்னும் மூன்றும் சரியான விகிதத்தில் கலந்து நிற்கும். 'கோடிட்ட இடங்களை நிரப்புவது' என்பது நம் கல்வி முறையில் இளமையில் இருந்தே பயின்று வரும் ஒரு முறை. இதனை இக் கவிதையில் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் கவிஞர்.

அடுத்து, உள்ளடக்கம். இன்று சமுதாயத்தில் அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமறக் காணப்படுவது - அடிக்கடி அரங்கேறி வருவது - துரோகக் காதலும் மோசடி நட்பும் ஏமாற்று அரசியலும் வக்கிர புத்தியும்தான். இன்றைய சமூகத்தில் மேலோங்கிக் காணப்படும் நான்கு முக்கியமான அவலங்களை இங்கே நிரல்படுத்தித் தந்துள்ளார் கவிஞர்.

மூன்றாவது, உத்தி. 'இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்...' என்பது போல் எல்லாவற்றையும் தாமே விரிவாகச் சொல்லி விடாமல், 'குறிப்பு' என்னும் உட்தலைப்பில் வாசகர்களே தங்கள் விருப்பம்போல் நிரப்பிக் கொள்வதற்கான சில விடைகளையும் கவிஞர் தந்திருப்பது தனிச்சிறப்பு.

நம் நாட்டில் கடவுளர் யாவரும் அவரவர்க்கு உரிய இடத்தில் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் உள்ளனர். அவரவர் ஆற்றும் தொழில்களும் எவ்வித இடையூறும் இல்லாமல் நல்ல வண்ணமே நடைபெற்று வருகின்றன. ஒரு தனிப்பாடல் நயமாகக் குறிப்பிடுவது போல், சிவபெருமான் சுடுகாட்டில் ஆடிக் கொண்டிருக்கிறார்; திருமால் பாற்கடலில் துயின்று கொண்டிருக்கிறார்; விநாயகர் மரத்தடியில் அமர்ந்த வண்ணம் வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்; முருகப் பெருமான் மலை மீது குடி கொண்டிருக்கிறார். நாட்டு மக்களின் கதிதான் அதோகதியாக உள்ளது.

இதனை 'நச்'சென்ற நடையில் எடுத்துக்காட்டுகிறது வெற்றிச் செல்வனின் 'நாங்கள்...?' என்னும் குறுங்கவிதை:

**"வைகையாற்றில்**
**கள்ளழகர்**

**காவிரியாற்றில்**
**ரங்கநாதர்**

**திருவையாற்றில்**
**பஞ்சநதீஸ்வரர்**

**நட்டாற்றில்**
**ஜனங்கள்"** (ப.63)

'ஆனந்த விகடன்' இதழ் வாயிலாக வெற்றிச்செல்வனை அடையாளம் காட்டிய முத்திரைக் கவிதை இது!

'ஒரு கல்லில் இரு மாங்காய் அடித்தல்' என்பார்கள். வெற்றிச் செல்வன் ஒரே கல்லில் சில சமயங்களில் இரண்டு மாங்காய்களை அல்ல, இரண்டிற்கும் மேற்பட்ட மாங்காய்களைக் குறி தவறாமல் அடித்து விடுகின்றார். 'பாடம்' என்ற கவிதை இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு:

**"மம்மி என்கிறது**
**வரலாறு,**
**பாடம் பண்ணிய உடலை,**

**மம்மி என்கிறது**
**கான்வென்ட் குழந்தை,**
**தாயை.**

**பாடம் பண்ணிக் கொண்டிருக்கிறோமோ**
**உயிருடன் தாயை?"** (ப.73)

இன்றைய கல்வி முறை பற்றிய விமர்சனம், இந்நிலையே நீடித்தால் எதிர்காலத்தில் தாய்-சேய் உறவு எதிர்கொள்ளப் போகும் விரிசல், தாய்மொழி வழியே கல்வியைப் பெறாமையால் இன்றைய இளைய பாரதம் 'இளைத்த பாரத'மாய்க் காணப்படும் அவலம் எனப் பன்முகப் பரிமாணங்களைப் பாங்குடன் வெளிப்படுத்துகின்றது இக் கவிதை.

இன்று எங்கெங்குக் காணினும் '**முன்னாள்க**'ளின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்படுகின்றது. பத்திரிகையையோ அழைப்பிதழையோ புரட்டினால் 'முன்னாள் குடியரசுத் தலைவர்',

‘முன்னாள் பிரதமர்’, ‘முன்னாள் மந்திரிமார்கள்’ - இப்படிச் சில ‘முன்னாள்க’ளைப் பார்க்கிறோம். கூட்டங்களுக்குச் சென்றாலோ ‘முன்னாள் தலைவர்கள்’, ‘முன்னாள் செயலர்கள்’, ‘முன்னாள் அதிகாரிகள்’ என்றாற் போல் சில ‘முன்னாள்கள்’ பேசக் கேட்கிறோம். இந்நிலையில் கவிஞர் நம்மை நோக்கி முன் வைக்கும் சாட்டையடி விமர்சனம் இதுதான்:

**“குறையொன்றுமில்லை**
**எல்லாம் சரி தான்.**

**கேவலமானது என்னவென்றால்**
**நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம்**
**முன்னாள் மனிதர்களோடு”** (ப.80)

இப்படி நீக்கமற நம்மை ஆட்டிப் படைக்கும் ‘முன்னாள் மோக’த்தில் இருந்து விடுபட்டு நாம் என்ற ‘சொந்த முக’த்தோடு நடமாடப் போகிறோம்? எந்த ‘முகமூடி’யும் அணிந்து கொள்ளாமல் இயல்பான ‘முகவரி’யுடன் இயங்கப் போகிறோம்? - இதுவே நம்மை நோக்கிக் கவிஞர் தொடுக்கும் கூரிய கேள்விக் கணை.

காபித் தூளில் – டீத் தூளில் – பாலில் – சமையல் எண்ணெயில் – பானங்களில் – இன்ன பிற பதார்த்தங்களில் கலந்துவிட்ட விஷம் பற்றிப் பரவலாகக் கேள்விப்பட்டு வருகிறோம். வீதி நெடுக நிகழும் விரிவுரைகளும் இதனை உணர்த்தி வருகின்றன. ஆனால், நாம் இன்று உணர்ந்து கொள்ள வேண்டிய ஓர் அடிப்படையான உண்மை என்ன தெரியுமா? இதோ, கவிஞரே அதனைத் தம் கவிதை ஒன்றில் எடுத்துக்காட்டுகின்றார்:

**“இதிலென்ன அதிசயம்**
**குழந்தை கருவில் சுவாசிக்கும்**
**பனிக்குட நீரையே**
**விஷமாக்கிவிட்டது**
**நூற்றாண்டுகளின் ஆட்சி”** (ப.55)

அதையும் இதையும் தொட்டுக் கடைசியில் அடிமடியிலேயே கை வைப்பது போல், நூற்றாண்டுகளின் ஆட்சி குழந்தை கருவில் சுவாசிக்கும் பனிக்குட நீரையே விஷமாக்கிவிட்டது! இந்தப்

பேரவலத்தில் இருந்து எப்படி மீளப்போகிறது மனித குலம்? இதுவே கவிஞரின் ஆழ்ந்த கவலை.

**நீ**ண்ட கால இடைவெளிக்குப் பிறகு தமிழ்ப் புதுக்கவிதை உலகிற்குக் கிடைத்துள்ள நல்வரவு வெற்றிச்செல்வனின் 'மனத்தடி நீர்' தொகுப்பு. அவரே குறிப்பிடுவது போல், 'இந்தக் கவிதைகளின் மடியில் தலைசாய்த்து ஓய்வெடுத்தால், விரல் நீவி தலைகோதி தாலாட்டாய் - பள்ளியெழுச்சியாய் - உற்சாகமாய் - உடல்நலக் குறைவையும் மனநலக் குறைவையும் குணப்படுத்தும் இக் கவிதைகள்' *(ப.14)*.



# 17

# ஹைகூ கவிஞர் மு. முருகேஷ்

> "ஹைக்கு தவிர வேறு வடிவங்களில் எழுதினால் 'சாமி குத்தம்' வந்துவிடுமோ என்று அவர் [மு. முருகேஷ்] நினைக்கிறார். அந்த அளவுக்கு ஹைக்கு அவருக்கு சாமி, தெய்வம்."
>
> – கல்யாண்ஜி*

'அம்மா என்றால் அன்பு' எனப் புகழ்பெற்ற ஒரு திரையிசைப் பாடல் தொடங்கும். அது போல, மு. முருகேஷ் என்றால் ஹைகூ; ஹைகூ என்றால் மு. முருகேஷ். 'மக்களால் - மக்களே - மக்களுக்காக' என்றாற் போல, 'ஹைகூவால் - ஹைகூவே - ஹைகூவுக்காக' எனத் தமது வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் அடியையும் பயன்படுத்தி வருபவர் மு. முருகேஷ் எனச் சுருங்கக் கூறலாம். 'தமிழ் விடு தூது' ஆசிரியர் மொழியில் குறிப்பிடுவது என்றால் 'ஹைகூவே உன்னால் இருந்தேன் - இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என மொழிவதே முருகேஷின் ஆளுமைப் பண்பு.

**"கறுத்த பெண்**
**புகுந்தகம் வந்தாள்**
**கலர் டி.வி.யோடு!"** **[விரல் நுனியில் வானம், ப.38]**

என்பது தமிழ் கூறு நல்லுலகிற்கு முருகேஷை அறிமுகம் செய்து வைத்த ஹைகூ.

---

* முன்னுரை, மு. முருகேஷின் 'வரும் போலிருக்கிறது மழை', ப.9.

"நேற்றே செத்துப் போனான்
தோட்டக்காரன்.
செடியில் புதிதாய் பூ!" [விரல் நுனியில் வானம், ப.20]

என்பது கவிதை ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் முருகேஷை அடையாளம் காட்டிய ஹைகூ.

"அடுப்[படி]புப் புகை
கரித்துணிக் கவிதை...
அம்மா" [விரல் நுனியில் வானம், ப.19]

என்பது முருகேஷின் முத்திரை ஹைகூ. "நான் எழுதி பலரையும் (என்னையும் தான்) பாதித்த ஹைக்கூ கவிதை" (மின்னல் பூக்கும் இரவு, ப.145) என இக் கவிதை பற்றிய தம் தனிப்பட்ட உணர்வினை ஒரு நேர்காணலில் பதிவு செய்துள்ளார் முருகேஷ்.

இங்கே மேற்கோள் காட்டப்பெற்றவற்றுள் முதல் ஹைகூ கவிதை முருகேஷின் சமூக உணர்வினைப் பறைசாற்றுவது; இரண்டாவது ஹைகூ கவிதை அவரது தத்துவ நோக்கினை வெளிப்படுத்துவது; மூன்றாவது ஹைகூ கவிதை அவரது தனித்தன்மையைப் புலப்படுத்துவது. "சொற்சுருக்கம், இயற்கையின் தரிசனம், படிம அழகு, தத்துவ நோக்கு, தனிமை, வெறுமை, நிலையாமை, மர்மம், உணர்ச்சி, கிளர்ச்சி இவையே ஹைகூவின் தனிச்சிறப்புகள் எனில் மிகையாகாது" (அணிந்துரை, விரல் நுனியில் வானம், ப.5) என்னும் கவிஞர் மித்ராவின் கூற்றுக்கு அரண் செய்யும் விதத்தில் முருகேஷின் ஹைகூ கவிதைகள் விளங்குகின்றன.

முருகேஷின் ஹைகூ பயணம் 1993-ஆம் ஆண்டில் 'விரல் நுனியில் வானம்' (ஜூலை 1993) என்னும் தொகுப்புடன் தொடங்கியது. 'என் இனிய ஹைகூ...' (ஜனவரி 1995), 'தரை தொடாத காற்று' (ஜூன் 2001), 'நிலா முத்தம்' (டிசம்பர் 2002), 'உயிர்க் கவிதைகள்' (செப்டம்பர் 2010) என ஏறத்தாழப் பதினெட்டு ஆண்டுக் கால இடைவெளியில் அடுத்தடுத்து வெளிவந்த தொகுப்புக்கள் வாயிலாக ஹைகூ வடிவத்தின் மீது முருகேஷ் கொண்டிருக்கும் ஆழ்ந்த பற்றை நாம் கண்டுகொள்ளலாம். 'என் இனிய ஹைகூ' என்னும் பெயரில் ஹைகூவுக்கு என்று ஒரு தனி இதழை நடத்திய பெருமையும் முருகேஷுக்கு உண்டு. 'ஹைக்கூ டைரி 2000' என்பது இருபத்தியோராம் நூற்றாண்டின் நுழைவாயில் நாட்குறிப்பும் கவிதையும் கைகுலுக்கிக் கொள்ளும் முருகேஷின் புதிய முயற்சி ஆகும்.

‘ஹைக்கூ கற்க’ (டிசம்பர் 2008) என்பது 1998-ஆம் ஆண்டு தொடங்கி 2007 வரை வெளிவந்துள்ள 33 ஹைகூ கவிதை நூல்களுக்கு முருகேஷ் அவ்வப்போது எழுதிய முன்னுரைகளின் தொகுப்பு ஆகும்.

“ஹைகூ செய்யப்படுவதல்ல. எல்லா இடங்களிலும் ஹைக்கூக் கள் சிந்திக் கிடக்கின்றன. அதைப் பார்க்கத் தெரிய வேண்டும். மு. முருகேஷுக்கு ஹைக்கூக்களைப் பார்க்கத் தெரிந்திருக்கிறது. இயற்கைக் காட்சிகளில் மட்டுமல்ல, சமூக நிகழ்ச்சிகளிலும் அவர் ஹைக்கூவைப் பார்க்கிறார். இது ஹைக்கூவின் புதிய பரிமாணம்” (பின்னட்டை, என் இனிய ஹைகூ...) என மு. முருகேஷைப் பற்றிய தம் மதிப்பீட்டினை மொழிவார் கவிக்கோ அப்துல் ரகுமான். “சிதையும் சமூகத்தை, அதனுள் பொதிந்து கிடக்கும் இயற்கையை, மனித நேயத்தை எளிமையோடும், உள்ளார்ந்த ஈடுபாட்டோடும் சொல்லத் துடிக்கும் முயற்சிகளே எனது ஹைகூ கவிதைகள்” (இது ஹைகூ காலம்..., என் இனிய ஹைகூ..., p. x) என்னும் மு. முருகேஷின் ஒப்புதல் வாக்குமூலம் இங்கே மனங் கொளத்தக்கதாகும். இவ்விரு கருத்துக்களின் ஒளியில் மு. முருகேஷின் ஹைகூ படைப்பாக்கத் திறன் குறித்துக் காண்போம்.

மு. முருகேஷின் ஹைகூ உலகில் நிலவுக்கு ஒரு தனி இடம் உள்ளது. அவர் கூப்பிட்ட குரலுக்கு எல்லாம் ஓடோடி வந்து அணி செய்கின்றது நிலவு. உள்ளங்கவர் உதாரணம் ஒன்று இதோ:

**“ஒற்றையடிப் பாதை**
**தனியே போகையில்**
**கூடவே வரும் நிலவு”** **[உயிர்க் கவிதைகள், ப.11]**

நிலவின் வருகையை முருகேஷின் ஹைகூ கவிதைகளில் அடிக்கடி காண முடிகின்றது. ஒருவேளை அவரது கவி இணை வெண்ணிலாவின் தாக்கம் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

**“கல்யாணக் கூட்டம்**
**முதிர்கன்னியின் தலையிலும்**
**கொஞ்சம் அட்சதைகள்”** **[என் இனிய ஹைக்கூ..., ப.23]**

என்னும் ஹைகூ முதிர்கன்னியர் அவலம் பற்றிய முருகேஷின் உருக்கமான பதிவு ஆகும். ‘வாழ்க்கை அனுபவத்தின் ஒவ்வொரு துளியிலும் பட்டுத் தெறிக்கிறது கவிதை’ என்னும் இலக்கணத்திற்கு ஓர் உயிருள்ள இலக்கியமாய் உலா வரும் முருகேஷின் ஹைகூ வருமாறு:

"கைகளில் என்னயிருக்கு
மனதினுள் வேண்டும்
நம்பிக்கை உரம்" [தரை தொடாத காற்று, ப.46]

இன்றைய அரசியல்வாதிகள் மறைவாகத் தமக்குள்ளே போற்றி வளர்த்து வரும் சாதிக் கொடுமைக்குச் சாட்டையடி கொடுக்கும் முருகேஷின் ஹைகூ இது :

"சாதியச் சுவர்கள்
சொறிந்து சுகம்கொள்ளும்
அரசியல் முதுகுகள்" [தரை தொடாத காற்று, ப.51]

வாழ்வில் நேரும் நுண்ணிய உணர்வுக்கு நிலைத்த கலை வடிவம் தருவது ஹைகூ கவிதை என்றால் அதற்கான நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்வது முருகேஷின் பின்வரும் ஹைகூ:

"மலடியை
அம்மா என்றழைத்தது
பிச்சைக்காரன் குரல்" [என் இனிய ஹைக்கூ..., ப.55]

தத்துவ நோக்கும் கைவரப் பெற்றவர் மு. முருகேஷ் என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கும் ஒரு ஹைகூ இதோ:

"நானைத் தேடி
சோர்ந்தது நான்
சரி... எது நான்..?" [தரை தொடாத காற்று, ப.54]

'நான்ஆர்? என் உள்ளம்ஆர்? ஞானங்கள் ஆர்?' என்னும் மாணிக்க வாசகர் வாக்கு இங்கே அழகிய ஹைகூ வடிவம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

ஹைகூ புனைவு இலக்கியம் அன்று, நுண்ணிய உணர்விலக்கியம் என்பதை நிறுவும் வகையில் முருகேஷ் படைத்துள்ள ஹைகூ ஒன்று வருமாறு:

"நடு நிசியில்
விழித்தெழுந்து பார்த்தால்
குழந்தைக்குப் பாலூட்டும் தாய்" [நிலா முத்தம், ப.30]

ஜப்பானிய ஹைகூ கவிஞரின் கவிதையை நினைவுபடுத்தும் விதத்தில் முருகேஷின் ஹைகூ ஒன்று காணப்படுகின்றது. அக் கவிதை இதோ:

"சிரித்துத்தான்

**மறக்க வேண்டியுள்ளது...**
**பசியை."** [உயிர்க் கவிதைகள், ப.4]

இங்ஙனம் மு. முருகேஷின் ஹைகூ உலகம் பரந்தும் விரிந்தும், ஆழ்ந்தும் அகன்றும் நுண்ணிதாகவும் காணப்படுகின்றது.

ஹைகூவுக்கு அடுத்த நிலையில் முருகேஷின் படைப்பாற்றல் வெளிப்பட்டுள்ள பிறிதொரு வடிவம் புதுக்கவிதை. 'பூவின் நிழல்' (டிசம்பர் 1996), 'கொஞ்சம் ஹைக்கூ கொஞ்சம் புதுக்கவிதை' (ஜனவரி 1998), 'குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன' (டிசம்பர் 2002), 'கடவுளோடு விளையாடும் குழந்தைகள்' (டிசம்பர் 2007) ஆகிய தொகுப்புக்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

மு. முருகேஷின் படைப்புலகில் குழந்தைகளுக்கு என்று தனியிடம் உள்ளது. 'குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன', 'கடவுளோடு விளையாடும் குழந்தைகள்' என்னும் இரு புதுக் கவிதைத் தொகுப்புக்களும், 'உள்ளே... வெளியே...' (ஆகஸ்ட் 2011) என்னும் கட்டுரைத் தொகுப்பும் குழந்தைகள் உலகின் மீது அவருக்கு உள்ள ஆழ்ந்த அக்கறையையும் ஆர்வத்தையும் புலப்படுத்துகின்றன. 'அற்ற வீடு' என்ற தலைப்பில் முருகேஷ் படைத்துள்ள கவிதை இவ் வகையில் நினைவுகூரத்தக்கது:

**"உட்கார்ந்தே பேசுகிற**
**உயரத்தில் தொலைபேசி**
**குட்டை நாற்காலியில்**
**மீன்கள் அலையும்**
**கண்ணாடித் தொட்டி**
**கிறுக்கல்கள் ஏதுமற்ற**
**வெள்ளைச் சுவர்**
**தரையிலேயே கிடக்கிற**
**விரித்த புத்தகம்**
**திறந்த பேனா, பேப்பர்"**

- என்ன பட்டியல் இது என்று கேட்கிறீர்களா? இதோ, கவிஞரே விடை கூறுகிறார், கேளுங்கள்:

**"பார்த்த கணத்திலேயே**
**உணர முடிகிறது**
**குழந்தைகள் ஏதுமற்ற**
**வீடு இதுவென"**

[குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன, ப.30]

‘படைப்புப் பல படைத்து, பலரோடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வர் ஆயினும், பயக்குறை இல்லை தாம் வாழு நாளே’ (புற நானூறு, 188) என்னும் சங்கச் சான்றோர் சிந்தனையே முருகேஷின் கைவண்ணத்தில் இங்கே புதுக்கவிதை வடிவம் பெற்றுள்ளது.

முருகேஷின் புதுக்கவிதைகள் பதிவு செய்துள்ள பெண்ணியச் சிந்தனைகள் கூர்மையானவை. ‘தலைமுறைக் கோபம்’ (குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன, ப.27), ‘பிறப்பொக்கும்...’ (கடவுளோடு விளையாடும் குழந்தைகள், ப.25), ‘ஒப்பனை ஒழிக!’ (பூவின் நிழல், பக்.38-39) ஆகிய கவிதைகள் இவ்வகையில் சிறப்பானவை. ‘பெண் பார்க்கும் படலம்’ என்னும் பெயரில் இன்றைய நடுத்தரக் குடும்பங் களில் நிகழும் அவலங்களையும் மு. முருகேஷ் ‘ஒரே கேள்வி’ என்னும் தம் கவிதையில் நடப்பியல் பாங்கில் படம்பிடித்துக் காட்டி யுள்ளார். பெரியக்காவுக்கு ஆவணி முடிந்தால் முப்பது வயது ஆயிற்றாம். இதுவரை அவளை வரன் பார்க்க வந்தவர்கள் எண்ணிக்கையில் அவள் வயசு கூடக் குறைவுதானாம். வெயிலோடு வீட்டுக்கு ஓடி வந்து, ‘காலையிலெ பொண்ணு பார்க்க காரைக்குடி யிலிருந்து வர்றாக!’ என்று தரகர் சொல்லிவிட்டுப் போன செய்தி அம்மாவை உடல் வியர்க்கச் செய்ததாம். பஜ்ஜி, சொஜ்ஜி செய்ய அம்மா அப்பாவிடம் பணம் கேட்டாளாம். மாதக் கடைசி ஆதலால் கையில் பசையற்ற அப்பா கடன் கேட்டாராம். மாப்பிள்ளை வீட்டார் வந்ததும், அக்காவின் ஜாதகம் கேட்டார்களாம்; அக்காவின் கழுத்து நகை கவரிங்கா, ஒரிஜினலா எனச் சந்தேகம் கேட்டார்களாம். ‘பொண்ணு பொருத்தமா?’ என்று கடைக்கண்ணால் மாப்பிள்ளையைக் கேட்டார்களாம். இன்னமும் வீட்டைப் பற்றி - உறவுகளைப் பற்றி - எல்லோரிடமும் எல்லாமும் கேட்டார்களாம். ஆனால் கேட்க வேண்டியவரிடம் கேட்க வேண்டிய ஒன்றைப் பற்றி மட்டும் - யாருமே கேட்கவில்லையாம்!

> “மாப்பிள்ளை புடிச்சிருக்கா?
> யாருமே கேட்கவில்லை...
> அக்காவிடம் மட்டும்!” [பூவின் நிழல், பக்.53-54]

‘பிடித்திருக்கிறதா?’ என்று கடையில் துணி வாங்கும்போதுகூடப் பெண்ணிடம் கருத்துக் கேட்கும் பெற்றோர், வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் போது மட்டும் பெண்ணின் விருப்பத்தைக் கேட்காதது வியப்பிலும் வியப்பு; வேதனையிலும் வேதனை.

வாழ்க்கையைப் போன்று எதிர்பாராத நிகழ்வுகளும் ஏற்ற இறக்கங்களும் திருப்பு முனைகளும் கொண்ட புதினம் வேறு எதுவும் உலகில் இருக்க முடியாது. இதனைத் திறம்பட உணர்த்தும் முருகேஷின் குறுங்கவிதை ஒன்று:

**“உட்கார இடம்**
**கிடைத்த போது**
**வந்துவிட்டது**
**நான் –**
**இறங்க வேண்டிய**
**இடம்”** [குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன, ப.34]

வழிப்பயணத்தில் அனைவருக்கும் நேரும் என்ன 'அற்புதமான வாழ்க்கை முரண் பாருங்கள்!

இன்று எங்கும் – எதிலும் – எல்லாம் கணினி மயம்! வங்கிகள் – கல்லூரிகள் – திரைப்படம் – முன்பதிவு நிலையங்கள் – வாக்குப் பதிவு என எல்லா இடங்களும் கணினி மயமாகிவிட்டனவாம்! ‘அறிவியல் ம(ா)யம்’ என்னும் அற்புதம் நிகழ்ந்து விட்டதாம்! ஆனாலும் நம் நாட்டில் ஒரே ஓர் இடத்தில் மட்டும் இன்னமும் அந்த ம(ா)யம் நிகழவில்லையாம்! அந்த இடம் எது என்பதைக் கவிஞர் சொற்களிலேயே காண்பது சிறப்பு:

**“எல்லாம் கணினி மயமாகிற**
**எங்கள் தேசத்தில்,**
**இன்னும் கணினி மயமாகாமல்**
**இருக்குமிடம்**
**கட்டணக் கழிப்பறைகள்”**
[குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன, ப.45]

மட்டுமேயாம்!

‘ஆறுவது சினம்’ என்று தமது ஆத்திச்சூடியில் அறிவுறுத்தினார் தமிழ் மூதாட்டி ஔவையார். ஆனாலும், நடைமுறை வாழ்வில் கோபத்தைக் கட்டுப்படுத்துவது என்பது அவ்வளவு எளிதான முயற்சி அன்று; எல்லோருக்கும் எளிதில் முடிவதும் அன்று. கோபம் தலைக் கேறிய நிலையில் ஒருவர் எப்படி எல்லாம் பேசுவார், செயல்படுவார் என்பதை மு. முருகேஷ் ‘சரி/தவறு’ என்னும் குறுங்கவிதையில் தமக்கே உரிய இயல்பான மொழியில் பதிவு செய்துள்ளார்:

**"செத்துத் தொலை என்கிறாய்**
**கோபம் தலைக்கேறி**
**செத்துப்போய்**
**தொலைந்துவிடவா...**
**அல்லது**
**தொலைந்துபோய்**
**செத்துவிடவா...**
**சரியாய்ச் சொல்லித் தொலை**
**முதலில்" [கடவுளோடு விளையாடும் குழந்தைகள், ப.16]**

படிப்பவர் உதடுகளில் புன்முறுவலைத் தோற்றுவிக்கும் கவிதை இது.

'நீ முதல் நான் வரை' (டிசம்பர் 2001) என்பது காதலுக்குப் பின்னும், கல்யாணத்திற்குப் பின்னுமான முருகேஷின் உன்னதமான வாழ்க்கைத் தருணங்களின் பதிவு; உயிர்ப்பான படப்பிடிப்பு. பதச்சோறு ஒன்று:

**"நிலவில் அமர்ந்து**
**முத்தமிட்டுக் கொண்டோம்...**
**நமக்குள் பௌர்ணமி" [நீ முதல் நான் வரை, ப.23]**

ஒருவரில் ஒருவர் கலந்து - கரைந்து - காணாமல் போகும் காதல் அனுபவம் இங்கே கவிதை வடிவம் பெற்றுள்ளது.

காதலையும் மழையையும் இணைத்து முருகேஷ் தம் கவிதை ஒன்றில் தீட்டியுள்ள உயிர்ப்பு மிக்க வரிகள் இவை:

**"உயிரின் அடிவேரையே**
**அசைக்கிற**
**காதலின் தீவிரத்தோடு**
**கொட்டுகிறது**
**மழை" [குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன, ப.28]**

முருகேஷின் படைப்பாளுமை ஹைகூ, புதுக்கவிதை, சிறுகதை, கட்டுரை, திறனாய்வு, தொகை நூல் எனப் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டுள்ளது. மொத்தத்தில் பேராசிரியர் த. பழமலய் '36 கவிதை களும் 16 ஓவியங்களும்' (டிசம்பர் 2001) என்னும் தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவது போல், 'மனம் வெளுக்க மார்க்கம் உதவும் கவிஞர்களிடையில் மு. முருகேஷ் குறிப்பிடத் தக்கவராக இருக்கிறார்' (ப.4).

18

# வாழ்க்கையிலே கவிதைகளைத் தேடும் கவிஞர் க. ஆனந்த்

"எல்லோரும் பார்க்கும் பொருள்களிலிருந்து,
எவரும் பார்க்காத ஒரு கோணத்தை
வெளிப்படுத்துவது தான் அழகான
கவிதையின் அடையாளம்."

- ஜீவி*

"யார் மூலமாவது
கண்டெடுக்கப்பட்டு
எழுத்தாக்கப்படும்
கணத்திற்காக
ஒவ்வொரு நிகழ்விலும்
ஒவ்வொரு பொருளிலும்
ஒளிந்து கொண்டிருக்கிறது கவிதை"

[ஒவ்வொரு மழையிலும்..., ப.14]

எனக் கவிதைக்கு வரைவிலக்கணம் வகுக்கும் க. ஆனந்த், நாமக்கல்லைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; இவர் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு பொறியாளர். சேலம் 'எழுத்துக் களம்', தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 'மின் இலக்கியப் பூங்கா' முதலான பல்வேறு இலக்கிய அமைப்புக்களில் முனைப்புடன் பணியாற்றி வரும் ஆனந்தின் கவிதைகள், 'கல்கி',

* கவிதையும் கவிதை சார்ந்தும், ப.27.

'ஆனந்த விகடன்', 'கவிதை உறவு', 'கனவு', 'புன்னகை' போன்ற இதழ்களிலும், கீற்று.காம், வார்ப்பு.காம் போன்ற இணைய தளங் களிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 'அப்போதுதான் பிரசவித்து அருகில் கிடத்தப்பட்ட குழந்தையைப் பார்த்து, ஓர் அம்மா அடையும் பரவசத்தை, எழுதி முடித்த ஒவ்வொரு கவிதையிலும் உணர முடிகிறது' (என்னுரை, ஒவ்வொரு மழையிலும்..., ப.12) என்பது அவரது தனிப்பட்ட கவிதை அனுபவம். 'ஒவ்வொரு மழையிலும்...' (2009), 'கனவுகள் பூட்டிய தேர்' (2010) என்பன அவர் வெளியிட்டுள்ள கவிதைத் தொகுப்புக்கள். கவிதை உலகில் மூன்றாம் பிறை போல் நம்பிக்கைக்கு உரிய ஒரு புதிய வரவாய் நேர்ந்துள்ளது ஆனந்தின் வருகை. தம் கவிதைப் பணிகளுக்காகப் 'பொன்னொளிக் கவிஞர்' (2011) முதலான பல்வேறு பட்டங்களும் விருதுகளும் பெற்றுள்ள கவிஞர் ஆனந்த், மூதறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பனார்க்குப் பெயரன் முறை என்பது கூடுதல் சிறப்பு. இனி, கவிஞர் க. ஆனந்தின் கவிதை உலகம் குறித்து இக் கட்டுரையில் சுருங்கக் காண்போம்.

## உடன்பாட்டுச் சிந்தனை

'அரசியல் ஒரு சாக்கடை; அது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' எனக் கூறுவதே பெரும்பான்மை வழக்கு. இங்ஙனம் எதிர்முறை நோக்கில் கூறுவதைத் தவிர்த்து, உடன்பாட்டு முறையில் கருத்துக்களைக் கூறிச் செல்லும் போக்கினை ஆனந்த் தம் கவிதைகளில் கையாண்டுள்ளார். ஔவையார் 'அறம் செய விரும்பு' எனத் தம் ஆத்திச்சூடியைத் தொடங்கினார்; ஆனந்த் இதனையே சற்று மாற்றி, 'அரசியல் செய விரும்பு' என இளைய தலைமுறைக்கு அறிவுறுத்தியுள்ளார். இங்ஙனம் அறிவுறுத்துவதற்கு அவர் முறையே அடுக்கிக் கூறியுள்ள காரணங்கள் சுவை மிக்கவை; பொருள் பொதிந்தவை. அவற்றைக் கவிஞரின் மொழியிலேயே இங்கே காண்பது பொருத்தமாக இருக்கும்:

1. இளைஞனே! உன் ஒரு விரல் அசைவில் கோடி விழிகளின் கண்ணீரைத் துடைக்கலாம்.
2. உன் நேர்மையின் வெளிச்சத்தில் இருண்ட இதயங்களில் ஒளியேற்றலாம்.

3. மக்கள் நலன் ஒன்றே சொத்து எனச் சேர்த்தால் உன் பெயர் மண்ணில் நிலைக்கலாம்.

4. நாட்டின் வளர்ச்சியையே நாளும் சிந்தித்தால் உன் செயலால் மானுடம் மலைக்கலாம்.

5. ஐந்தாண்டுகள் என்ற வரையறையைத் தாண்டி ஐந்து தலைமுறைக்கும் நீ சிறந்த திட்டங்கள் தீட்டலாம்.

6. நன்னெறிகள் தாண்டி நடப்பது யாராயினும் உன் சட்டங்கள் அவர்களைத் தீண்டலாம்.

7. வாக்கை நீ காப்பாற்றினால், வாக்குகள் உறுதியாக உன்னைக் காப்பாற்றும்.

8. எல்லாவற்றிற்கும் மேலாக, வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாமல் வாழ்ந்து நீ காட்டி விட்டால் வையமே உன்னைப் போற்றும்.

இவ்வளவு கருத்துக்களையும் நிரல்படப் பட்டியல் இட்டுவிட்டு, கவிஞர் முத்தாய்ப்பாக இளைய தலைமுறையினருக்குக் கூறுவது இதுதான்:

> **"ஆதலினால் இளைஞனே,**
> **அரசியல் செய்ய விரும்பு"**
>
> **[ஒவ்வொரு மழையிலும்.., ப.75]**

நல்லவர்கள் - குறிப்பாக, இளைய தலைமுறையினர் - எல்லாம் அரசியலில் இருந்து விலகிச் சென்றால் - ஒதுங்கி வாழ்ந்தால் - நல்ல அரசினை - ஆட்சியினை - நாம் எப்படிக் காண முடியும்? அரசியலில் தூய்மையாக வாழ்ந்து, உண்மையாக இருந்து, நேர்மையாக உழைத்தால் நாட்டு மக்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்ய முடியும். இதுவே கவிஞர் இன்றைய இளைய தலைமுறைக்கு விடுக்கும் செய்தி ஆகும்.

## 'வரலாறு என்பது தந்து போனவர்களின் கணக்கு!'

'வார்த்தையிலே கவிதைகளைத் தேடிடாமல் வாழ்க்கையிலே தேடுகிற கவிஞ'ராக விளங்குவது கவிஞர் என்ற முறையில் ஆனந்தின் தனிச்சிறப்பு ஆகும். அவரது அகராதியில் தருதல் என்பது பெறுதலினும் சுகமானது; மானுட வாழ்வின் உண்மைத் தகுதியும்

இருப்பின் பொருளும் ஒன்றைத் தருவதிலேயே அடங்கியுள்ளது. சங்கச் சான்றோர் குறிப்பிடுவது போல், 'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆகும்' என்னும் அறவிலை வாணிகமாக அல்லாமல், தருவதற்காகவே தருவதே அன்பின் அடையாளம் ஆகும்.

**"வரலாறு என்பது**
**வந்து போனவர்களின்**
**கணக்கல்ல**
**தந்து போனவர்களின்**
**கணக்கு"** [ஒவ்வொரு மழையிலும்..., ப.24]

என்பது கவிஞரின் இரத்தினச் சுருக்கமான வாக்கு. நேற்று வந்து, இன்று இருந்து, நாளை மடிந்து போகும் வாடிக்கை மனிதர்களால் வரலாறு ஒருபோதும் உருவாக்கப்படுவதில்லை. இன்னமும் கூர்மையாகக் குறிப்பிட வேண்டும் என்றால், வந்து போகும் வேடிக்கை மனிதர்கள் வரலாற்றின் பக்கங்களில் இடம்பெறுவ தில்லை. உலகிற்குத் தம் நிலையான பங்களிப்பினைத் தந்து செல்லும் சாதனை மனிதர்களே வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெறுகின்றனர். வரலாறு பற்றிய கவிஞரின் கருத்தியல் சிறப்பானது; சிந்திக்கத் தூண்டுவது.

## 'வலி பொறுத்து வாழ்ந்து காட்டுவதே வலிமை!'

'வலி' என்ற சொல்லின் மீது கவிஞருக்கு ஆழ்ந்த ஈடுபாடு உள்ளது. அவர் 'வலி' என்ற சொல்லினைத் தம் கவிதைகளில் பதினோரு இடங்களில் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது (ஒவ்வொரு மழையிலும்..., பக்.28; 30; 56; 66; 83; 96; கனவுகள் பூட்டிய தேர், பக்.30-31; 49; 62; 64; 78). 'வலி' என்ற தலைப்பிலேயே ஆனந்த் ஒரு கவிதை படைத்துள்ளார். 'சிகரம் நோக்கி / எடுத்து வைக்கும் / சின்னச் சின்ன / அடிக்கும் / வலி பொது' எனக் குறிப்பிடும் கவிஞர்,

**"வலி பொறுத்து**
**வலி பொறுத்து**
**வாழ்ந்து காட்டுவதே**
**வலிமை"** [ஒவ்வொரு மழையிலும்..., ப.83]

என அக் கவிதையின் முடிவில் தம் கருத்தினைத் தெள்ளத் தெளிவாகப்

புலப்படுத்தியுள்ளார். இங்கே ‘வலி’ என்ற சொல்லினை வேதனை, வலிமை என்னும் இரு பொருள் படும்படி கவிஞர் திறம்படக் கையாண்டுள்ளார்.

இன்றைய சூழலில் மனித வாழ்க்கை பொறுக்க முடியாத கடுமையான வலிகளை அனுபவிக்க வேண்டியுள்ளது. வயதான பெற்றோர் இன்று உணரும் வலி அத்தகையது. ‘பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு!’ என்பார்கள். இப் பழமொழி, முதியோர் இல்லங்கள் பெருகி வரும் இந்நாளில் அனுபவ மொழியாக வழங்கிடக் காண்கிறோம். ‘பெற்ற மனம்...’ என்னும் தலைப்பில் ஆனந்த் படைத்துள்ள கவிதை ஒன்று இவ்வகையில் நினைவுகூரத் தக்கதாகும்.

**“பழகியது தான்**
**பள்ளிவிட்டு வரும்**
**பிள்ளைக்காகக்**
**காத்திருந்தது”**

எனத் தாய் ஒருத்தியின் கடந்த கால நினைவுப் பகிர்தலுடன் தொடங்கும் அக்கவிதை இப்படி நிறைவடைகிறது.

**“என்றாலும்**
**இந்த முறை**
**வலித்தது**
**அதே பிள்ளைக்காக**
**முதியோர் இல்லத்தில்**
**காத்திருக்கையில்”**

**[ஒவ்வொரு மழையிலும்..., ப.66]**

காத்திருப்பது என்னவோ தாய்தான்; காத்திருப்பதும் தன் பிள்ளைக்காகத் தான். என்றாலும், இளமையில் பள்ளி விட்டு வரும் பிள்ளைக்காகக் காத்திருப்பதற்கும், முதுமையில் அதே பிள்ளையின் வருகைக்காக முதியோர் இல்லத்தில் காத்திருப்பதற்கும் இடையே உணர்ச்சி அளவில்தான் எத்துணை வேறுபாடு! பின்னைய காத்திருப்பு வயதான தாய்க்குத் தரும் வலியில் தான் எத்துணை ஆழ்ந்த உணர்ச்சி!

வாழ்க்கைப் பயணத்தில் - பாதையில் - மனித குலம் அவ்வப்போது அனுபவிக்கும் வலிகளை மட்டுமன்றி, 'இறகு' என்னும் கவிதையில் பறவை இனத்தின் வலியினையும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார் கவிஞர்:

**"விழுந்து கிடக்கும்**
**ஒவ்வோர் இறகிலும்**
**ஒட்டிக் கொண்டிருக்கிறது**
**ஏதோவோர் பறவையின்**
**வலி"** [ஒவ்வொரு மழையிலும்.., ப.62]

ஒரு கவிஞருக்கே உரிய கனிவான பார்வை - கருணை மனம் - இங்கே நுட்பமாய் வெளிப்பட்டிருக்கக் காண்கிறோம்.

### கவிஞரின் தனிப்பாணி

இயல்பாகத் தொடங்கி, படிப்படியே வளர்த்து, முத்தாய்ப்பாக முடித்து வைப்பது கவிஞருக்குக் கைவந்த பாணி; அது அவருக்கு விருப்பமான படைப்பாக்க நெறியும் கூட. தொட்டி மீனுடன் உரையாடுவது போலக் கவிஞர் படைத்துள்ள கவிதை இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. 'உனக்கென்ன, உன்னைத் தேடி, இரை வரும்' என இயல்பாகத் தொடங்குகின்றது அக் கவிதை. 'எதிர்நீச்சல் போட வேண்டிய அவசியம் இல்லை; தூண்டிலோ வலையோ குறித்த எச்சரிக்கை உணர்வும் தேவையில்லை; எல்லோருக்கும் அழகான காட்சிப் பொருள் நீ; இருக்கின்ற நீள அகலத்திற்குள் மிகவும் சுறுசுறுப்பாகத் தான் இயங்குவாய்' என்றெல்லாம் தொட்டி மீனுக்கு வாய்த்த வாய்ப்பும் வசதியும் குறித்த பதிவுடன் கவிதையை வளர்த்துச் செல்லும் கவிஞர்,

**"உனக்கென்ன**
**சுகமாகத் தான்**
**இருக்கிறாய்**
**வீட்டோடு மாப்பிள்ளை போல"**

[ஒவ்வொரு மழையிலும்.., ப.45]

எனக் கவிதையை முத்தாய்ப்பான உவமையோடு முடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. வீட்டோடு மாப்பிள்ளைக்கு வசதி, வாய்ப்பு என எல்லாம் கிடைக்கலாம்; ஆனால், அவனது வாழ்வில் உயிரினும்

மேலான தன்மானத்திற்கும் விடுதலை உணர்வுக்கும் இடம் இருக்குமா என்றால் ஐயமே. தொட்டி மீனின் வாழ்வும் வீட்டோடு மாப்பிள்ளை போல் வசதியும் வாய்ப்பும் மிக்கது போல் தோன்றினாலும், வரையறைக்கு உட்பட்டதே என்பதை இக் கவிதையில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

## இருவேறுபட்ட சிந்தனைப் போக்குகள்

'பெண்ணின் பெருந்தக்க யாவுள?' *(54)* என ஒரு குறட்பாவில் வினவிய வள்ளுவரே, பிறிதொரு குறட்பாவில் 'பெண்ணின் பெருந்தக்கது இல்' *(1137)* என முடிந்த முடிபாக விடை கூறி இருப்பார். இதே போல, 'ஊழின் பெருவலி யாவுள?' *(380)* என ஊழின் வலிமையை எடுத்துரைத்த வள்ளுவரே, மற்றொரு குறட்பாவில் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' *(620)* என விடாமுயற்சிக்கு மகுடம் சூட்டி இருப்பார். கவிஞரே ஓர் இடத்தில் குறிப்பிடுவது போல்,

**"எத்தனை**
**வாசித்தாலும்**
**திருக்குறள் கேட்கும்**
**இன்னும் வேண்டுமா?"**

[ஒவ்வாரு மழையிலும்.., ப.92]

என்று.

வள்ளுவரின் வழியில் நடை பயிலும் ஆனந்திடமும் இருவேறுபட்ட சிந்தனைப் போக்குகளைக் காண முடிகின்றது. 'விதி...' என்னும் குறுங்கவிதையில் அவர் விதியின் வலிமையை எடுத்துரைத்துள்ளார். சாலை விதிகளை மதித்துச் சிவப்பு விளக்கிற்குத் தன் வாகனத்தை நிறுத்துகிறான் ஒருவன். ஆனால் நடந்தது என்ன தெரியுமா? வேகமாகப் பின்னால் வந்த பிறிதொரு வாகனம் மோதிவிடுகின்றது. 'இது தான் விதி என்பதா?' என வினவுகின்றார் கவிஞர். 'விதி' என்னும் சொல்லினை இரு பொருள்படும்படி இக் கவிதையில் கவிஞர் கையாண்டிருப்பது சிறப்பு.

'ரேகை...' என்னும் கவிதை கவிஞரின் முற்போக்கான சிந்தனைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றது. சுருக்கங்களைக் கொண்டு

வாழ்க்கையை விரிக்க - நீளம் கொண்டு ஆயுள் நிர்ணயிக்க - மடிப்புகளின் இடுக்குகளைக் கூடப் படித்துச் சொல்ல - தன் கையை ரேகை பார்ப்பவனிடம் நீட்டும் எவரும் -

> "ரேகை பார்ப்பவனின்
> ரேகை குறித்தும்
> கைகள் இல்லாதவனுக்கான
> பலன் குறித்தும்"

[ஒவ்வொரு மழையிலும்.., ப.90]

கேட்பதே இல்லையாம்! கை ரேகை பார்ப்பவனுக்கு அவன் கையில் உள்ள ரேகைகள் என்ன பலனைத் தரும்? கைகளே இல்லாதவனுக்கு எப்படிப் பலன் கூறுவது? சிந்திக்கத் தூண்டும் வினாக்கள் இவை!

## கவிஞர் படைக்கும் குழந்தைகள் உலகம்

கள்ளங் கரவறியாத குழந்தைகள் உலகத்தினை ஆனந்த் தம் கவிதைகளில் தனித்தன்மை விளங்கப் படைத்துக் காட்டியுள்ளார். 'எனக்குப் பிடித்த நண்பன்', 'பாதம் படாத அகலிகைகள்', 'பொம்மைக் கடை' ஆகிய கவிதைகள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்றும், "மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா" என்றும் பாப்பாவுக்குப் பாடினார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். ஆனால், இன்றைய குழந்தைகளுக்கு ஓடி விளையாடுவதற்குப் போதிய இடமும் இல்லை; நேரமும் இல்லை. முன்பெல்லாம் கிராமங்களில் மாலை வேளைகளில் பாண்டி ஆடுதல், பம்பரம் விடுதல், பச்சைக் குதிரை தாண்டுதல், ஓடிப் பிடித்தல் முதலான விளையாட்டுக்களால் தெருக்கள் கலகலப்பாக விளங்கின; உயிரோட்டமாய்க் காணப்பெற்றன. இன்றோ, கம்ப்யூட்டர், 'வீடியோ கேம்', வீட்டுப் பாடம் என்று குழந்தைகளின் உலகம் மிகவும் சுருங்கி விட்டது; குழந்தைகளும் வெளியே வராமல் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கின்றனர். இதன் விளைவாகக் கிராமத்துத் தெருக்கள் மாலை வேளைகளில் எந்நிலையில் உள்ளன தெரியுமா? இதோ, கவிஞரே கூறுகிறார், கேளுங்கள்:

“குழந்தைகளின்
பாதம் படாத அகலிகைகளாக
மாலை நேரத் தெருக்கள்”

[ஒவ்வொரு மழையிலும்.., ப.47]

காட்சி அளிக்கின்றனவாம். இங்கே ‘பாதம் படாத அகலிகைகள்’ என்னும் இராமாயணத் தொன்மக் குறிப்பு (Myth) கவிதைக்குக் கூடுதல் வண்ணமும் வனப்பும் சேர்த்திடக் காண்கிறோம்.

‘பொம்மைக் கடை’ என்பது கவிஞரின் கைவண்ணத்தைப் பறைசாற்றும் ஒரு வித்தியாசமான கவிதை. இதில் வரும் தந்தை, ‘அழுக்காய் இருக்கிறது’ என்று, ‘மூக்கு சரியில்லை’ என்று, ‘நிற்க வைத்தால் விழுந்து விடும்’ என்று, ‘இந்தக் கலர் சரியில்லை’ என்று, ‘இதை விட நல்லதாய் பார்க்கலாம்’ என்று, ‘இது உன்னைவிட வயதில் பெரியவர்களுக்கு’ என்று குழந்தையிடம் பலவிதமான சாக்குப் போக்குகளைச் சொல்லி ஒவ்வொரு பொம்மையாய்த் தவிர்த்து விடுகிறார். கடைசியாய் ஒரு பொம்மையைக் கை காட்டித் தந்தையிடம் இப்படிச் சொல்கிறது குழந்தை:

“அப்பா, இந்த பொம்மை
விலை கம்மி தான்!” [கனவுகள் பூட்டிய தேர், ப.37]

கையில் காசு இல்லாத சூழலில் சாக்குப் போக்குச் சொல்லிக் குழந்தையைச் சமாளிக்கும் தந்தை, தந்தையின் உண்மையான நிலை அறிந்து அவரிடம் சூதுவாது இல்லாமல் பேசும் சிறுகுழந்தை ஆகிய இருவரையும் இக் கவிதையில் தனித்தன்மை விளங்கப் படைத்துக் காட்டியுள்ளார் கவிஞர்.

## காதலியின் ஓரெழுத்து ஒருமொழி

சிலம்பொலி சு. செல்லப்பனார் ‘ஒவ்வொரு மழையிலும்...’ தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவது போல், ‘‘காதல் கவிதைகளை நனிநாகரிகத்துடன் பாடுவதில் ஆனந்த் வல்லவராய் உள்ளார் என்பதை அவருடைய கவிதைகள் உணர்த்துகின்றன’’ (ப.7). காதலியின் வெட்கம், சிணுங்கல், கோபம், கேள்வி, எதிர்ப்பு, ஒப்புதல் என்னும் அனைத்து உணர்ச்சிகளையும் ‘ம்...’ என்னும் ஓரெழுத்து ஒரு மொழியிலேயே அடக்கிக் காட்டி

யிருக்கிறது ஆனந்தின் ஒரு கவிதை. குறுகத் தறித்த தலைப்பில் அமைந்த அக் கவிதை இதோ:

> "வெட்கம்
> உணர்த்துகிறாய்
> சிணுங்கிச்
> சிரிக்கிறாய்
> கோபம்
> காட்டுகிறாய்
> கேள்வி
> கேட்கிறாய்
> எதிர்ப்புக்
> காட்டுகிறாய்
> ஒப்புதல்
> தருகிறாய்
>
> எப்படி வாய்த்தது
> இப்படியொரு
> வார்த்தைச் சிக்கனம்
> உனக்கு மட்டும்?
> ஓரெழுத்து வார்த்தையில்
> உணர்ச்சிகளனைத்தும்
> காட்டிச்செல்ல" [ஒவ்வொரு மழையிலும்.., ப.16]

கடைக்கண் பார்வை, புன்முறுவல், மௌனம் - காதல் உலகில் இவற்றுக்கு உள்ள ஆற்றலே தனி. இதே போல 'ம்...' என்ற காதலியின் ஓரெழுத்து ஒரு மொழியில் தான் எத்துணை உணர்ச்சி பாவங்கள்! கருத்துப் பரிமாற்றங்கள்!

## குறும்பாக்களில் வெளிப்படும் கவிஞரின் தனித்திறன்

இன்று வரதட்சணைக் கொடுமையைப் பாடாத கவிஞர்களே இல்லை. ஏன், இன்றைய சமுதாயத்தின் எரியும் பிரச்சினையான வரதட்சணைக் கொடுமையைச் சாடாதார் கவிஞர்களே இல்லை என்றுகூடக் கூறலாம். ஆனந்த் வரதட்சணை குறித்துப் படைத்துள்ள அழகிய குறுங்கவிதை இது:

> "வரைந்த தூரிகைக்கு
> வசதியில்லாததால்

வாங்கப்படாத
ஓவியமாக
அவள்" [ஒவ்வொரு மழையிலும்.., ப.41]

இக் கவிதையில் குடும்பத்தின் வறிய நிலையையும் பெண்ணின் பருவ எழிலையும் ஓவியக் கலையுடன் தொடர்புபடுத்திப் பாடியிருக்கும் கவிஞரின் திறன் தனித்துவம் வாய்ந்தது.

இன்று மனித உறவுகளைப் பணம் படுத்தும் பாடு சொல்லி மாளாது. இதனைப் 'பரம்பரை' என்னும் குறுங்கவிதையில் தமக்கே உரிய பாணியில் பதிவு செய்துள்ளார் கவிஞர். மொத்தப் பரம்பரையின் பெயரும் அத்துபடி ஆயிற்றாம். எப்படி என்கிறீர்களா? இதோ, கவிஞரே கூறுகிறார், கேளுங்கள்:

"அப்பாவோட
தாத்தா பேரு
தாத்தா கூட
பொறந்தவங்க பேருன்னு
மொத்தப் பரம்பரையும்
அத்துபடியாச்சி
அப்பா மேல
சித்தப்பா போட்ட
சொத்து வழக்கை
படிச்சி படிச்சி" [கனவுகள் பூட்டிய தேர், ப.60]

அப்பா மேல் சித்தப்பா நீதிமன்றத்தில் போட்ட சொத்து வழக்கைப் படித்துப் படித்து மொத்தப் பரம்பரையின் பெயரும் அத்துபடி ஆகிவிட்டதாம்!

## உயிர் அதிர்வில் உருவான கவிதைகள்

"...கவிதை
எழுதிச் சென்றது
தன்னைத் தானே
ஏதோவோர்
நிகழ்வில்
ஏற்பட்ட
உயிரதிர்வில்" [ஒவ்வொரு மழையிலும்.., ப.96]

என்னும் கவிஞர் கூற்றினையே நாம் அவரது கவிதைகளுக்கான மதிப்பீடாகவும் கொள்ளலாம். கவிஞரைப் பொறுத்த வரையில், கவிதையைப் படைப்பது என்பது ஒரு வேள்விக்கு நிகரானது.

**“இன்னும் ஒரு**
**சொல் கிடைத்தால்**
**முடியும் கவிதை**
**வேள்வியில் நான்”** [ஒவ்வொரு மழையிலும்.., ப.23]

என்னும் கவிஞர் வாக்கு இவ்வகையில் மனங்கொளத்தக்கது. *‘கவிதைப் பிரசவ கணங்கள்’* என்றே அவர் தமது கவிதைப் படைப்பு அனுபவத்தைச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது.



## 19

# 'கவிதை அப்பா': கண்ணீர் வரைந்த ஓவியம்

> "அப்பா
> என் கவிதையினை முடித்து
> தொகுத்துப் பார்த்தால்
> உங்களின் கம்பீரமுக ஓவியம்"
> – செல்மா*

"பூக்களில் எத்தனை நிற உருவங்கள் உண்டோ அத்தனை உருவங்கள் கவிதைகளிலும் உண்டு. தமிழ் அம்மை இப்போதெல்லாம் புதுப்புது வடிவுகளில் கவிதையைப் பெற்றெடுத்துக் கொள்கிறாள்" எனக் கலாப்ரியாவின் 'தீர்த்த யாத்திரை' என்னும் கவிதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிடுவார் கரிசல் எழுத்தாளர் கி. ராஜநாராயணன். அவரது கருத்திற்கு ஏற்பத் தமிழன்னை இன்று பெற்றெடுத்திருக்கும் புதுப்பூதான் செல்மாவின் 'கவிதை அப்பா'. கண்மணி செல்மா கவிஞர் மீராவின் அருமை மகள். 'செத்தும் கொடுத்த சீதக்காதி' என்பார்கள். மீராவோ இறந்த பிறகும் கவிதை படைக்கிறார்- அவருடைய மகளின் கரங்களால். அவரே அவருடைய மகள் கண்மணி செல்மாவாக மறுபிறப்பு எடுத்திருப்பது போல் எண்ணத் தோன்றுகிறது. ஆம், மீராவின் மகன் கதிர் அகரம், அன்னத்தின் பதிப்பகத் தொடர்ச்சியாய் இயங்கி வருகிறார் என்றால், அவரது செல்ல மகள் கண்மணி செல்மா அவரது

---

* கவிதை அப்பா, ப.21

படைப்பின் தொடர்ச்சியாய்ச் சிறந்து விளங்குகிறார் எனலாம். கவிஞர் மு. மேத்தா குறிப்பிடுவது போல், "ஒரு தந்தையாக நின்று தமிழ்நாட்டுக்குத் தந்த அற்புதமான கவிதை அவருடைய மகள் செல்மா". இக் கவிதை நூல் 'அப்பாவின் இடத்தை நிரப்பிக் கொண்டிருக்கும் அம்மாவுக்கு'க் காணிக்கையாக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## படைப்பாளிகளின் பார்வையில் 'கவிதை அப்பா'

"காதலிக்காக ஆயிரம் காவியங்கள் மலர்ந்திருக்கின்றன. தாய் பற்றிக் கூடப் பலர் பாடியிருக்கிறார்கள். ஆனால் தந்தைக்காக ஒரு கவிதை நூல் எனக்குத் தெரிந்து கண்மணியின் நூலாகத் தான் இருக்கும்" என்பது கவிக்கோ அப்துல் ரகுமானின் நெஞ்சார்ந்த பாராட்டு.

"கவிதை அப்பா கண்ணீர் வரைந்த ஓவியம். துயரம் நெசவு செய்த காவியம்" எனப் போற்றும் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன், "கவிதை அப்பாவுக்கு அருமை மகள் சொற்களால் கட்டி முடித்திருக்கும் கண்ணீர் தாஜ்மகால்" எனக் கலைநயத்துடன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

"இக்கவிதைத் தொகுப்பு அன்று மகளைப் பிரிந்து வருந்தி எழுதிய ச.து.சு. யோகியாரின் 'கண்மணி ராகம்' படிக்கும் போது நேரும் நெகிழ்ச்சியை நமக்குள் ஏற்படுத்துகின்றது" என்பது கவிஞர் இரா. மீனாட்சியின் மதிப்பீடு.

"தமிழுக்கு 'அன்னம்' இட்ட கை அண்ணன் மீராவின் கை" எனப் புகழாரம் சூட்டும் கவிஞர் மு. மேத்தா, "கவிதை அப்பாவைப் பற்றி இப்படி ஒரு கவிதைத் தொகுதி எழுத எனக்குக் கண்மணி செல்மாவைப் போன்ற மகள் ஒருத்தி இல்லையே என்ற ஏக்கம் ஏற்படுகிறது" எனத் தமது ஏக்க உணர்வையும் பதிவு செய்துள்ளார்.

"ஒரு பண்பான கவிதை அப்பாவிற்கான ஓர் அன்பான கவிதை மகளின் புகழ்செய் நூலாக... தமிழுக்குப் புதிய பாடுபொருளோடு வெளிவந்துள்ள நூல் தான்... செல்மாவின், இந்தக் 'கவிதை அப்பா'" - இது கவிஞர் அறிவுமதியின் கணிப்பு.

## செல்மாவின் தந்தைப் பாசம்

பொதுவாக அம்மாவுக்குப் பிள்ளையின் மீதும், அப்பாவுக்குப் பெண்ணின் மீதும் பற்றும் பாசமும் மிகுதியாக இருக்கும் என்பார்கள். இதனை உறுதிப்படுத்துவது போல், செல்மா தமது தந்தையார் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த பற்றும் பாசமும் இந்நூலின் பக்கந்தோறும் வெளிப்பட்டிருக்கக் காண்கின்றோம். 'என் அருமையான அப்பாவின் நினைவுகள் மேலோங்கினதாய், என் நிறைமைகளே என் அப்பாவாய் வடிவெடுத்து எனக்குள் பாச விதைகளைத் தூவியதை...' என்றும், 'என் தந்தை எனும் பாசக் கதகதப்பில் பதமாய் இருந்த என் மகிழ்வான வாழ்வின் சாராம்சம் எல்லாம்.....' என்றும் நூலுக்கு எழுதிய முன்னுரையிலேயே தம் உள்ளத்தைத் திறந்து காட்டியுள்ளார் செல்மா. இறைவனைத் தேடித் தேடி அலையும் உயிரைப் போல் அப்பாவைத் தேடித் தேடி அலைந்த அவரது உள்ளம் கடைசியில் ஒரு முடிவுக்கு வருகின்றது.

> **"எல்லா இடங்களிலும்**
> **தேடிப் பார்த்தாகிவிட்டது**
> **எல்லா மனிதருள்ளும்**
> **வலை வீசியாயிற்று**
> **உங்களைப் போல் ஒருவர்**
> **என் கண்ணில்**
> **படவே இல்லை"** [கவிதை அப்பா, ப.29]

என்பதே அம் முடிவு. இம் முடிவுக்கு வருவதற்கான காரணம் அவர் தம் வாழ்வில் அனுபவித்த முதல் வெளிச்சமே அப்பாவின் பாச வளையம் தானாம்!

> **"என் வாழ்வின்**
> **முதல் வெளிச்சம்**
> **உங்களின் பாச வளையம்"** [கவிதை அப்பா, ப.35]

என்பது செல்மாவின் ஒப்புதல் வாக்குமூலம் ஆகும்.

## 'மீரா' : படைப்பாளிகளின் நெஞ்சங்களில் தேன் பிலிற்றும் திருப்பெயர்

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்பார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். அது

போல், 'மீரா' என்ற பெயரே இளம்படைப்பாளிகளின் - வளரும் கவிஞர்களின் - நெஞ்சங்களிலே இன்பத் தேனைப் பாய்ச்சிய திருப்பெயர் ஆகும். இதனை,

> **"மீரா.... எத்தனை பேரை**
> **கவர்ந்திழுத்தது இந்தப் பெயர்**
> **கட்டிப் போட்டு அரவணைத்த**
> **உன்னதப் பெயர்"**

என 'மீரா' என்ற பெயரின் [மீ. (இ) ராசேந்திரன் என்பதன் சுருக்கமே 'மீரா'] பெருமையைப் பேசும் செல்மா, 'அன்னம்' பதிப்பகத்தின் வாயிலாகப் புதிய புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்து உருவாக்கிய தந்தையாரின் தாராள மனப்பான்மையை நெகிழ்வோடு போற்றுகிறார்.

> **"அன்னம்**
> **வெளியிட்ட நூல்களோ**
> **புதுவண்ணம்**
> **அவை அத்தனையும் தேன்கிண்ணம்**
> **பால்வண்ணம்"** [கவிதை அப்பா, ப.54]

என்னும் செல்மாவின் வாக்கு இவ் வகையில் குறிப்பிடத்தக்கதாகும். 'புதுவண்ணம் - தேன் கிண்ணம் - பால் வண்ணம்' என்னும் அவரது சொல்லாட்சியில் துலங்கும் கைவண்ணம் உயிர்க்களையும் தனித்தன்மையும் பொருந்தியதாகும்.

## முதல் ஆசான் – சிறந்த வழிகாட்டி !

அதியனுக்குக் கிடைத்த நெல்லிக் கனி தம் கைக்குக் கிடைத்திருந்தால் இல்லை அதியன் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார், எப்படி நடந்திருப்பார் என்பதையும் செல்மா ஒரு கவிதையில் உருக்கமாகப் பதிவு செய்துள்ளார். 'சற்றும் யோசிக்காமல் ஔவைக்குப் பாதி, என் அப்பாவுக்குப் பாதி' என்று அதியனிடம் யாசித்திருப்பாராம்! உடல்நலக் குறைவில் இருந்து அருமைத் தந்தையாரை நிச்சயம் மீட்டிருப்பாராம்! (கவிதை அப்பா, ப.90).

கற்றுத் துறை போகிய வித்தகர்கள், 'எனக்கு ஆசான் பாரதி' என்றும், 'எனக்கு ஆசான் பாரதிதாசன்' என்றும் சொல்வார்கள். ஆனால், முடிந்த முடிபாகச் செல்மா கூறுவது இது தான்:

"நான் சொல்கிறேன்
என்றும் எனக்கு நீங்கள் மட்டுமே
முதல் ஆசான் என்று" [கவிதை அப்பா, ப.42]

இன்னும் ஒரு படி மேலாக, அவர், "உங்களைத் தவிர/ வேறு யார் ஒருவர்/சிறந்த வழிகாட்டியாக/இருக்க முடியும்?" (கவிதை அப்பா, ப. 64) என வினவுவதும் குறிப்பிடத்தக்கது. "என் அப்பா மீண்டும்/ என் கண்முன் தோன்றினால்/என் உயிரீர்ப்புச் சக்தி /மீண்டும் வந்தது போல் ஆகிவிடும்" (கவிதை அப்பா, ப. 63) என அவர் மொழிவதும் இங்கே மனங்கொளத்தக்கது. செல்மாவைப் பொறுத்த வரையில் அன்பான அப்பாவின் நினைவு என்பது தவத்திற்கும் தியானத்திற்கும் மேலானது (கவிதை அப்பா, ப.62); அதுவே 'வாழ்நாள் வரையிலான மிக உயர்ந்த வழிபாடு' (கவிதை அப்பா, ப.85).

## மகளாய்ப் பிறப்பதற்கே செய்த நல்ல மாதவம்!

'கண்மணி தலைகொள்ளாப் பெருமையோடு இருக்கிறாள்' என்று அவரது தோழிகள் எல்லாம் பேசிக்கொள்கிறார்களாம். 'என்னிடம் முத்துக்களும் இல்லை; மரதக் கற்களும் இல்லை; பகட்டும் இல்லை; பிறகு எதற்குத் தோழிகள் அப்படிக் கூறுகிறார்கள்' என்று கண்மணி எண்ணிப் பார்க்கிறார்.

"'ஓ' புரிந்தது
உங்களுக்கு மகளாய்
பிறந்த மாதவத்தைச்
செய்ததால்தான்
அவர்கள் அப்படிச்
சொல்கிறார்கள் என்பது" [கவிதை அப்பா, ப.37]

என்று அவர் கூறும் போது, அவருடைய சொற்களில் 'மீராவின் மகள்' என்ற தருக்குடன் அளவிட முடியாத தந்தைப் பாசமும் கொப்பளிக்கக் காண்கிறோம்.

கடவுள் வந்து 'எல்லோருக்கும் ஒரு வரம் தருகிறேன், கேளுங்கள்' என்றாராம். ஆளுக்கொரு வரம் கேட்டார்களாம். சிலர் பொன் கேட்டார்களாம். பலர் பொருள் கேட்டார்களாம். வேறு சிலரோ சஞ்சலம் இல்லாத வாழ்வு எனும் வரம் வேண்டி நின்றார்களாம். இன்னும் பலரோ அளவுக்கு அதிகமாய்ச் சொத்து சேர்த்து, அது பிடிபட்டுவிடாமல் இருக்க வீட்டின் வாயிலைப் பலப்படுத்தச் சொன்னார்களாம்.

“ஆனால்
இவர்கள் எல்லோரையும்விட
நான் பேராசைக்காரி
உங்களுக்கே மீண்டும்
மகளாய்ப் பிறந்திடும்
வரத்தைக் கேட்டுள்ளேன்” [கவிதை அப்பா, ப.45]

என்னும் செல்மாவின் கூற்று, அவருடைய தந்தைப் பாசத்தின் மணிமகுடம் ஆகும். தந்தையாரைப் பிரிய நேர்ந்த போது தமக்கு ஏற்பட்ட மன வேதனையை - இதய வலியை - செல்மா வெளிப்படுத்தி இருக்கும் பாங்கு நுட்பமானது.

“ஒரு பெண்ணிற்
மறுஜென்மம் என்பார்கள் பிரசவத்தை
என் பிரசவ வலிகளையும் தகர்த்தன
உங்களைப் பிரிந்த
அந்த அழுத்தமான தருணங்கள்” [கவிதை அப்பா, ப.79]

என அந்த அழுத்தமான தருணங்களைச் சொற்களில் வடித்துள்ளார் செல்மா. ‘மலைத்தொடரில் இருந்து உருண்டோடி விழும் பாறை யாகிப் போனது போல் என் நிலை’ எனத் தம் தவிப்பிற்கும் துடிப் பிற்கும் அவர் கையாண்டிருக்கும் உவமை ஆழமானது.

## கலைநயம் மிளிரும் கண்ணீர் தாஜ்மகால்

‘எனக்குக் கவிதை எழுதத் தெரியாது உங்களை மாதிரி’ (கவிதை அப்பா, ப.21) எனச் சொல்லிக் கொண்டே தந்தையாரைப் பற்றிய தமது நினைவலைகளை ஆழ்ந்த உணர்ச்சியும் உயிரோட்டமும் ததும்பி நிற்கும் மொழியில் நயமும் நுட்பமும் விளங்க வெளியிட்டுள்ளார் செல்மா.

அப்பா அவருக்கு வல்லினம் மெல்லினம் இடையினம் எல்லாம் பயிற்றுவித்தாராம்; இலக்கணத்தைத் தெளிந்து பருகச் செய்தாராம். அவரது தன்னார்வத்தை இரசித்து, “நீயும் என் இனம் ஆனாய்” என்றாராம். அப்படி ஆசையுடன் சொன்ன அப்பாவைப் பிரிந்து தனித்து வாடும் நிலையினைச் செல்மா.

“இன்று
நானோ

**தனிஇனம் ஆனதை மட்டும்**
**சொல்ல மறந்து”** [கவிதை அப்பா, ப.23]

எனக் குறிப்பிடும் போது, அவரது சொற்களில் வெளிப்படும் அவல உணர்வு நம் நெஞ்சைப் பிழிகின்றது.

‘வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்’ என்பது போல, மொழி வல்லமை படைத்த கவிஞருக்கு நிறுத்தற் குறிகளும் உணர்ச்சி மிகு கருத்துப் புலப்பாட்டிற்குக் குற்றேவல் செய்து நிற்கக் காண்கிறோம். இவ்வகையில் செல்மாவின் கைவண்ணம் சிறந்து விளங்கும் இடம் இது:

**“அடைப்புக் குறிக்குள்**
**அடைப்பட்ட என் வாழ்வை**
**ஆச்சரியக் குறிக்குள்**
**நிரப்ப முயன்ற**
**என் தந்தையாராகிய**
**உங்களின் இழப்பு**
**என்னை முற்றுப்புள்ளியாக்கியது”** [கவிதை அப்பா, ப.36]

இங்கே அடைப்புக் குறி - ஆச்சரியக் குறி - முற்றுப்புள்ளி என்னும் மூன்று நிறுத்தற் குறிகளைக் கொண்டே தம் உள்ளத்து உணர்வினைத் திறம்படப் புலப்படுத்தியுள்ளார் கவிஞர்.

ஒருநாள் இரவின் காரிருளில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையில் திடீரென்று தந்தையார் தம் முன்பு வந்து நின்ற போது பெற்ற புத்துணர்ச்சிக்குச் செல்மா கையாண்டிருக்கும் உவமை அவரது கவித்துவத்திற்குக் கட்டியம் கூறுவது. அவ்வுவமை இதோ:

**“திருவிழாவில் தொலைந்துபோன**
**கடவுளின் சிலை கிடைத்தது மாதிரி**
**எனக்குள் அளவில்லாத புத்துணர்ச்சி”**
[கவிதை அப்பா, ப.63]

பாரி மகளிரின் வாரிசாய்க் கருதத் தக்க அளவு சிறப்பாக அமைந்த செல்மாவின் படப்பிடிப்பு இது:

**“நட்சத்திரங்களின் கும்மியடிப்பில்**
**குதூகலமாய் நிலவு**
**யாருமற்ற இரவில்**
**நான் மட்டும் ஒற்றை நட்சத்திரமாய்**
**தனிமையில் வனாந்தரத்தில்”** [கவிதை அப்பா, ப.32]

‘நினைவு முடிச்சுகள்’ (கவிதை அப்பா, ப.28), ‘கண்ணீர் மொட்டு கள்’ (ப.31), ‘மன்க் கீறல்கள்’ (ப.32), ‘கவலையின் ரேகைகள்’ (ப.41), ‘மௌன யுத்தங்கள்’ (ப.48), ‘பாசப் பட்டறை’(ப.46), ‘உயிர்ப் பூக்கள், (ப.47),‘வாழ்க்கைப் புதர்கள்’ (ப.51), ‘உணர்வுப் பூபாளம்’ (ப.52), ‘நட்பின் புதையல்’ (ப.56), ‘மனப் பதிவின் சேமிப்புக் கிடங்கு’ (ப.58), ‘பழமையின் பசுமையான பூக்கள்’ (ப.61), ‘ஞாபகச் சிறகுகள்’ (ப.62), ‘உயிரீர்ப்புச் சக்தி’ (ப.63), ‘நினைவில் பூத்த காளான்’ (ப.65), ‘மௌன ஓடை’, ‘துன்ப நீருற்று’ (ப.68), ‘மனக் கற்றாழை’ (ப.75), ‘அனுபவச் செதில்கள்’ (ப.78), ‘ஆன்மாவின் விழிகள்’ (ப.88), ‘மூளை நியூரான்கள்’ (ப.91) என்றாற் போல் படிம அழகு களிநடம் புரிந்து நிற்கும் தொடர்கள் செல்மாவின் மொழியில் மண்டிக் கிடக்கின்றன.

## கண்ணீரை வரவழைக்கும் உருக்கமான பதிவு

தந்தையாரின் நினைவலைகளால் இல்லத்தின் புத்தக அலமாரி கள் செல்லரித்துச் செப்பனிடுவார் இன்றிக் கிடக்கின்றனவாம். அவர் பயன்படுத்திய வேட்டிகளும் சட்டைகளும் மடிப்புக் கலையா வண்ணம் - அதே நேரத்தில் தூசுகள் மெருகேறிக் காணப்படுகின்றன வாம். ஊர் ஊராய் வலம் வந்த அவரது பயணப் பெட்டியோ, தூசு துடைப்பார் இன்றி ஊருக்குச் செல்லத் தாகத்தோடு தகித்திருக்கின்ற தாம். தங்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் புத்தகங்களை மட்டும் காற்று தன் அரவணைப்பால் அவ்வப்போது பக்கங்களைப் புரட்டிக் கொண்டே இருக்கிறதாம். இவ்வளவும் நிரல் படக் கூறி வந்த கவிஞர்.

**“என் கண்களுக்குள் மிஞ்சியது**
**என்னவோ உப்பளங்களே....”** **[கவிதை அப்பா, ப.55]**

என அக் கவிதையை முத்தாய்ப்பாக முடித்திருப்பது சிறப்பு.

நிறைவாக, ‘கவிக்கோ’ அப்துல் ரகுமானின் சொற்களில் குறிப் பிடுவது என்றால், ‘கவிதை அப்பா’ நூலினை மனம் கலந்து படித்த பின் எவருக்கும் தோன்றும் உணர்வு இதுவாகத்தான் இருக்கும்:

“மீராவைத் தந்தையாகப் பெற்றதற்குக் கண்மணி கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

கண்மணியை மகளாகப் பெற்றதற்காக மீராவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.”



# 20

# மலேசிய நாட்டின் மதிப்புறு கவிஞர் செ.சீனி நைனா முகம்மது

> "… … உயிர்
> போன்ற நம் மரபையும் மொழியினம் நாட்டையும்
> போற்றியே காத்திடுவோம்!"
>
> – செ. சீனி நைனா முகம்மது*

**"காப்பியனைத் தமிழுலகம் ஆளவைத்தாய் – இங்குக்**
**காலமெல்லாம் வள்ளுவனை வாழவைத்தாய்**
**காப்பியத்துக் கோர் இளங்கோ கண்டெடுத்தாய் – அந்தக்**
**கான்முளையில் நானும் வந்தேன் கைகொடுத்தாய்!"**
**[தேன்கூடு, ப.39]**

என உளமார அமுதான தமிழுக்குத் தலைவணக்கம் செலுத்துவார் செ.சீனி நைனா முகம்மது. 'தொல்காப்பியரின் பேரன்' எனச் சிறப்பிக்கப் பெறும் அவர், மலேசிய நாட்டின் மதிப்புறு கவிஞர்; இருபது ஆண்டுகளாக, மலேசியத் தமிழாசிரியர்களுக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கும் இலக்கணப் பயிலரங்கும், கவிதைப் பட்டறையும், நாடெங்கும் தொல்காப்பிய வகுப்பும் நடத்தி வருபவர்; 'உங்கள் குரல்' என்னும் இலக்கண, இலக்கியத் திங்கள் இதழைப் பதினைந்து ஆண்டுக் காலமாக நடத்தி வருபவர்; தமிழின் செம்மொழித் தகுதி பற்றி நாற்பது உலக அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளைத்

* தேன்கூடு, ப.261.

தன்னகத்தே கொண்ட செம்மொழிச் சிறப்பு மலரை முதன்முதலாக வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. 'இறையருட் கவிஞர்' என்னும் பட்டத்திற்கும், 'தொல்காப்பிய ஞாயிறு' என்னும் விருதுக்கும் சொந்தக்காரரான சீனி நைனா முகம்மது, தமிழகத்தில் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த இளையான்குடிக்கு அருகில் உள்ள கீழாயூரில் 11.09.1947-இல் பிறந்தவர்; திருச்சி சமால் முகம்மது கல்லூரியில் கல்வி பயின்றவர். 'கவிதைப் பூங்கொத்து' (25 கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு), 'புதிய தமிழ்ப் புணர்ச்சி விதிகள்,' 'நல்ல தமிழ் இலக்கணம்' என்பன இவரது பெயரைப் பறைசாற்றும் சில நூல்கள் ஆகும். 'தேன்கூடு' என்பது இவரது கவிதைகளின் முதல் தொகுப்பு. பதினோராம் அகவை (1958) முதல் அறுபத்து மூன்றாம் அகவை (2011) வரை, பல்வேறு யாப்பு வடிவங்களில் இவர் எழுதிய மரபுக் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. "இதிலுள்ள கவிதை களின் வடிவமும் ஓசையும் சுவையும் இன்றைய இளையோருக்கு மரபு சார்ந்த வடிவத்தில் கவிதை எழுதும் ஆர்வத்தையும் முயற்சியை யும் தோற்றும் என்ற நன்னம்பிக்கையுடன் இந்நூல் வெளிவருகிறது" ('தேன் பருகுமுன்...', தேன்கூடு, ப.6) என நூலுக்கு எழுதிய முன்னு ரையில் கவிஞரே குறிப்பிட்டிருப்பது மனங்கொளத் தக்கதாகும்.

"அமிழ்தென்று சொன்னாலும் தமிழென்று சொன்னாலும்
அன்னையே உன்னையே குறிக்கும்...
தமிழ்தமிழ் என்கையில் உமிழ்நறுந் தேனாகும்
தாய்தந்த பால்வாசம் பிறக்கும்"

என்னும் கவிஞர் வாக்கு அவரது செம்மாந்த தமிழ் நெஞ்சைத் திறந்து காட்டுவதாகும்.

"என்னலமே தந்நலமாய்
எண்ணமெலாம் தோய்ந்துயர்ந்த
அன்னை தந்தை பொன்னடியில்
அன்பணியாம் இந்நூலே!"

என முன்னறி தெய்வங்களான தம் பெற்றோர்க்கு இந்நூலைக் காணிக்கையாக்கியுள்ளார் கவிஞர்.

### கவிஞரின் முத்திரைக் கவிதை

'நிலைபெற நீ வாழியவே! என்பது சீனி நைனா முகம்மது 2009-ஆம் ஆண்டில் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் விழைந்தவாறு

பாடித் தந்த மொழி வாழ்த்துக் கவிதை. கொச்சகக் கலிப்பா வடிவில் அமைந்த அக் கவிதை, தமிழ் மொழியின் முன்னைப் பழமையையும் பின்னைப் புதுமையையும் ஒருங்கே போற்றுவதாகும். '(தொல்) காப்பியனை ஈன்றவள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான சீர்மிகு காப்பியங்கள் கண்டவள், புலமைத் திறத்தால் புவியில் தனிப் பெருமை கொண்டவள்' என்பதோடு, 'தமிழரொடு புலம் பெயர்ந்து தரணியெங்கும் வாழ்பவள்' என்னும் தகைமையும் தமிழன்னைக்கு உண்டு. 'எழில்சேர் மலேசியத்தில், சிங்கைதனில், ஈழ மண்ணில் இலக்கியமாய், வழக்கியலாய் இனக்காவல் தருபவளாய்' இலங்கி வரும் தமிழன்னையின் தனிப்பெருஞ் சிறப்பு, 'பொங்கிவளர் அறிவிய லின் புத்தாக்கம் அத்தனைக்கும் பொருந்தி, இன்று மின்னுலகில் புரட்சி வலம் வருபவள் அவள்' என்பதாகும். உலகத் தமிழர்களின் மனங்களில் எல்லாம் கொலுவீற்றிருக்கும் தமிழணங்கு, 'செவ்விய லின் இலக்கியங்கள் செழித்திருந்த பொற்காலம் சேர்த்து வைத்த செய்யுள் வளத்தில் செம்மாந்த பழையவள்' என்பதோடு, 'செவ்வி யலில் வேரூன்றி அறிவுயர்ந்த தற்காலம் அழகழகாய் உரை நடையும் ஆளுகின்ற புதியவளும்' ஆவாள்! 'செய்யுள் வளத்தில் செம்மாந்த பழையவள்' என்றும், 'அழகழகாய் உரைநடையும் ஆளுகின்ற புதிய வள்' என்றும் தமிழணங்கின் தொன்மைச் சிறப்பினையும் புதுமைப் பெற்றியினையும் ஒருங்கே உளமாரப் போற்றி மகிழும் கவிஞர்,

**"நிலவினுக்கே பெயர்ந்தாலும்**
**நினதாட்சி தொடரும் அம்மா!**
**நிறைகுறையாச் செம்மொழியே,**
**நிலைபெறநீ வாழியவே"** [தேன் கூடு, ப.85]

என வாழ்த்திக் கவிதையை முடித்து வைப்பது முத்தாய்ப்பு. செம்மை நலமும் சீரிளமைத் திறமும் வாய்ந்த மனோன்மணீயம் சுந்தரனாரின் மொழி வாழ்த்தினை நினைவூட்டும் சீனி நைனா முகம்மதுவின் இக் கவிதை, மலேசியத் தமிழ் வாழ்த்தாக நாடெங்கும் ஒலித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## 'தமிழ்ப் பேறு! தவப்பேறு!'

**"தமிழினம் எய்திய பெரும்பேறு – அது**
**தாய்மொழி தமிழ் எனும் அரும்பேறு"**
[தேன் கூடு, ப.84]

என்பது கவிஞரின் மணிமொழி; மந்திரமொழி. அவரது கருத்தில், 'ஈன்ற தாயின் கொஞ்சல் போல இனித்திடுவது' தமிழ் (தேன் கூடு, ப.87).

**"செம்மொழி யாவினும் செம்மொழி எம்மொழி?**
**செந்தமிழ் தானடியோ!"** [தேன் கூடு, ப.53]

எனத் தமிழ் மொழியின் மாண்பினை விதந்து போற்றும் கவிஞர்,

**"யான் போற்றும் செந்தமிழ் தான்**
**நல்லவளாய் வாழுகின்றாள்;**
**நானிலத்தில் பெண்ணிவளை**
**வல்லவளாய் ஆக்குதலே**
**வாழ்வினிலே என் குறிக்கோள்!"** [தேன் கூடு, ப.29]

எனத் தம் உயரிய குறிக்கோளை எடுத்துரைக்கவும் தவறவில்லை.

'சிமிழ் விளக்காய் ஆன தமிழ் செங்கதிராய்ச் சுடர்விட வேண் டும்' என்றும், 'தமிழினம் இப்பாரில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும்' என்றும் விழுமிய கனவு காணும் கவிஞர்,

**"என்று தமிழ் விளக்கம்**
**எங்கும் ஒளிர்ந்திடுமோ,**
**அன்றே தமிழ் உயரும்;**
**அத்திருநாள் என்று வரும்?"** [தேன் கூடு, ப.31]

எனத் தம் ஏக்கத்தினையும் ஒரு கவிதையில் பதிவு செய்துள்ளார்.

## உயரத் துடிக்கும் இளையோர்க்குக் கவிஞர் வழங்கும் செய்தி

இளைய தலைமுறைக்கு எழுச்சியும் நம்பிக்கையும் ஊட்டும் விதத்தில் கவிஞர் சீனி நைனா முகம்மது இத்தொகுப்பில் நிரம்பக் கவிதைகளை இயற்றியுள்ளார். 'இருப்பும் இறப்பும்', 'நீ உயர...', 'சாதி தம்பி நீ சாதி!', 'என்னடா குறைச்சல்?', 'எதுவும் முடியும்!' என்னும் கவிதைகள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

**"வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி;**
**மக்களின் மனதில் நிற்பவர் யயர்?"**

[திரை இசைப் பாடல்கள்:
இரண்டாவது தொகுதி, ப.8]

என வினவுவார் கவியரசர் கண்ணதாசன். அவரைஅடியொற்றி,

**"எல்லாரும் ஒருநாள் இறப்பவரே - மக்கள்**
**எண்ணத்தில் சிலர் என்றும் இருப்பவரே;**
**எல்லாரும் போலே இறப்பவனா - நீ**
**இறந்தபின் னாலும் இருப்பவனா?"**

**[தேன் கூடு, ப.176]**

என்பதே இளைய தலைமுறைக்குக் கவிஞர் தொடுக்கும் கூரிய கேள்விக் கணை. உலகில் பிறந்த எல்லோரும் ஒருநாள் இறப்பவரே; ஆனால், மக்கள் எண்ணத்தில் - மனத்தில் - என்றும் இருப்பவர் மிகச் சிலரே. 'நீ எந்த வகையைச் சார்ந்தவன்? எல்லோரும் போலே வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகும் சாதியா? அல்லது, இறந்த பின்னாலும் இருக்கும் சாதியா?' என இளைய தலைமுறையிடம் பொருள் பொதிந்த வினாவினைத் தொடுக்கின்றார் கவிஞர்.

வாழ்வில் உயரத் துடிக்கும் இளையோர்க்குக் கவிஞர் உணர்த்தும் உ(ய)ரிய வழி இது தான்:

**"உள்ளத்தில் உயர்ந்தால், உயர்ந்திடும் வாழ்க்கை;**
**உன்வச மாகிடும் உலகம் - இதை**
**உணரத் திருக்குறள் உதவும்"** **[தேன் கூடு, ப.188]**

**'வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு'** **[595]**

என்னும் திருக்குறளே இங்கே கவிஞரின் கைவண்ணத்தில் எளிமைக் கோலம் பூண்டுள்ளது. 'மதி, விதி இரண்டும் சந்திக்கும் இடத்தில் மலர்வது தான் வாழ்க்கை; எனவே, நம் மனப்போக்கை மாற்றி, மனத்தை ஒழுங்குபடுத்தி, நல்லதை நினைத்து, நல்லதை உரைத்தால், நல்லவை தாமே வந்து நம்மைச் சேரும்' என ஆழமாக நம்புகின்றார் கவிஞர்.

'சாதி தம்பி நீ சாதி - அதில் ஏதும் வைக்காதே மீதி' என இளைய தலைமுறையினருக்கு அறிவுறுத்தும் கவிஞர்,

**"சாதிக்கும் விதத்தில் சாதிக்கும் போது**
**தன்னாலே சாகும் சாதி - சும்மா**
**பின்னாலே வேண்டாம் சேதி"** **[தேன் கூடு, ப.197]**

எனச் சாதிக் கொடுமைக்குச் சாவுமணி அடிக்கின்றார். 'சாதி' என்ற சொல்லை இங்கே இருபொருள்படும் படியாகத் திறம்படக் கையாண்டு தம் கருத்தினை ஆற்றலோடு புலப்படுத்தியுள்ளார் கவிஞர்.

'முடியுமா என்பது முட்டாள்தனம்; முடியாது என்பது மடத்தனம்; முடியும் என்பது மூலதனம் என்னும் கருத்தினைக் கவிஞர் தமக்கே உரிய பாணியில் ஒரு கவிதையில் வலிமையாக உணர்த்தியுள்ளார்:

**"என்னடா குறைச்சல் உனக்கு?**
**எழுந்திடு இனிமேல் கிழக்கு!....**

**உன்னையே நீ நம்பினால் உலகமே உனதுதான்!**
**எண்ணமே துணிவாகினால் எதிலுமே உயர்வுதான்!"**

(தேன் கூடு, ப.198)

அறிவையும் திறமையையும் மூலதனமாகக் கொண்டு துணிவுடன் முயன்றால் எதுவும் முடியும் என ஆழமாக நம்புகின்றார் கவிஞர்.

**"இமயம் என்னடா இமயம் – நாம்**
**ஏறிப் பார்க்காததா?**
**எதுவும் நம்மாலே முடியும் – வா**
**இறங்கிப் பார்ப்போமடா!"** (தேன் கூடு, ப.199)

என்னும் கவிஞரின் அழைப்பு - அறைகூவல் - இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

### கவிஞர் சித்திரிக்கும் காதலின் செவ்வி

"காதல் என்பது இன்பத்துட் பேரின்பம், உணர்ச்சியுள் பேருணர்ச்சி, ஆற்றலுள் பேராற்றல், அடிப்படையுட் பேரடிப்படை, உரிமையுள் எல்லார்க்கும் உரியது, நட்பினுள் இருபாலாரையும் இணைப்பது, கல்வியுட் கசடறக் கற்க வேண்டுவது, நாணினுள் நனி நாணுடையது, ஒழுக்கத்துள் விழுமியது" (தமிழ்க் காதல், ப. 267) எனக் காதலின் செவ்வியைப் போற்றியுரைப்பார் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார். மலரினும் மெல்லிய இக்காதல் உணர்வின் பெருமையினையும் உயர்வினையும் ஆழத்தினையும் பறைசாற்றும் கவிதைகள் பலவற்றை சீனி நைனா முகம்மது இத்தொகுப்பில் படைத்துள்ளார்.

அவரது கருத்தில் ‘காதல் என்பதும் காமம் என்பதும் கருத்தில் ஒன்றல்ல; வேறு வேறு. காதல் மனத்தில், காமம் உடலில்.’ இன்னும் கூர்மைப்படுத்திச் சொல்வது என்றால், ‘காமம் தோன்றும் கணத்தில் மாறும். காதல் அதுவல்ல. காலத்தை வென்று, ஞாலத்தை ஆளும் தனி வல்லமை படைத்தது காதல்’ (தேன் கூடு, ப.133)

**“என்னவளின் பொன்முகத்தை நிலவு கண்டால்**
**இனியிங்கு வேலையில்லை என்றே ஓடும்;**
**கன்னியவள் கார்குழலை மேகங் கண்டால்**
**கருமையெல்லாம் தானிழந்து வெளுத்துப் போகும்;**
**பண்ணிசைக்கும் குயில் அவளின் குரலைக் கேட்டால்**
**பாவம் அது அவளடியிற் தஞ்சம் நாடும்;**
**அன்னம்அவள் மென்னடையைக் கண்டால் போதும்**
**அந்நடையைத் தான்பயில ஆசை கொள்ளும்!”**

[தேன் கூடு, ப.112]

எனக் காதலன் ஒருவன் தன் உள்ளங்கவர் காதலியின் பொன்முகத்தையும், கார்குழலையும், குரல் இனிமையையும், நடையழகையும் கற்பனை நயம் நனிசொட்டச் சொட்ட வருணிக்கிறான். தொடர்ந்து அக்கவிதையில் அவன் தன் காதலியின் வில்லனைய புருவங்கள், இளம்பிறையை ஒக்கும் நெற்றி, அமுதூறும் மெல்லிதழ்கள், முத்துப் பற்கள், மெல்லிடை என முடி முதல் அடி வரை அழகுக்கு அழகு சேர்க்கும் விதத்தில் படம்பிடித்துக் காட்டுகிறான். எண் சீர் ஆசிரிய விருத்தத்தில் அமைந்த இக் கவிதை ‘பொன்னி’ மாத இதழில் 1967-ஆம் ஆண்டில் கவிஞரால் எழுதப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**“முகப்பக்கம் திறந்தேன் கணினியிலே – புது**
**முழுமதி சிரித்தது திரையினிலே!**
**அகப்பக்கம் இழந்தேன் அழகினிலே – கொள்ளை**
**அடித்துவிட் டாளடா நொடியினிலே!”**

[தேன் கூடு, ப.132]

என ‘உங்கள் குரல்’ இதழில் ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்குப் பிறகு-2011-ஆம் ஆண்டில்- எழுதிய கவிதை ஒன்றில் இன்றைய காலத்திற்கு ஏற்ற புதுமுறையில் - மொழியில் - காதலைப் பாடியுள்ளார் கவிஞர். இன்று ஒருநாள் கணினியிலே முகப்பக்கம் (Facebook) திறந்தானாம் காதலன். காதலி எனும் புதுமுழுமதி சிரித்ததாம் திரையினிலே! அதன் அழகினிலே தன் அகப்பக்கம்

இழந்தானாம் காதலன். அவனது உள்ளத்தை நொடியினிலே கொள்ளை அடித்து விட்டாளாம் 'முகப்பக்கத்து முழுமதி'யான காதலி.

> "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
> மாதர்கொல் மாலும்என் நெஞ்சு" [1081]

என்னும் குறளை நினைவூட்டும் வகையில் கவிஞர் படைத்துள்ள ஒரு காதல் கவிதை இது:

> "மானே மயிலோ மாதோ – இவள்
> மாலைப் பொழுதின் மகளோ?
> வானம் அறியா நிலவோ?
> என்ன மாயம் இதோ!" [தேன் கூடு, ப.115]

பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியின் வழியில்,

> "பஞ்சணையும் நோகுதடி
> பால்பழமும் கசந்ததடி
> துஞ்சு விழி மறுக்குதடி
> துகிலுமிகக் கனக்குதடி" [தேன் கூடு, ப.109]

என்றாற் போல் கவிஞர் நடை பயிலும் இடங்களும் இத் தொகுப்பில் உண்டு.

**வாழ்த்துப் பாக்களும் இரங்கற் பாக்களும்**

'பிறவியோர் பேறாய்க் கொண்டு, பிறர் நலம் இனிதாய் எண்ணி, இறையவன் அன்பே நோக்காய், இனமொழி நலங்கள் பேணி, துறையெலாம் பணிகள் செய்து, அறமதே வழியாய் வாழும்' (தேன் கூடு, ப.258) சான்றோர்களை வாழ்த்தியும், அவர்களது மறைவுக்கு இரங்கியும் கவிஞர் படைத்துள்ள கவிதைகள் நேரிய உணர்வு நலனிலும் நுண்ணிய உணர்த்தும் முறையிலும் சிறந்து விளங்குகின்றன. பதச்சோறாக, ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

> "பிறக்கையிலே அறிஞனாகப் பிறந்தவன் – தன்
> பெயருக்கேற்ப இனத்துக்கெல்லாம் அண்ணனாகச் சிறந்தவன்
> மறக்கையிலே தன்னலமே மறந்தவன் – உடல்
> மறைந்தபின்னும் மறைந்திடாமல் மக்கள் நெஞ்சம் நிறைந்தவன்"
> [தேன் கூடு, ப.220]

என்பது அறிஞர் அண்ணா குறித்துக் கவிஞர் பாடியுள்ள வாழ்த்துப் பா. எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய தொடை நயங்கள் அணி வகுத்து வர, வியனிலைச் சிந்து வடிவில் அமைந்த அழகிய கவிதை இது! ஒரு தலைவனின் உண்மையான பெருமை என்பது அவரது பிறப்பில் மட்டும் வெளிப்பட்டு நிற்பது அன்று; அவரது ஆளுமைப் பண்பில் - அவர் தமது நாட்டுக்கும் மொழிக்கும் இனத்திற்கும் ஆற்றும் அரும்பணிகளில் - கொலு வீற்றிருப்பதாகும். இதனை (அறிஞனாகப்) பிறந்தவன் - (அண்ணனாகச்) சிறந்தவன் - (தன்னலமே) மறந்தவன் - (மக்கள் நெஞ்சம்) நிறைந்தவன் என்னும் நான்கு சொற்களைக் கொண்டு நறுக்குத் தறித்தாற் போன்ற நடையில் நயம்படப் புலப்படுத்தியுள்ளார் கவிஞர்.

இதே போல உமா பதிப்பக உரிமையாளர் டத்தோ ஆ. சோதிநாதன் கவிஞரின் 'உங்கள் குரல்' இதழுக்குத் தாமே மனமுவந்து கொடை அளித்த போது மகிழ்ந்து பாடிய கவிதையும் இரத்தினச் சுருக்கமானது. குறுகத் தறித்த குறள் வெண்பா வடிவில் அமைந்த அக் கவிதை இதோ:

**"இப்படியும் நன்னேஞ்சர் ஈங்குளரால் எங்கள்தமிழ்**
**எப்படியும் வாழும் இனி!"** [தேன் கூடு, ப.207]

'மலேசிய நண்பன்' இதழின் ஆசிரியர், எழுத்தாளர் சங்கத் தலைவர் ஆதி. குமணன் மறைந்த போது கவிஞர் பாடிய இரங்கற் பா பயில்வார் உள்ளத்தைப் பாகாய் உருக்குவது,

**"இந்த நாட்டிலே இதழ்கள் உலகில் ஓர்**
**எம்சி யாராகத் திகழ்ந்தாய் – நீ**
**இன்னும் தேவையாய் இருக்கும் போதில் ஏன்**
**கண்ண தாசன் போல் மறைந்தாய்?"**
[தேன் கூடு, ப.225]

என்னும் அப் பாடலில் தொடக்க வரிகள் உயிர்ப்பானவை. ஆதி குமணன் மலேசிய நாட்டிலே இதழ்கள் உலகில் ஓர் எம்.ஜி.ஆர். போல் மக்கள் செல்வாக்குடன் திகழ்ந்தவராம்! ஆனால், அவரது உடனிருப்பு இன்னும் தேவையாய் இருக்கும் போதில் கவியரசர் கண்ணதாசனைப் போல் குறைந்த வயதில் அவர் மறைந்து போய்விட்டராம்! இங்கே எம்.ஜி.ஆர்., கண்ணதாசன் என்ற தமிழ்த்

திரை உலகின் இருபெரும் ஆளுமையாளர்களைக் கொண்டு ஆதி. குமணனின் தனிப்பெரும் பண்புகளைக் கவிஞர் புலப்படுத்தியுள்ள திறம் நெஞ்சை அள்ளுவதாகும். மேலும், ஆதி. குமணன், எவரையும் கவரும் 'மொட்டு முறுவ'லுக்குச் ('குமிண் சிரிப்பு' என்ற அப்பர் சுவாமிகளின் சொல்லாட்சி இங்கே ஒப்புநோக்கத்தக்கது) சொந்தக்காரராம்! 'பண்பில் இனியராய்ப் பழக எளியராய்ப் பகைவர் மனத்திலும் பதிந்தவ'ராம்! அவலம் சுமந்த பழைய புறநானூற்றுக் கையறுநிலைப் பாடலை நினைவுபடுத்தும் அற்புதமான பாடல் இது!

### 'தமிழுடனே தலைநிமிர்ந்து வாழ்க!

**"நடந்தேன் நடந்தேன் நம்பிக்கை யோடு**
**நல்லதை நினைத்ததை நடக்கின்றேன்!**
**கடந்தேன் கடந்தேன் கடமையை எண்ணிக்**
**கல்லையும் முள்ளையும் கடக்கின்றேன்!...**

**எத்துனைக் காலம் எத்தனை பாடம்**
**இன்னமும் தொடர்ந்தே படிக்கின்றேன்!**
**எத்தனை கற்கள் இடறிவிட் டாலும்**
**எழுந்தேன் துணிந்தேன் நடக்கின்றேன்!"**

[தேன் கூடு, ப.158]

எனத் தம் நீண்ட, நெடிய வாழ்க்கைப் பயணத்தில் நல்லதே நினைத்து நம்பிக்கையுடன் நடை பயின்று வருவதாகக் குறிப்பிடுகிறார் கவிஞர். ஒவ்வொரு நாளும் அன்னைத் தமிழ் மொழியின் - தமிழ் இனத்தின்- உயர்வினை விழைந்தே அயராது உழைத்து வரும் அவர், வழியில் எத்தனைக் கற்கள் இடறிவிட்டாலும் - தடைகள் குறுக்கிட்டாலும் - வீழ்ந்துவிடாமல் - ஓய்ந்து போகாமல் - எழுந்து, துணிந்து, தொடர்ந்து இன்னமும் தம் கடமையை வீறுடன் ஆற்றி வருவதாகவும் முழங்குகின்றார் அவர். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ற படி கவிஞரின் சொற்களைக் கொண்டே நாமும் அவரை இப்படி வாழ்த்தலாம்.

**"தகை மிகுந்த ஆசிரியன், தமிழ்ப் பணியில் நீ பெரியன்!**
**தளர்வின்றி உன்னை நலம் சூழ்க! – நீ**
**தமிழுடனே தலைநிமிர்ந்து வாழ்க!"**

[தேன் கூடு, ப.245]



## ஆசிரியர் குறிப்பு

'**மு.வ.வின் செல்லப் பிள்ளை**' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப் பெறும் இரா. மோகன் மதுரையில் 10.12.1949-ஆம் நாளன்று பிறந்தார். தந்தையின் பெயர் இராமமூர்த்தி. தாய் - இராசலெட்சுமி. காரைக்குடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற மோகன், கவியரசு முடியரசன் அவர்களின் மாணவர். இவர் மதுரை தீந்தமிழ்த் தியாகராாசர் கல்லூரியில் பயின்று 1972-இல் முதுகலைப் பட்டம் பெற்றார்; மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் '**கு.ப. ராஜகோபாலன் சிறுகதைகள்**' என்னும் பொருளில் ஆராய்ந்து 1976-ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையில் 01.11.1976-இல் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்த முனைவர் மோகன், 1987-இல் தமிழியற் புலத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்; இணைப்பேராசிரியர், பேராசிரியர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், சிறப்பு நிதியுதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர் எனப் பல்வேறு பொறுப்புக்களில் 34 ஆண்டுக் காலம் தமிழியற் புலத்தில் பணி யாற்றினார். மூன்று ஆண்டுக் காலம் பல்கலைக்கழக **ஆட்சிக் குழு உறுப்பினராகவும்** (Syndicate Member) இவர் பணியாற்றியுள்ளார்.

'**டாக்டர் மு.வ.வின் நாவல்கள்**' என்பது இரா. மோகனின் முதல் நூல்; 1972-ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆய்வும் பதிப்பும்

தொகுப்புமாக இதுவரை இவரது 99 நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது '**இன்பமே எந்நாளும்**' என்ற நூல் பாரத மணித்திருநாட்டின் முன்னைக் குடியரசுத் தலைவர் டாக்டர் **ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்** அவர்களின் பாராட்டினைப் பெற்றதாகும். இவரது நூல்கள் பல பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் (Text Books) பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

'இலக்கியச் செல்வர்' **குமரி அனந்தன்** உட்படப் பேராசிரியர் மோகனின் மேற்பார்வையில் இதுவரை 28 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்; பன்னிரண்டு பேர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

பேராசிரியர் மோகன் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காகச் **சிங்கப்பூர்** (5 முறை), **மலேசியா** (3 முறை), **அமெரிக்கா** (2 முறை), **இலங்கை, ஷார்ஜா, ஆஸ்திரேலியா** ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். இவர் பல்வேறு வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் பொதுமேடைகளிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உரை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் மோகன் புதுதில்லி **சாகித்திய அகாதெமியின் ஆலோசனைக் குழுவிலும் பொதுக் குழுவிலும்** உறுப்பினராக இருந்துள்ளார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராகவும் இவர் இருந்து வருகிறார்.

சாகித்திய அகாதெமியின் '**இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை**'யில் பேராசிரியர் மோகன், **கு.ப.ரா., கல்கி, வ.சுப. மாணிக்கம், முடியரசன்** ஆகியோர் குறித்து நூல்கள் எழுதியுள்ளார். '**தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்**', '**தமிழ் ஹைகூ ஆயிரம்**', '**நாவல் வளர்ச்சி**', '**புதுக்கவிதை அணிவகுப்பு**', '**நகைச்சுவைக் களஞ்சியம்**' ஆகியன இவர் வெளியிட்டுள்ள சிறந்த தொகை நூல்கள் ஆகும்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து பேராசிரியர் மோகனுக்குத் '**தமிழ்ச்**

**சுடர்**' என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளன. புதுச்சேரிக் கம்பன் கழகம் வழங்கும் சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசினைப் பேராசிரியரின் '**கணினி யுகத்திற்குக் கம்பர்**' என்னும் நூல் பெற்றுள்ளது.

*2010*-இல் வெளிவந்த '**இலக்கிய இணையர் பேராசிரியர் இரா. மோகன் – முனைவர் நிர்மலா மோகன் மணிவிழா மல**'ரும், '**பேராசிரியர் இரா. மோகனின் படைப்புலகம்**' என்னும் தொகை நூலும் *(2011)* தமிழியல் வளர்ச்சிக்குப் பேராசிரியர் மோகனின் பங்களிப்பினைப் பறைசாற்றுவனவாகும்.

மோகன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் **தகைசால் பேராசிரியராக** (UGC - Emeritus Fellow) மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

தமிழக அரசின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. **விசுவநாதம் விருது** *(2011)* பெற்றவர் பேராசிரியர் இரா. மோகன் என்பது குறிப்பிடத்தக்கது.

*

## பேராசிரியர் இரா. மோகன்
## எழுதிய நூல்கள்

### ஆராய்ச்சி

1. டாக்டர் மு.வ.வின் நாவல்கள்
2. அறிஞர் மு.வ.
3. சிறுகதைச் சிற்பி கு.ப.ரா.
4. ஆய்வியல் வழிகாட்டி (இணையாசிரியர்)
5. புனைகதைத் திறன்
6, பண்டிதமணியின் நடை நயம்
7. உரை மரபுகள் (இணையாசிரியர்)
8. திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம்
9. கு.ப.ராஜகோபாலன்
10. காந்தீயக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல்
11. வ.சுப.மாணிக்கம்
12. கல்கி
13. ஒப்பியல் சிந்தனைகள்
14. இலக்கியச் சால்பு
15. இலக்கியச் சிந்தனை
16. இலக்கியச் சுடர்
17. இலக்கியச் செவ்வி
18. இலக்கியச் செல்வம்

19. இலக்கிய வித்தகர்கள்
20. புதுக்கவிதைத் திறன்
21. பன்முகப் பார்வையில் பாரதி
22. கவிதைக் குயில்கள்
23. குமரகுருபரர்
24. முடியரசன்
25. கவிதை அலைவரிசை-1
26. இலக்கியப் பரல்கள்
27. இலக்கிய ஆளுமைகள்
28. நகைச்சுவை நாயகர்கள்
29. கணினி யுகத்திற்குக் கம்பர்
30. சங்க இலக்கியச் செவ்வி
31. வா.செ.கு. என்ற ஆளுமையாளர்
32. விருந்தும் மருந்தும்
33. செவ்வியல் இலக்கியச் செழுமை
34. மாணிக்கவாசகர்
35. இலக்கிய முற்றம்
36. மு.வ. அல்லது முன்னேற்ற வரலாறு
37. கவிதை அலைவரிசை - 2

## பதிப்பு

38. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம்
39. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் (இணைப்பதிப்பாசிரியர்)
40. பரல்கள் : தொகுதி 2 (இ.ப.)
41. பொதிகை : மலர் 1 (இ.ப.)
42. புகழ் பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் (இ.ப.)
43. பாரதி இயல் (இ.ப.)
44. புதுக்கவிதை அணிவகுப்பு
45. நாவல் வளர்ச்சி
46. தமிழியல் : தொகுதி 1 (இ.ப.)

47. அண்ணல் தமிழ் (இ.ப.)
48. தமிழ் உலா : 2 தொகுதிகள் (இ.ப.)
49. பெண்ணியம் (இ.ப.)
50. சிற்பியின் கட்டுரைகள்
51. கல்கி நூறு
52. கல்கி கதைகள் : 2 தொகுதிகள்
53. கல்கி கட்டுரைகள் : 3 தொகுதிகள்
54. செந்தமிழ்த் தேனீ சோமலே
55. சிறுவர் இலக்கியம் (இ.ப.)
56. நாள் ஒரு சிந்தனை
57. புதுமைப்பித்தன் முத்திரைக் கதைகள்
58. கு.ப.ரா. முத்திரைக் கதைகள்
59. நகைச்சுவைக் களஞ்சியம்
60. பிற துறைத் தமிழ் ஆய்வு (இ.ப.)
61. திருக்குறள் ஆய்வுக் களஞ்சியம் (இ.ப.)
62. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2006)
63. சீக்கியமும் தமிழ்ப் பண்பாடும்
64. ஆய்வுக் கோவை : 5 தொகுதிகள் (2007)
65. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2008)
66. ஐங்குறுநூறு ஆய்வுக் கோவை : 3 தொகுதிகள் (2009)
67. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2009)
68. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2010)
69. தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்
70. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2011)
71. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2012)
72. ஆய்வுக் கோவை : 4 தொகுதிகள் (2013)
73. அயலகத் தமிழ் இலக்கியம்

## தொகுப்பு

74. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள்

75. ஜெயகாந்தன் சிந்தனைகள்
76. துணுக்கு இலக்கியம்
77. துணுக்குத் திரட்டு
78. சங்க இலக்கியத் தொகை
79. படித்ததும் பிடித்ததும்
80. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும்
81. சிரித்ததும் சிலிர்த்ததும்
82. பண்பார் பேராசிரியர் பரந்தாமனார்
83. இறையன்பு களஞ்சியம்
84. தமிழ் ஹைகூ ஆயிரம்
85. குலோத்துங்கம் பண்ணையில் கொய்த கதிர்கள்
86. மு.வ. கருவூலம்
87. மணிமேகலைத் திறன்

## புதுக்கவிதை

88. சின்னச் சின்ன இழை (இணையாசிரியர்)

## தன்முன்னேற்றம்

89. இன்பமே எந்நாளும்
90. விரல்கள் பத்தும் மூலதனம்
91. விழிப்புணர்வுச் சிந்தனைகள்
92. இனியவை நாற்பது
93. திறமைதான் நமது செல்வம்

## உரை

94. பத்துப்பாட்டு உரை (1-5)

## ஆளுமைக் கல்வி

95. கனவை நனவாக்கும் கலாம்

## அணிந்துரைத் தொகுப்பு

96. இலக்கியக் கோலங்கள்
97. முன்னுரை நாற்பது
98. இலக்கிய மாலை

## கடித இலக்கியம்

99. அன்புள்ள நிலாவுக்கு...
(பதிப்பாசிரியர் : முனைவர் நிர்மலா மோகன்)

## நூறாவது நூல்

100. கவிதைக் களஞ்சியம்



**சோமலெ சோமசுந்தரம்**
இயக்குநர்
தமிழ்நாடு அறக்கட்டளை
அமெரிக்கா

# செஞ்சுரி (Century) அடித்த பேராசிரியர் மோகன்!

**அ**மெரிக்காவிலிருந்து சென்னைக்குப் பயணம் செய்யும் போது அமெரிக்க வேலைப் பளுவால் என் விமானப் பயணம் தூக்கத்தில் பறந்து விடும்! தமிழகத்திலிருந்து அமெரிக்காவிற்குத் திரும்பி வரும்போது தரமான தமிழ் நூல்கள் கைத்துணையாக வருவதால் விமானம் எனக்கு நூலகமாக மாறிவிடும்! மார்ச் 2013 விமானப் பயணத்தின்போது முதலில் நான் படித்த நூல் பேராசிரியர் **மோகன்** அவர்களின் '**இனியவை நாற்பது**'.

பேராசிரியர் மோகன் அவர்களின் நாவிற்கு ஒப்பானது அவருடைய பேனா முனை என்பதற்கு இந்த நூல் நல்ல சான்று. மிகச் சுவையான நாற்பது கட்டுரைகள் மூலம் நம்மைச் சிந்திக்கவும், சிரிக்கவும் செய்கின்றார் பேராசிரியர் மோகன்.

தமிழுக்கு உள்ள சிறப்பு 'ழ'கரம் பற்றிய திரு. கி.ஆ.பெ. அவர்களின் நகைச்சுவையை (வாயப்பயம், கியக்கே, புயக்க, வயக்கம்) படித்துவிட்டு (பக்.140-141) வாய்விட்டுச் சிரித்தேன். விமானத்தில் அருகிலிருந்த அமெரிக்கர் என்ன நினைத்தாரோ என்னைப் பார்த்து!

ஒவ்வொரு கட்டுரையின் முகப்பிலும் எடுத்தாளப்பட்டுள்ள மேற்கோள்கள் (Quotes) படிப்பவரைச் சிந்திக்க வைப்பதோடு

கட்டுரையை உடனே படிக்கத் தூண்டுவது, பேராசிரியர் மோகனுக்கே உள்ள எழுத்தாற்றலின் தனிச்சிறப்பாகும். உதாரணம் கட்டுரை 9 (ப.36):

**"தோல்வியை மனதில் சுமக்காதே,**
**வெற்றியைத் தலையில் சுமக்காதே"**
**– செ. சைலேந்திரபாபு**

கவிதைத் துறைமுகத்தில் பல நல்ல கவிதைகளைப் பேராசிரியர் நமக்கு அறிமுகப்படுத்துவது நூலின் மற்றொரு சிறப்பு. இதோ ஒரு கவிதை:

**"... அரை நொடியில் கிடைக்குதாம் அமெரிக்கா கனெக்ஷன்**
**ஆருமில்லாத அடுத்த வீட்டு அனாதைத் தாத்தா**
**ஆவி போயி ஆறுநாளு ஆனப்புறந்தான்**
**அல்லாருக்கும் தெரிஞ்சுதாம் அழுகிப்போனதால்!**
**அழ யாரும் இல்லையாமா!**
**தேடித்தான் பார்த்தேனுங்க தெரிஞ்சா நீங்க சொல்லுங்க**
**இன்டர்நெட்டில் தேடியும் மனுஷன் அட்ரஸ் கிடைக்கலீங்க"**

என்ற கவிஞர் மா. இரேவதியின் அழுத்தமான வரிகள், பேராசிரியர் மோகனின் கவிதைத் துறைமுகத்தில் பல நல்ல கவிதைக் கப்பல்கள் ஆழமாக நங்கூரமிட்டுள்ளதற்குச் சான்றாகும்.

நூறாவது நூலைத் தமிழ் உலகத்திற்கு இந்த வருடம் தருகின்ற பேராசிரியர் மோகனின் பேனாவிற்கு ஓய்வே கூடாது.

வாழ்க அவரது எழுத்துப் பணி;

வளர்க அவரது நூல்களின் எண்ணிக்கை.

வாழ்த்துக்களுடன்,

**சோமலெ சோமசுந்தரம்**

பிலடெல்பியா, அமெரிக்கா

மே 20, 2013

## தகைசால் பேராசிரியர் இரா.மோகன்

'மு.வ.வின் செல்லப் பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப்பெறும் **இரா.மோகன்**, 22.04.1950-இல் மதுரையில் பிறந்தவர். பெற்றோர் : இராமமூர்த்தி - இராசலெட்சுமி. பள்ளிக் கல்வியைக் காரைக்குடி மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரிக் கல்வியை மதுரை தியாகராசர் கல்லூரியிலும் பெற்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் 'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1976) பெற்றார்.

01.11.1976-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் சேர்ந்த **மோகன்** விரிவுரையாளர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், திட்ட ஒருங்கிணைப்பாளர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர், ஆட்சிக் குழு உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளில் 34 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார். இவர்தம் நெறிகாட்டுதலில் 28 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

பேராசிரியர் **மோகன்** ஆய்வும், பதிப்பும், தொகுப்புமாக இதுவரை 97 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

பேராசிரியர் **மோகன்** பாரத மாநில வங்கி, புதுச்சேரி கம்பன் கழகம் ஆகியன வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசு என்றாற் போல் தம் எழுத்து மற்றும் பேச்சுப் பணிகளுக்காகப் பற்பல பரிசுகளும், விருதுகளும் பெற்றுள்ளார். பல்வேறு வானொலி, தொலைக்காட்சிளில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பட்டிமன்ற நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகப் பேராசிரியர் **மோகன்** சிங்கப்பூர் (5 முறை), மலேசியா (2 முறை), அமெரிக்கா (2 முறை), ஆஸ்திரேலியா, இலங்கை, ஷார்ஜா ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து இவருக்குத் 'தமிழ்ச் சுடர்' (2002) என்ற விருதினை வழங்கியுள்ளன.

புதுதில்லி சாகித்திய அகாதெமியின் தமிழ் மொழிப் பொதுக்குழு உறுப்பினர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத் தகைசால் பேராசிரியர், தமிழக அரசின் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருதாளர் (2012) முதலான பல்வேறு சிறப்புக்களையும் பெற்றவர் பேராசிரியர் **மோகன்** என்பது குறிப்பிடத்தக்கது.

வானதி பதிப்பகம்